# சிவப்பிரகாசம்

## மூலமும் உரையும்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்**

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 537

# சிவப்பிரகாச மூலமும் உரையும்

**சிதம்பரம் கொற்றவன்குடி தவத்திரு உமாபதிசிவம்**

**அருளிய மூலமும்**

**தவத்திரு அருணந்தி தேவன் அருளிய உரையும்**

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

*முனைவர் திரு. அ. சிவபெருமான்*

**இணைப் பேராசிரியர் - தமிழியல் துறை**

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

**மற்றும் ஆய்வு மையம்**

தஞ்சாவூர்.

2011 ] [ விலை ரூ. 150-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | சிவப்பிரகாச மூலமும் உரையும் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் திரு அ. சிவபெருமான் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 537 |
| ISBN | : | 978-81-921829-2-6 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2011 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 260 |
| படிகள் | : | 250 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | சைவ சித்தாந்தம் |
| விலை | : | ரூ. 150-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகின் அறிவு நூல் களஞ்சிய மையங்களுள் ஒன்றாகவும், ஒப்புயர்வற்றதாகவும் திகழுகின்ற நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். பல மொழிகளைச் சார்ந்த ஏராளமான அரிய பனை ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள், தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்தி மொழித்துறைகள், அருங்காட்சியகம் முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டு எண்ணற்ற ஆய்வாளர்களையும், வாசகர்களையும் தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்து அறிவுச் செல்வத்தை அள்ளித் தருவது இந்நூலகம்.

பன்மொழிச் சுவடிகள் பல்வேறு கருத்துக்களை காட்டும் வண்ணம் மிளிர்கின்றன. சமயம், தத்துவம், இலக்கியம், இலக்கணம், நாட்டியம், இசை, மருத்துவம், சோதிடம், மந்திர சாத்திரம், சிற்பக் கலை முதலியவைகளை கூறும் சுவடிகள் உள்ளன.

சிவப்பிரகாசம் என்னும் இந்நூல் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகும். இந்நூலை அருளியவர் உமாபதிசிவம் ஆவார். இந்நூல் தவத்திரு அருள்நந்தித் தேவன் அருளிய உரையுடன் பதிப்பிக்கப்படுகிறது.

இந்நூலை நன்முறையில் பதிப்பித்தளித்துள்ள சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் திரு அ. சிவபெருமான் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். இந்நூல் சைவசித்தாந்த ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. செ. முகம்மது ஆரிப் சாகிப் அவர்களுக்கும் இந்நூலக பாதுகாப்பாளர் மற்றும் நூலகர் முனைவர் ப. பெருமாள் அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில்வெளிவர கணினிப் பிரிவில் பணியாற்றியவர்களுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
5-9-2011

**கா. பாஸ்கரன், இ.ஆ.ப.,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

# பதிப்பாசிரியர் உரை

## பதிப்பு வரலாறு

மூலையிலோர் தமிழ் நூலும் புதுநூல் ஆனால்
முடிதனில் சுமந்துவந்து தருதல் வேண்டும்

(பாரதிதாசன்)

தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து ஓலைச் சுவடிகளைத் தேடிக்கண்டுபிடித்து அவற்றை நன்கொடையாகவே தமிழக அரசிற்கு வழங்கிவரும் தமிழ்த்தொண்டை செய்து வருகின்றேன். அவ்வகையில் இதுகாறும் 210 ஓலைச் சுவடி நூல்களைத் தேடிக்கண்டுபிடித்து அவற்றைத் தஞ்சாவூரில் அமைந்துள்ள **தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்கு நன்கொடையாகவே வழங்கியுள்ளேன். இப்பணியைத் தமிழ்ப்பல்கலைக் கழக முதல் துணைவேந்தர் முனைவர், வ. அய். சுப்பிரமணியம் அவர்கள்** மிகவும் பாராட்டி நற்சான்றிதழ் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க அரிய செய்தியாகும்.

மேற்குறித்த சுவடிதேடும் பணி இந்நாள்வரை தொடர்கின்றது. அவ்வகையில் எனக்குக் கிடைத்த சுவடியே இப்பதிப்பாக உங்கள்முன் வெளிவந்துள்ளது. இதன் விளக்கம் வருமாறு.

சைவசிந்தாந்தசாத்திரங்கள் பதினான்கனுள் **சிவப்பிரகாசம்** ஒன்றாகும். இந்நூலை அருளியவர் **உமாபதிசிவம்** ஆவார். இந்நூலிற்கு இந்நாள்வரை அச்சுவாகனம் ஏறாத உரை ஒன்று சுவடி வடிவில் கிடைத்தது. அவ்வாறு கிடைத்த அச்சுவடியை தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினேன். அச்சுவடியில் எழுதப்பெற்ற உரையின் சிறப்பையும், அச்சுவாகனம் ஏறாத அதன் நிலையையும் கண்ட சரசுவதி மகால் நிருவாகத்தார் சுவடியைப் பதிப்பித்து வழங்குமாறு எனக்கு ஆணையிட்டார்கள். அவர்களது ஆணையை ஏற்று சுவடியிலிருந்து உரையை நூலாக்கி உங்கள் முன் வழங்கி யுள்ளேன். அச்சில் வராத அரிய உரையைப் பதிப்பித்து வழங்கிய சரசுவதிமகால் நூலகத்தார் பணியைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை எனலாம்.

**சிவப்பிரகாசம்** என்னும் ஞான நூலிற்குப் பல அறிஞர் உரையெழுதி உள்ளனர். மதுரைச்சிவப்பிரகாசர், சிதம்பரநாத முனிவர், நல்லசிவதேவனார், திருவுருமாமலை அடிகள், திருவரங்கம் சிற்றம்பல நாடிகள், சத்திஞானப் பிரகாசர் முதலானோர் உரை வரைந்துள்ளனர். இவர்களேயன்றித் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம் முதலிய நிறுவனங் களும் உரை எழுதி வெளியிட்டுள்ளன.

**பதிப்புப்பணி**

சுவடியிலிருந்து சைவசிந்தாந்தநூல் ஒன்றின் உரையைப் பதிப்பிப்பது என்பது எளிதான செயலன்று. **முதலில் திருவருள் கைகூட வேண்டும்**; அடுத்து தக்க அறிஞர்களின் உதவி வேண்டும்; நிறைவாகக் காலமும் கடும் உழைப்பும் வேண்டும். இவற்றையெல்லாம் ஒரு சேரப் பெறுவதற்கு எனது தந்தையார் மூதறிஞர் (அகவை 101) **திரு. அடிகளாசிரியர் அவர்களே அடியாக விளங்கினார்.**

என்றென்றும் சுறுசுறுப்பாய் இயங்கி நலம் புரியும் நூறாண்டு வாழ்தமிழ்ப் பேராசிரியரும் எனது அன்புத் தந்தையாருமாகிய திரு. அடிகளாசிரியர் அவர்களின் பெருந்துணையுடன் இந்நூலைப் பதிப்பித்து வழங்கி யுள்ளேன். தந்தையாரின் உதவியோடு இந்நாள் வரை பத்திற்கும் மேற்பட்ட சமயநூல்களைப் பதிப்பித்து வழங்கியுள்ளேன் என்பதையும் இங்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**நன்றிக்கு உரியோர்**

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி இந்நூலை வெளியிட அனுமதி வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு சா. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் நல்ல முறையில் வெளிவர துணைநின்ற மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு கா. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூலக முன்னாள் நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொ.) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், தற்போதைய மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் இந்நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. செ. முகம்மது ஆரிப் சாகிப் அவர்களுக்கும், நூலகர் முனைவர் ப. பெருமாள் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யான், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றி வருவதால் இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை ஏற்க அனுமதி வேண்டி 20.7.2009 ஆம் நாள் கடிதம் எழுதியிருந்தேன். எனது கடிதத்தை ஏற்றுக்கொண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக நிருவாகம் நூலைப் பதிப்பிக்கலாம் என்ற ஆணையை 12.8.2009 ஆம் நாள் வழங்கியது. ஆதலால் மேற்படி

நிறுவனத்தின் துணைவேந்தர், பதிவாளர், தமிழியல் துறைத்தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிக் கூறிக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை அச்சிட நல்ல பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கிய பெரும் புலவர் வீ. சொக்கலிங்க சுவாமிகளுக்கும், சிறப்பாக அச்சிட்டு வழங்கிய நூலகக் கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் நன்றியுடையேன் ஆவேன்.

**கண் துஞ்சாமல்**
**பசிநோக்காமல்**
**எண்ணமெல்லாம் தூய மனத்துடன் கூடிய**
**இறை உணர்வுடன் ஒன்றியிருந்து**

இந்நூலைப் பதிப்பித்து வழங்கியுள்ளேன்.

இங்ஙன்,
**அ. சிவபெருமான்**

# சிவப்பிரகாசம்

## ஆய்வு முன்னுரை

### (முனைவர் அ. சிவபெருமான்)

"**சித்தமெல்லாம் எனக்குச் சிவமயமே**" என்று சித்தத்தைச் சிவன்பால் வைத்து வாழ்ந்து வரலாறு படைத்த அடியார்களுள் **உமாபதிசிவம்** என்னும் அந்தணராம் அறவோர் மிகச் சிறந்தவராவர்.

**உமாபதிசிவம்** விண்ணிடம் (ஆகாயத்தலம்) என வழங்கப் பெறுகின்ற சிற்றம்பலமாகிய சிதம்பரத்தில் தோன்றிய தோன்றலாம். சிற்றம்பலத்தே (சிதம்பரம்) சிவத்தொண்டு புரிந்து வந்த இவர் மறைஞான சம்பந்தரைத் தன் குருவாக உளத்திலே கொண்டு ஒழுகி வந்தார். அக்காலை **மறைஞானசம்பந்தர்** சிற்றம்பலத்தலத்திற்கு எழுந்தருளினார். **மறைஞானசம்பந்தர்** உணவு உண்ணும் வேளையில் கூழ் கேட்டு அருந்தினார். அதுபோழ்து அவரின் கைகளில் நிரம்பிய கூழ் அவரது முழங்கை வழியே வழிந்துவர, தன் ஆசிரியர் தனக்களித்த அருளுணா (பிரசாதம்) என்றெண்ணி உமாபதிசிவம் வழிந்த கூழைத் தன் கைகளில் ஏந்தி அருந்தினார்.

அதுகண்டு வெகுண்டெழுந்த தில்லைவாழ் தீட்சிதர்கள், அடாத செயல் செய்த உமாபதிசிவத்தைக் கோயில் பூசைக்குத் தகுதியற்றவர் எனக்கூறி விரட்டி விட்டனர். இந்நிலையில் சிற்றம்பலத்திற்கு அண்மையில் உள்ள **கொற்றவன் குடியில்** (இன்று கொத்தங்குடித்தோப்பு என்று வழங்கப்படுகின்றது) இருந்துகொண்டு தமிழ்த் தொண்டும் சிவவழிபாடும் செய்துகொண்டிருந்தார்.

“**வினை விதைத்தவன் வினை அறுப்பான்**” என்
முதுமொழிக்கேற்ப, சிற்றம்பலத்தானின் பெரு
திருவிழாவின்போது சிற்றம்பலம் வாழ் தீட்சிதர்க
கொடியை ஏற்ற முயன்று தோற்று நின்றனர். “**உமாபதிசிவ
ஒருவன் மட்டுமே கொடியை ஏற்ற வல்லவன்**” என்
இறைவனின் வானொலி (அசரீரி) கேட்டு, நாணம் மேலி
தீட்சிதர்கள் உமாபதிசிவத்தை நாடிச்சென்று அவர் முன் குறு
நின்றனர். உமாபதிசிவமும் திருச்சிற்றம்பலத்திற்கு ஏகி
கொடிமரத்தின் கீழ்நின்று; **கொடிக்கவி** என்ற நான்
பாடல்களைப் பாடினார். பாடியவாய் மூடு முன்னே கொ
தானே மரத்தின் மேல்முனைக்கு ஏறிச்சென்று பட்டொ
வீசிப் பறந்தது.

கொடிக்கவி பாடிக் கொடியேற்றிய பின்பும் அவரி
அருளை உணராமல் ஒதுக்கியே வைத்திருந்தன
இந்நிலையில் நடராசப்பெருமான் உமாபதிசிவத்தி
அருமையை உணர்த்த விரும்பி சிற்றம்பல மேடையை நீத்
உமாபதிசிவத்தின் பூசைப்பெட்டகத்தில் எழுந்தருளினார்.

அது கண்ட தில்லைவாழ் தீட்சிதர் தங்கள் தவ
எண்ணி வருந்தினர். வருந்தியதோடு நில்லாம
உமாபதிசிவத்தை ஏற்றுக்கொண்டனர். மேலும
உமாபதிசிவம் தன்னுடைய தவவலிமையால் **பெற்றா
சாம்பான்** என்ற அடியானுக்கும், பூசையில் உதவிய **முள்
என்ற செடிக்கும் நிலைப்பேறு (முத்து) கிட்டச்செய்தார்**.

தமிழகத்தில் சைவநெறிக் கொள்கைக
நிலைநிறுத்திய பெருமை மெய்கண்ட நூல்களாகி
சைவசிந்தாந்தச் சாத்திரங்கள் பதினான்கனுக்கே உரியதாகு
இப்பதினான்கில் **செம்பாதி நூல்கள் உமாபதிசிவத்தா
அருளிச்செய்யப்பட்டவையாகும்**. அவர் எழுதிய நூல்களி
பட்டியல் வருமாறு.

**உமாபதிசிவம் அருளிய சித்தாந்த அட்டகம்**

1. சிவப்பிரகாசம்
2. திருவருட்பயன்
3. வினாவெண்பா
4. போற்றிப் பஃறொடை
5. கொடிக்கவி
6. நெஞ்சு விடு தூது
7. உண்மை நெறி விளக்கம்
8. சங்கற்ப நிராகரணம்

**உமாபதிசிவம் அருளிய ஏனைய நூல்கள்**

1. கோயிற் புராணம்
2. திருமுறை கண்ட புராணம்
3. சேக்கிழார்
4. திருத்தொண்டர் புராணச் சாரம்
5. திருப்பதிகக் கோவை

**உமாபதிசிவம் அருளிய வடமொழிநூல்கள்**

1. குஞ்சிதாங்கிரிட்டதவம்
2. சதரத்ன சங்கிரகம்
3. நடராசதவன மந்திரத்தவம்

**உமாபதிசிவம் அருளிய உரை நூல்கள்**

1. பௌட்கர பாசியம்
2. நடராச சகசர நாமம்
3. ஜகிருத்ரம்
4. வாயுசம்கிதை
5. யந்த்ர விதானம்

**உமாபதிசிவம்** அருளிய நூல்களுள் முதல்நூல் சிவப்பேரொளியைக் கண்ணிற்குப் புலப்படுத்தும் தன்மை உடையதாகத் திகழ்வதால் அதனைச் சைவர்கள் **சிவப்பிரகாசம்** (சிவப்பேரொளி) என்றே வழங்கி வருகின்றனர். சிவப்பிரகாசத்தை ஓதி உணர்ந்தவர் ஏனைச் செயல்களிலும் சிறந்து செம்மையை சிவன் சேவடி அடைவர் என்பது திண்ணமாம். ஆதலால் அந்நூலினை ஆய்வோம்.

**சிவப்பிரகாசம்**

**சிவப்பிரகாசம்** என்னும் இந்நூல் **ஒளியான திருமேனி** எனத் தொடங்கும் மூத்த பிள்ளையார் வணக்கத்துடன் தொடங்குகின்றது. ஊழ்ப் பயன் உறுத்து வந்து ஊட்டாது விலகி நிற்க, மூத்த பிள்ளையாரைக் காக்குமாறு அக்காப்புச் செய்யுள் அமைந்துள்ளது. கம்பநாட்டாழ்வார் போன்று சிறந்த விருத்தப்பாவில் அமைந்துள்ள அச்செய்யுள் இறையருளோடு கலிப்பாவின் இனிய சுவையையும் கொண்டுள்ளது.

காப்புச் செய்யுளைத் தொடர்ந்து பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என்ற இருபெரும் பிரிவுகளாக நூல் அமைந்துள்ளது. பொது அதிகாரத்தில் பாயிரம் முதலாவதாக உள்ளது. பாயிரத்தில் கூத்தப்பெருமான், சிவகாமி அம்மை, மூத்தபிள்ளையார், முருகக்கடவுள், சந்தானகுரவர் ஆகியோரை வணங்கி வாழ்த்துகின்ற மங்கல வாழ்த்துப் பாடல்கள் ஐந்தும், மறைஞான சம்பந்தரை வணங்கிடும் ஆசிரிய வணக்கப் பாடல் ஒன்றும், நுவல் பொருள் குறித்த பாடலொன்றும், கேட்போர் பயன் குறித்த பாடல்கள் மூன்றும், இந்நூல் சார்பு நூலாகுமாற்றைக் குறித்த பாடலொன்றும், அவையடக்கப் பாடல் ஒன்றுமாக ஆக பன்னிரு பாடல்கள் அடங்கியுள்ளன.

மேற்படிக் குறிப்பால் இந்நூலுக்கு முதல்நூல் **சிவஞானபோதம்** என்றும், வழிநூல் **சிவஞான சித்தியார்** என்றும், அவற்றின் அடியொற்றி எழுந்த இந்நூல் சார்புநூல் என்றும் தெரிகின்றது. இதன்வழி மெய்கண்ட நூல்களில் மூத்தநூல் மெய்கண்டதேவநாயனார் இயற்றிய சிவஞானபோதம் என்பது தெளிவாகின்றது.

பொது அதிகாரப் பாடல்கள் முழுவதும் எண்சீர் அளவடி அகவற் பாக்களால் அமைந்துள்ளன. இவ்வமைப்பில் முப்பதெட்டுப் பாடல்கள் இந்த அதிகாரத்ததில் உள்ளன.

பொது அதிகாரம் **சிவன்** (பதி), **உயிர்** (பசு), **தளை** (பாசம்) ஆகிய முந்நிலைப்பட்டு வெளியாய் (அண்டமாய்) நிற்கும் இலக்கணத்தைக் கூறுகின்றது.

தலைவனாகிய சிவனை உயிராகிய ஆன்மா (பசு) சென்றடையாவண்ணம் பற்றாகிய தளை பிணித்து வைத்துள்ளது. அப்பற்றுக்கோட்டை அறுத்தெறிந்து உயிர் சிவனை அடையச்செய்கின்ற முயற்சியே அவத்தையாகும். இவற்றிற்கான இலக்கணம் இன்னதென்று பிறநூல்களில் காணப்படுவதிலும் இந்நூல் தெளிவுபடவும், எளிமையாகவும் எடுத்துக்கூறுவதை பொது அதிகாரம் காட்டுகின்றது.

| | |
|---|---|
| **இறை (பதி) இலக்கணம்** | **- 6 பாடல்கள்** |
| **உயிர் (பசு) இலக்கணம்** | **- 1 பாடல்** |
| **தளை (பாசம்) இலக்கணம்** | **- 13 பாடல்கள்** |
| **உயிர்நிலை (அவத்தை) இலக்கணம்** | **-18 பாடல்கள்** |
| | **38** |

**ஆக முப்பத்து எட்டுப் பாடல்களில் பரந்துபட்ட அண்டத்தில் இறையின் தளையுடம் உயிரது நிலை பற்றிய அணைத்து உண்மைக்கும் புலப்படுமாறு பேசியுள்ள உமாபதி சிவத்தின் ஞானம் வணங்கத்தக்கதாகும்.**

பதியாகிய சிவனை உயிராகிய சீவன் சென்றடைய இயலாதவாறு தளைகள் உள்ளதையும், தளைகளை உடைத்தெறிந்து சீவன் சிவனையடையுமாற்றையும் இவ்வதிகாரம் குறிப்பிட்டுள்ளது. சீவன் சீர்ப்படும் (பக்குவப்படும்) நிலையாகிய முயற்சி நிலையை உயிர்நிலை (அவத்தை) என்றும் அவத்தைகளின் வகைகளைப் பற்றியும் அவ்வதிகாரம் விளக்கியுள்ளது. சிவன், சீவன், தளை ஆகிய மூன்றையும் இருபது பாடல்களில் கூறிவிட்டு, அவத்தையைப் பற்றி மட்டும் பதினெட்டுப் பாடல்களில் கூறியுள்ளதால் அவத்தையின் இன்றியமையாமை புலனாகும்.

பதியாகிய சிவனை விளக்க, பதியின் இலக்கணத்தைக் கூறவந்த பொதுவதிகாரம்,

**"பலகலை ஆகமம் வேதம் யாவையினும் கருத்துப்**
**பதிபசு பாசம்தெரித்தல்; பதிபரமே அதுதான்**
**நிலவும்அரு உருவின்றிக் குணம்குறிகள் இன்றி**
**நின்மலமாய் ஏகமாய் நித்தம் ஆகி**
**அலகில்உயிர்க்கு உணர்வாகி அசலம் ஆகி**
**அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்**
**செலஅரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்**
**திகழ்வதுதற் சிவம்என்பர் தெளிந்து ளோரே"**

*(பாடல்-13)*

என்ற பாடலின் வழியே '**சிவன்**' என்பது என்னவென்று எளிதாய்ப் புலப்படுத்திவிடுகிறது. இப்பாடலின் இலக்கணப்படியே **சிவன்** திகழ்வதாகத் தெளிவு பெற்ற பேராளர் உணர்ந்துள்ளனர். **"அணுவினுக்கு அணுவாய் அப்பாலும் பாழ்வெளியாய் நிற்பதே சிவம்"** என்பது அப்பேராளரின் துணிபாகும். அதையே மேற்பாடல் உறுதி செய்கின்றது.

" எண்ணரிதாய் " (பாடல்-19) எனத் தொடங்கும் பொதுவதிகாரப் பாடல் உயிராகிய ஆன்மாவின் இலக்கணத்தை நறுக்குத்தெரித்தாற் போன்று ஒரே பாடலில் உணர்த்தி விடுகின்றது. இப்பாடலில் காணப்படும் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் உத்தியானது சுவைத்து மகிழத்தக்கதாம். அதே சமயத்தில் இப்பாடலுக்குப் பதவுரை, தெளிவுரை, விரிவுரை என உரை கூறிக்கொண்டே சென்றால் அதன் அளவு மிகமிகப் பரந்ததாக இருக்கும்.

மலம், மாயை, மாமாயை, கன்மம், ஊழ்வினை என ஐவகைப்பட்ட மலங்கள் ஆகிய தளைகள் உயிரைப் பிணித்துள்ளதையும், அவற்றின் வகைகளோடு இலக்கணத்தையும் " ஏகமாய்" (பாடல்-20) எனத்தொடங்கும் பாடல் விரித்துரைத்துள்ளது. உயிர்களை மறைத்துள்ள மலங்களின் தன்மையை விளக்கியுள்ள இப்பாடல் (20) உயிர்களின் இயல்புநிலை குறித்த அறிவியல் ஆய்வாகத் திகழ்கின்றது.

அவத்தைகளின் இலக்கணங்களாகக் கூறப் பெற்றுள்ள பதினெட்டுப் பாடல்களும் சைவர்களே அன்றி அனைத்து நெறியினருக்கும் பொருந்திநின்று உணர்வூட்டுபவைகளாக விளங்குகின்றன. "அந்நியம் ஆனவை" (பாடல்-36) எனத் தொடங்கும் பாடல் எக்காலத்தும், எக்குலத்தாருக்கும், ஏற்ற மெய்ப்பொருளை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. இனி உண்மை அதிகாரத்தை உணர்வோம்.

உண்மை அதிகாரம் ஐம்பது பாடல்களைக் கொண்டுள்ளது முதற்பாடல், அதிகாரத்துள் கூறப்படும் பொருளை இன்னதென்று கூறுகின்றது. அடுத்த எட்டுப்பாடல்கள் உயிர் குறித்த உண்மைகளை எடுத்துக் கூறுகின்றன. ஏனைய நாற்பத்தொரு பாடல்களும் ஐந்து அவத்தைகளின் இலக்கணத்தை விரித்துக் கூறுகின்றன.

உயிரின் இயல்பு குறித்த பாடல்களில் ஒன்று உயிர்குறித்து தான்உணர்கின்ற பொருட்கள் எல்லாம் அழிந்துவிடக் கூடியவை என்பதை,

**அறிவினால் அறிந்த யாவும்**
**அசத்தாதல் அறிதி என்றும்**
**அறிவினால் அறியொ ணாதேல்**
**ஆவதுஒன்று இன்மை; தொன்மை**
**அறிவுத்தான் ஒன்றை முந்தி**
**அதுஅது ஆகக் காணும்**
**அறிவுகாண் அசத்து மற்றது**
**அறிவினுக்கு அறியொ ணாதே**

*(பாடல்-55)*

என்று கூறிச் செல்கின்றது.

ஐந்து அவத்தைகளின் இலக்கணத்தைக் கூறுகின்ற உண்மை அதிகாரப் பாடல்கள் அனைத்தும் தேற்றமாய்க் கண்ட செய்திகளையே கொண்டுள்ளன. "**தத்துவம்**" (பாடல்-73) எனத் தொடங்கும் பாடல் ஒன்றே உண்மை அதிகாரத்துள் கண்டுள்ள பாடல்கள் அனைத்தும் தேற்றமே என்பதற்குச் சான்றாகும்.

இத்துணை சிறப்பு வாய்ந்த சிவப்பிரகாச நூலின் பெருமையை இவ்வுரையால் படித்துணர்க.

இறைவன் துணை

# உரையாசிரியர் அருணந்தி தேவன் பற்றிய குறிப்புகள்

(அ. சிவபெருமான்)

**உமாபதிசிவம்** அருளிச் செய்த சிவப்பிரகாசம் என்னும் ஞான நூலுக்கு உரை எழுதிய அருணந்தி தேவன் பற்றிய குறிப்புகளை அறிவோம். அவ்வாறு அறிவதற்கு அவர் உரையின் தொடக்கத்தில் எழுதிய உரைக்காப்புச் செய்யுள் ஒன்றும், உரையின் இறுதியிலுள்ள இரண்டு பாடல்களும் சான்றாகும். ஒவ்வொன்றாய் நோக்குவோம்.

**உரையின் தொடக்கத்திலுள்ள காப்புச் செய்யுள்**

"நீர்மேவு சடையானும் உமையும் ஈன்ற
நித்திவா னந்தமதம் பொழிவோன் தானும்
தார்மேவும் ஈராறு புயத்தான் தானும்
தாழ்ந்துரத்தி வாணிபதம் தன்னை நாளும்
சீர்மேவும் படியிருத்தி என்னை யாண்ட
சிவக்கொழுந்தோன் இருபதம்என் சிரமேல்
கொண்டேன்
பேர்மேவும் சிவப்பிரகா சத்துக்கு என்னால்
இயன்றபடி உரையதனை இயம்ப லுற்றேன்"

**மேற்பாடலின் கருத்துவருமாறு**

மேற்பாடல் சிவப்பிரகாசம் என்னும் ஞான நூலுக்கு உரையாசிரியரான அருணந்திதேவர் என்னும் சிவாக்கிரயோகி என்பவரால் உரைக்குக் காப்புச் செய்யுளாகச் செய்யப்பட்டது.

நித்திஆனந்தமதம்பொழிவோன் என்றது மூத்தபிள்ளையாரை; ஈராறு புயத்தோன் என்றது முருகப்பெருமானை; வாணி என்றது கலைமகள்; சிவக்கொழுந்தோன் என்றது தம்ஆசிரியரான சிவாக்கிரயோகிகளை.

ஆனந்தமதம் பொழிவோன் தாளையும், ஈராறு புயத்தோன் தாளையும் தாழ்ந்து ஏத்தி, வாணி பதம் தன்னை நெஞ்சிலே இருத்தி, என்னை ஆட்கொண்ட சிவக்கொழுந்தோன் இருபதம் என் சிரமேற் கொண்டு சிவப்பிரகாசத்துக்கு என்னால் இயன்றபடி உரையினை இயம்பலுற்றேன்.

**உரையின் இறுதிப்பாடல்கள் இரண்டும் வருமாறு**

1. *ஏரார் சிவப்பிரகா சசத்தினுக்(கு)இங்(கு) ஏற்கவே*
*சீரார் அருணந்தி தேவன்தான் - நீரார்*
*முடியார் அடிஉளத்தின் முன்னிஉரை இட்டான்*
*அடியார் உகந்திடுவ(து) ஆய்.*

2. பந்தவினை அறுத்தருளும் பரம ஞானி
பரகுருவாம் சிவக்கொழுந்தின் பாதம் போற்றி
நந்தவனம் கற்றமுத கிரணம் போன்ற
நாகரிக னாஅருண் நந்தி தேவன்
அந்தமிலா வடகலைநூற் பயனும் தன்னுன்
அனுபவத்தால் வரும்பயனும் அடைவே சேர்த்துச்
செந்தமிழால் மனமுதலோர் வகுத்த நூலாம்
சிவப்பிரகா சத்தின்உரை செப்பி னானே !

**மேற்பாடல்களிலிருந்து பெறப்பட்ட செய்தி**

சிவப்பிரகாசத்திற்கு உரை செய்தவர் அருணந்தி தேவன் என்பதை முதலிலுள்ள வெண்பாவால் உணர்ந்து கொண்டோம் இவரின் குரு சிவக்கொழுந்து தேசிகர் என்பதை உரைத்தொடக்கத்திலுள்ள காப்புப் பாடலால் அறிந்ததைப் போன்று, மேற்குறித்த பந்தவினை என்னும் பாட்டாலும் அறிந்தோம்.

இறைவன் துணை

# உரையாசிரியர் அருணந்தி தேவன் பற்றிய குறிப்புகள்

(அ. சிவபெருமான்)

உமாபதிசிவம் அருளிச் செய்த சிவப்பிரகாசம் என்னும் ஞான நூலுக்கு உரை எழுதிய அருணந்தி தேவன் பற்றிய குறிப்புகளை அறிவோம். அவ்வாறு அறிவதற்கு அவர் உரையின் தொடக்கத்தில் எழுதிய உரைக்காப்புச் செய்யுள் ஒன்றும், உரையின் இறுதியிலுள்ள இரண்டு பாடல்களும் சான்றாகும். ஒவ்வொன்றாய் நோக்குவோம்.

**உரையின் தொடக்கத்திலுள்ள காப்புச் செய்யுள்**

"நீர்மேவு சடையானும் உமையும் ஈன்ற
நித்திவா னந்தமதம் பொழிவோன் தாளும்
தார்மேவும் ஈராறு புயத்தான் தாளும்
தாழ்ந்துரத்தி வாணிபதம் தன்னை நாளும்
சீர்மேவும் படியிருத்தி என்னை யாண்ட
சிவக்கொழுந்தோன் இருபதம்என் சிரமேல்
கொண்டேன்
பேர்மேவும் சிவப்பிரகா சத்துக்கு என்னால்
இயன்றபடி உரையதனை இயம்ப லுற்றேன்"

**மேற்பாடலின் கருத்துவருமாறு**

மேற்பாடல் சிவப்பிரகாசம் என்னும் ஞான நூலுக்கு உரையாசிரியரான அருணந்திதேவர் என்னும் சிவாக்கிரயோகி என்பவரால் உரைக்குக் காப்புச் செய்யுளாகச் செய்யப்பட்டது.

நித்திஆனந்தமதம்பொழிவோன் என்றது மூத்தபிள்ளையாரை; ஈராறு புயத்தோன் என்றது முருகப்பெருமானை; வாணி என்றது கலைமகள்; சிவக்கொழுந்தோன் என்றது தம்ஆசிரியரான சிவாக்கிரயோகிகளை.

ஆனந்தமதம் பொழிவோன் தாளையும், ஈராறு புயத்தோன் தாளையும் தாழ்ந்து ஏத்தி, வாணி பதம் தன்னை நெஞ்சிலே இருத்தி, என்னை ஆட்கொண்ட சிவக்கொழுந்தோன் இருபதம் என் சிரமேற் கொண்டு சிவப்பிரகாசத்துக்கு என்னால் இயன்றபடி உரையினை இயம்பலுற்றேன்.

**உரையின் இறுதிப்பாடல்கள் இரண்டும் வருமாறு**

1. ஏரார் சிவப்பிரகா சசத்தினுக்(கு)இங்(கு) ஏற்கவே
சீரார் அருணந்தி தேவன்தான் - நீரார்
முடியார் அடிஉளத்தின் முன்னிஉரை இட்டான்
அடியார் உகந்திடுவ(து) ஆய்.

2. பந்தவினை அறுத்தருளும் பரம ஞானி
பரகுருவாம் சிவக்கொழுந்தின் பாதம் போற்றி
நந்தவனம் கற்றமுத கிரணம் போன்ற
நாகரிக னாஅருண் நந்தி தேவன்
அந்தமிலா வடகலைநூற் பயனும் தன்னுன்
அனுபவத்தால் வரும்பயனும் அடைவே சேர்த்துக்
செந்தமிழால் மனமுதலோர் வகுத்த நூலாம்
சிவப்பிரகா சத்தின்உரை செப்பி னானே !

**மேற்பாடல்களிலிருந்து பெறப்பட்ட செய்தி**

சிவப்பிரகாசத்திற்கு உரை செய்தவர் அருணந்தி தேவன் என்பதை முதலிலுள்ள வெண்பாவால் உணர்ந்து கொண்டோம் இவரின் குரு சிவக்கொழுந்து தேசிகர் என்பதை உரைத்தொடக்கத்திலுள்ள காப்புப் பாடலால் அறிந்ததைப் போன்று, மேற்குறித்த பந்தவினை என்னும் பாட்டாலும் அறிந்தோம்.

சிவநெறிப்பிரகாசம் என்னும் நூல் செய்தவர் சிவாக்கிரயோகிகள் என்னும் சிவக்கொழுந்து தேசிகராவார். அந்நூலுக்கு உரையெழுதியவர் தவத்திரு நந்திசிவாக்கிர யோகிகள் என்பவராவார். இக்குறிப்பிட்ட இந்நந்தி சிவாக்கிரயோகிகளும் இவ்வுரையாசிரியரான அருணந்தி தேவரும் ஒருவரென்றே அறியமுடிகின்றது. இதற்குச் சான்றாகப் பின்வரும் குறிப்பைக் கொள்ளலாம்.

சிவநெறிப் பிரகாசத்தில் "குரு சரணர் அருள்புரிந்த வாக்கும்" (பாடல்-11) என்னும் தொடரைப்போல, சிவப்பிரகாசத்தில் இடம் பெற்றுள்ள, மூவகை ஆர்உயிர் வர்க்கம் (பாடல்-8), என்றும் பாட்டுரையில் எம்முடைய குருசரணர் பண்ணின பெரிய வியாக்கியானத்திலே கண்டுகொள்க என்பது சான்றாம்

மேலும், இவ்வுரையாசிரியராகிய அருணந்திதேவன் சூரியனார்கோயில் ஆதீன மரபைச் சார்ந்தவர் என்றும் தெரிகின்றது. இவரைப் பற்றிய குறிப்புகள் இந்த அளவில் மட்டும் கிடைத்துள்ளது. அறிஞர்கள் மென்மேலும் ஆராய வேண்டும்.

# எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| ஆலம்நபி கதைப்பாட்டு | 15-00 |
| தணிகைக் கலம்பகம் | 25-00 |
| சிவபாரத சரிதம் | 16-00 |
| இராசகோபாலமாலை | 18-00 |
| திருவேட்டைநல்லூர் ஐயனார் பள்ளு | 26-00 |
| குந்தமாலை | 40-00 |
| வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி | 8-00 |
| நாலுமந்திரி கும்மி | 15-00 |
| நாலடியார் உரைவளம் (பாகம்-I) | 90-00 |
| நாலடியார் உரைவளம் (பாகம்-II) | 75-00 |
| தனிப்பாடல் திரட்டு (பாகம்-I) | 30-00 |
| தனிப்பாடல் திரட்டு (பாகம்-II) | 40-00 |
| திருக்குறள் பழைய உரை | 25-00 |
| கணக்கதிகாரம் | 150-00 |
| ஆஸ்தானகோலாகலம் | 80-00 |
| பொன்னர் சங்கர் அம்மானை | 40-00 |
| திருக்குறள் ஜைன உரை | 75-00 |
| வைத்தியநாதஸ்வாமி திருவிளையாடல் | 8-00 |
| நாகை கனகசபைநாதன் உலா | 50-00 |
| மரியாதைராமன் கதைகள் | 22-00 |
| குசலவன் கதை | 15-00 |
| ஞானக்குறவஞ்சி | 20-00 |
| களாபூர்ணோதயம் | 40-00 |
| பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ் | 14-00 |
| சுந்தரி அம்மானை | 12-00 |
| குமரேச சதகம் | 65-00 |
| அருகிரி அந்தாதி | 12-00 |
| பதிப்புநெறி முறைகள் | 10-00 |
| புல்லையந்தாதி | 12-00 |
| சோமயாகப் பெருங்காவியம் | 19-00 |

# சிவப்பிரகாச மூலமும் உரையும்

**சிதம்பரம் கொற்றவன்குடி தவத்திரு உமாபதிசிவம்**
**அருளிய மூலமும்**
**தவத்திரு அருணந்தி தேவன் அருளிய உரையும்**



**காப்பு**

**மூத்த பிள்ளையார்**

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார வரும்யானை கழல்நாளும் மறவாமல்
அளியாரும்[1] மலர்தூவும் அடியார்கள் உளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

பாட பேதம் : 1. அளியாளும்

இந்தச் சாத்திரம் விக்கின மன்றியிலே நிறைவேறும் படிக்குந் தம்முடைய ஞானசந்ததி பாரம்பரியரானவர்களுக்கு நன்மை யுண்டாவதாகவும் உமாபதிசிவாசாரியார் இந்தச் சாத்திரராதியிலே பண்ணின வினாயக தோத்திரம்; வினாயக னென்றது தமக்கொரு நாயகனில்லாமற் றாமே சகல கணங்களுக்கும் நாயகனாகையால். ஒளியான திருமேனி என்றது சுயம்பிரகாசம்; உமிழ்தான மிகமேவு களியார வரும் ஆனை என்றது;

உமிழ்தல் - பொங்கி வழிதல்
தானம் - மதம்
மிக மேவு -மேன்மேலும்
களியார -கெறுவத்தை யுடைத்தாய்,
வரும் ஆனை -எழுந்தருளும் ஆனை முகத்தையுடைய.

எழுந்தருளும் ஆனை முகத்தையுடைய பரமானந்த மாகிய மதம் பொங்கி வழியுங் கெறுவத்தையுடைய யானை முகத்தையுடையராய்ப் பத்தர்கள் நினைத்த விடத்தில் வந்துதவுமவரது;

**கழல் நாளும் மறவாமல் அளியாரும் மலர் தூவும் அடியார்கள் உளமான வெளியாகும் :-**

வீரக்கழலைத் தரித்திருக்கும் பாதார விந்தங்களை அனுதினமுஞ் சிந்தித்து, வண்டுகள் வாழ வுசிதமான மணத்தையும் தேனையுமுடைய புட்பங்களினாலே பூசை பண்ணும் பக்தர்களுடைய ஞானமானது ஆணவ விருட் போய் வெளியாய்ப் பிரகாசிக்கும்;

**வலிதாய வினை கூட நினையாவே:-**

இவ்வாறு ஆணவ விருட்போய்ப் பிரகாசித்த ஞான மானது சஞ்சித ஆகாமியம் போல் தீட்சையினாலும் சிவபாவனையினாலும் நீங்காது புசித்தே தொலைய வேண்டி நின்ற பிரார்த்த கன்மம் புசிக்கும்பொழுதும் அனிச்சையி னாலேயாவது பரேச்சையி னாலேயாவது புசிப்பதேயன்றி அந்த ஞானமானது விஷய விச்சையப் பண்ணாது.

இவ்வாறு ஞானமுடையவர்கள் ஆகாமிய கன்மம் ஏறாமல் தேகா.ந்தத்திலே பரம முத்தியை அடைவார்கள் என்பது இதன்பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு:*

1) ஒளியான என்னும் இப்பாட்டு சிவப்பிரகாச நூலிற்குக் காப்பு என்று அறிஞர் குறிப்பிடுவர்.

2) மதுரைச் சிவப்பிரகாசர் உரையுள்,

“ ஒளியது காப்பருட் கணபதி கழலிணை
தெளிபவர் உளம்வினை சேரா வென்றது”

என்ற கொளு, உரைக்கு முதலில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறே எல்லாப் பாட்டிற்கும் கொளு உள்ளன.

"அது நீங்கலாகக் காவை அம்பலநாதத் தம்பிரானார் இந்நூலின் கருத்தாகச் செய்தருளின குறள் வெண்பா நூலும் இந்நூலின் பாட்டுக்கள் தோறும் சேர்த்து" என்று உரை எழுதுவதை நோக்கினால், இக்கொளுவை எழுதினார் இன்னார் என்பது புலப்படும்".

இப்பாடலில் உளம் என்பதற்கு ஞானம் என்று பொருள் எழுதி, ஞானம் ஆணவ இருள் போய்ப் பிரகாசிக்கும்; அந்த ஞானம் வலிதாய வினையைக் கூட அறியா என்பர். இந்த உரையுள் உள்ளம் எழுவாயாக உள்ளது. வெளியாகும், கூட அறியா என்பவை பயனிலையாகும்.

மதுரைச் சிவப்பிரகாசர் உள்ளத்தையும் வினையையும் தனித்தனி எழுவாயாக வைத்து, உள்ளம் வெளியாகும்; வலிதாய வினைகூட அறியா என்று கூறுவர்.

சிவஞான முனிவர் "இன்னும் அவர் "ஒளியான திருமேனி" என்னும் செய்யுளினுள் "உளமான" என்னும் எழுவாய்ப் பன்மைக்கேற்ப "ஆகும்" எனவும், "நினையா" எனவும் பயனிலைகளும் பன்மையாற் கூறிய கருத்துணராது, கூடுதற்குச் செயப்படு பொருளாகிய "வினையை நினையா" என்னும் பயனிலைக்கு எழுவாயாகக் கொண்டுரைத்து, "வலிது" என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கி ஒருமைப் பன்மை மயக்கம் என்று இடர்ப்படுவர் இன்னோரன்னவை ஒருமைப் பன்மை மயக்க மாதற் கேலாமை உணர்ந்து வினையை எழுவாயாக்கு வார்க்கும், "வலிதாய வினை" என்பதனை வலியினாக் கடந்த (தாய-கடந்த) வினை என்றுரைப்பிற் பால்வழுவாகாது. அங்ஙனம் உரைக்குமாறும் உணர்ந்திலர்" என்பர். (சிவஞான பாடியம், சூ-2;அதிகரணம் 1-உரை)

எனவே, "சிவஞான முனிவர்", ஆனை கழலை மறவாமல் மலர் தூவும் அடியார்கள் உளம் ஆனவை வெளி ஆகும்; வினையைக் கூட நினையா என்று கருதினார் போலும்.

*3) விநாயகப் பெருமானை வணங்கினால் வல்வினைகள் போம் என்பதை,*

> "கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
> பணங்கொண்ட பாந்தட் சடைமேல் - மணங்கொண்ட
> தாதகத்த தேன்முரலும் கொன்றையான் தத்தளித்த
> போதகத்தின் தாள்பணியப் போம்".
>
> (மூத்த நாயனார் திருவிரட்டை மணி மாலை -9)

என்ற பாடலாற் உணர்க.

*4) "மலமாயை தன்னொடு* **வல்வினை** *இன்றே என்பது (நூற்பா-10) என்பது சிவஞான போதம். இதற்குப்* **பாண்டிப் பொருமாள்** *செய்த விருத்தியில் ஆணவமும் மாயாமலமும் ஆகிய இவற்றுடனே, மேலும் ஆகாமியமாகி வரும் வலிய வினையும் இல்லையாம் என்றவாறு" என்பர்.*

*5) "***ஒளியான***" என்னும் இப்பாட்டுரையில் மதுரைச் சிவப்பிரகாசர், வலிதாய வினை என்றது பிராரத்தம் புசிக்கச் செய்தே ஏறுகிற ஆகாமிய கன்மமென அறிக. இதற்குப் பிரமாணம்* **திருவருட் பயனில் "ஏன்ற வினை யுடலோ டேகும் இடை ஏறும் வினை, தோன்றில் அருளே சுடும்"** *என்று கண்டு கொள்க. ஆனால் இலக்கணம் சிதம்பரநாத முனிவர் தாம் இயற்றிய சிவப்பிரகாச உரையுள் வன்மையதான மூவித வினைகளும் அவர்களைப் பொருந்த விசாரியா என்பர்.*

# பாயிரம் தொடக்கம்

## (பாயிரம் ஈராறு)

### மேல் இந்தச் சாத்திரத்திற் பிரதி பாத்திய ரான சிவனைத் தோத்திரம் பண்ணுகின்றது

[எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்]

ஓங்குஒளியாய் அருள்ஞான மூர்த்தி ஆகி
உலகம்எலாம் அளித்தருளும் உமை அம்மை காணத்
தேம்கமழும் மலர்இதழித் திங்கள் கங்கை
திகழ்அரவம் வளர்சடைமேல் சேர வைத்து
நீங்கல்அரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றுஇமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமலம் மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உறவணங்கிப் போற்றிச்[1] செய்வாம். (1)

பாடபேதம்: 1. போற்றல்.

**ஓங்கொளி யாய்** :- *சோம சூரியாக்கினிப் பிரகாசம் போல் சடமும் பரிச்சின்னமு மன்றி ஞானமும் விபுவுமான அதிப்பிரகாசமாய்;*

**அருள் ஞான மூர்த்தி யாகி** :- *ஆன்மாக்களை யிரட்சிக்க வேணுமென்கிற கருணையினாலே ஞான சத்தி மூர்த்தி மானாகி;*

**உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காண**:- *பிரபஞ்சத்தை யெல்லாம் இரட்சிக்கும் உமையாகிய உலக மாதா நோக்க;* **தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து நீங்கலரும் பவத் தொடர்ச்சி நீங்க மன்றுள் நின்றிமையோர் துதி செய்ய நிருத்தம் செய்யும்**:- *கீத்தலும் நீங்காத தேனையும் மணத்தையுமுள்ள கொன்றை மலர் மாலையையும், திருவிளம்பிறையையும், கங்கை யையும், பணாமணிகளாலே விளங்கும் பாம்பையும், ஒளிவளருந் திருச்சடைகளிற் பொருந்த வைத்துச் சகலராகிய*

ஆன்மாக்களுக்கு நீங்குதற் கரிதாகிய செனனமான தொந்தங்கள் நீங்கும் படிக்குச் சிற்றம்பலத்திலே அனவரதமும் பிரம விட்டுணு இந்திராதிகள் தோத்திரம் பண்ண ஆனந்த நிருத்தம் பண்ணும் அவருடைய;

**பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும் புந்தியிலும் உற வணங்கிப் போற்றிச் செய்வாம் :-** சிவஞான மாகிய மணமும் ✓ ,ணையாகிய குளிர்ச்சியும் பரமானந்தமாகிய தேனையும் முத்தான் மாக்களாகிய வண்டுகளையும் உடைத்தாய்ச் செந்தாமரை மலர் போன்ற ஸ்ரீபாதங்களைப் பிரம்மரந்திரத்திலே பொருந்த அறிவினாலே பாவித்து வாக்கினாலே தோத்திரம் பண்ணிக் காயத்தினாலே வணங்குவான் என்று இதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு :*

1) இப்பாட்டின் கொளு,

“ மன்னிய கடவுள் பொன்னடி வாழ்த்தி
முன்னவ னுண்மை முறைமை மொழிந்தது ”

என்பதாகும்.

2) காவை அம்பலநாதத் தம்பிரானார்

“**ஓங்கொளியாய்**” என்று தொடங்கும் இப் பாடலிலிருந்து பன்னிரண்டு பாடல்களைப் பாயிரம் என்பர். பாயிரம் ஈராறு, என்ற பாடற் பகுதியைக் காண்க. இப்பாயிரத்துள் “**ஓங்கு பரந்த நலம் வளர் தேவர் பார்** ” என்றிவையானும் இறைவன் வணக்கம் என்பர் சண்பைச் சிற்றம்பலனார்.

3) “பலபுவனமும் மேற் சகலமுமாய் அகலாத ஓங்கு மொளி ”
(கோயிற்புராணம் - பாயிரம்-1)

4) “ஆரணங்கள் முடிந்தபதத் தானந்த வொளியுலகில்
காரணம்கற் பனைகடந்த கருணைதிரு வுருவாகி ”
(கோயிற்புராணம்-பாயிரம்-2)

5) “தேசமலி பொதுஞானச் செவ்வொளியும்“ ”

(கோயிற்புராணம்-பாயிரம்-20)

6) “ஆதிநடு அந்தமிலா அளவில் சோதி
அருள் ஞான மூர்த்தியாய்”

(சித்தியார் பரபக்கம்-2)

---

# சத்தி

பரந்தபரா பரைஆதி பரனது இச்சை
பரஞானம் கிரியைபர போக ரூபம்
தருங்கருணை உருவாகி, விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்கள் தாங்க
விரிந்தஉபா தானங்கள் மேவி, ஒன்றாய்
விமலமாய், ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்து
அரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
அன்னைஅரும் பாதமலர் சென்னி வைப்பாம்.(2)

**பரந்த பராபரை ஆதி பரனது இச்சை பர ஞானம் கிரியை:-** *சகல வியாபியாகிய பரமசிவனுக்கு வேறற்ற பராசத்தியினிடத்திலே யுண்டான ஆதிசத்தி, ஆன்மாக்களை இரட்சிக்க வேணுமென்னும் உயர்ந்த இச்சாசத்தி, சர்வான் மாக்களுடைய கன்மங்களையும் அதுக்குக் கொடுக்கும் பல போகங்களையும் ஏக காலத்திலே அறிவதாகிய பாச பசு ஞானங்கட்கு மேலான ஞான சத்தி சிருட்டியாதியைப் பண்ணும் கிரியா சத்தி;*

**பர போக ரூபம் தரும் கருணை உருவாகி:-** இவ்வாறு *தோன்றின பஞ்ச சத்திகளும் பரமானந்த போக ரூபத்தைப் பக்குவான்மாக்களுக்கு அருளுதற்குக் கருணையினாலே தங்கள் தங்கள் பங்கினாலே சதாசிவ ரூபமாய்;*

**விசுத்தா சுத்தத் தனு கரண புவன போகங்கள் தாங்க விரிந்த உபாதானங்கள் மேவி:**- சுத்தமாகவும் அசுத்தமாகவும் சுத்தா சுத்தமாகவும் தனு கரண புவன போகங்களை மூன்று வகை ஆத்துமாக்களுக்கும் பொருந்துவதாக வுண்டாக்க வியாபி யாகிய விந்து, மோகினி, மான் என்னும் மூன்று உபாதானங்களையும் பொருந்தி;

**ஒன்றாய் விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய்:**- மாயையைப் பொருந்தித் தனுவாதிகளை உண்டாக்கி நின்றும் நின்மலமுமாய்ப், பஞ்ச கிருத்தியமும் சிவன் தடத்தனாக விருக்கத் தானே பண்ணியும் தொழில் வேற்றுமையால் பஞ்ச சத்தியென்று சொல்லப்பட்டு உண்மையையுணரில் ஒன்றேயாய்;

**ஞாலத்து அரந்தை கெட மணிமன்றுள் ஆடல் காணும் அன்னை அருள் பாதமலர் சென்னிவைப்பாம்:**- உலகத்தின் கண்ணுண்டான ஆத்துமாக்களுடைய அஞ்ஞானங் கெடும்படி இரத்தின சபையிலே பரமேசுரன் பண்ணும் பரமானந்தத் தாண்டவத்துக்குச் சாட்சியாகக் காணும் அருள் வடிவமான உலகமாதாவினுடைய பாதார விந்தங்களைத் தலையின் மீது தரிப்பாம் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு :-*

*1)* உரு ஆகியும், உபாதானங்களை மேவியும், ஒன்றாயும், விமலமாயும், வித்தாயும் (விளங்கி) ஆடலைக் காணும் அன்னையினது பாதமலரையாம் சென்னிக்கண் வைப்பாம் என முடிக்க.

*2)* **முத்தி நிச்சயப் பேருரையில்** இருபதாம் பாட்டுரையில் சிவனுக்கு அளவிறந்த சத்தி யுண்டெனவும் அதனை ஆறாகவும் எட்டாகவும் பிறிதாகவும் வகுத்துக் கூறுவர் என்பதற்குப் பரந்த பரா பரை என்னும்இப்பாட்டு மேற்கோளாகும். *(ப.241)*

3) அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பார்
அறிவார் அறிவுரு வாம்அரன் என்பார்
அறிவார் கருமம் அவன்இச்சை என்பார்
அறிவார் பரனும் அவளிடந் தானே

*(திருமந்திரம்-1054)*

4) சிவனுக்கு அதிதூல தேகமும், தூலதேகமும், சூக்கும தேகமும், பரம சூக்கும தேகமும் என நான்கு தேகங்கள் உள்ளன; அவற்றுள் பரா பரையை, பரம சூக்கும தேகம் என்பர்.

மேற்கருத்து, சிவதரு மோத்திரப்பாடல் கருத்தாகும் என்பது அடிகளாசிரியர் கூறியதாகும்.

5) "சிவற் குருவ மாகு மந்தச் சிற்சத்தி"

*(அத்துவித வெண்பா-உண்மை-6)*

6) "ஈசனருள் இச்சையரி வியற்றல் இன்பம்
இலயமொடு போகமதி கார மாகித்
தேசருவம் அருவுருவம் உருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வமாகி"

*(சித்தியார்-பர பக்கம்-3)*

7) "பன்னியமூ வகையுயிரும் பெற்று நோக்கும்
பராபறையே சிவலோகம் பரனுக் காமே"

*(சிவஞானதீபம்-37)*

## கணபதி

நலந்தரநூல்[1] இருந்தமிழின் செய்யுள் குற்றம்
நண்ணாமை இடையூறு நலியாமை கருதி
இலங்கும்இரு குழைஅருகு பொருதுவரி சிதறி
இணைவேல்கள் இகழ்ந்தகயற் கண்ணியொடும்
இறைவன்
கலந்தருள் வரும்ஆனை முகத்தான் மும்மைக்
கடமருவி எனநிலவு கணபதியின் அருளால்
அலர்ந்தமது[2] கரமுனிவர் பரவவளர் கமலம்
அனையதிரு வடியிணைகள் நினைதல் செய்வாம். (3)

பாடபேதம் : 1. நலந்தரு நூல், 2. அலந்து மது

**நலந்தர:-** சிவானுபவமாகிய நன்மை உண்டாக;

**நூல் இருந்தமிழின் செய்யுள் குற்றம் நண்ணாமை:-** இந்தச் சாத்திரத்திற் பெரிய தமிழினது பஞ்சதிகாரக் குற்றம் வாராமல்;

**இடையூறு நலியாமை கருதி:-** ஆதியாத்மிகம் ஆதிபவுதிகம் ஆதி தெய்வீகங்களால் விக்கினம் வராமல் நிறைவேறும் படியாக நினைந்து;

**இலங்கும்இரு குழையருகு பொருது வரி சிதறி இணை வேல்கள் இகழ்ந்த கயற் கண்ணியொடும் இறைவன் கலந்தருள வரும்:-** மாணிக்கத் தோட்டுடனே கூடி ஒளி வளரும் இரண்டு காதளவுஞ் சென்றுள்ளதுமாய்ச் செவ்வரி பரந்து இருதலை வேலைப் பழித்து, அழகிய கயல் போன்ற கண்ணையுடைய சிவகாமசவுந்தரி யம்மையைச் சர்வ சீவ பதியாகிய சிவன் கூடிப் புணர்ந்தருள அதனால் அவதரித்த;

**ஆனை முகத்தான் மும்மைக் கடம் அருவி என நிலவு கணபதியின் அருளால்:-** மூன்று மதமும் மலை அருவிபோல் விளங்கும் ஆனை முகத்தராய்ப் பதினெண் கணங்களுக்கும் பதியாய் உள்ளவர் கருணையினால் முன்சொன்ன விக்கினமும் குற்றமும் இல்லாமல் நிறைவேறும் படிக்கு அந்தக் கணபதியினுடைய;

**அலர்ந்த மதுகர முனிவர் பரவ வளர் கமலம் அனைய திருவடி இணைகள் நினைதல் செய்வாம்:-** கருணை பூத்த மதுகர முனிவராகிற வண்டுகள் சாம கானத்தைப் பண்ணிப் பொருந்தப் பரமானந்தமானது மேன்மேலும் வளரும் தாமரைப் பூப்போன்ற சீர் பாதங்களை நினைத்திடுவோம் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு:-*

*1)* "இருந்தமிழ்நூல் செய்யுளின் குற்றம் நண்ணாமை
நலந்தர"

என்று மாற்றிப் பொருள் கொள்வர் சிதம்பரநாத முனிவர்.

*2)* "சொற்றரு நூலிற் குற்றமணு காவகை
பொற்புறு கரிமுகன் நற்பதம் பணிந்தது" என்பது
இப்பாட்டின் கொளுவாகும்.

*3)* "இயம்புநூல் இருந்தமிழின் செய்யு ளாற்றால்
இடையூறு தீர்ந்தினிது முடிய வேண்டித்
தயங்குபே ரொளியாகி எங்கும் நின்ற
தலைவனார் மலைமாது தன்னோ டாடிப்
பயந்த ஐங்கரன்" (சித்தியார் பர பக்கம்-4)

வளநிலவு குலஅமரர்[1] அதிபதியாய் நீல
மயிலேறி வரும்ஈசன் அருள்ஞான மதலை
அளவில்பல கலையங்கம் ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக்கு ஓத்துரைக்கும் அண்ணல்விறல் எண்ணா
உளமருவு சூரன்உரம் எமதிடும்பை[2] ஓங்கல்
ஒன்றிரண்டு கூறுபட ஒளிதிகழ்வேல் உகந்த
களபமலி குறமகள்தன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மல ரடியிணைகள் சிந்தை செய்வாம். (4)

பாடபேதம் : 1. அமரர் பதியாய், 2. எனதிடும்பை.

**வளநிலவு குல அமரர் அதிபதியாய்**:- செல்வம் மிகவும் விளங்கும். தேவர்களுடைய குலத்துக்குச் சேனாதிபதியாய்;

**நீல மயில் ஏறி வரும்**:- நீல நிறத்தையுடைய மயில் வாகனத்தின் மேல் எழுந்தருளும் அவராய்;

**ஈசன் அருள் ஞான மதலை** :- பரமேசுரன் உதவின ஞான குரு குமாரன்;

**அளவில் பல கலை அங்கம் ஆரணங்கள் உணர்ந்த அகத்தியனுக்கு ஓத்து உரைக்கும் அண்ணல்** :- முடிவில்லாத கலைஞானங்களையும், வேதாங்கங்களாறையும், வேதங்களையும், இதிகாச புராண சாத்திரங்களையும், ஓதியுணர்ந்த அகத்திய மாமுனிக்கு வேதாந்தத்துண்மை உபதேசம் பண்ணின ஞானாசிரியன்;

**விறல் எண்ணா உளம் மருவு சூரன் உரம் எமது இடும்பை ஓங்கல் ஒன்றிரண்டு கூறுபட ஒளிதிகழ் வேல் உகந்த**:- வெற்றிப் பாட்டிலே தனக்குச் சரியாக யொருத்தரையு மெண்ணாத ஆங்காரத்தைப் பொருந்தின சூரபத்மாவின் மார்பும் அவன் விடுத்த கிரவுஞ்சகிரியும் பக்தர்களிடத்திலே யான் எனதென்ன நின்ற இடும்பையும் ஒன்றிரண்டாகப் பிளந்து போம்படிக்குப் பிரகாசம் விளங்கும் வேலைப் பணிகொண்டுகந்த;

**களபம் மலி குறமகள் தன்மணி முலைகள் கலந்த:-** குங்குமக் குழம்பு நிறைந்து கனக புருடராக மணிக்கலசம் போன்ற தனங்களை யுடைத்தாயக குறவரிடத்தே வளர்ந்த வள்ளி நாயகி யாரைக் கலந்து மணம் புணர்ந்த;

**கந்தன் மலர் அடி இணைகள் சிந்தை செய்வாம்:-** சூரபத்மாவைச் சங்கரித்துத் துட்ட நிக்கிரகத்தையும் பண்ணித் தேவர்களுடைய சிறையும் மீட்டுச் சிட்டபரிபாலனம் பண்ணி, அகத்தியற்கு மோட்சார்த்தமாகிய ஞான வுபதேசத்தைப் பண்ணி, வள்ளி நாயகியார் முற்சென்மத்திலே தம்மைப் புணர்ந்து போகத்தைக் கொடுக்க வேணுமென்று தவசு பண்ணுகையால் அவரைப் புணர்ந்து போகத்தைக் கொடுத்து,

இவ்வாறு துட்ட நிக்கிரகத்தையும் சிட்ட பரி பாலனத்தையும் பண்ணும் கர்த்தாவும் போக மோட்ச பிரதாதாவுமான சுப்பிரமணியனை யான் பண்ணுஞ் சாத்திரத்துக்கு விக்கினங்களும் வாராமல் நன்மையுடைத்தாய் இந்தச் சாத்திரத்தை ஓதின பேர்க்கும் போக மோட்ச முண்டாவதாக இந்தக் கடவுளினது பாதார விந்தங்களை இதயத்திலே பரவிப்பாம் என்றிதன் பொருள்.

***பதிப்பாசிரியர் குறிப்பு :***

1. "அருமறைச் சிரப்பொருள் அகத்தியற் குரைத்த
முருகன திருபதம் பரிவுடன் மொழிந்தது"

என்பது இப்பாட்டின் கொளு.

2. **அகத்தியனுக் கோத்துரைக்கும் அண்ணல்**

"ஆதிநடு வந்தமிலா வமலனுயிர்க்
கழுக்கறுக்க அறைந்த வாய்மை
வேதமுதல் உணர்ந்தகுகன் விரைமலர்த்தாள்
அகத்தியன்றான் வியந்து போற்றிப்

போதகனே யனைத்து யிர்க்கும் புலமாக்கு
நெறிபுகலா யென்னக் கந்தன்
ஓதியருள் சிவதரு மோத் தரநூலைத்
தொகை செய்து உரைப்பார் ஓர்ந்தே"

*(சிவதருமோத்திரம்-பாயிரம்-7)*

*3.* "அருமறைஆ கமம்அங்கம் அருங்கலைநூல் தெரிந்த
அகத்தியனுக்கு ஓத்துரைக்கும்
அருள்குருவாம்....."

*(சித்தியார் பரபக்கம்-5)*

## சந்தானக் குறவர் பாரம்பரியம் உரைத்தது

தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
ஸ்ரீநந்தி அவர்கணத்தோர் செல்வர் பாரில்
பாவியசத்தியஞான தெரிசனைகள்[1] அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியார்[2] வெண்ணெய
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவில்அருள் மறைஞான சம்பந்தர் இவர்இச்
சந்தானத் தெமைஆளும் தன்மை யோரே. (5)

பாடபேதம் : 1. தரிசனிகள், 2. பதியாம்; பதியாய்

*இப்பாடல் வெளிப்பொருள் என்பதால் உரை எழுதப்படவில்லை (சுவடியில் உரை இல்லை). இருப்பினும் பதிப்பாசிரியரால் சுருக்கவுரை எழுதப் பட்டுள்ளது.*

### பதிப்பாசிரியர் எழுதிய உரை

*தேவர் பிரானாகிய சிவபெருமான் தமக்கிடமாகக் கொண்டுள்ள கயிலை மலையின் காவல் அதிகாரியாகிய நந்தித்தேவரும் அவரது சந்ததிகளாகச் சிறப்புப்பெற்று, பாரில் மெய்ப்பொருள் கண்டுணர்ந்த மாமுனிவர்களாகிய பரஞ் சோதியார், மெய்கண்ட தேவர், அருள் நந்திச் சிவாசாரியார், மறைஞான சம்பந்தர் என இவர்கள் எல்லாம் எமை ஆளும் தன்மை பெற்றவர்களாவர் என்றவாறு.*

### *பதிப்பாசிரியர் குறிப்பு :*

*1. “**அவர் கணத் தோர் செல்வர்** ” என்றதற்கு அவரது திருவடியைப் பெற்ற மகா இருடிகளில் ஒப்பில்லாத ஞானச் செல்வத்தையுடைய **சநற்கு மார பகவான்** என்று உரை கூறுவர் **மதுரைச் சிவப்பிரகாசர்**.*

*இவருள் நந்திபிரான், சனற்குமார முனிவன், சத்திய ஞான தரிசனி, பரஞ்சோதியார் என்னும் நால்வரையும்*

**அகச்சந்தான குரவர்** என்றும், மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் என்னும் நால்வரையும் **புறச்சந்தான குரவர்** என்றும் அறிஞர் வழங்குகின்றனர்.

2. "**இச்சந்தானம்**" என்ற சுட்டு கொண்டே, "மற்றுள்ள (ஆசாரிய) சந்ததிகளுக்கும் இப்படிப் பாரம்பரியமாக ஆசாரிய மரபுண்டாகையால், இந்த மெய்கண்ட சந்ததி என்று பொருள் படுத்தினர், என்பர் **மதுரைச் சிவப்பிரகாசர்.**

3. முத்தி நிச்சயப் பேருரை சிறப்புப் பாயிர உரையுள், "**தேவர் பிரான்............தன்மையோரே**" என வருதலின், இவ்வாறு கூறும் உமாபதி சிவமும், மச்சுச் செட்டியா (அருள் நமச்சிவாய)ரும் **மறைஞான சம்பந்த குரவர்பால் அருள் பெற்றார்** என்பர். (முத்தி நிச்சயப் பேருரை. பக்.9)

5. **குருவணக்கப் பயன் வருமாறு:**

"கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங்கெடு மாபோல்
**குருவின் உருவம் குறித்தவப் போதே**
திரிமலம் தீர்ந்து சிவனவன் ஆமே"

(திருமந்திரம் - 2659)

## குருவணக்கம்

**உமாபதி சிவாச்சாரியார் தம்முடைய குருவாகிய மறைஞான சம்பந்த மாமுனிவர் திருவடியை வணங்கிக் கூறிய பாட்டு**

பார்திகழ வளர்சாம வேதம் மல்க
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி எம்மை ஆண்ட
சைவசிகா மணிமருதத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில்புடைசூழ் மதில்மீதே மதியம்
கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பாம். (6)

சாம வேதியாய் பராசர கோத்திரராய் மருதத்தூரிற் றிருவவதாரஞ் செய்து பெண்ணாகடத்தில் ஆசாரிய வபிஷேகத்தைப் பெற்று மறைஞான சம்பந்த சிவாச்சாரிய ரென்னு நாமத்தையுடைய என்னுடைய ஆசாரியனுடைய திருவடித் தாமரைகளைச் சிரத்திலே தரியா நின்றேன் என்றிதன் பொருள்.

***பதிப்பாசிரியர் குறிப்பு :***

*1. மருதூரென்றும், பெண்ணாகடமென்றும் திருப்படைவீடு இரண்டாக வேண்டுவானே னென்னில்? மருதூர் திருவவதாரம் செய்த ஊரென அறிக; பெண்ணாகடம் ஆசாரியார் அபிடேகஞ் செய்துகொண்ட ஊரென அறிக என்பர் மதுரைச் சிவப்பிரகாசர்.*

*2. மறைஞான சம்பந்தர் ஸ்மார்த்தப் பிராமணர் ஆவர். அருணந்தி சிவாச்சாரியாரிடம் தீட்சை பெற்ற மகாசைவர்.*

*3. உமாபதி சிவாச்சாரியார் தம் குருநாதன் மேல் போற்றிப் பஃறொடையும், நெஞ்சுவிடுதூதும் இயற்றி யுள்ளார். அந்நூல்களில் தம் குருவைச் சம்பந்த மாமுனி என்று குறிப்பிட்டுள்ளார்.*

## நூற்கருத்து

புறச்சமயத் தவர்க்குஇருளாய் அகச்சமயத்து ஒளியாய்ப்
புகலளவைக்கு[1] அளவாகிய பொற்பணிபோல்
அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோல் பேதமும் சொற்பொருள்
போல
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினால் விளைவதாய் உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும்அத் துவிதம் ஆகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்கு தெரிக்கல் உற்றாம். (7)

பாடபேதம்: 1. புகழளவைக்

**புறச்சமயத்தவர்க்கு இருளாய்:**- வேதத்துக்கும் புறம்பான பவுத்தாதி சமயத்தவர்க்கு அஞ்ஞான விருளாலே தெரிவரிதாய்;

**புறச்சமயமாவது:**- வேதஞ் சொன்ன தன்மம் நடவாத புத்தர் சமணர் சாருவாகர் முதலான பாஷாண்டிகள்.

**அகச்சமயத்து ஒளியாய் :**- (இதற்கு உரையில்லை)

**அகச்சமயமாவது:**- வேதஞ் சொன்ன தன்மத்திலே நடக்கும் பூர்வ மீமாம்ஸகா, உத்தர மீமாம்ஸகா, ஈசுர சாங்கியா, யோக காபிலேயா வைகானசா, வைட்டனவா, சைவா.

**புறச்சமயமாவன:** புத்தர், சமணர், லோகாயதர், மாயாவதிகள் பாஞ்சராத்திரிகள் என்றும், அகச்சமயமாவன சைவம் பாசுபதம் வாமம் வயிரவம் மகாவிரதம் காளாமுகம் என்றும் சொல்லலாகாதோ? எனில், இவ்வாறு சொல்லலாகாது. சொல்லில் வேதாகம புராண இதிகாசங் களுக்கெல்லாம். விரோதமாம். (எதனாலெனின்?)

**ஞானசம்பந்தர்:** சிவகீர்த்தி வளரும் படிக்கு வைதிகத்தின் வழியொழுகாதவர்களைச் செயிக்கத்தர வேணுமென்று சிவனை வேண்டிக்கொண்டமையானும்,

மகிமன் தோத்திரத்திலே புட்வதந்தர் சிவனை நோக்கி வைதிகரென்றும், மீமாங்கிஸரென்றும், ஈசுர சாங்கிய ரென்றும், காபிலேயரென்றும், சைவரென்றும், வைகாநச வயிட்டணவரென்றும் இப்படிப் பேதமையா (பேதமாய்) யிருக்கிற ஆறு சமயத்தவர்களுக்கும் அவர்களவர்களிச்சை படியிலே வளைந்தும் செவ்விதாயும் பெருகுகிற ஆறுகளுக் கெல்லாம் சமுத்திர மொன்றே கதியானது போல நீரே கதி என்றுஞ் சொல்லுகையினாலும்,

கவுதமாமுனி தமக்கபராதிகளான பிராமணரை நோக்கிப் பாஞ்சராத்திரத்திலே பாகவதமான தத்துவாதத்திலே வேத சம்பந்தமல்லாத பாசுபதத்திலே காளாமுகத்திலே பவுத்த மதத்திலே ஆருகதத்திலே பயிரவ மதத்திலே மாவிரத மதத்திலே, வாம தந்திரத்திலே இப்படிப் பாஷாண்ட மதத்திலே நீங்கள் தீட்சதராகக் கடவியோன் என்று சபிக்கையினாலும்;

பாசுபதத்திலே வேதாவிருத்தமென்றும், வேதவிருத்த மென்றும் இரண்டு வகையாம். இங்கே புறச்சமயமென்பது வேதவிருத்தமான பாசுபதத்தை.

பரமேசுரனுடைய வாக்கியம் வேதத்துக்கு விருத்தமான சாத்திரங்களானவைகள் வாமமென்றும் பாசுபதமென்றும் லாகுளமென்றும் பயிரவமென்றும் நம்மாலே உலகத்தை மோகிப்பிக்க வேண்டிச் சொல்லப்பட்ட தொழிந்து இவைகளெல்லாம் நம்முடைய பத்தர்களாலே அங்கீகரிக்கப் படுவதல்ல என்கையாம்.

இன்னும் வேத சிவாகம விதிகாச புராணங்களிலே முன் சொன்ன வைதிகாதியாறுமே உட்சமயமென்றும் வாம காளா முகாதி புறம்பென்றும் சொல்லுகையாலே, வாம காளா முகாதிகளை உட்சமய மென்றும் சொல்லுமவர்கள் அவர்களைப் போலே வன்னாச்சிரம தன்மங்களுமற்றுப் போச்சியா போச்சிய நியமங்களுமில்லாத பேர்களே.

**புகல் அளவைக்கு அளவாகி:-** சொல்லப்பட்ட பிரத்தியட்சாதி பிரமாணங்களினாலே அளவிடப்போகாத தாய்: (அளவாகி என்னும் சொல்லை, அளவாததாகி என்று எதிர்மறையாகப் பொருள் கொள்கின்றார்.)

**பொற்பணி போல் அபேதப் பிறப்பிலதாய்:-** பிரமந் தானே சொல்லப் போகாத அவித்தியோபாதியினால் ஈசுரனாகி அந்த அவித்யா காரியமாகிய அந்தக் கரணோபாதி பேதத்தினாலே நானாரூப சீவனுமாய்ப் பிரபஞ்சமானது பிரம விவர்த்தமுமாய்;

விவர்த்தமாவது இது வெளி. அது, பழுதையிலே பாம்பென்று பிராந்தி வந்தது போலும்; கிளிஞ்சலிலே வெள்ளியென்று பிராந்தி வந்தது போலும்; பிரமத்திலே பிரபஞ்சம் ஆரோபிதமென்றும்; இதை உள்ளபடியே நானே பரப்பிரம்மமென்று நிற்பதே மோட்சம். அஃதெவ்வா றென்னில்? கனகமானது கடக மகுடாதி நானா பேத சுரூபமாயிருந்தும் உருக்கின நேரத்திலே ஒன்றே ஆனது போல என்னும் அபேத சிந்தாந்தமும் ஏலாததாய்;

**இருள்வெளி போல் பேதமும்:-** கர்த்தா நித்திய ஞானப் பிரகாசனாகையால், வெளிபோலவும், ஆத்மாக்கள் அநித்திய ஞானாசிரித னாகையால் இருள் போலவும் பேதம் என்னும் பாஷாணவாதி மதம் சொல்பேத சித்தாந்தமும் ஏலாததாய்;

**சொல் பொருள் போல் பேத அபேதமும் இன்றி:-** சத்த அர்த்தத்துவ சாதியினாலே பேதா பேதமுமாய் இருப்பது போலப் பிரமும் சீவாத்துமாக்களும் பேதாபேதம் என்னும் பட்ட பாற்கர சித்தாந்தமும் அல்லாததுமாய்;

பேதம், அபேதம், பேதாபேதம் என்னும் இம்மூன்று வகையுமன்றி வேறொன்றில்லை; இம்மூன்றும் அல்லாத தென்றது எவ்வாறெனில்? பிரமமே பிரபஞ்சமாமென்னில், பிரமம், சச்சிதானந்த இலட்சணத்தையுடையது. பிரபஞ்சம் அசத்தியமும் சடமும் மாயையாகையாலும், சதுர்வித

புருஷார்த்தமென்பது பிரமத்துக்கு வேண்டாமாகையாலும், பிரமாணப் பிரமேயப் பிரமாதா என்னும் மூன்று பொருளுண்டாயிருக்க, ஒரு பொருளோ, என்பது கூடாதாகை யாலும் என்னுமிது ஆதியாக அபேதத்துக்குத் தூஷணம் அநேகமுண்டு. விரிக்கிற் பெருகுமென்று இவ்விடத்துச் சொன்னதில்லை.

இருளும் வெளியும் போற் பேதமென்னில், இருள் உண்டான விடத்திலே வெளியும், வெளியுண்டான இடத்திலே இருளும் இல்லாமையாலே, பிரமம் ஓர் இடத்திலும் சீவனொருவிடத்திலும் நிற்க வேணும். அப்பொழுது பிரமம் ஏகதேசமாம். பிரபஞ்சத்தை உண்டாக்கவும் கூடாது.இது ஆதியாக அனேக தூஷணம் உண்டாகையால் பேதமென்பதுங் கூடாது.

சொல்லும் பொருளும் போலப் பேதா பேதம் என்னில், ஒரு பொருளுக்கு இரண்டு தன்மை சொல்லுகிறது விருத்தம். இது அனேகாந்தி தூஷணமுண்டு. இன்றியும், சொல்லும் பொருளும் பேதமே. அந்தச் சொல்லும் பொருளை அறிவித்த மாத்திரமே யொழிந்து அதற்குக் குணகுணியுமல்ல; காரிய காரணமுமல்ல; சமவேதமும் சம்யுக்தமுமல்ல. இவ்வா றுரைக்கில் உம்முடைய உண்மை எங்ஙனே என்னில் ?

**பெருநூல் சொன்ன அறத்தினால் விளைவதாய்:-** வேதாகமங்கள் சொன்ன வழியிலே நடந்த பேர்க்குப் பாவிப்பதுமாய்;

**உடல் உயிர் போல்:-** பிரபஞ்சமும் கர்த்தாவும் உடலும் உயிரும் போல நின்று சேட்டிப்பதுமாய்;

**கண் அருக்கன் போல்:-** ஆத்துமாக்களும் கர்த்தாவும் கண்ணும் ஆதித்தனும் போல நின்று தெரிவிப்பதுமாய்;

**அறிவு ஒளிபோல் பிறிவரும் அத்துவிதம் ஆகும் சிறப்பினதாய்:-** ஆத்மாவும் ஆத்ம ஞானமும் போலப் பிறியப்படாமலிருக்கும் அத்துவிதமாய் மிகவும் அழகினை யுடைத்தாகும்;

**வேதாந்த தெளிவாம் சைவ சித்தாந்தத் திறம் இங்கு செப்பல் உற்றாம்:-** வேதாந்தத்தினுடைய சாரமாகப் பரமேசுரன் திருவுளம் பற்றியருளின சிவகாம சித்தாந்தத்தின் உண்மையை இந்தச் சாத்திரத்திலே சொல்லா நின்றேன்.

வேதத்தொழி பொருள், வேதாந்தத்திற் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவமென்றிதன் பொருள்.

இதனாற் பிரபஞ்சமும் சிவனும் தேகமும் தேகியும் போல நின்று பிரேரிப்பதை அபேதோபசாரமாகச் சொல்லப் பெறுமென்றும், ஆத்மாக்களுடைய ஞானத்தைச் சிவன் தன்னுடைய ஞான சத்தியினாலே பிரகாசிப்பிக்கையால் கண்ணும் ஆதித்தனும் போலப் பேதோப சாரமாகச் சொல்லப் பெறும் என்றும், ஆத்ம ஞானமும் ஆத்மாவும் போல ஆத்மாவுஞ் சிவனும் பிறிவற நிற்கையால் அப்பொருளினாலே பேதமும் வியார்த்தியினாலே அபேதமுமாயிருக்கையால் பேதா பேதோப சாரமாகச் சொல்லப்பெறும் என்றுஞ் சொன்னது.

இஃதன்றிச் சிலர் உடலும் உயிரும் கூடின விடத்திலே அறிவும், கண்ணும் ஆதித்தனும் கூடின விடத்தில் ஒளியும் போலவென்று திருட்டாந்தமாகச் சொல்லில் தாட்டாந்திகம் ஏதென்று கேட்கில், உத்தரஞ் சொல்லாத படியாலே அப்பிரதிபாநாம நிக்கிரகத்தானம்.

பதிப்பாசிரியர் குறிப்பு

**புறச்சமயம்**

1. "உலகாயுதம் புத்தம் சமணமீ மாஞ்சை
பாஞ்சராத்திரம் பாட்டா சாரியம்
இவ்வகை யாறும் புறச்சமய மாகும்"

**அகச்சமயம்**

"வைரவம் வாமம் காளாமுகம் மாவிரதம்
பாசுபதம் சைவமென் னுட்சமய மாறே"
(பிங்கல நிகண்டு-3-96, 97)

**2. புறச்சமயத்தவர்க்கு இருளாய்; அகச்சமயத்து ஒளியாய் - விளக்கம்**

"உலகாயதன், புத்தன், சமணன், மீமாம்சன், மாயாவாதி, பாஞ்சராத்திரி என்னும் புறச்சமமயிகள் அறுவர்க்கும் இருளாய்; சைவம், பாசுபதம், காளாமுகம், வயிரவம், வாமம், மாவிரதம் என்னும் உட்சமயிகள் அறுவர்க்கும் விளக்கமாய்." (இலக்கணம் சிதம்பரநாத முனிவர் உரை)

**மதுரைச் சிவப்பிரகாசர் உரை:** பரமசமயிகளாயுள்ள உலோகாயதன் முதல் பாஞ்சராத்திரி ஈறாகச் சொல்லப்பட்ட சமயிகளுக்குத் தெரியாததாய், உட்சமயமாயுள்ள சைவம் முதல் வைரவம் ஈறாகச் சொல்லப்பட்ட சமயங்கள் ஆறுக்கும், சைவத்திற்குப் பேதமாயுள்ள எட்டுப் பெயர்க்கும் அறியப்படுவதாய்.

3. **மதுரைச் சிவப்பிரகாசர் உரை:** "புகழ் அளவைக்கு அளவாகி" என்னும் பாடங்கொண்டு சர்வராலும் புகழ்ந்து சொல்லப்பட்ட அளவைப் பிரமாணங்களினாலே அளவிடப்படுவதாய்.

4. **சிவப்பிரகாசம் எல்லா நூற்கும் முடிபான சித்தாந்தத்தைக் கூறுகின்றது:** "சிவப்பிரகாசத்தில், "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன் இங்கு தெரிக்கல் உற்றாம்" எனவும் கூறுதலின், எல்லா நூற்கும் முடிபான சித்தாந்தத்தைக் கூறும் சிவாகம சித்தாந்தத்தினது உயர்ச்சி தோன்றத் திகழ் முத்தி நிச்சயம்" என்றது. (முத்தி நிச்சயப் பேருரை-ப-51)

5. **"பிறிவரும், அத்துவிதமாகும் சிறப்பினதாய்" என்றது பற்றிச் சிவஞான முனிவர் குறிப்பு:-** ஒருபொருளை அவயவ அவயவிகளாயாதல், குண குணிகளா யாதல் வேற்றுமைப் பட்டு இரண்டாய் நிற்றற் கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல இருபொருளே அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற் கேதுவாகிய தாதான்மியமுமெனத் தாதான்மிய சம்பந்தம் இருவகைப்படும். அவற்றுள்,

முன்னையது தாதான்மியமென்றும், பின்னையது அத்துவித மென்றும் வழங்கப்படும். அத்துவிதம் என்னும் சொல்லியல்பு மேற்கூறியவற்றான் வேறு பொருள் தருமாறின்றி, அன்மைப் பொருள் பற்றி இரண்டன்றென வேற்றுமைப் படாமையை விளக்கி நிற்றலாலென்க.

இதுவே ஆசிரியர் கருத்தென்பது அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு என்றதனானும், புடைநூலாசிரியர் “பிரிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய் என்று உடம்பொடு புணர்த்தோதியதானும் அறிக” என்பர். (சிவஞானபோத மாபாடியம் சூ-6-அதி-2)

**6. அறிவொளி போல் - என்பது பற்றிச் சிவஞான முனிவர் கருத்து:** “அறிவொளி போல் என்னும் சொற்றொடருக்கு **ஆன்ம போதமும் கண்ணொளியும் போல்** என்று பொருள் கூறுவர் சிவஞான முனிவர். இக்கருத்தினை, ஈண்டுச் சைதன்னியம் ஆன்மா என்பது. “அறிவொளி போல்” என்றாற் றொடக்கத்துப் போல ஏற்புழிக் கோடலாற் பெறப்படும் என்பர். (சிவஞான போத மாபாடியம்-சூ-8-அகி-2)

25

## கேட்போரும் பயனும்

மூவகையா ருயிர்வர்க்கம்; மலத்தார், கன்ம
மூலமலத் தார்,மூன்றும் உடையார் அன்றே;
தீவகமாம் எனஉருவாய் வந்து நாதன்
திருநோக்கால், பரிசத்தால், திகழும், வாக்கால்,
பாவனையால், மிகுநூலால், யோகப் பண்பால்,
பரவிவரும்[1] அவுத்திரியால் பாச நாசம்
மேவஅருளுதவும்; அவுத்திரி இரண்டு திறனாம்;
வியன்கிரியை, ஞானம்என விளம்பு[2] மாறே. (8)

பாடபேதம்: 1. பரவ வரும். 2. விளம்பு மன்றே.

***அன்றே உயிர் வர்க்கம் மூவகையார்:***- *அனாதியிலே ஆத்மாக்களானவர் மூன்று வகையார், அவராவார்;*

***மலத்தார்:***- *ஆணவம் ஒன்றுமுடைய விஞ்ஞான கலர்;*

***கன்ம மூல மலத்தார்:***- *வீட்டுப் பற்றாய் வரும் கன்மம் மாயைகளுக் கேதுவாய் அனாதியே செம்புக்குக் களிம்பு போல ஆத்மாக்களுடன் கலந்து நிற்பதாதலால் மூல மலமென்று சொல்லப்பட்ட ஆணவ மலத்தையும் கன்ம மலத்தையும் உடைய பிரளயாகலர்;*

***மூன்றும் உடையார்:***- *ஆணவம் கன்மம் மாயை யென்னும் மூன்று மலத்தையுமுடைய சகலர்.*

*இவர்களில் விஞ்ஞான கலப்பிரளயா கலரில் தீவரம் தீவரதரம் என்னும் இரண்டு சத்தினிப் பாதத்தரையும் திருட்டி (சிருட்டி) யாதியிலே நிராதாரமாகவே அனுக்கிரகம் பண்ணித் தீவரதர சத்தினி பாதத்தையுடையவர்க்குப் பரம மோட்சத்தைத் திருவுளம் பற்றித் தீவர சத்தினி பாதத்தையுடையவர்க்கு மலபரிபாகத் தாரதன்மியத்தினாலே அதிகார மல மாத்திரம் நிறுத்திச் சாதாக்கிய தத்துவமான ஈசுர தத்துவம் சுத்த வித்தியா தத்துவங்களிலே அட்ட வித்தியே சுரராகவும், மந்திரே*

சுரராகவும், மந்திர பேதங்களாகவும் நிறுத்திப் பிரளயாகலரில் தீவிர சத்திபாத பாதரை அசுத்த மாயா புவனங்களிற் புவனேசுரராகப் பண்ணிப் பிரளயத்திலே இவர்களுக்குப் பரம மோட்சத்தையுந் திருவுளம் பற்றுவர்.

விஞ்ஞான கலர்க்கு ஆணவ மலமொன்றுமே யென்னில் கன்மத்தினாலே தனு கரண புவன போகங்கள் மாயையிலே உண்டாகவேணும்; கன்மமும் மாயையும் விஞ்ஞான கலர்க்கில்லை யாகையாற் போக மோட்சங் கூடாதென்னில் இதற்குத்தரம்.

சுத்தாத்துவாவிலே யிருக்கிற விஞ்ஞான கலர்க்குச் சுத்தாத்து வாக்குவிலே கன்மமானதில்லைப் போக முண்டென்ப தெப்படி யென்னில் ? சுத்தாத்துவாவிலே விசித்திரமான போகங்களுண்டு கன்மமில்லை யென்று தேவரீர் வாக்கியத்தினாலே திருவுளம் பற்றப்பட்டது.

அந்தச் சுத்த மாயா புவனங்களிலே யிருக்கிற விஞ்ஞான கலராகிய ஆத்மாக்களுக்குப் போகமுண்டு கன்மமில்லை யென்ற தாச்சரியம்; இதைத் தெரியத் திருவுளம் பற்ற வேணும் பரமேசுரனே! என்று முனீசுரர் கேட்க, இதற்குத்தரமாகச் சிறீகண்ட பரமேசுரன் வசனம்.

சுத்தாத்துவாவிலே யிருக்கிற ஆத்மாக்களுக்கு விசித்திர மாயுள்ள போகத்திலே கன்மங் காரணமல்ல விசித்தரமல்ல இருக்கிற மலபரிபாகமே அவ்விடத்திற் காரணம்;

அந்த மலபரிபாகம் யாதொருத்தருக்கு உத்தரமா யுண்டாச்சுது; அவர்கள் போக தத்துவமென்று பெயரை யுடைய சதாசிவ தத்துவத்திலேயிருந்து நல்ல போகத்தைப் பொசிப்பார்கள்.

மந்த மலபரிபாகத்தை யுடையவர்கள் ஈசுர தத்துவத்திலே யிருந்து சதாசிவ தத்துவத்தில் போகத்துக்குச் சற்றுக் குறைச்சலான போகத்தைப் பொசிப்பார்கள்.

இவ்வகையான போகங்கள் கன்மத்தை யிச்சியாமலே சிவனுடைய யிச்சா சத்தியினாலே கூடும் அந்தப் போகங்க ளெவ்வாறே தென்னிற் ? சிவதத்துவ தொந்தத்தினாலே சத்தி தத்துவம் சாதாக்கிய தத்துவம் ஈசுர தத்துவம் சுத்த வித்தியா தததுவம் இந்த அஞ்சு தத்துவங்களிலும் பெரியோர்களா யிருக்கிற உருத்திராத்மாக்களுக்கு விசித்திர... கூடப் பிராசாத கோபுர மண்டபாதி... சமூகங்கள் சிவேச்சையினாலே உ...

அந்தப் புவனங்களிலே தத்தற் புவனங்களான தேக விந்திய கரணங்களையும், போக விஷயங்களாகிய திவ்விய நாரிகள் முதலாயுள்ள வித்துக்களையும் சுத்த வித்தை முதலான தத்துவங்களிலே ஒன்றுக்கொன்று சுத்தமும் சூக்குமமும் அதிகமுமாகத் துக்கமொன்றில்லாததாக விஞ்ஞான கலரிலே சிவன் திருவருளைப் பெற்றுச் சிவபேரான பேர்களுக்குச் சிவேத்சையினாலே பண்ணப்பட்டது.

கன்ம சாமியத்தையும் மந்ததரம் மந்தரம் என்னும் சத்தினி பாதத்தினாற் செய்யுங் குருலிங்க சங்கமங்களிடத்திற் பூசாதி களாகிய வடையாளங்களாகியுமாசைப்படாமல் விஞ்ஞான கேவலரையும் அமரராகிய பிரளயாகலரையும் ஆணவமல பரிபாகத்தினாலே சிவன் கருணை செய்தருளுவர்.

கால கலாதி தத்துவங்களெல்லாம் அசுத்த மாயையிலே போலச் சுத்த மாயையிலும் உண்டு. அந்தத் தத்துவங்கள் விந்துவிலே உண்டாகையினாலே விசுத்தமாயிருக்கும்.

கலாதி யோகத்தினாலே சகலர் என்று பேராகையால் விஞ்ஞான கலர்க்கும் சுத்த மாயையிலே கலாதி தத்துவங் களுடைய தேகமுண்டானாலும், கலாதி பரதந்திரன்றி யிக் கலாதி பஞ்ச தத்துவங்களைத் தங்களாதீனுமாகப் பண்ணிக் கொண்டு நடக்கையால் அவர்கள் கலையோடே கூடினவர்க ளாகிலும் விஞ்ஞான கலரிலே பக்குவரைச் சிவன் அனுக்கிரகம் பண்ணி அசுத்த மாயா புவனாதிபர்களாகப் பண்ணுவர்.

சகலாத்மாக்களிலே மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்னும் நாலுவிதமான சத்தினி பாதத்தையுடைய பேர்களுக்கு இரட்சிக்கிற காலத்திலே சிவன் ஆசாரிய மூர்த்தி ரூபமாகவே அனுக்கிரகம் பண்ணுவர். ஆசாரியமூர்த்தி ரூபமாக அனுக்கிரகம் பண்ணும்படி;

**தீவகமாம் என உருவாய் வந்து நாதன்**:- சர்வ லோக நாதனாகிய சிவன் சகலராகிய ஆத்மாக்களை அதிட்டித்து வந்து நின்று;

**திருநோக்கால்**:- விஷந் தீண்டினவனை விஷம் நீங்க விஷ ஹாரியானவன் விஷ வயிரியான கெருடப் பார்வை யாகப் பார்த்தது போலச் சீஷனுடைய அஞ்ஞானம் நீங்குமாறு அஞ்ஞான வயிரியாகிய சிவபாவனையாகப் பார்த்தும்;

**பரிசத்தால்**:- இரும்பைப் பொன்னாக்கும் பரிச வேதி போலச் சீஷனுடைய பிரமரந்திரத்தில **ஸ்ரீ ஹஸ்த்தத்தை** வைத்தும்;

**திகழும் வாக்கால்**:- எல்லா மந்திரத்துக்கும் நாயகமாக விளங்கும் பஞ்சாக்கரத்தை உபதேசித்தும்;

**பாவனையால்**:- விஷங் கொண்டு மயங்கி யிருந்தவனை இராகுவினாலே விடப்பட்ட சந்திரனாய்ப் பாவித்தாற் போல, அஞ்ஞானம் நீங்கிச் சிவரூபமானவனாகப் பாவித்தும்;

**மிகுநூலால்** :- பதி பசு பாசத்தினுடைய உண்மையைச் சிவாகமத்தினாலே போதித்தும்;

**யோகப் பண்பால்**:- அந்த ஆத்மாவுக்கும் சிவனுக்கும் பிரிவறக் கூட்டத்தைப் பண்ணியும்;

**பரவீ வரும் அவுத்திரியால் பாச நாசம்**:- விரிந்துள்ள பஞ்ச கலா சோதனையை அவுத்திரி தீட்சையினாலே பாசச் சேதனம் பண்ணியும்;

**மேவ அருள் உதவும் அவுத்திரி இரண்டு திறமாம்:-** திருவருள் பிரகாசிக்கச் செய்யும் அவுத்திரி தீட்சையானது இரண்டாம்;

**அதுதான் வியன் கிரியை ஞானம் என விளம்பு மாறே:-** ஞான மார்க்க மென்றும் கிரியா மார்க்கமென்றும் (சொல்லப் படும்) விகற்பத்தினாலே இரண்டாம் என்றிதன் பொருள்.

**தீட்சை என்பது அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைக் கொடுப்பது.** ஆத்மாவுக்கு ஞானத்தைக் கொடுத்த தென்னும் பொழுது ஆத்மாவுக்கு முன்பு ஞானமில்லையே வென்னில்? அப்படியல்ல, ஆத்மா ஞான சொரூபனே; ஆணவ மலத்தினாலே ஆவகரிக்கப்பட்டிருந்ததை நீக்கி ஞானத்தைப் பிரகாசிக்கப் பண்ணுகையாலே ஞானத்தைக் கொடுத்த தென்றது.

இதற்கு முன்னே சொன்ன விருத்த முதலாக இனிமேல் வரும் விருத்தங்களிலும் யாதொரு இடத்திலே விருத்தத்திற் பொருளல்லாமல் அனேகமாக விரித்துச் சொல்லப்பட்டது. அவைகளுக்கெல்லாம் சைவகாமத்திலே சம்மதி வசனங்களு முண்டு. அந்தச் சம்மதி வசனங்களும் அதில் விரிவுகளும் எம்முடைய குருசரணர் பண்ணின பெரிய வியாக்கியா னத்திலே கண்டு கொள்க.

### பதிப்பாசிரியர் குறிப்பு

*1.* **திருநோக்கு - விளக்கம்:** திருநோக்கு முதலியவற்றால் பாச நாசம் பண்ணவேண்டும்.

‘ **தீக்கை** ’ என்ற சொற்குப் பாசத்தைக் கெடுத்தும் திருவருள் ஞானத்தைத் தருவது என்று பொருள். ஆதலால், திருநோக்கு, பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம், அவுத்திரி என்னும் இவற்றால் பாசநாசம் மேவ அருள் உதவும்.

*(மூதறிஞர் அடிகளாசிரியர் கூற்று)*

2. "மூவகை உயிரின் முறைமையும் அவர்க்குக்
காவலன் அருள்புரி கடனும் நவின்றது"

என்பது மேற்பாட்டின் கொளு.

3. "மூவகை விரும்பிய கிரியையென மூன்று
மாவதுதீக்கா முறைமைய தாகும்"

என்று சன்னைபச் சிற்றம்பலவனா [illegible] டு "மூவகை யாருயிர் வர்க்கம்" என்பதிலிருந்து மூன்று பாடல்களும் தீக்கை முறையினைக் கூறுவதாம் எனக் கொள்க.

4. **தீக்கையால் கழலுவன-தவத்திரு வாலையானந்த சுவாமிகள் கூறியது**

"நோக்கான் மாயை; பரிசத்தால்
நுண்மைவினை; மந்திரச் சொல்லால்
தாக்கும் சுத்த மாயையது;
தியானந் தன்னாற் சாருமலம்
பாக்கு மிகுபா வனையாலே
பகைத்த திரோதம்; யோகத்தால்
தேக்கும் ஆன்ம போதமிவை
சேரக் கழலும் கண்டீரே.

**மேற்பாட்டின்குறிப்பு (சுவாமிகள் கூறியது)**

மாயை- அசுத்த மாயை, பிரகிருதி மாயை.

நுண்மை வினை- சஞ்சிதம்.

தியானம்-இம்மாணவன் நன்மையடைய வேண்டும் என்று இறைவனிடத்தில் ஆசிரியர் தியானித்தல்.

யோகம்-ஆன்மாவை மாணவன் உடம்பினின்றும் வாங்கித் தன்னுட் சேர்த்துச் சீவபோதம் நீக்கிச் சிவத்துவம் அடையச் செய்து, பிராரத்த நுகர்விற்காக (மாணவன்) அவன் உடம்பிற் சேர்த்தல்

**5. தீக்கை என்பது பற்றிச் சிவஞான முனிவர் கூறுவது:**

வேதம் ஓதுதற்கண்ணும், வைதிகா சாரத்தின் கண்ணும் உபநயனப் பேறுடையார்க்கன்றி அதிகாரம் இன்மை போலச் சைவாகமும் ஓதுதற் கண்ணும், சைவாசாரத்தின் கண்ணும் சிவதீக்கைப் பேறுடையார்க்கன்றி அதிகாரம் இல்லையெனக் கொள்க.

அத்தீக்கை நிராதாரம் சாதாரமென்று இருவகைப்படும். அவற்றுள் நிராதாரமாவது, விஞ்ஞானகலர் பிரளாய கலருக்குத் தானே முன்னின்று செய்வது.

இனிச் சாதார தீக்கையானது சகலருக்கு நிலவுலகத்தில் ஆசான் மூர்த்தியை அதிட்டித்து நின்று நால்வகைச் சத்திநிபாதத்தாற் செய்வது. அதுவும் திருநோக்கம் முதல் பல வகைப்படும். அவற்றுட் சிறந்தது ஔத்திரி தீக்கை. *(சிவஞான போதம்-மாபாடியம், சிறப்புப்பாயிரம் தீக்கை)*

**6. உயிர் வர்க்கம் மூவகையார்**

“ஆணவ மாகும்விஞ் ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயா கலராகும்
ஆணவம் மாயையும் கன்மமும் மூன்றுமே
காணும் சகலர்க்குக் காட்டும் மலங்களே.”

*(திருமந்திரம்-2241)*

## சமய விசேட நிருவாணம்

விரும்பியமந் திராதிகாரம் அர்ச்சனாதி காரம்
மேவும்யோ காதிகாரம் எனச்சமய விசேடம்
வரும்;பொருவில் நிருவாணம் மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
இரங்கடைவில் தொகைபதினொன்று எணபதமொன்று
ஐம்பத்தொன்று
இருநூற்றோடு இருபத்து நாலாறு ஐந்தில்
பரந்தநெறி அறுவகையும் ஒருவிநினைவு அரிதாம்
பரபதத்துள் உயிர்விரவப் பயிற்றும் அன்றே. (9)

**விரும்பிய மந்திராதிகாரம் அர்ச்சனாதிகாரம் மேவும் யோகாதிகாரம் எனச் சமயம் விசேடம் வரும்:-** புத்தி முத்திளையை இச்சித்துச் செபிக்கும் மந்திர உபதேசத்துக்கு அதிகாரமானது சமய தீட்சையிலே உண்டாம்; சிவபூசை பண்ணுதற் கதிகாரமானது சாதியுத்தாரணம் பண்ணும் விசேஷ தீட்சையிலே உண்டாம்; அட்டாங்க யோகத்துக்கதிகாரம் இந்த விசேஷ தீட்சையிலே உண்டாம்.

**பொருவில் நிருவாணம் மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள் இரங்கடைவில் தொகை பதினொன்று எண்பத்தொன்று ஐம்பத்தொன்று இருநூற்றோடு இருபத்து நாலு ஆறாறு ஐந்தில் பரந்த நெறி அறுவகையும் ஒருவி நினைவரிதாம் பரபதத்துள் உயிர் விரவப்பயிற்றும் அன்றே:-** ஒப்பற்ற சிவசாயுச்சியத்துக் கேதுவான நிருவாண தீட்சையானது, மந்திரங்கள் பதினொன்றிலும் பதங்கள் எண்பத்தொன்றிலும், வன்னங்கள் ஐம்பத்தொன்றிலும், புவனங்கள் இருநூற்றி இருபத்து நாலினும், தத்துவங்கள் முப்பத்தாறினும், கலைகள் ஐந்தினும், ஆகிய ஆறு வழியினும் பொருந்தியிருந்த சஞ்சித கன்மங்கள் அனைத்தினையும் வெந்தவிரை போலாகக் கெடுத்து, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாததாய் எல்லாப் பொருளுக்கும் மேலாகிய சத்திய ஞானானந்த சொரூபமா

யிருக்கும் சிவத்திலே ஆத்மாவைத் தண்ணீரோடே தண்ணீரும், பாலோடே பாலுங் கூடினதுபோல இரண்டறக் கலப்பைப் பண்ணுதலைச் செய்யும் என்றிதன் பொருள்.

சமுத்திர சலத்திலே ஆற்றுநீர் போய்க்கூடி அந்த ஆற்று நீரினுடைய ருசிபோய் உப்பு நீரானாற் போலச் சீவ தத்துவம் போய்ச் சிவமேயாம் என்றும்,

ஓமாதி கன்மங்களிலே பசுவின் பாலுடனே கூடின ஆட்டுப்பால் எருமைப்பால்களும் தங்களுடைய பொல்லாப்பை நீங்கிப் பசுவின் பாலே ஆனது போலே; ஆத்மாவும் சிவயோகத்தினாலே மலத்தோடே யிருந்தது போய் நின்மல சிவமேயாம் என்றதற்குச் சொன்ன திட்டாந்தமே யன்றிச் சிவனையும் சீவனையும் ஒரு பொருளென்று சொன்னதல்ல.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* சிவஞான முனிவர் சிவஞான போத மாபாடியத்துள் கூறியுள்ள (சமயதீக்கை, விசேடதீக்கை, நிருவாண தீக்கை) சமய தீக்கை முதலியவற்றை ஓதி உணர்க.

2. "தக்கசரி யாகிரியா யோகத் தன்மையும்
மிக்கநல் ஞான விதியையும் உரைத்தது"

என்பது மேற்பாட்டின் கொளுவாகும்.

*3.* இப்பாட்டில் வந்துள்ள "**பரபதம்** " என்னும் சொல்லிற்கு **நின்மலசிவம்** என்று **உரையாசிரியர்** பொருள் கூறுவர்.

கிரியையென மருவும்அவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும் உண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரூ பங்கள்
மருவியிடும்; உயர்ஞானம் இரண்டாம்; மாறா
மலம்அகல அகலாத மன்னு போதத்
திருவருள்ஒன்று ஒன்றதனைத் தெளிய ஓதும்
சிவாகமம்என்று உலகறியச் செப்பும் நூலே. (10)

**கிரியை என மருவும் அவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் என கிளக்கும்:-** மன வாக்குக் காயங்களினாலே சிவனைக் குறித்துச் செய்யுந் தொழிலான தெல்லாம் சிவஞானம் உண்டாவதற்கு ஏதுவென்று சாத்திரங்களிலே சொல்லும்;

**உண்மை சரியை கிரியா யோகத் தன்மை யோர்க்குச் சாலோக சாமீப சாரூபங்கள் மருவியிடும்:-** இம்மைப் பயனையும் சொர்க்கத்தையும் அட்டமா சித்திகளையும் அசத்தியமென்று சிவனே உண்மையென்று கருதிச் சரிதை கிரியை யோகங்களைச் சாதித்த பேர்களுக்கு நிறை நிறையே ஸ்ரீகண்ட பரமேசுரன் எழுந்தருளியிருக்கும் சிவலோகத்திலே இருந்து அளவிறந்த போகத்தை அனுபவிக்கவும்; அவருடைய திருமேனியைப் போலவுமாகவும் பொருந்தும்.

சரிதை பண்ணின பேர்க்குச் சாலோகம் ஸ்ரீகண்ட பரமேசுர புவன மென்ப தொக்கும்; சாதியுத்தாரணரான தீட்சையிலே வாகீசுரி வாகீசர இடத்திலே செனித்துச் சதாசிவனைப் பூசை பண்ணின பேர்க்கும், விந்து நாதத்தைத் தியானித்துச்சமாதியடைந்த பேர்க்கும் சதாசிவ சாமீப்பியமும் என்னாது விந்துநாத அதிட்டிதரான சத்தருடைய சாமீப்பியமும் என்னாது ஸ்ரீகண்ட பரமேசுருடைய சாமீப்பிய சாரூபங்களைச் சொன்னது என்னையோ வென்னில்? சாமீப்பிய சாரூப்பியத்தை அடைந்த பேரும் திரும்பப் பூமியிலே சனித்துக் குருவினாலே அனுக்கிரகம் பண்ணப்

பெற்று ஞான நிட்டையினாலே மோட்சத்தை அடையவேணு மென்கையால் சுத்த மாயா விருத்திகளுக்கு அசுத்த மாயையிற் செனன மில்லையாகையாலும் நிருவாண தீட்சையிலே பஞ்ச கலா சோதனையை யுடையவனுக் கொழிய சுத்தாத்து வாவிலே யோசனையில்லை யாகையாலும், சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய மென்று மூன்றுவிதப் பதமுத்தியும் ஸ்ரீகண்ட பரமேசுரனிடத்திலேயே;

**உயர் ஞானம் இரண்டாம்:-** *(சுவடியில் உரை காணப்படவில்லை)*

**மாறா மலம் அகலா அகலாத மன்னு போதத் திருவருள் ஒன்று ஒன்று அதனைத் தெளிய ஓதும் சிவாகமம் என்று உலகு அறியச்செப்பும் நூலே:-** பிரிவற விருந்த ஆணவ மலமானது பிரிந்து போக, என்றும் பிரியாதிருக்கும் சிவனுடைய அருட்சத்தியானது இந்த ஆணவமலம் நீங்கிட ஆத்மாவிலே மிகவும் விளங்கும் பரஞான மொன்றும், ஒன்று முன் சொன்ன பதிபசு பாசத்தினுடைய உண்மையும் சரிதை கிரியை யோக ஞானத்தையும் சிவபத்தர் அறியவுரைக்கும் சிவகாமமாகிய சாத்திர மென்றுரைக்கு மென்றிதன் பொருள்.

### பதிப்பாசிரியர் குறிப்பு

*1.* **முத்திய நிச்சயப் பேருரையின்** ஒன்பதாம் பாட்டுரையில் கற்பன கற்று அனுட்டிக்கும் தவம் ஞானோற் பத்திக்கு நிமித்தம் எனக் கூறி, கிரியையென.................... நிமித்தமெனக் கிளக்கும் என்ற இப்பகுதியை மேற்கோள் காட்டுவார் அதன் **உரையாசிரியர்.**

## முதல்நூல் வழிநூல் சார்பு நூல்

(நூன் மரபு)

தெரித்தகுரு முதல்வர்உயர் சிவஞான போதம்
செப்பினர்; பின்பு அவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்;மற் றவர்கள்திரு வடிகள் போற்றி
விளம்பியநூல் அவையிரண்டும் விரும்பி நோக்கிக்
கருத்திலுறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்துபொது உண்மையெனக் கருதி யானும்
அருத்திமிக உரைப்பன்வளர் விருத்தம் நூறும்
ஆசில்சிவப் பிரகாசம் ஆகும். அன்றே. (11)

**தெரித்த குரு முதல்வர் உயர் சிவஞான போதம் செப்பினர்:-** *பூமியின்கண் எண்ணப்பட்ட குருசரணர்க்குள்ளே முதலெண்ணப்பட்டுச் சந்தானாதி குருவாகிய மெய்கண்ட தேவ சிவாச்சாரியர் பரமேசுரன் அருளிச் செய்த முதற் சூத்திரம் பனிரண்டையும் மொழி பெயர்த்தும் சூத்திரமும் வார்த்திகமுமாகச் சிவஞான போதம் என்று தமிழாகவுரைத்தார்;*

**பின்பு அவர் புதல்வர் சிவஞான சித்தி விரித்தனர் :-** *அதன் பின்பு தீட்சையினாலே குருவானவர் தம்முடைய ரேசக வாயுவினாலே புறப்பட்டுத் தம்முடைய பூரக வாயுவினாலே இதயத்தை யடைந்து, சிவசைதன்னியத்தையும் சீஷ சைதன்னியத்தையும் ஒன்றாக்கியதனாலே சீஷ சைதன்னியத்தின் மலினத்தைப் போக்கிச் "சமுத்திரத்திலே கலந்த ஆற்றுநீர் சமாசமானாற் போலச் சிவமும் ஆத்மாவும் ஏகீபவம் ஆனத்தைச் சமுத்திரத்து நீர் ஆற்றிலே எதிர்த்தாப் போல்",*

*அந்தச் சைதன்னியத்திலே சிறிது சீஷ தேகத்திலே பிரவேசிக்கச் செய்கையால் சீஷனைக் குருவினுடைய புத்திரனென்று சொல்லப்பெறுமாகையால், இப்படித் தீட்சையினாலே புத்திரராகிய அருணந்தி சிவாச்சாரியார் முன் மெய்கண்ட தேவ சிவாச்சாரியாரருளிச் செய்த சிவஞான போதத்தை ஆகமப் பொருளினாலே விசாரித்துப் பாஷிய ரூபமாகச் சிவஞான சித்தியார் யென்னுஞ் சாத்திரத்தை உரைத்தனர்;*

**மற்று அவர்கள் திருவடிகள் போற்றி விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி நோக்கி:-** அவ்விரண்டு குரு சரணரையும் துதித்து வணங்கி அவர்களுரைத்த இரண்டு சாத்திரத்தையும் முத்தியிச்சையினாலே ஓதி உணர்ந்து;

**கருத்தில் உறை திருவருளும்:-** என்னுடைய அனுபவத்தில் தோன்றிய பொருளும்;

**இறைவன் நூலும் :-** சிவாகமத்திலே நான் அறிந்த பொருளும்;

**கலந்து:-** ஏக வாக்கியமாகப் பண்ணி;

**பொது உண்மை எனக் கருதி யானும் அருத்தி மிக உரைப்பன் வளர் விருத்தம் நூறும் ஆசுஇல் சிவப்பிரகாசம் ஆகும் அன்றே :-** நானும் ஒரு சாத்திரம் சொல்ல வேணு மென்னும் ஆசை மிகுதியாலே பொது என்றும் உண்மை என்றும் இருவகைத்தாகத் தாமரை யானது தண்ணீர் எத்தனை யுயர்ந்தது அத்தனை யுயரமும் வளர்ந்து மேலே பூப்பது போல இந்தச் சாத்திரத்தை உணர்வோர் அறிவு எவ்வளவு உண்டு அவ்வளவுக்கு மேற்பட வளரும் பொருளுடைத்தாக நூறு விருத்தத்திலே, ஆசாகி ஆணவாதி ஒழிய ஆத்மாவிலே சிவம்பிரகாசிக்கும்படி உணர்த்துவதாகையால் இந்தச் சாத்திரத்துக்குச் சிவப்பிரகாசம் என்று சொல்லுகின்றேன் என்றிதன் பொருள்.

## *பதிப்பாசிரியர் குறிப்பு*

1. "உன்னரும் பொருளை உரையால் உணர்த்திய
முன்னவர் அருளால் நூற்பெயர் மொழிந்தது"

என்பது இப்பாட்டின் கொளுவாகும்.

**2 பாட்டின் பொழிப்பு:** பதியாக வெண்ணை மேவிய சீர் மெய்கண்ட திறலார் என்று முன்னே தெரிவித்த புறச்சந்தான குரவரில் முதல்வ ரானவர் உயர்ந்த சிவஞான போதம் என்னும் அருள்நூலைச் சுருக்கமாகத் திருவாய் மலர்ந்தருளினார்;

பின்பு அவருக்குத் தீட்சையினாலே புதல்வரான அருணந்தி சிவாச்சாரியார் சிவஞான சித்தி என்னும் பெயரால் அந்நூலை விரித்தோதினார்.

அச்சந்தான பரம்பரையில் வந்த யானும் முன்னே அவ்விருவரின் திருவடிகளைப் போற்றிக் கொண்டு, அவர்கள் அருளிய அவ்விரண்டு நூல்களையும் விரும்பி நோக்கி, அவ்விரண்டு நூற்பொருள்களிலே என் கருத்தில் நீங்காது உறையும் பரஞானமாகிய திருவருளையும் அப்பரஞான மாகிய சிவாகமப் பொருளையும் கலந்து, பொது என்றும், உண்மை என்றும் இருபடலமாகக் கருதி, நூறு விருத்தப் பாக்களால் விருப்பம் மிக உரைப்பேனாயினேன்; இந்நூலால் சிவஞானம் தோன்றும் என்க. எனவே, சிவப்பிரகாசத்தை உண்டாக்கும் நூலும் சிவப்பிரகாசமெனப் பெயர் பெற்றது.

3. பொதுவியல்பு உணர்த்தும் நூல்கள் பொதுவெனவும், சிறப்பியல்பு உணர்த்தும் நூல்கள் சிறப்பெனவும் கூறப்படும். சிறப்பியல்பு சகசமாய் உள்ளதாதலின் உண்மை எனவும் படும். ஏனைச்சமயத்தார் கூறும் சிறப்பியல்பெல்லாம் போலி என்பது உணர்த்துதற்கும் இஃது உண்மையெனப்படும். (சிவஞானபாடியம் - சிறப்புப்பாயிரம்-பக்-9)

4. கருத்தில் உறை திருவருள்: "கருத்திலுறை திருவருளும்" என்று ஈண்டு கூறியதற்கேற்ப உண்மையதிகாரத்து "அறைகுவன் அருளினாலே" (பாடல் 51) என்றும், "திருவருள் கொடுத்து மற்றுஇச் சிவப்பிரகாச நன்னூல்" (பாடல் 100) என்றும் கூறுமாற்றை அறிக. திருவருள் ஞானமே பொருள்களை நுணுக்கமாக உணர்த்தும் என்பதை "மனத்தால் உன்னரிய திருவருளை ஒழிய மலம் உளதென்று உணர்வரிதாம் அதனுண்மை தெரிவரிதாம் உனக்கே" (பாடல் 36) என்பதாலும், "தத்துவமான வற்றின் தன்மைகள் உணரும் காலை உய்த்தறிந்திட வுதிப்பது ஒளி வளர் ஞானமாகும்" (பாடல்-73) என்பதனாலும் உணர்க.

5. பொது வியல்பு அளவை முகத்தானும் இலக்கண முகத்தானும் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல் என்னும் இரு திறத்தான் உணரப்படும். சிறப்பியல்பு சாதனமுகத்தானும், பயன் முகதானும் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டையென நான்கு வகையான் உணரப்படும். சிறப்பியல்பு எனினும் தன்னியல்பு எனினும் ஒக்கும். (சிவஞான பாடியம்- சிறப்புப்பாயிரம்-பக்-11)

## அவையடக்கம்

தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா; இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா; துணிந்த
நன்மையினோர் நலங்கொள்மணி பொதியுமதன் களங்கம்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர், நடுவாம்
தன்மையினோர் பழமையழ காராய்ந்து தரிப்பர்;
தமறுநலம் பொருளின்கண் சார்வாராய்ந்து அறிதல்
இன்மையினார் பலர்புகழில் ஏத்துவர் ஏதிலருற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர் தமக்கெனஒன்
றிலரே.(12)

### இதன் பொருள்:

*பதி பசு பாசத்தின் உண்மையைச் சொல்லாத சாத்திரமானது முற்காலத்திலே உண்டாயதாகிலும் நல்லதாகாது;*

*இப்பொழுது சொன்னதாகிலும் பதிபசு பாசத்தின் உண்மையைச் சொல்லில் அது தீதாகாது;*

*ஆகையால், இந்தச் சாத்திரத்திலே, பஞ்சதிகாரக் குற்றம் உண்டாகிலும்;*

*மிகவும் பிரகாசத்தையுடைய மாணிக்கமானது அழுக்குப் புடவையிலே முடிந்திருந்தாலும் புடவையின் குற்றம் நோக்காமல் மாணிக்கத்தினுடைய நலத்தையே கொள்வது போல;*

*நிச்சய சம்பிரதாயமாகிய நலத்தையுடைய பெரியோர்கள் இந்தச் சாத்திரத்தின் உண்மையை நோக்கி உகப்பர்கள்;*

*மத்திமரானவர்கள் முன்னுள்ள பஞ்சதிகாரவிலக் கணத்தின்படி பாவினுடைய செம்மையை நோக்கி உகப்பர்;*

இந்தச் சொல்லினும் பொருளிலும் குற்றமும் குணமும் விசாரித்தறியும் தன்மையில்லாதவர், பெரியோர்கள் இந்த நூலைப் புகழில் தாமும் புகழ்வர்; பரசமயிகள் இந்த நூலை இகழ்ந்து சொல்லில் தாமும் இகழ்வர்;

ஆதலால், பெரியோர்கள் இந்நூலில் குற்றம் நோக்காது கண்டுவப்பரோ (தலா) லுரைக்கின்றேன் என்„_ ன் பொருள்.

இவை பன்னிரண்டும்
கடவுள் வணக்கம் முதலான பாயிரம் முற்றும்.

*பதிப்பாசிரியர் குறிப்பு :*

1. *"சான்றோர் செய்தியும் சால்பிலார் தன்மையும்*
*தோன்று மாறு சொல்அவை யடக்கம்"*

என்பது இப்பாட்டின் கொளுவாகும்.

2. **விஷயப் பிரயோசன அதிகாரி சம்பந்தமும் கூறியது**:- (மூதறிஞர் அடிகளாசிரியர் கூறிய விளக்கம்) மேற் சாத்திரத்துக்கு **விஷயமானது** பதி பசு பாசம் என்னும் மூன்று பதார்த்தம். அது "பதி பசு பாசம் தெரித்தல்" (இந்நூல் -பொது-1) என்பதனாற் பெற்றது.

**பிரயோசனமாவது** மோட்சம்; அது. பரந்த நெறி அறுவகையும் ஒருவி நினைவரிதாம் பரபதத்துள் உயிர் விரவுப் பயிற்று மன்றே (இந்நூல் - பாயிரம்-9) என்றதனாற் பெற்றது.

**அதிகாரியாவது**, வேதாகமஞ் சொல்லப்பட்ட அனுட்டான பரனாகி மோட்சத்திலே இச்சையுடையவன். அது "பெருநூல் சொன்ன அறத்திறனால் விளைவதாய்" (இந்நூல்-பாயிரம்-7) என்பதனாற் பெற்றது.

சம்பந்தமாவது பிரதிபாத்திய பிரதிபாதக பாவம். அது "அருத்திமிக உரைப்பன் வளர் விருத்தம் நூறும் ஆசில்சிவப் பிரகாச மாகு மன்றே" (இந்நூல்-பாயிரம்- ) என்பதனாற் பெற்றது.

மேல் சாத்திரமானது அறியில், பதார்த்தத்தினுடைய உத்தேச இலக்கணாதிகளை உரைக்கின்றது. உத்தேசமாவது அறிகிற பதார்த்தங்களுடைய பேர்களை உரைத்தல். இலக்கணமாவது அவ்வியாப்பிதம். அதிவியாப்பிதம் அசம்பவம் இல்லாத அசாதாரண தன்மத்தை உரைத்தல்.

அவ்வியாப்பிதமாவது இந்தப் பொருளுக் குண்டான இலக்கணம் ஒன்றுக்கு இல்லாமலிருக்கை. அதி வியாப்பிதமாவது இந்தப் பொருளுக்குண்டான குணம் பின்னையும் ஒரு பொருளிலே காண்கை. அசம்பவமாவது சொன்ன குணம் இந்தப் பொருளுக் கில்லாமலிருக்கை.

பரீக்கையாவது இந்த இலக்கணம் இந்த இலக்கியத்திலே உண்டோ இல்லையோ என விசாரிப்பது.



# பொது அதிகாரம்

## பதி இலக்கணம்

### [இறைவன் இலக்கணம்]

பலகலை ஆகமம்வேதம் யாவையினும் கருத்துப்
பதிபசு பாசம்தெரித்தல்; பதிபரமே; அதுதான்
நிலவும்அரு உருவின்றிக் குணம்குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகாமாய் நித்தம் ஆகி
அலகில்உயிர்க்கு உணர்வாகி அசலம் ஆகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலஅரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவம்என்பர் தெளிந்து ளோரே. (13)

**பல கலை ஆகமம் வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல்**:- வேதாகமங்களிலும், மற்றும் இந்த வேத சிவாகமங்களின் வழிநூல் சார்பு நூலான சாத்திரங் களிலும் தாற்பரியமானது பதி பசு பாசம் என்னும் மூன்று பொருளின் உண்மையை அறியவுரைப்பதே; இது மூன்று பதார்த்தத்தினுடைய வுத்தேசம், மேல் முந்தச் சொல்லப்பட்ட பதியினது சுரூப விலக்கணங் கூறுகின்றது.

**பதிபரமே** :- இந்த மூன்று பொருளுக்குள் பதியென்னும் பொருள் பசு பாசங்களுக்குப் பரமாய் உள்ளது.

பதியென்பது இந்திரன் என்னத் தேவேந்திரன் என்றறிந்தது போலப் பதியென்றது. பசுவென்றது பசுத்துவ மாகிய அஞ்ஞான சம்பந்தத்தினாலே ஆத்மாக்களைச் சொன்னது. பாசமென்றது ஆணவமாயை காமியங்களை; அது ஆத்மாக்களுடைய சர்வக்ஞிக சர்வ வியாபகத்தைப் பெந்திச்சுக் கொண்டிருக்கையால்;

**அதுதான்**:- அந்தப் பதியினுடைய சொரூப விலக்கண மானதுதான்;

**நிலவும் அரு உரு அன்றி** :- பொருந்தப் பட்ட உருவமும் அல்லவாய் ஆகாசாதிகளைப் போல அருவமும் அல்லவாய்;

**குணம் குறிகள் இன்றி**:- இராசத தாமத சாத்து விகாதி குணங்களும் பஞ்சவன்னதிகளுடைய அடையாளங்களும் இல்லாததாய்;

**நின்மலமாய்** :- அனாதியே சுபாவ சுத்தமாய்;

**ஏகமாய்** :- பூரணமாகிய தொரு முதலுமாய்;

**நித்தமாகி** :- எல்லாக் காலத்தும் அழிவற்றதாய்;

**அலகில் உயிர்க்கு உணர்வாகி** :- எண்ணிறந்த ஆத்மாக் களுடைய அறிவுகளைப் பிரகாசிக்கச் செய்வதாய்;

**அசலமாகி** :- பூரணமாகையால் போக்கு வரவில் லாததாய்;

**அகண்டிதமாய்**:- கால தேச வத்துக்களினாலே அபரிச் சின்னமாய்;

**ஆனந்த உருவாய்**:- பரமானந்த சொரூபமாய்;

**அன்றிச் செல அரிதாய்** :- அந்தச் சிவனுடைய பராசத்தி யோககத்தாலன்றிப் பரமானந்த சொரூபத்தைப் பொருந்துதற் கரிதாய்;

**செல் கதியாய்** :- சத்திநிபாத முடையவர்களினாலே அடையப் பெறும் பரம கதியாய்;

**சிறிதாகி** :- வாக்கினாலும், மனத்தினாலும் அறிவரி தாகையால் அறவும் நுண்ணிதாய்;

**பெரிதாகி** :- எல்லாப் பொருளையும் வியாபித்திருக் கையல் எப்பொருட்கும் பெரிதுமாய்;

**திகழ்வது** :- சுயம்பிரகாசமாயுள்ளது;

**தற்சிவம் என்பர் தெளிந்துளோரே** :- தத்பதவாச்சிய மாகிய சிவம் என்று வேதாகமத்தைத் தெரிந்து நிச்சயித்த பெரியோர்கள் சொல்லுவார்கள் என்றிதன் பொருள்.

அந்தப் பரமசிவன் சத்தன், உத்தியுத்தன், பிரவிருத்தன் என்று மூன்று சத்தியினுடைய கிரியா பேதங்களினாலே பேதமாய்ப் பிரபஞ்ச சிருட்டியாதிகளைச் சத்திகளினாலே செய்வித்துத் தான் விகாரமின்றி யிருக்கையினால் தடத்த ரென்று பெயரையுடைய சத்தரையாதியான மூர்த்தி பேதங்களையும், அதனாற் பண்ணுங்கிர்த்தங்களையும் உரைத்தல்.

*பதிப்பாசிரியர் குறிப்பு :*

*1.* "விதிப்படி முதனூல் விளம்பும் பொரு ளிற்
பதித்திறந் தெரிந்து பாரித் துரைத்து"

என்பது மேற்பாட்டின் கொளுவாகும்.

2. **காவை அம்பலவாணர்** பதியைப் பற்றி ஆறு பாடல்கள் என்னும் கருத்தால் "**பதி ஆறு**" என்பர். **சிற்றம்பலனார்** பல்கலை நீடுசங்கு உலகம் கந்தம் ஏற்ற இவ்வாறும் **இறைவன் இலக்கணம்** என்பர்.

3. "பலகலை ஆகமம் வேதம்.......பதி பசு பாசந் தெரித்தல்" என்னும் இப்பாடற் பகுதியின் கருத்தினை,

"சுருதிகள் சொல்பல் சமயத் துணிவுமப்
பரசிவ பந்தமென் றுந்தீபற
பகர்நாமம் வேறுவே றுந்தீபற" *(பாடல்-36)*

என்னும் அவிரோத உந்தியார் பாட்டின் கருத்துடன் ஒப்பு நோக்குக அறிக.

நீடுபரா சத்திநிகழ் இச்சா ஞானம்
நிறைகிரியை தரஅதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு உருவம் ஆகி
நவின்றுபல கலைநாத விந்து ஆகி
கூடும்ஒளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனுகரண புவன போகம்
பீடுபெற நிறுவிஅவை ஒடுக்கும் மேனி
பிறங்கியநிட் களசகளப் பெற்றி ஆமே. (14)

**நீடு பராசத்தி நிகழ் இச்சா ஞானம் நிறை கிரியை தர :-** *பரிபூரணமாகிய பரமசிவத்திலே ஆயிரத்திலே ஒரு கூறாகிப் பராசத்தி தோன்றும். அதனிடத்திலே ஆயிரத்தொரு கூறாய் ஆதிசத்தி தோன்றும். அதனிடத்திலே ஆயிரத்திலே ஒரு கூறாய் இச்சாசத்தி தோன்றும். அதனிடத்தில் ஆயிரத்தொரு கூறாய் ஞான சத்தி தோன்றும். அதனிடத்திலே ஆயிரத்தொரு கூறாய்க் கிரியாசத்தி தோன்றும். இவைகளைப் பராசத்தியே விருத்தி ரூபமாக உதவும். இவ்வாறு சிவனே அபின்ன நித்தோபதான மாகப் பஞ்சசத்திகளையும் தோற்றுவிப்பர்.*

*சிவத்திலே ஆயிரத்திலொன்று பராசத்தி யென்றும், பராசத்தியிலே நின்று இந்தச் சத்திகளும் அந்தந்தச் சத்திகளிலே ஆயிரத்திலொன்றாக ஒன்றிலே ஒன்று உற்பவிக்கு மென்றும் சொல்லுகையால், கூறுடைத்தாகை பரிச்சின்ன வத்துவுக் கொழிந்தில்லையாகையால் அச்சிவமும் பரிச் சின்ன வத்துவாம். பரிச்சின்னவத்துவான தெல்லாம் சடமும் நாசவத்துமாமென்னில், அப்படியல்ல;*

*காலதேச வத்துகளினாலே பரிச்சின்னமாய் அதனாலே கூறுடைத்தென்று சொன்னதல்ல; சிவம் அகண்டாகாரச் சச்சிதானந்தாத்துவயமே; சத்தியும் அப்படிப்பட்டதே; இவ்வாறாகையால், சத்தியென்றது பெலம்; அந்தப் பெலமாவது அனுக்கிரக திரோதான சங்கார திதி சிருட்டி யென்னும் பஞ்ச கிர்த்தியங்களுடைய தாரதன்டியத்தினாலே அந்தக் கிர்த்தியங்களைப் பண்ணும் சத்திகளையும் தாரதன்மியமாகச் சொன்னது.*

**அவை வருமாறு :-** பராசத்தி ஆத்மாவினுடைய அஞ்ஞானத்தைக் கெடுத்து சிவத்திலே அடைவிப்ப தாகையால், அடையுகிறத்தினுடையவும், அமையப்படுகிறத் தினுடையவும் தாரதன்மியத்தினாலே கூறென்று உபாசரமாகச் சிவத்துக்கு ஆயிரத்திலொன்றென்றது.

ஆகசாவினா பூதமான வாயுவானது சமுத்திரத்தைக் கலக்கச் சமுத்திரத்திற் கலங்கின விடத்திலே அது நுரை. குமிழிகள் வாயுவைப் பிரியாமல் உண்டானாற் போலச் சூக்குமாதி வாக்குகளும் சாந்தியாதீதாதி கலைகளும் சிற்சத்திக்கு வேறறச் சுத்தமாயையிலே உண்டாம்.

கலங்கின இடமாகிற சுத்தமாயா தோபாகம் சாந்தியா தீதமென்றும், சிவத்துவமென்றும், சூக்குமை வாக்கென்றும், விஞ்ஞானானந்தமயமென்றும், பராசத்தி மயமாகவும் காரிய பேதத்தினாலே நாம பேதங்களைச் சொல்லப்பெறும். இன்னும் இதன் வித்தாரம் சுத்தமாயையின் றோற்றம் சொல்லுமிடத்துச் சொல்லுவாம்;

**பிறங்கிய நிட்கள சகளம் நவின்று பல கலை :-** பஞ்ச சத்தியின் பத்திலொரு கூறுகளாகச் சிவசாதாக்கியம், அமூர்த்தி-சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கத்துரு சாதாக்கியம், கர்ம சாதாக்கியம் என்னும் பஞ்ச சாதக்கியங்களின் கூட்டரவாய ஞானக் கிரியா சமமாய சகள நிட்களமான சதாசிவ மலபரிபாகமானது ஆன்மாக்களுக்குப் போகத்திலே வரும் ஆகையால் அந்தப் போக சாதனமான தனுவாதிகளைக் கொடுப்பதற்கு இச்சாசத்தி உத்தியோகம் பண்ணுகையால் ஆதி சத்தியில் ஆயிரத்தொன்று இச்சாசத்தி என்றது; இச்சா சத்தியில் ஆயிரத்திலொன்று ஞான சத்தி என்றது; ஞான சத்தி நிச்சயித்த படியைப் பண்ணும் கிரியா சத்தி யாகையால் ஞான சத்தியில் ஆயிரத்திலொன்று கிரியா சத்தி என்றது. இவ்வாறு சத்தியாக;

**அதனை நிமலன் மேவி நாடரிய கருணை திரு உருவ மாகி:-** குறித்தற் கரிய கருணையினாலே அந்தச் சத்திகளை நின்மலன் திருமேனியாகப் பொருத்தி,

சிற்சித்தி மூர்த்திமானாகையால் சத்தர் என்னும் நாமத்தை யுடையவராய்;

**நாத விந்துவாதி கூடும் ஒளி வளர் குடிலை மேவி:-** நாதவிந்துவாதி தத்துவங்களுக்கும் சூக்குமாதிகளான வாக்கு களுக்கும் உபாதான காரணமாய விஞ்ஞானப் பிரகாசம் வளரும் குடிலை, குண்டலி, விந்து, சுத்தமாயை யென்று பெயரையுடைய வயிந்தவ மாகிய பரிக்கிரக சத்தியைத் தம்முடைய சமவாய சத்தியினாலே கலக்கி அந்தச் சுத்தமாயை கலங்கின விடத்திலே, மூர்த்திமானாக நின்று உத்தியுத்த ரென்னும் நாமத்தையுடையராய்ச் சிவபேதம் பதின்மர்க்கும் உருத்திர பேதம் பதினெண்மருக்கும் சகல வேதாகம சாத்திரங்களையும் அருளிச் செய்து சுத்த மாயா காரியங்களைப் பண்ணுவர்.

சகள ரகள மென்றது விருத்த தன்மம் இரண்டாகையால் அனேகாந்திக தோஷ மென்னில், அகளமாகிய சத்தியினு டையவும் கூட்டரவினாலுண்டானது சாதாக்கியமாதலால், காரணம் இரண்டினுங் கூட்டரவினாலே சொல்லப்பட்டது ஆகையால் அனேகாந்திக தோஷமில்லை.

**மாயை மேவிக் கொடுவினை கொள் தனு கரண புவன போகம் பீடு பெற நிறுவி அவை ஒடுக்கும் மேனிப் பெற்றியாமே :-** அசுத்த மாயையைக் கலக்கி ஆத்மாக் களுடைய வலிதாகிய கன்மத்துக் கீடான தனு கரண புவன போகங்களை மிகவும் விளங்க உண்டாக்கி உபசங்காரத்தைப் பண்ணுவது திருமேனி இயல்பை உடைத்தாய பிரவிருத்தர் என்னும் நாமத்தை யுடைய அனந்தேசுர மூர்த்தியை அதிட்டித்துக்கொண்டு செய்வதாம் என்றிதன் பொருள்.

சிவனது சமவாய சத்தியினாலே சகலப் பிர பஞ்சத்தையும் விவர்த்தமாக உண்டாக்குவன் என்னாது சுத்தமாயையிலே உண்டாக்குவன் என்று சொல்லுவான் ஏன் என்னில் ? இதற்குத்தத்துவம்:- ஆத்மாக்களுடைய தனு கரணாதிக்கு உபதானம் சமவாய சத்தியல்ல; அஃதெவ்வா றென்னில் ?

(அது) சித்து ரூபமாகையினாலே சிவனைப் போல பிரபஞ்சத்துக்கு நிமித்தமொழிய உபாதானமாகாது. சித்து ரூபமானத்துக்குச் சொல்லப்பட்ட பரிணாமமானது கூடாது. சித்து விவர்த்தம் என்று சொல்வதும் கூடாது. அப்படி விவர்த்தம் என்னில், பிரபஞ்சம் இல்லையேயாம். அப்படியே பிரபஞ்சம் இல்லை என்றால் தோஷமே தென்னில்? பிரத்தியட்ச அனுமான ஆகமாதிப் பிரமாணங் களிலே சித்தித் திருக்கிற பிரபஞ்சத்தைச் சித்து விவர்த்த மாகச் சூனியமென்று சொல்லுவதெப்படி ?

இனிப் பாரிசேஷப் பிரமாணத்தால் செகத்துக்கு உபாதான காரணமாகச் சுத்தமாயையை அங்கீகரிக்க வேணும். அதெப்படி என்னின்? சிவனுடைய போகாதி காரங்கள் முன்னே சொல்லப்பட்டது. யாதொன்றுண்டு? அதற்கு ஏதுவானது இந்த விந்துவே. இதுவே குண்டலி யென்றும் அறியப்படும்.

மேலும், அணுருத்திரர்களானவர்கள் யாதொரு விஞ்ஞானனந்தமய கோசப்படுகையாலே பரமமுத்தரா கிறார்கள். இவை (இவர்) ரூபத்தினாலே பெந்திக்கப் பட்டார்கள், யாதொரு சுத்தாத்துவா புவனங்களிலே யிருக்கிறார்கள், யாதொரு விஞ்ஞானானந்தமய கோசம் விடப்படுகையாலே பரம முத்தராகிறார்கள். இவை யிற்றுகளுக் கேதுவானது இந்த விந்து வென்றறியப்படுவது.

அந்தக் குண்டலினி சத்தியானது சுத்தையுமாய்ச் சட ரூபமுமாய்ச் சம்புவுக்குப் பரிக்கிர சத்தியுமாயிருப்பதன்றி அவர்க்குத் தாதான்மியா யிராது. அஃதே னென்னில்? சட

மாகையால் சித்து ரூபமான சிவனிடத்தில் அதுபோல் இருப்பது கூடாது. அஃதன்றியும் செகத்துக்குச் சிவன் கர்த்தாவும் இந்தக் குண்டலினி உபாதானமு மாகையால், குலாலனுடைய கடாதிகளுக்கு மண்ணுருண்டையானது உபாதானமானது போலே உள்ளது இந்தக் குண்டலினி.

அன்றி அதோ மாயை யென்று ஒரு வஸ்த்துவை அங்கீகரிப்பது கற்பனா கவுரவமென்னில், ஆன்மாக்கள் மூவகையாகயாலே அவர்களுடைய சுத்தாசுத்த தாரதம் மியத்துக்கான தனு கரணாதிகளைச் சுத்தமாகவும் அசுத்த மாகவும் உண்டாக்க வேண்டுகையாலும், சுத்த தத்துவத்துக் காரணம் அசுத்த தத்துவமும், அசுத்த தத்துவத்துக்குக் காரணம் சுத்த தத்துவமும் ஆகாதாகையால், சுத்தா வசுத்த மாயை யிரண்டும் அங்கீகாரம்;

அஃதெப்படி யென்னில்? விஞ்ஞான கலருடைய தனுகரணாதிகளுக்கு உபாதானம் இவ்விடத்தில் அதோ மாயையாகாது; ஆகில், தோஷமேதென்னில்? விஞ்ஞானகலர் ஞான சொரூபமான புருட தத்துவத்தைச் சரீரமாகவும் அவ்வாறே கரணங்களுமுடையவர்களாகையாலே அதோ மாயை தன்னுடைய சத்தியினாலே ஆன்மாக்களை மோகிக்கப் பண்ணுவ தாகையாலும் உபாதானமாகாது.

சுத்தாத்துவாவிலே இருக்கிறவர்களெல்லாரும் சுத்த மாயாதேக விந்திரியாதிகளை உடையவர்களானாலும் அறிவில்லாதவர்களல்ல; சிவனுடைய சத்தி பரிசத்தினாலே அறிவுண்டானவர்களே,

இன்றிப் பிரளயாகலர் சகலர்க்குக் கன்மானு குணத்திலே தனுகரணாதிகளாகையாலும், வையிந்த வாத்துவாவிற் கன்மமில்லை யாகையாலும் விஞ்ஞான கலருடைய தனுகரணாதிகளுக்கு விந்துவும் பிரளாயகலர் சகலருடைய கன்மானு குணமான தனுயாதிக்கு அசுத்த மாயையும் வேணும்.

அந்தக் கன்மம் சுத்தாத்துவாவில் ஆத்துமாவிலே யிருக்கு மென்றால் சடமாகிய கன்மத்துக்கு ஆத்மாவிலே அவதானமாகில் ஆத்மாவும் சடமாம். ஆகையால், அக்கன்மம் அசுத்தாத்துவ நிட்டமே.

மேல் சுத்தமாயா கிர்த்தியங்களைப் பண்ணுவதாக வையிந்தவ தனுவையுடைய வித்தியேசுராதிகளிடத்திலே காஷ்டாக்கினி போல அபிவியத்தியாய் அன்னியமல்லா மலிருப்பதாய் இரும்பு சுடுவ தென்பது போலச் சிருட்டியாதி கிர்த்தியங்களைப் பண்ணுவர் சிவனென்பதை உணர்த்தல்.

*பதிப்பாசிரியர் குறிப்பு :*

*1. "முன்னருட் சத்தி மூவித மான*
*தன்மையில் நிட்கள சகள முரைத்து"*

என்பது இப்பாட்டின் கொளு.

ஈங்குஇது என்றது கடந்த இயல்பினானும்
ஈறுமுதல் நடுஒன்றும் இலாமை யானும்
ஓங்கிவளர் ஞானம்மயன் ஆத லானும்
உண்மைபிறர்க்கு அறிவரிய ஒருமை யானும்
தாங்கரிய வெறுப்பினொடு விருப்பம் எல்லாம்
சார்வரிய தனிமுதல்வன் ஆத லானும்
நீங்கலரும் உயிர்க்குஉயிராய் நிற்ற லானும்
நிறுத்திடுவன் நினைந்தஉரு நிமலன் தானே. (15)

இவ்விடத்து இந்த வத்துவிலென்று மட்டிடப் படுதலன்றி நின்ற வியல்பினை யுடையதுனாகையாலும்; இன்ன காலத்தில் தோன்றி, இன்ன காலத்தில் விருத்தியாய் இன்ன காலத்திலே ஈரும் என்னும் தேகமின்றி, நித்திய நின்மல ஞான சொரூபனாகையானும்; தரித்தற் கரிதாகிய ஆசை வெறுப்பு முதலானவைகள் பொருந்துதற் கரிய செகத்து ஏகநாயகனாகையாலும் தன்னை யுணர்ந்த ஞாதாக்களிடத் திலே உணருந்தொறும் உணருந்தொறும் ஞான மயமாக மேன்மேலும் பிரகாசிப்பவ னாகையாலும்;

இவ்வாறு அனுபவத்தினாலே யன்றி அறிவரிதாய்த் தன்னுடைய சுபாவத்தை ஒருத்தரால் அளந்தறிதற் கரிதாகிய ஒப்பற்றவனாகையாலும்; தன்னைப் பிரிந்து சீவிக்க அரிதாகிய சர்வான்மாக்களிடத்திலும் அந்தரியாமியாய் நிற்றலானும்; நின்மலனான சிவன் சுத்தா சுத்த மாயா ரூபங்களைக் கொள்ளாது, தன்னை வேறறத் தானாகவே பாவிக்கும் அவர்களுடைய தேகத்தையே தனக்குத் திரிமேனியாக அதிட்டித்துக்கொண்டு நின்று, இரும்பு சுடுகிறது என்றது போல அந்தத் தேகத்தினாலே அந்தக் கிர்த்தியங்களைப் பண்ணுவர் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு :*

*1.* "துடைப்பவன் உருவாய்த் தோன்றுவ தன்றிப்
படைக்க அரிதாம் பரிசினை யுரைத்து"

என்பது மேற்பாட்டின் கொளுவாகும்.

2. "வெறுப்பினொடு விருப்பம் எல்லாம் சார்வரிய தனிமுதல்வன்" என்னும் பகுதியை "வேண்டுதல் வேண்டாமை யில்லான்" என்னும் திருக்குறளோடு ஒப்பு நோக்குக.



உலகமெலாம் ஒருவனொடு ஒருத்தி ஒன்றென்று
உளதாகி நின்றளவில் ஒடுங்கும்; பின்னும்
மலம்அதனால் உளதாகும் உருவம் மாறி
வருவதுபோவது செல்வது ஆத லானும்
அலைவில் அசேதனம் மாயை ஆத லானும்
அணுக்கள்உரு அடையும் அறிவிலாமை யானும்
நிலவுதொழில் மருவிஉரு நிற்ற லானும்
நின்றெவையும் அளித்திடுவன் நிமலன் தானே. (16)

**உலகமெலாம் ஒருவனொ டொருத்தி ஒன்றென்று உளதாகி நின்றளவில் ஒடுங்கும்:-** பட்ச நிர்த்தேசம் உலகங்கள் ஒருவன் ஒருத்தி ஒன்றென்று தோன்றி நின்றன. அவை காலத்தளவிலே ஒடுங்கும் ஆகையால், இவற்றிற்கொரு கர்த்தா வேணும். பூ பூதாதி காரியமாகையா லேதுமக்கன்னாது (மகற்கென்னாமல்) ஒருவன் ஒருத்தி ஒன்றென்னுங் காரியத்தைப் பட்சமாகக் கற்பித்த தென்னையோ வென்னில்? பூ பூதாதிகளுடைய உற்பத்தி திதி நாசம் பிரத்தியட்ச மல்லாமல் ஆகமத்தினாலே அறியப்படுவதாகையாலும், அந்த ஆகமந்தான் ஆண் பெண் அலி சொரூபமாயிருக்கிற அடையாளங்களைத் தோற்றுவிக்கிற சத்தரூபமாயிருக்கை யாலும்,

இவ்விடத்து ஆண் பெண் அலி யென்றும் உருவங் களினுடையே உற்பத்தி திதி நாசங்கள் பிரத்தியட்சமாகக் காணப்படுகையினாலும் இவைகள் பட்ச நிர்த்தேசமாகச் சொல்லப்பட்டன.

கர்ப்பத்துக்குட் சிசு வானத்தைப் பிரத்தியட்சமாக ஒருத்தர் காணமலிருக்கவும், கரசரணாதி அவயவ நிறைச்சலாக ஆறுவிதமாகிய விகாரத்தைப் பொருந்துகையால் இதற்குக் கர்த்தாவாக எல்லாத்தையும் அறிந்தவனும் எல்லாத்துக்கும் கர்த்தாவும் எங்கும் வியாபியுமாய் உள்ளவனொருவன் வேணும்.

இந்தத் தேகமானது சுக்கில சோனித பரிணதியினாலே ஆனதென்னில், புணருந்தொறும் உண்டாகவேணும்; அதில்லாதபடியினாலும்; கல்லுக்குள் மண்டூகமும், மரத்துக்குள் உணாவும், கோமயத்திற்றேளும் இவை முதலானவைகள் சுக்கில சோணித சம்பந்தமில்லாதிருக்க உண்டாகையாலும்; பிதாவும் மாதாவும் ஆண்பிள்ளையை இச்சிக்கப் பெண்ணாக வந்தும் இவ்விரண்டு பேரும் இச்சியாமலிருக்க வந்தும், இவ்வகைப்பட்ட விசித்திர சிருட்டிகளாகையினாலும்; காணப்பட்ட உருவங்க ளெல்லாம் அழிகையினாலும், பூதாதி ரூபப் பிரபஞ்சங்கள் இவ்வாறு உற்பத்தி திதி நாசத்தையுடையதே யாகையால், அக்கடாதிகளுக்குப் போல, இதைப் பண்ணுவானொரு கர்த்தா வேணும்.

பிரபஞ்சம் உண்டென்கிறதிலே பிரமாணம் உண்டா யல்லோ ஒரு கர்த்தாவை அபேட்சிக்க வேணும், பிரபஞ்சம் உண்டென்கிறத்திலே பிரமாணம் இல்லை என்னில், பிரத்தியட்சமாகக் காணப்பட்ட பிரபஞ்சத்துக்குப் பிரமாண மேது.

பயித்திய மிகுதிப் பிரமையிலே நானா ரூபங்களாக வெயிற் குஞ்சுகளாகக் காண்பித்தது போல, அஞ்ஞான வசத்தினாலே தீர்க்கப் பிரமையாகக் காண்பித்ததே இவ்வாறு பிரத்தியட்சப் பிரமாணமில்லாத பொழுது, பிரத்தியட்சத்தை ஏதுவாக வுடைத்தாயிருக்கிற அனுமானமே பிரமாணமல்ல, பிரத்தியட்ச அனுமான விருத்தாந்தத்திலே ஆகமமும் பிரமாணமல்ல வென்னில், பிரபஞ்ச சற்பாவத்திலே பிரத்யட்சாதிப் பிரமாணமுண்டு.

புருஷ சமானமாகிய ஒரு கட்டையைக் கண்டு தாணுவோ புருஷனோ வென்று சந்தேகப் படுகையினாலே, இந்தச் சந்தேகத்துக்கு விஷயமாயிருக்கிற கட்டையை நீங்கலாக உண்மையாகப் புருஷனையும் கட்டையையும் முன்பறியாத பொழுது இச்சந்தேகம் கூடாதிருக்கையாலப்

பிரபஞ்ச சொரூபமாகிய தாணு புருஷர்களைச் சத்தியமாக அறிகையினாலே பிரபஞ்ச சற்பாவத்திலே பிரத்தியட்சம் பிரமாணப் பிரத்தியட்சப் பிரமாணமுண்டாகையால், பிரத்தியட்சத்தை ஏதுவாக வுடைத்தா யிருக்கிற அனுமானமும், உபைய சம்பந்தமான ஆகமும் பிரமாணம்.

இன்னும் பழுதையைப் பாம்பென்றது போலப் பிராந்தியென்னில், அப்படிப் பிராந்தியல்ல; அந்தப் பழுதைக்குப் பாம்பு சமான முண்டாகையினாலும் பிராந்தியில்லாத தலத்திலே உண்மையாக அறியவுண்டாகையாலும், ஆரோப்பியமான பாம்பும் அதிட்டானமான பழுதையும் சத்திய ரூபமாக அறியப்படுகையினாலும், ஆரோபமயமான பிரஞ்சமும் அதிட்டானமான பிரமமும் இரண்டும் சித்தமே. கிளிஞ்சல் வெள்ளி போலப் பிராந்தி யென்றதும் கூடாது. கிளிஞ்சிலை ஆரோபிதமான வெள்ளியைத் தலாந்திரத்திலே உண்மையாகக் காணாத பொழுது இந்தப் பிராந்தி கூடாதது போலப் பிரபஞ்சத்தையும் உண்மையாகக் காணாத பொழுது பிரமத்திலே பிரபஞ்சப் பிராந்தி கூடாதாகையால் இரண்டும் சித்தமே.

மேலும், பிரபஞ்சாபாவ சாதகப் பிரமாணம் பிரமாணமோ அப்பிரமாணமோ நீயே விசாரித்தும்பார். பிரபஞ்ச பாவ சாதகம் பிரமாண மென்னில், அந்தப் பிரமாணம் பிரபஞ்ச கோடி உளதாகையால் பிரபஞ்சத்தினுடைய ஏகதேசாங்கீகாரத்தினாலே மிகவும் பிரபஞ்சமுள்ளதே.

பிரபஞ்ச ரூபங்கள் இன்னபடி தோன்றி, இன்னபடி விருத்தியாய் இன்னபடி அழியும் என்று ஆகமம் சொன்ன படியேயாகக் காண்கையால், மண்ணுண்டையாலே மூடி முதலானவைகளைக் குலாலன் உண்டாக்குவது போலவும், தந்துக்களினாலே படத்தைத் தந்துவாயன் உண்டாக்குவது போலவும், சுத்தா சுத்த மாயை என்னும் இரண்டு பாதானங்

களிலே இந்தக் காரியப் பிரபஞ்சத்தை உண்டாக்குவதற்கு ஒரு கருத்தா வேண்டும். கர்த்தா ஒருவன் என்றது அநேககா வியாவிர்த்தி மாயை யென்ற சத்தம்.

அசத்திய மானதற்கே மாயை யென்று பெயர். மாயை அசத்தியமென்று சொல்லுகையால் அசத்தியமான மாயா காரியப் பிரபஞ்சத்துக்குச் சற்காரியம் எங்ஙன் எனில்? இல்லாத பொருளை உண்டு போலப் பண்ணிச் சீவாத்மாக் களைப் பிரமை பண்ணிவிக்கையினாலும், காரிய குணத்தி னாலே காரணமாகிய மாயையை அசத்தியம் என்றதேயன்றி மாயை சத்தே. யாதொன்றிடத்திலே பிரளய காலத்திலே சகத்து லயத்தை அடைந்து திருஷ்டி (சிருஷ்டி) காலத்திலே விரிவாகின்றது அதுவே மாயை.

ஈசுரன் இந்தப் பிரபஞ்சத் திருஷ்டியைப் பண்ணுகிறது பலத்தை உத்தேசித்தோ, உத்தேசியாமலோ, உத்தேசியாமல் என்னில்? வாலோன் மத்தாதிகளைப் போல அறிவற்றவனும்; ஈசுரன் எல்லாத்தையும் அறிந்துவனாகையால் பலத்தை உத்தேசித்தே பண்ணுவன். அந்தப் பலம் தம்முடைய பிரயோசனமோ பிறருடைய பிரயோசனமோ எனின்,

விபுவும் நித்திய திருப்தறாம் ஆகையால் தம்முடைய பிரயோசனமல்ல; பரருடைய பிரயோசனமும்; அந்தப் பரசத்த வாச்சியம் பிருதிவியாதிகளோ? அன்னியமோ? எனின், பிருதிவியாதிகள் அசேதனம் ஆகையால் பிரயோசனா பேட்சையில்லை; அன்னியம் ஆர் என்னில், பரிசேஷத்தி னாலே சேத்திராக்கியனாய பசுவென்று பெயரை யுடைய ஆத்மாக்களுக்கும் போசனத்தின் பொருட்டும் மோட்ச பரிபாகத்தின் பொருட்டுமாகப் பண்ணுவதென்றறிக.

பிரபஞ்சமானது ஆனாதியும் (அநாதியும்) அநித்தியமும் வருவது போவது செல்வதாதலானும் இது ஏது நிர்த்தேசம். அழிவற்றதுமாம். அழிந் ததே யுண்டானால் அழிந்தது தோன்றுவதற்கு ஏதுவுமில்லை என்னில்,

**(பின்னும்) மலமதனால் உளாதிக உருவம் மாறி வருவது போவது செல்வதாதலானும் :-** இது ஏது நிர்த்தேசம். அஞ்ஞான காரணமாகத் திரும்பவும் ஆன்மாக்களுக்குத் தனுவாதிகள் உண்டாமாகையால் அதை உண்டாக்குவதற்குக் கர்த்தா வேணும். ஆன்மாக்கள் சைதன்யம் ஆகையால் தாங்களே தங்கள் தங்களுக்குத் தனுவாதிகளை உண்டாக்கிக் கொள்ளுவர்கள் என்னில், தேவ பசுவாதி மனுஷர்க்குள்ளே பூச்சியமாகியும் அபூச்சியமாகியும், சுரூபமாகியும் விரூப மாகியும் மொண்டி (நொண்டி), குருடன், செவிடன், ஊமைகளாகியும் நாய், பன்றி முதலான சரீரங்களை எடுத்தும் சனிக்கும் பொழுது அனேக வேதனை பட்டும் மத்திய வத்தையிலும் துக்கங்களை அனுபவித்தும் மரணத்திலே வாதனைப் பட்டும் இவ்வாறிதன்றியும்.

**அணுக்கள் உரு அடையும் அறிவிலாமையானும்:-** ஆன்மாக்கள் முன்னே இன்ன கன்மத்தைச் செய்தோம் என்றும், இந்தக் கன்மத்துக்கு இன்ன சென்மம் எடுக்க வேணுமென்றும், மேல், இன்னது அனுபவிக்க வேணு மென்றும் அறியாதபடியாலும், தாங்களே தனுவாதிகளைப் பண்ணிக்கொள்ள மாட்டார்களாகையால், அத்தனுவாதிகள் உண்டாக்குங் கர்த்தா ஒருத்தன் வேண்டும்.

கர்த்தா இல்லை; மாயையே செகத்தை உண்டாக்கும் என்னில்;

**அலகில் அசேதனம் மாயை ஆதலானும்:-** எண்ணிறந்த ரூப பேதங்களைத் தன்னிடத்திலே உண்டாக்குவதற்கு யோக்கியமான மாயை சடம் ஆகையினாலே, மண்ணுண்டை தானே கடம் ஆகமாட்டாமல் அதைப் பண்ணுவா னொருவன் வேண்டினாற் போலவும்;

**நிலவு தொழில் மருவி உரு நிற்றலானும் :-** பொருத்தப் பட்ட கிரியாவத்தாக ரூபங்களெல்லாம் பிரத்தியட்சமாகக் காணும்படி நிற்கையினாலும், இதை உண்டாக்குவானொரு

கர்த்தா வேண்டும். ஆகில், அந்தக் கர்த்தா எவ்விடத்தில் நின்று உண்டாக்குவன்? அவனுக்குச் சகாய பூதா உண்டோ? தான் ஒருவனேயோ? அவன்தான் எந்தச் சொரூபத்தை யுடையவ னென்னில் ?

**நின்று எவையும் அளித்திடுவன் நிமலன் தானே:-** இது சாத்திய நிர்த்தேசம். பரிபூணனாகவே நின்று அனாதி நிமலதையினாலே எல்லாத்தையும், அறிந்து எல்லாத்துக்குங் கர்த்தாவாகையால், சன்னதி மாத்திரத்திலே மாயையிலே சகலப் பிரபஞ்சத்தையும் உண்டாக்குவன் என்றிதன் பொருளை.

மேல், அந்தக் கர்த்தா அரிக்கும் அவனுக்கும் மேலான உருத்திரனே என்றுரைத்தல்.

சத்தர், உத்தியுத்தர், பிரசுத்தர் (பிரவருத்தர்) என்னும் மூன்று பேதமாகிய மூர்த்திகளே செகத்துக்குக் கர்த்தா வென்று சிவாகமங்கள் கூற, இவ்விடத்துக்குப் பிரவுத்தர் பேதமான உருத்திர தேவரே பரமகர்த்தாவென்று சொல்லுவ தென்னையோ வென்னில், அதுள்ளது (அஃதுள்ளது) அவர்கள் மூன்று பேரும் சுத்தாத்துவாவுக்கும் அசுத்தாத்து வாவுக்குவு ம் கர்த்தாக்கள். பிரகிருதியிலுண்டான அசுத்தாத்து வாவுக்குப் பிரவுத்தரான அனந்தேசுரர் பரிவான சிறீகண்ட பரமேசுரரும் அவற்றிற் பிரிவான அயனும் அரியும் கர்த்தர்.

சகலராலே ஆராதிக்கப்படுபவரும் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய முத்திகளைக் கொடுப்பவரும் சிறீகண்ட பரமேசுரரே ஆகையால் உருத்திரன் அயன் பவன் பரன் சிவன் என்பதாதியான நாமங்களினாலே அவரே சொல்லப்படுவர். இவரைப் பண்ணின ஆராதனையானது பரம்பரையாகப் பரமசிவனுக்காய்ப் பரமமோட்சம் உண்டாகையால் சிறீகண்ட பரமேசுரரே பரதத்துவமென்றிவ்வாறு சொல்லப்பட்டது.

கந்தமலர் அயன்படைக்கும் உலகம் எல்லாம்;
கண்ணன்அளித் திடும்அவைஎம் கடவுள் தானே
அந்தம்உற அழித்திடுவன் ஆத லாலே
அயன்அரியும் அவனதுஉயிர் அதிகா ரத்து
வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பன்; எல்லாம்
வருவிப்பன் விகாரங்கள் மருவான் வானின்
முந்திரவி எதிர்முளரி அலர்வுறும் ஒன் றலர்வான்
முகையாம்ஒன்று ஒன்றுஉலரும் முறையின் ஆமே. (17)

**கந்த மலர் அயன் படைக்கும் உலகம் எல்லாம்:-** *பிரகிருதி மாயையி லுண்டாகிய தூலமாகிய உலகங்கள் யெல்லாம் கமலாதனனாகிய பிரம்மா உண்டாக்குவர்;*

**கண்ணன் அளித்திடும் :-** *இந்தப் பிரகிருதி மாயையி லுண்டாகிய பிரபஞ்சத்தைத் தாமரைக் கண்ணராகிய விஷ்ணு பாலனம் பண்ணுவர்;*

**அவை எம் கடவுள் தானே அந்தம் உற அழித்திடுவன்:-** *அந்தப் பிரகிருதி மாயையில் உண்டாகிய பிரபஞ்சத்தை யெல்லாம் ஒடுங்கும்படி எமக்குக் கர்த்தாவாகிய உருத்திர தேவரே அழித்திடுவர்;*

**ஆதலாலே அயன் அரியும் அவனது உயர் அதிகாரத்து வந்தமுறை தன் தொழிலே மன்னு விப்பன்:-** *பிரம்மாவுண்டாக்க மாவிட்டுணு பாலனம் பண்ணச் செய்த உலகங்களை அழிக்கும் பொழுது அவ்விருவருடன் சரியான பேர்களால் அழிக்கப் போகாதாகையால் அரனே உயர்ந்த அதிகாரத்தை உடையவன்; அவனுடைய அதிகார சத்தியாகிய கிரியாசத்தி பிரம்மாவிடத்திலும் இச்சாசத்தி விஷ்ணு விடத்திலும் பதிந்து முறைமையாலே திருஷ்டியும் திதியும் பண்ணுவார்கள்.*

**எல்லாம் வருவிப்பன்:-** *அந்தச் சிவனுக்கு இச்சா ஞானக் கிரியா சத்தி என்னும் மூன்று சத்தியுடைய தாகையால் பிரகிருதியிற் சூக்கும சிருட்டியையும் திதியையும் சங்காரத்தையும் திரோதானத்தையும் அனுக்கிரகத்தையும் பண்ணுவர்.*

திதிக்கும் சங்காரத்துக்கும் விரோதம்; திரோ தானத்துக்கும் அனுக்கிரகத்துக்கும் விரோதம்; இவ்வாறு விரோதமான கிருத்தியத்தை ஒருவனே செய்யில் பட்ச பாதமும் விகாரித்துவமும் உண்டாச்சுது; பட்ச பாதமும் விகாதிரித்துவமும் சீவகோடிக்கல்லது பதியிலக்கணமல்ல வென்னில்,

**வீகராங்கள் மருவான் வானின் முந்திரவீ எதிர் முளரி அலர்வுறும் ஒன்று அலர்வான் முகையாம் ஒன்று ஒன்று உலரும் முறையின் ஆமே:-** சிவன் விகாரங்களைப் பொருந்தான். அவனுடைய சன்னதி மாத்திரத்திலே தானே ஆன்மாக்களுடைய கன்மானு குணமான இந்தக் கிருத்தியங்க ளெல்லாமாம். அஃதெவ்வாறென்னில்? ஆகாயத்திலே காணப்பட்ட சூரியனுடைய சன்னதி மாத்திரத்திலே தாமரை முகை அலரும்; அலர்ந்திருந்த ஆம்பல் முகையாம்; வெண்ணெயானது இளகும்; சேறானது இறுகும்; இந்த முறைமை போலச் சிவனும் விகாரமற நிற்க சன்னதி மாத்திரத்திலே கிர்த்தியங்களாம் என்றிதன் பொருள்.

மேல் தமக்குப் பாரமல்லாமல் வினோதமாயிருக்கிற ஆன்மாக்களுக்கு மோட்சமாகச் சிவன் பஞ்ச கிருத்தியத்தம் பண்ணுவர் என்பதுரைத்தல்.



ஏற்றஇவை அரன்அருளின் திருவிளையாட் டாக
இயம்புவர்கள்; அணுக்கள்இடர்க் கடல்நின்றும் எடுத்தே
ஊற்றம்மிக அருள்புரிதல் ஏது ஆக
உரைசெய்வர்; ஒடுக்கம்இளைப் பொழித்தல்;மற்றைத்
தோற்றம் மல பாகம்வரக் காத்தல்; போகம்
துய்ப்பித்தல்; திரோதாயி நிறுத்தல் ஆகும்
போற்றல்அரும் அருள்அருளே அன்றி மற்றுப்
புகன்றவையும் அருள்ஒழியப் புகலொண் ணாதே. (18)

**ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக இயம்புவார்கள்:-** முன் சொல்லப்பட்ட ஐந்தொழிலும் அரன் அருளினாலே சொல்லப்பட்டது. தொழில் செய்யில் மெய் வருத்தம் உண்டென்னில், மெய் வருத்தமின்றி லீலையாகவே சன்னதிமாத்திரத்திலே இந்தத் தொழில்களாம் என்று சொல்லுவார்கள், இவ்வாறு பண்ணுவது எதுக்கோ வென்னில்,

**அணுக்கள் இடர்க்கடல் நின்றும் எடுத்தே ஊற்றம் மிக அருள் புரிதல் ஏது ஆக உரை செய்வர் :-** ஆன்மாக்களைத் துக்கமாகிய அஞ்ஞான சமுத்திரத்திலே நின்றும் எடுத்து மென்மேலும் வளரும் பரமானந்தத்தை அருளிச் செய்வதற் கேதுவாக என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்; அவ்வாறு கலாதி தத்துவங்ளினாலே கட்டி அனேக சனனங்களை எடுப்பித்துப் பொறுத்தற்கரிய வேதனையையுடைய மரணத்தையும் அடைவித்து, நரக வாதனையையும் படுத்தித் தன்னுண்மையும் அறியாதபடி மறைத்திட வேணுமோ வென்னில் ?

**ஒடுக்கம் இளைப்பு ஒழித்தல் மற்றைத் தோற்றம் மலபாகம் வரக் காத்தல் போகம் துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்தல் ஆகும் போற்றல் அரும் அருள் அருளே :-** பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பது ஆன்மாக்களுடைய அஞ்ஞானம் நீங்கும் படிக்கும் அவர்கள் (களுக்குத்) தேகாதிகள் உண்டாகில் அஞ்ஞானத்துக்குப் பக்குவம் எவ்வாறாம் என்னில் ? தேகாதிகள் உண்டாகவே சாமானிய தன்மங்களைப் பண்ணி அதன் முதிர்ச்சியால் சிவ தன்மங்களாகிய சரிதை கிரியை யோகங்களைப் பண்ணுவன்;

அதனாலே அஞ்ஞானம் மந்திற............பக்குவாம்; பாலனம் பண்ணுவது கன்ம மலமாகிய சுக துக்கங்களைப் பொசிப்பித்து ஒழிப்பதற்கு மறைப்பது எந்தெந்தத் தேகங்களை எடுத்து எடுத்துப் பொசிக்க வேண்டிற்று அதுவது அருசியாகாமல் ருசித்துப் பொசிக்கும்படிக்குப் பிரபஞ்சத்தை ஒடுங்கப் பண்ணுவது.

பகலெல்லாம் வேலை செய்த புருஷன் இளைப்பாற இராத்திரி நித்திரை பண்ணுவது போலச் சகலாவத்தையிலே ஆன்மாக்கள் சனன மரணாதியிலுண்டாகிய இளைப்பாற கேவலவத்தையிலே கிடத்துவது.

அருளாவது இந்த ஆணவாதி பாசங்களை யெல்லாம் நசிப்பித்துச் சிவன் தம்முடன், வேறறச் சொல்லுதற்கரிய பரமானந்தத்தை அனுபவிக்கும்படி அருளுவதே;

**அன்றி மற்றுப் புகன்றவையும் அருள் ஒழியப் புகலொண்ணாதே:-** இந்த அனுக்கிரகமன்றி முன் சொன்ன திருட்டியும் திதியும் திரோபாவமும் சங்காரமும் இந்த அனுக்கிரகத்துக்கு ஏதுவாகச் செய்வதாகையால், அதுவும், அனுக்கிரகமேயன்றி நிக்கிரகமென்று சொல்லப்படுவதல்ல என்றிதன் பொருள்.

மேல் இந்தச் சாத்திரம் சகலராகிய ஆன்மாக்களுக்கு அதிகாரமாகையால் சகலான்மாக்களுடைய இலக்கணம் உரைத்தல்.

***பதிப்பாசிரியர் கருத்து :***

**1. மற்றுப் புகன்றவையும் அருள்**

"அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்திது இளைப்பாறி மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமு தூட்டி
அருளால்என் நந்தி அகம்புகுந் தானே."

*(திருமந்திரம் - 1808)*

## உயிர் அல்லது பசுவின் இலக்கணம்

எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணல்அரு ளால்நண்ணி அவைஅவராய் அதனால்
அலகில்நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்,
புண்ணியபா வம்புரிந்து, போக்குவரவு உடைத்தாய்,
புணரும்இருள் மலபாகம் பொருந்தியக்கால்
அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருள்அகற்றிப் பாதம்
உற்றிடும்நல் பசுவருக்கம் எனஉரைப்பர்,
உணர்ந்தே.(19)

**எண்ணரிதாய் நித்தமாய் இருள் மலத்தில் அழுந்தி:**- ஏகான்ம வாதி ஆன்மாக்களானவைகள் பிரமந்தானே காரணமான மாயோபாதியினாலே ஈசுரனாகியும், காரியோ பாதியினாலே சீவன்மாக்களாகியும் நிற்கும் என்பது போலன்றி, அனாதியே சமலதையினாலே பரப்பிரம்மத்துக்கு வேறாய் எண்ணிறந்ததுமாய் நித்தமுமாய் அஞ்ஞானாந்த கார மலத்தினாலே தன்னுடைய சொரூபத்தைச் சற்றுந் தெரியாமலிருக்கும்;

**இருவினையின் தன்மைகளுக்கு ஈடான ஆக்கை அண்ணல் அருளால் நண்ணி அவை அவராய்:**- புண்ணிய பாவங்களுக்கு ஈடான தனுவாதிகளைப் பரமேசுரனுடைய சத்தியானது மாயையிலே நின்று, ஆண் பெண் அலி யென்றும் உயர்திணையுமாகவும் அதுவென்னும் அஃறிணை உருவ மாகவும் பொருந்தி நின்று அதனால்;

**அலகில் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால் புண்ணிய பாவம் புரிந்து போக்கு வரவு உடைத்தாய்:**- அந்தத் தேகங்களினாலே அளவிறந்த சுக துக்கங்களைப் பொசித்துப் பொசிக்கும் வழியிலே புண்ணிய பாவங்களையும் பண்ணி, அந்தப் பலத்தினாலே இறந்து போவதும் பிறந்து வருவதும் உடைத்தாய் இவ்வாறு நடக்குங் காலத்திற் செய்துள்ள புண்ணிய வசத்தினாலே;

**புணரும் இருள் மலம் பாசம் பொருந்திய கால்:-** ஆன்மாவை அனாதியே பிரிவறக் கலந்திருக்கும் அஞ்ஞான இருளாகிய ஆணவ மலம் நீங்குவதற்குப் பக்குவமான காலத்திலே;

**அருளால் உள்நிலவும் ஒளியதனால் இருள் அகற்றிப் பாதம் உற்றிடும் நல் பசு வர்க்கம் என உரைப்பர் உணர்ந்தே:-** குருவினுடைய கருணையினாலே கலாசோதனையைப் பண்ண அதனாலே, ஆன்மாவிலே முன்னுக்குப் பிரகாசியாமல் காட்டத்தில் **அக்கினி போல** இருக்கிற சிற்சத்தியானது பிரகாசித்து அஞ்ஞான விருப்பைப் போக்க, சத்திய ஞானானந்த மயமான பரம சிவத்தை நின்ற நிலையிலே வேறறக் கலந்திடுவர்கள் பக்குவானமாக்கள் என்றிதன் பொருள்.

சிவனைக் கலப்பார்கள் என்பதற்குச் சிவன் பாதத்தைப் பொருந்துவார்கள் என்றது **பிரிதி பாதா குரு பாதங்கள்** என்றது போலப் பூச்சிய வசனம். இஃதன்றியும் எங்கும் சிவபாதம் என்னும் பொருளாகையானும் இவ்விடத்திற் சொன்ன இலக்கணம் சகலர்க்கென்றறிக.

மேல் இந்த ஆன்மாக்களை அனாதியே மறைத்து நிற்கும் ஆணவ மலத்தினுடைய இலக்கணத்தைக் கூறுகின்றது.

## பாச இலக்கணம் அல்லது திரோதமலம் அல்லது மலமும் திரோதமும்

ஏகாமாய்த் தம்கால எல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய், இருள்ஒளிர இருண்ட
மோகமாய்ச் செம்பில்உறு களிம்பேய்ந்து, நித்த
மூலமல மாய்அறிவு முழுதினையும் மறைக்கும்;
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலம்எனவும் பகர்வர்;அது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள்[1]
நணுகும்வகை கருணைமிக நயக்கும் தானே. (20)

பாடபேதம்:- 1. அடிக்கண்

**ஏகம் ஆய் இருள் ஒளிர இருண்ட மோகம் ஆய் அறிவு முழுதினையும் செம்பில் உறு களிம்பு ஏய்ந்து நித்த மூல மலம் ஆய் மறைக்கும் :-** ஆணவ மலமானது தான் ஒன்றேயாய், கார்காலத்தில் அமாவாசை இராத்திரி இருளையும் வெளி யென்னும் படிக்குத் தான் இருண்டு விஷங்கொண்டு றங்கினவனைப் போல மோகத்தைப் பண்ணுவதாய், செம்பில் களிம்பு போல எல்லா ஆன்மாக்களையும் வேறறக் கலந்து ஆன்மாக்கள் அறிவு சற்றும் பிரகாசியாமல் மறைக்கும். வீட்டுப் பற்றாய் வரும் கன்மத்துக்கும் மாயைக்கும் தான் மூல மலமாய் அறிவற்றது மாயிருக்கும்.

இவ்வாறு ஒரு முதலுமாய் நித்தியமுமாய் வேறறக் கலந்து மயக்கி மறைப்பது மாயிருக்கில் ஆன்மாக்களுக்குப் போக மோட்சம் கூடாது; கூடுமென்னில், ஆணவ மலம் நித்திய மென்பதுங் கெடும்; ஆணவ மலம் ஒன்றாகை யினாலே ஏக முத்தியிலே சர்வ முத்தியுமாம்; இஃதன்றியும் ஆன்மாவைப் பிரிவறக் கலந்து நிற்கும் ஆணவத்துக்கு நாசம் வரில் ஆன்ம நாசமும் வருமென்னில்;

**தம் கால எல்லைகளின் மீளும் எண்ணரிய சத்தியதாய்:-** ஆன்மாவுக்குச் சத்தினி பாதம் ஆன காலத்திலே நீங்கப் பட்டதுமாய்;

எண்ணிறந்த சத்திகளாலும், எண்ணிறந்த ஆன்மாக் களையும் மறைத்திருக்கும் என்பது முடைத்தாகையினாலே பக்குவான்மாக்களுக்கு மோட்சமுண்டு; அபக்குவான் மாக்களை மறைத்து நிற்கும் ஆகையால் ஆணவத்துக்கு நித்தியமும் கெடாது.

ஏக முத்தியிலே சர்வ முத்தியுமில்லை; செம்பிற் களிம்பு பரிசவேதியினாலே போய்ச்சுத்தமான பொன்னானது போல, ஆன்மாவும் பராசத்தி. பரிசத்தினாலே ஆணவம் நீங்கிச் சுத்தனாவன்; ஆன்மா விபுவாகையால் ஆன்மாவை நீங்கி ஆணவமலம் எவ்விடத்திருக்கப் போவது.

ஆகையால், ஆணவ மலமம் நீங்குமென்பது கூடா தென்னின், பூனை முதலான சில செந்துக்களுக்கு இராத்திரி இருளென்பது சற்று மில்லாமலிருக்கையினாலே இருளுங் குறையற நின்றது போல, முத்தான்மாக்களிடத்தில அஞ்ஞானம் இல்லாமல் தானும் கெடாது நிற்கும் என வறிக.

**பாகமாம் வகை நின்று திரோதாயி சத்தி பண்ணுதலான் மலமெனவும் பகர்வர்:-** இந்த ஆணவ மலம் சடம் ஆகை யினாலே பிரவிருத்தி நிவர்த்தி கூடாதாகையால், அதனைத் திரோதான சத்தியானது இந்த மலம் பரிபக்குவமாம்படி சேட்டித்து நின்று பக்குவம் பண்ணும் ஆகையாலே, "கள்ளருக்குக் குருக்களானவர் கள்ளக் குருக்கள் என்பது போல" திரோதியாகிய சத்தி ஆணவத்தைச் சேட்டிப் பிக்கையால் அந்த ஆதி சத்தியையும் மலம் என்று உபகார மாகச் சொல்லுவார்கள்.

**அது பரிந்து நாகம்மா நதி மதியம் பொதி சடையான் அடிகள் நணுகும் வகை கருணை மிக நயக்கும் தானே:-** அந்தத் திரோதான சத்தியானது கங்கையையும் சந்திரனையும் தரித்த சடா

மகுடத்தையுடைய பரமேசுரனுடைய சீபாதங்களை அடையும்படி மிகுந்த கிருபையைப் பண்ணும்; அந்த ஆதி சத்திக்கே அனுக்கிரக சத்தியென்றும் பெயராம் என்றிதன் பொருள்.

மேல் சுத்த மாயையினுடைய தோற்றம் கூறுகின்றது.

*பதிப்பாசிரியர் குறிப்பு :*

*1.* இப்பாடலில் வந்துள்ள **அடிகள்** என்ற பாடம் ஒரு சில படிகளில் காணப்பெறுகின்றது. **அடிக்கண்** என்ற பாடமும் சில படிகளில் காணப்பெறுகின்றது. இவற்றுள் **அடிக்கண்** என்ற பாடமே பொருளுடன் கூடிய சிறந்த பாடமாகும்.

2. **சிவஞான முனிவர்:-** இங்ஙனம் கூறிப்போந்த மலமாவது பிராந்தி ஞானமே பிறிதில்லையென்பர் ஒருசாரார்; ஒரு சாரார் ஞான பாவம் என்பர்; ஒரு சாரார் தமோகுணம் என்பர்; ஒரு சாரார் மூலப் பகுதியிற் றோன்றும் அவிச்சை என்பர்; ஒரு சாரார் சிவசத்தி என்பர்; ஒரு சாரார் ஆன்மாவின் குணம் என்பர்.

மலமாவது இவையனைத்திலும் வேறாய், ஒன்றாய், நித்தமாய், வியாபகமாய், ஞான திரோதமாகிய திரவியம் என்பது தொகுத்துக் காட்டுதும் என்பர். (சிவஞான பாடியம்-சூ-4-உ-ப. *350, 351)*

## தூயபத முத்தி தரும் மாமாயை அல்லது குடிலையின் இயல்

உன்னல்அரும் பரசிவன்தன் அருளாலே நாதம்
உதிக்கும்மிகும் குடிலைதனில்; விந்துவரும் நாதம்
தன்னில்அதின் ஒளிவளரும் சதாசிவராம்; அவரில்
தயங்கவரும் ஈசர்வித்தை தனைஅளிப்பர்; அதனால்
மன்னுவர்இவ் வகைஐவர்; வாய்மையினால் முன்னே
வந்திடும்என் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்உதவும் சூக்குமாதி ஒருநான்கும் என்று
மொழிந்திடுவர் அருங்கலைகள் முதிர்ந்து ளோரே. (21)

**உன்னல் அரும் பரசிவன் தன் அருளாலே நாதம் உதிக்கும் மிகும் குடிலை தனில்** :- வாக்கு மனதுக்கும் அதீதனாகிச் சதாசிவதத்துவத்துக்கும் பரமான சிவனுடைய சத்தி கலக்குகையினாலே குடிலை என்னும் பரவிந்துவிலே நாதம் உண்டாம்; அந்த நாதம் இருவகைத்தாம்; சத்தமயமான விஞ்ஞானப் பிரகாசமாயொன்றாம்; சாந்தியாதீத கலா ரூபமாய்ச்ச சாட்சாத் சிவாதிட்டிதமாகையால் ஒன்று சிவதத்துவமென்பது பெயராயிருக்கும்.

**விந்து வரும் நாதம் தன்னில்**:- அந்த நாதத்திலே விந்து வென்னும் சாட்சாத் சத்தி அதிட்டித மானகையாலே சத்தி தத்துவமென்று பெயராய்ச்சாந்தியாதி நாலு கலையி னுடைய சொரூபமாய் உதிக்கும்;

**அதில் ஒளி வளரும் சதாசிவராம்**:- அந்தச் சத்தி தத்துவத்திலே ஞானப்பிரகாசமான சாதாக்கியம் உண்டாம்;

**இவரில் தயங்க வரும் ஈசர்**:- இந்தச் சாதாக்கியத்திலே விளங்கப்பட்ட ஈசுர தத்துவம் உண்டாம்;

**வித்தை தனை அளிப்பர்**:- அந்த ஈசுர தத்துவத்திலே சுத்த வித்தியாதத்துவம் உண்டாம்;

**இவரான் மன்னுவர் இவ்வகை ஐவர்**:- இந்த அஞ்சு தத்துவம் என்கிற பேதோபாதியினாலே சத்தி பேதமாய், அந்தச் சத்தி பேதங்களினாலே சிவனும் ஐவகையாய்ப் பொருந்துவர்.

**அவையாவன** :- சிவதத்துவத்தை அதிட்டித்துச் சத்தர் சுத்தமாயையிலே சூக்கும கிர்த்தியத்தைப் பண்ணுவர். சத்தி தத்துவத்தை அதிட்டித்துச் சத்தி வாமாதி சத்திகளான அநேக விசித்திர சத்திகளைத் தனக்கு அபின்னமாக உண்டாக்கி நிற்கும்.

ஞானாக்கிரியா சமத்துவத்திலே சகள நிட்கள மூர்த்தியான சதாசிவர் வாமாதி சத்தி சகிதராய்ச் சதாசிவ தத்துவத்தை அதிட்டித்துச் சுத்த மாயையிலே தூல கிர்த்தி யங்களைப் பண்ணுவர். கிரியாதிகத்தினாலே மகேசுர மூர்த்தியானவர் ஈசுர தத்துவத்தை அதிட்டித்திருந்து அசுத்த மாயா கிர்த்தியங்களைப் பண்ணுவர்.

ஞான மிகுதியினாலே உருத்திர மூர்த்தியானவர் சுத்த வித்தியா தத்துவத்தை அதிட்டித்திருந்து பிரகிருதி கிர்த்தி யத்தைப் பண்ணுவர். இவ்வாறு பேதமானது கிர்த்திய பேதத்தினாலே சத்தி பேதமாய்ச் சத்திக்குப் பிரிவற்றது சிவனாகையால் அந்தச் சிவனையும் பேதமாகச் சொல்லப் பட்டதே உண்மையாகச் சிவம் ஏகமே.

**வாய்மையினான் முன்னே வந்திடுமென்றுரை செய்த விந்து வழா வகையே**:- நாதாதி தத்துவங்கள் தோற்றியிடு மென்று முன்னே சொன்ன விந்துவாகிற குடிலையானது பரிணாம காரிய வத்தல்லாமல் விருத்தி ரூபமாயிருக்கிற காரியத்தையுடைய தென்னும் வாய்மையினாலே;

**முன்னுதவு சூக்குமாதி ஒரு நான்கும் என்று மொழிந் திடுவர் அருங்கலைகள் முதிர்ந்துளோரலேரே**:- அபர விந்து வாதி உதிப்பதற்கு முன்னே சூக்குமாதியான நாலு வாக்குக் களுண்டாமென்று வேதாகமங்களைத் தெரிந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்; இந்த நாலு வாக்குக்களுடைய இலக்கணத் தையும் மேற்சொல்லுவாம்.

மேல் அசுத்த மாயா விலக்கணங் கூறுகின்றது.

## மூவுலகிற் புத்திதரும் மாமாயைப் புணர்ப்பு
## (அ) அசுத்த மாயை

உருஆதி சதுர்விதம்ஆய் ஒன்றுஒன்று ஒவ்வா
உண்மையதாய் நித்தமாய் ஒன்றாய் என்றும்
அருஆகிக் கன்மாந்த அணுக்கள் யார்க்கும்
ஆவாரம் ஆய்அசித்தாய் அகலம் ஆகி
விரிவாய தன்செயலின் வியாபியாய் எல்லாம்
விரிந்தவகை புரிந்தடையின் மேவியவை ஒடுங்க
வருகாலம் உயிர்களெலாம் மருவிடமாய் மலமாய்
மன்னியிடும் அரன்அருளால் மாயை தானே. (22)

**அதோ மாயையின் இலக்கணம்**

**உண்மையதாய் நித்தமாய் ஒன்றாய் என்றும் அருவம் ஆகி அசித்தாய் அசலம் ஆகி மலமாய்:-** *பிரபஞ்சம் சற்காரிய மென்பதை மறுப்பதாக உண்மையதாயென்றது.*

*சத்தென்றது பவுத்தமதம் காரியமும் காரணமும் அநித்தியமென்றதை மறுப்பதாகக் காரணம் நித்தியமென்றது.*

*பரமாணுவினுடைய கூட்டங்களினாலே பிரபஞ்சம் காரியமாம் என்னும் நையாயிகர் மதமறுப்பாக ஒன்றா யென்றது.*

"**பால் தயிராகப் பரிணாமித்தாப் போல**" *அரூபமான காரணமும் ரூபமாம் என்னும் பரிணாம வாதத்தை மறுப்பதாக என்றும் அருவாகி யென்றது.*

*சிற்சத்தி ரூபமே பிரபஞ்ச மென்றும் அத்துவித வாதியை மறுப்பதாக அசித்தாயென்றது.*

*மாயையினுடைய அவத்தை பேத பரிணாமமே பிரபஞ்சம் என்னும் மதத்தை மறுப்பதாக அசலாமென்றது.*

*மோகாதிகளைப் பண்ணு மாயையினாலே (மாகையி னாலை) மலம் என்றது. இவ்வாறு சித்தித்துடைய மாயை;*

**அரன் அருளால் ஒன்றொன் றொவ்வா உருவாதி சது விதமாய் கன்மாந்த அணுக்கள் யார்க்கும் ஆவாரமாய் விரிவாய தன் செயலின் வியாபியாய் எல்லாம் விரிந்து வகை புரிந்து அடைவின் மேவி அவை ஒடுங்க வருகாலம் உயிர்களெல்லாம் மருவிடமாய் மன்னியிடும் மாயை தானே:-** அனந்தேசுரருடைய சத்தி இந்த அசுத்த மாயையைக் கலக்கப் பண்ணுகையினாலே ஆத்மாக்களுடைய கன்மானு குணமாகப் பிரதி புருஷனியதமாய் ஒன்றுக்கொன்று வேற்றுமையான இலக்கணமாய்த் தனுகரண புவன போகங்களைச் சமுத்திரத்திலே நுரை முதலானவைகளைப் போலத் தன்னுடைய ஏகதேசத்திலே உண்டாவதாய்க் கன்மத்தையுடைய ஆன்மாக்கள் விபுத்துவத்தைத் தனது காரியமான கலாதி தத்துவங்களினாலே ஆவரித்து ஏகதேசம் பண்ணுவதாய் விரிந்த தன்னுடைய காரியப் பிரபஞ்ச மெல்லாவற்றையும் வியாபித்துக்கொண்டு பிரபஞ்சத்துக்குச் சமவாய காரணமாயிருப்பதாய் இவ்வாறு விரிந்த பிரபஞ்ச ரூபங்களெல்லாம் உற்பத்தியான கிரமத்திலே பிரதி லோமமாக ஒன்றிலொன்றாய்ப் பொருந்தித் தன்னிடத்திலே ஒடுங்கும், பிரளய காலத்திலே கன்மத்தையுடைய ஆன்மாக்களுக்கெல்லாம் அடையுமிடமுமாய்ப் பொருந்தி வந்திடும் மாயை என்றிதன் பொருள்.

என்னைஇது எனில்உலகுக்கு உபாதானம் இல்லை
இறைவன்அலது எனில் அசித்துச்
சித்தினிடத்துஉதியா
மன்னிஉள தேல்முதல்வன் என்கொல் என்னின் ?
மாயைதான் அசித்துருவாய் மருவ மாட்டாது
அன்னவனும் இதுவொழிய ஆக்க மாட்டான்
அசத்தனாம் எனின்அதுவும் அவன்போல் நித்தம்
முன்னவன்அவ் அசித்தைவிரித்து எவையும் ஆக்கும்
முதன்மைஅது கொடுத்ததுஎன மொழிந்தி
டாரே. (23)

**என்னை இது என்னில்** :- பிரபஞ்ச காரியத்துக்கு மாயையென்று காரணமாய் உண்டென்று சொல்லுவது என்னையோ வென்னில் ?

**உலகுக்கு உபாதானம் இல்லை** :- பிரபஞ்சத்துக்கு உபாதானம் இல்லை ஆகையால் பிரபஞ்சம் சூனியமேயாம்.

**இறைவன் அலது என்னில்** :- கர்த்தாவே சகலப் பிரபஞ்சமும் ஆவனென்று சிவாத்துவிதவாதி சொல்லில்;

**அசித்து சித்தினிடத் துதியா** :- சடமாய் அனேகமுமாய் பரிச்சின்னங்களுமாய் இருக்கிற பிரபஞ்சம் சத்தியிலே உண்டாக்க உண்டாம் என்னில், விகாரித்துவமும், பரிச்சின்ன மாகையும் உண்டாம். அதனால், நாசவத்தாம் ஆகையால் சித்தி அச்சகத்துற்பத்தி கூடாது.

**மன்னி உளதேல் முதல்வன் என்கொல் என்னில்**:- உபாதானமாக மாயையொன்று நிலைபெற்றுள்ளதாகில், அதுவே பிரபஞ்ச ரூபமாம்; அதற்குக் கர்த்தாவொருவன் வேண்டுவதில்லை என்னில்,

**மாயைதான் அசித்து உருவாய் மருவ மாட்டா** :- அந்த மாயையானது சடமாகையினாலே மண்ணுண்டையானது

குலாலன் வியாபாரமன்றியிலே காரியரூபம் ஆகமாட்டாதது போலச் சடமாயிருக்கிற மாயையை ஞான சத்தியானது சேட்டிப்பியாமல் காரியரூபம் ஆகமாட்டாது.

**அன்னவனும் அதுவொழிய ஆக்கமாட்டான்**:- அந்தக் கர்த்தாவும் மாயை உபாதானமாகக் காரியங்களைப் பண்ணுவதன்றி நிருபாதானமாகப் பண்ணான்;

**அசத்தனாம் எனில் அதுவும் அவன் போல் நித்தம்**:- கர்த்தா மாயையை உபாதானமாகக் கொண்டு பிரபஞ்சத்தைப் பண்ணுவதன்றித் தானே பிரபஞ்ச சிருட்டியைச் செய்வதற்கு அசத்தன் என்னில், அந்த மாயையும் அவனைப் போலே. நித்தியமுமாய் ஈசுராதீனமாயிருக்கும்; இந்த மாயைப் பரிக்கிரக சத்தியாயுடையவன் ஈசுரன் ஆகையால்,

**முன்னவன் அவ் அசித்தை விரித்து எவையும் ஆக்கும் முதன்மை**:- பதி பசு பாசம் என்னும் மூன்று பாதானங்களின் முந்தினதாகையால் முதற்சொல்லப்பட்ட பதியாகிய ஈசுரன் அந்த அசித்தாகிய மாயையிலே விரிவாகிய பிரபஞ்ச ரூபமெல்லாம் உண்டாக்கும் முதன்மையுடையவன்.

**அது கொடுத்ததென மொழிந்திடாரே** :- மாயையே பிரபஞ்சத்தை உண்டாக்கிற்றென்று சொல்லிப் பெரியோர்கள் உரைத்திடார்கள் என்றிதன் பொருள்.

## வினை

படைத்ததொரு படியின்றிப் பறவைபசு நரராய்ப்
பண்ணியதுஎன் முன்னைவினைப் பான்மை என்பர்
அடுத்துவினை உளதாயின் இறைஏன் என்னில் ?
அசேதனம் மற்றவைஆவிக்கு அமைந்த தாகும்
எடுத்தவினை உருவுறுவது உயிரேல் தானே
இருவினைக்குத் தக்கவுடல் எய்தும் என்னில்
சடத்திரளும்[1] அகர்த்தாவாய் அறிவுஒன்று இல்லாத்
தன்மையனும் கூடஒரு சங்கை இன்றே. (24)

*பாட பேதம்: 1.* சுவடியில் "சடத்திரளுங் கர்த்தாவாய்" என்றே பாடம் உள்ளது. உரையில், "சுதந்திரமில் லாத வனுமாய்" என்றே யிருத்தலின் "சடத்திரளும் அகர்த்தாவாய்" என்ற பாடமே நன்று.

**படைத்தது ஒருபடி அன்றி பறவை பசு நரர் ஆய்ப் பண்ணியது என்:-** கர்த்தாவானவன் ஆன்மாக்களுக்குத் தனுவாதிகளை மாயையிலே உண்டாக்கினது ஒரு படித்தன்றி ஏற்றக் குறைச்சலாக நரர், பசு, பட்சியாதி பேதங்களைாகப் பண்ணிய தென்னையோ வென்னில்,

**முன்னை வினை பான்மை என்பர்:-** பூர்வத்தில் ஆன்மாக்கள் பண்ணின கன்மத்துக் கீடாக வென்று பெரியோருறைப்பர்;

**அடுத்த வினை உளது ஆகில் இறை என் என்னில்:-** அப்படி பொருந்தப்பட்ட ஒரு கன்மம் உண்டாகில், அந்தக் கன்மாதீனமாகவே தனுவாதிகள் உண்டாம் இதற்கொரு கர்த்தா ஏன் என்னில்,

**அசேதனம் மற்றவை ஆவிக் கமைத்ததாகும்:-** அந்தக் கன்மங்களானவை அசேதனமுமாய் ஆன்மாக்களாலே பண்ணப்பட்டு ஆன்மாக்களுக்கு (ச் சுக) துக்க வேதுவாய்ப் பொசிப்பினாலே நாசத்தை அடைவதாய் (உள்ளன) ஆகையால் கன்மானு குணமாகத் தனுவாதிகளை மாயையிலே உண்டாக்குவதற்கு ஒரு கர்த்தா வேண்டும்.

**எடுத்த வினை உரு உறுவது உயிரேல் தானேல் இருவினைக்குத் தக்க உடல் எய்தும் என்னில்:-** தான் பண்ணின வினைக்குத் தக்க உருவாதியை ஆன்மா பொருந்துவது தானே தான் பண்ணின புண்ணிய பாவங் களுக்குத் தக்கதாகத் தனு வாதிகளைப் பொருந்துவன் என்னில்;

**சடத் திரளும் அகர்த்தாவாய் அறிவு ஒன்று இல்லாத் தன்மையனும் கூட ஒரு சங்கை இன்றே:-** சடமாயிருக்கிற தனுவாதிகளும் சுதந்திர மில்லாதவனுமாய் ஓரறிவும் அற்றுக் கேவலத்திலே யிருக்கிற ஆன்மாவும் கூட்டுவானின்றித் தானே கூடுவதற்கோரு வியல்பான தில்லை.

அஃதெப்படி என்னில், ஆன்மாவானவன் நித்தியனு மாய் விபுவுமாய்ச் சிற்சத்தி நீதியுமாய் இருந்தானே யாகிலும், ஆணவத்தாலே ஆவரிக்கப்பட்டிருக்கையால் போகத்திலே சிற்றறிவுக்குப் பெலமாகக் கலாதி தத்துவ யோகத்தை யிச்சிக்கும்; முத்தியிலே எல்லாவற்றையும் அறிவதற்குப் பெலமாகச் சிவனுடைய சத்தி யோகத்தை இச்சிக்கும். இந்த இரண்டும் இல்லாத போது போக மோட்சங் கூடாது. கன்மமே பலத்தைக் கொடுக்கமாட்டா என்றிதன் பொருள்.



## பாசங்கள் அனாதி

அல்லல்மிக உயிர்க்குஇவைதான் அணைத்தது ஈசன்
அருவினைகள் அருந்துதற்கோ? வினையோ
அன்றிச்
சொல்லிவரும் மாயையோ அணுவை முந்தச்
சூழ்ந்ததுஎனும் உரைமுதலோர் தொடக்கு
இலார்பால்
ஒல்லைவரும் எனின்உளதாம்; உயிர்உண் டாலே
உளதுமலம்; மலம்உளதாய் ஒழிந்த எல்லாம்
நெல்லின்முளை தவிடுஉமிபோல் அனாதி ஆக
நிறுத்திடுவார்; இதுசைவம் நிகழ்ந்து மாறே. (25)

**அல்லல் மிக உயிர்க்கு இவைதான் அணைத்தது ஈசன் அருவினைகள் அருந்துதற் கோ :-** ஆன்மாக்களுக்குச் சனன மரணாதி துக்கங்களைப் பொருந்தும் மாயா தத்துவங்களை ஈசுரன் கூட்டினது பொசியாமல் தொலைக்க அரிதாகிய வினைப்பயன்களைப் பொருந்துதற் கென்றோ நீர் சொல்லுகிறீர்? ஆகில்,

**வினையோ அன்றிச் சொல்லி வரும் மாயையோ அணுவை முந்திச் சூழ்ந்தது:-** இருவினையோ அல்லது நீர்முன் சொன்ன மாயா காரியமாகிய தனுவாதியோ ஆன்மாவை முதற் பொருந்தினது; கன்மம் முந்தின தென்னில், அக்கன்மமானது மாயாதிகளினாலே பண்ணப்படுவது; காயம் முந்தின தென்னில் அக்காயாதி கன்மாதீனமாகவே உண்டாக வேணும்; ஆகையால், அன்னோன்னியசரிய தோஷம் உண்டாம் என்னில்,

**எனும் உரை முதல் ஓர் துடக்கிலார்பால் ஒல்லை வரும் எனில் உளதாம்:-** அன்னியோன்னியாசரிய தோஷம் வரும் என்னும் உரை, அனாதியே அஞ்ஞானோபாதி யில்லாமல் இந்த ஆன்மாவை மாயா கன்மங்கள் பொருந்திற்றென்னில் உண்டாம்.

**உயிர் உண்டாவே உளது மலம் உளதாலே ஒழிந்த தெல்லாம் நெல்லின் முளை தவிடு உமிபோல் அனாதியாக நிறுத்திடுவர் இது சைவம் நிகழ்த்தும் ஆறு ஏ :-** அனாதி நின்மலன் ஆன சிவனுக்கு வேற்றுமையாகச் சீவ வர்க்கங்கள் உண்டென்னவே அனாதி சகலர் எ..றறியப்படும். அந்த அஞ்ஞான சம்பந்தமாகிய..... .......விரையும் அனாதி சம்பந்தமாகையினாலே சீவான்மா வென்று பேரானது. இவ்வாறு சைவாகம சித்தம் என்று பெரியோர்கள் நாட்டுவார்கள்.

மலம் உண்டாகவே கன்மமும் மாயையும் உண்டென்பது சன்னியோக சிட்டமோ? காரண காரியமோ? சன்னியோக சிட்டமென்னில், மாயையும் கன்மமும் நீங்கின விஞ்ஞான கலரான பேர்க்கு ஆணவம் நீங்க வேணும்; நீங்காதிருக்கையால் சன்னியோக சிட்டமல்ல.

காரண காரியமென்னில், அனாதியும் நித்தியமா யிருக்கிற மாயைக்குக் காரணமுண்டென்று சொல்லப் போகாது. பாரிசேடித்தினாலே மாயையும் கன்மமும் ஆணவ மலம் போல அனாதியே.

கன்மமானது ராகாதியினாலே உள்ளதாகையினாலும் அந்த விராகாதிகள் அனாதியே, ஆணவ சத்தியாகையினாலும் கன்மமும் அனாதியே. ஆணவமல சத்தியும் கன்மமும் அவினாபாவம்; கன்ம நாசமே ஆணவமல சத்தி நாசம், ஆணவமல சத்தி நாசமே கன்மநாசம். இதிலே ஒன்றைச் சொல்லாமல் இரண்டையும் சொல்லுவானே னென்னில் ? கன்ம காமியத்தி னாலே சத்திநி பாதமுண்டாக்கியதனாலே மலசத்தி நாசம் வருகிறது முண்டு; கன்ம காமியமன்றியிலே மலபரிபாகத்தி னாலே கன்ம நாசம் வருகிறதும் உண்டாகையால் சொன்னது.

கன்மத்துக்கு ஆணவ சத்தி ஏதுவென்றதற்கு ஆகம வசனப் பொருள் மோகமும் மதமும் ராகமும் துக்கமும் சுகமும் வைசித்தியெமும் சந்தோஷமும் இவை ஏழும் கூடெ........ ணடான் மலமென்னப்படும் என்றிதன் பொருள்.

அருத்திமிகும் கலைகாலம் நியதியுடன் வித்தை
அராகம்இவை அனந்தரால் மாயைதனில் ஆகும்
உருத்திரரால் கலையதனில் பிரகிருதி குணங்கள்
உளவாகும் ஆங்காரம் புந்திதனில் உதிக்கும்
தெரித்தஇது திரிவிதமாம் தைசதவை காரி
திகழ்தருபூ தாதியெனத் திருந்தியசாத் துவிதம்
விரித்தகுணம் மனம்புத்தி இந்திரியம் ...
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும்
விரிந்தே.(26)

***அருத்தி மிகு கலை காலம் நியதியுடன் வித்தை***
***அராகமிவை யனந்தரான் மாயைதனி லாகும்.***

*(எ-து.) வாமாதி சத்தி சசிதரான சதாசிவே சானு குணமாய் ஆன்மாக்களுடைய கன்மங்களுக் கிடாக அசுத்து வாத்துவா கிர்த்தியத்தைப் பண்ணும் மந்திரே சுரரான அனந்த தேவருடைய சத்தியினாலே கலக்கப்பட்டதான அசுத்த மாயையிலே ஆன்மாக்களுடைய ஞானக் கிரியாதிகளை விளங்கப் பண்ணும் கலாதி தத்துவங்கள் தோன்றும் மாயையைக் கலக்குவித்து அதனாலே காரியோமுக தானம் பண்ணினார் என்பதனாலே,*

**"வாயுவினாலே கலக்கப்பட்ட விடத்தில் சமுத்திர கலத்திலே நின்று அலைநுரை முதலான துண்டா னாற்போல"** *ஈசுர சத்தியினாலே கலக்கப்பட்ட மாயையில் நின்றும் பிரபஞ்சன் உண்டாகியும்* **"வாயு அசையாமல் நின்ற அளவிலே அலைநுரை முதலானவைகள் சமுத்திரத்திலே தானே ஒடுங்குமாப் போல"** *ஈசுர சத்தி மாயையைக் கலக்காமல் பராமுகமாகவே மாயையில் பிரபஞ்சம் ஒடுங்கும் என்னும் திட்டாந்தஞ் சொல்லப்பெறும்.*

*சுத்தா சுத்த மாயைகளில் தனுவாதிகள் உற்பத்தி பரிமாணமல்ல; பரிணாமாகில்* **"பால் தயிரான போது பால் இல்லாதது போலக் காரிய மான பொழுது காரணம் கெடுமாகையால்"** *அநித்திய வத்துவுக் கொழிய நித்திய வத்துவுக்குப் பரிணாமமில்லை. பின்னை*

எவ்வாறென்னில்? கிருதகீடம் என்னும் புழு தன்னுடைய வாயின் நெய்யினாலே வீடுபோலக் கட்டிப் பின்னையும் விழுங்குமது போலவும், பொன்னழியாமல் பணி யானாற் போலவும், புடவை அழியாமல் குடில் ஆனாற் போலவும், பிரளய காலத்திலே பிரகிருதியா விருந்து சிருட்டி காலத்திலே

இந்த விந்து மோகினி, மான் (மகான்) மூன்றும் நிற்கும்படி மகான் வியாப்பியமும் மோகினி வியாப்பியமும் விந்து வியாபகமுமாயிருக்கும்.

இனித் தத்துவங்கள் தோற்றுமாறு அசுத்த மாயையிற் கலங்கின பிரதேச்சிலே தத்துவங்கள் உண்டாக்குகைக்குக் காலம் முதல் உண்டாக்கியே சிருட்டியாதி உண்டாக வேணும் ஆகையால் செல்காலம் நிகழ்காலம் வருங்காலம் என்னும் மூன்று காலம் உண்டாம்; இந்தக் காலம் மூன்று ரூபமுமாய் உற்பத்தியும் உடைத்தாகையால் காலம் சுதந்தரமல்ல; நாசத்தை யுடையதுமாம்.

காலமானது கெமுமாய் விடிவுமாய் நித்தியமுமாய் உற்பத்தி யாதிகளைப் பண்ணுவதுமாய் இருக்கும். இதை ஈசுரன் மாயையில் உண்டாக்கினாரென்றும் அநேகமென்றும் அருத்தியமென்றும் பரிச்சின்ன மென்றும் சொல்லுவது சொல்லுவது கூடாதென்று காலவாதி சொல்ல உத்தரம்:- காலமானது ஒன்றே என்றால் கிரியைப் பற்றிப் பேதமாகாது; காலமென்பது கிரியை தானே யென்னில், கிரியைக்குச் செல்காலம் வருகாலம் நிகழ் காலம் உண்டாகை கூடாது. அந்தக்கிரியையும் மூன்றுகால ரூபமா யிருக்கு மென்னில்.... மென்பது.

ஆகையாலே வர்த்தமானாதி ரூபமாயிருக்கிற பேத காலங்களிலே அந்தக் கிரியை யாதிகளுடைய தான மாகையிலே இந்தக் காலம் ஒன்றல்ல. அநேகம் பொருட்களுடைய காரியானு விருத்தியினாலே அநேகம் விருத்தியுடையதே ஆகில் செல்காலமும் வருகாலமும் காணப்படுகின்றன. நிகழ்காலம் இல்லாமலிருக்கையினாலே

நிகழ்காலம் இல்லையே என்னில் செல்காலத்திலே குடமானது மண்ணுண்டையின் ரூபமாயிருக்கும். வருங் காலத்தில் பூரணமான வையவத்தை யுடைத்தாம். அப்பொழுது அந்தப் பொருள் வேண்டியவர்களாலே கைக் கொள்ளப்படும். அந்த இரண்டவத்தைக்கும் நடுவாய் இருக்கிறதை வர்த்தமான காலம் என்று சொல்லுவார்கள். முந்தச் சொன்ன வர்த்தமானாதி காலங்களை யுத்தி யுத்த மல்ல; ஒரு குடத்துடைய வர்த்தமான காலந்தானே மற்றொரு குடத்துக்குச் செல்காலமுமாய் மற்றொரு குடத்துக்கு வரு காலமுமாகையால் இந்தப்படி இந்தக் கணத்துக்கு வர்த்தமான காலம் எப்படிச் சொல்ல வேணுமென்ன

எல்லாப் பொருள்களுக்கும் அவர்களுக்கும் எல்லாப் பொருட்களுக்கும் அதீத காலத்திலே நாசமென்கிற இந்த இரண்டும் இரண்டு காலத்திலே நியதம் இவ்வாறு காலமும் பொருள் தோறும் நியதமாகையால் ஒருபொருளுக்கு வர்த்தமான காலம் ஒரு பொருளுக்கு அதீத காலம் என்னும் தோஷம் இல்லை ஆகையால் ஒரு கணத்திலேதான் பொருட்களுடைய கிரியையினாலே அந்தந்தப் பொருளை அனுசரித்து மூன்று காலமும் வரும். ஆகையினாலே காலம் அனந்த விருத்தியென்று முன்னே சொன்னது.

இந்தக் கபலம் சடமுமாய் அநேகமும் ஆகையால் கடாதிகளைப் போல அருத்தியமே. அருத்தியமாகை யினாலே கூடாது காலமானது உண்டாக்குவதாகையினாலே இதனுடைய உற்பத்திக்குக் காலமேதென்னில்? அதற்கொரு காலஞ்சொல்லில் அநவத்தை வரும். ஆகையால் காலா பேட்சை அன்றியிலே காலம் உற்பண்ணமாகும்.

அதில் எப்படித்தான் எல்லாப் பொருளுக்கும் கால யோகத்தினாலே உற்பத்தியாமென்றதென்னில்? இன்மாதீன ராம ஆன்மாக்களுடைய பிரவிர்த்திக்கே கால அபேட்சை; காலா தீதரான சிவகீர்த்தியத்துக்குக் கால அபேட்சை யில்லையாகையினாலே, தம்முடைய சமவாய்ச்சத்தியினாலே மாயையிலே நின்றும் தம்முடைய விச்சையினாலே பண்ணுஞ் சிருட்டியாதியயைடைவே காலம்.

காலம் அசுத்தமாயையினுடைய அதோபாகத்திலே உற்பத்தியாச்சுதென்று சொல்லப்பட்டது. சுத்தாத்துவாவிலே தோற்றத்துக்கும் நிற்கைக்கும் அழிவுக்கும் நியமம் எது கொண்டென்னின்? சுத்தாத்துமாவிலும் சுத்தகாலம் உண்டென்று விந்து பதார்த்த நிரூபணத்திலே சொன்னோம் சிவசக்திகளான கன்னி ஆரணி என்கின்ற மூன்று சத்திய திட்டிதமான காலத்தினாலே சுத்தாத்துவாவிலே தோற்றம், நிலை அழிவுகளான கிர்த்தியங்களைப் பண்ணப் படும். சுத்தா சுத்த மாயைகளிலே காலமுதலுண்டாய் அந்தக் காலத்தினாலே தோற்றம் முதலானவைகளைப் பண்ணுகையால் பெரிய பிரளயத்திலே இந்தக் காலத்தையுங் கூட எல்லாப் பிரபஞ்சத்தையும் ஒடுக்குகையினாலே அதற்கு நியமம் எதினாலே எல்லா ஆன்மாக்களுக்கும் ஏக காலத்திலே போகத்தினுடைய ஒழிவு எப்படி என்ன ? கால கன்மங்களை அனுசரித்துத் தோற்றம் முதலானவைகளைப் பண்ணும் கிருத்தியும் அதிகார கர்த்தாக்களுக்கல்லது சத்தராகிய பரமேசுரனுக்கில்லை ஆகையால் இந்தச் சங்கை கூடாது.

சுகதுர்க்காதி போகங்களிலே துக்கிராகிற சீவான்மாக் களுடைய இளைப்பாறுதல் நிமித்தமாகக் கிருபையினாலே மகேசுரன் எல்லாவற்றையுஞ் செய்யவும் ஒன்று செய்யாம லிருக்கவும் மாறுபாடாகச் செய்யவும், சுதந்தரராகையினாலே கால கன்மத்தை இச்சியாமல் தம்முடைய இச்சையினாலே ஒடுங்கப்பண்ணுவர். காலத்தை ஒடுக்கின பின்பு தோற்ற முதலானவைகளுக்குச் சூக்குமமாய்ச் சுத்தமாயிருக்கிற பஞ்ச கிருத்தியங்களையும் கால அபேட்சையன்றியில் எல்லா வற்றையும் அருகை, நித்திய திருத்தி அநாதி போதகம் சுதந்தரத்துவம் அலுதே சத்தி, அனந்த சத்தி என்னும் ஆறு குணமும் பரிபூரணமாகையினாலே பகவான் என்னும் நாமத்தை உடைய சத்தர் பண்ணுவார்.

இவ்வாறு காலம் அனேகமும் உற்பத்தியும் நாசத்தையும் உடையதே; நித்தியமுமல்ல; விடிவுமல்ல; சிவசக்தி அநிட்டிதமாகையால் சுதந்தரமுமல். சிவசத்தியாவன சனனி

என்னும் ரோதயித்திரி என்றும் ஆரணி என்றும், இந்த மூன்று சத்தியும் சத்தர் என்னும் நாமத்தை உடைய சிவனுடைய சத்திகள்.

இம்மூன்று சத்திகளும் சுத்தா சுத்த காலங்களை அதிட்டித்துத் தோற்றம், நிலை அழிவுகளைப் பண்ணிப் போக மோட்சங்களைக் கொடுக்கிறவைகளாயிருப்பது(ன); இதை அறியாமல் சிறிது பேர்களே சிவனுடைய இச்சா ஞானக் கிரியா சத்திகளே தத்துவங்களைச் சேட்டிப்பிக்குமென்று சொல்லு வார்கள். அந்த மூன்று சத்தியும் சிவனுக்கு அந்தரங்கமான கரணங்கள் சனனியாதி மூன்று சத்தியும் புறக்கரணங்களாய்த் தத்துவங்களைச் சேட்டிப்பிக்கும். இந்தக் காலம் அசுத்த மாயா கிர்த்தியங்களுக்குச் சாதாரணமும் எல்லா ஆன்மாக்களுக்கும் அசாதாரணமுமாயிருக்கும்.

காலத்தத்துவத்திற்குப் பின்பு நியதி தோன்றும் கலை, வித்தை, ராகம் இவைகளினுடைய விருத்திகளினாலே போகத்தின் பொருட்டுப் பிரவிருத்தனாகியிருக்கிற புருஷனுக்கு அவனாலே தேடப்பட்டிருக்கிற கன்மங் களுடைய மலபரி பாகத்திலே அந்தக் கன்ம நாசத்திலே சிவனுடைய ஆக்கினையை அனுசரித்துக் கொண்டு யிருக்கிற நியதி புருஷனையே நியமிக்கும். நியமிக்கும்படி அந்தப் புருஷன் போகத்திலே இச்சையற்றிருந்தாராயினும் அந்தச் சுக துக்க போகத்தைக் கூட்டும்படி அவனவன் தேடின தன்மாதன்ம பலத்தை அவனுக்கன்றி அன்னியரால் பொசியாதபடிக்கு நியமிக்கும்.

இவ்வாறு நியமிப்பதற்கு நியதி தத்துவம் இல்லை யாகில் இராசா வில்லாமலிருக்கிற தேசத்திலே சாதுக்களா யிருக்கிற பேர்களுடைய உடைமையைத் துட்டரான பேர்கள் அபகரிப்பது போல் ஒருத்தன் வேண்டிவரும். அவ்வாறு வாராமல் இராசாக்கினையான நியதி மார்க்கத்திலே நிறுத்தமாப் போல இந்த நியதி அவனவனுடைய கன்ம மலத்தை அவனவனே பொசிக்கப் பண்ணுவிக்கும். இவ்வாறு சாதாரணமாயிருந்து, ஒருத்தர்

பலத்தை ஒருத்தர் பொசியாமல் நிறுத்துகிறதே அசாதாரண முமாய் அதினாலே அவனவன் கன்ம பலத்தளவிலே சரீரேந்திரியாதிகளுடைய போகத்தை ஏற்றுக் குறைச்சல் வாராமல் பொசிப்பிக்கும்.

இந்த நியமத்தைச் சங்கர சத்திதானே பண்ணாதோ வென்னில்? அந்தச் சங்கரனுடைய சத்திதானே சிவனைப் பரித்துப் பண்ணில் அச்சத்தியினுடைய பரிசமே சத்திரு பாரமாம். சத்திநிதி பாதமாகில் அப்போகத்தில் இச்சையு மில்லாமல் மோட்சமேவாம். ஆகையினால் இந்த நியதி தத்துவ வியாசத்தினாலே தானே சிவசத்தி நிறுத்தும்.

கன்மந்தானே அந்தந்தக் காலத்திலே எவ்வள வெவ்வளவு பலனுண்டு அவ்வளவ்வளவு அந்தப் புருஷனைப் பொசிப்பியாதோ வென்னில் ? அக்கன்ம மானது கிருஷியாதிகளைப் போலத் தொழிலே ஆகையால் அது நியமித்ததல்ல; அஃதெப்படியென்னில் ஒருத்தர் பண்ணின கன்ம பலன்களை மற்றொருத்தர் பொசியாதபடிக்கு இராசாவினுடைய ஆக்கினையானது நிறுத்துமாப் போல; ஒருத்தர் பண்ணின கன்ம பலன்களை மற்றொருத்தர் பொசிக்கப் பண்ணுவியாதது நியதி. அது கூடாது அஃதெவ் வாறென்னில் இராசாவினுடைய ஆக்கினை உண்டாயிருக் கையிலும் ஒருத்தர் பண்ணின கிருஷியாதி பலன்களை மற்றொருத்தர் பொசிக்கக் கண்டோ மென்னில் ஒருத்தர் பண்ணின கிருஷியாதி பலத்தை மற்றொருத்தர் பொசிக் கிறதும் அதியாரி யாட்களாலே பண்ணப்பட்ட கிருஷியா பலத்தை ஏவின கர்த்தாவானவன் பொசிக்கு மாகையால் முன்சொன்ன திட்டாந்தத்துக்கும் தோஷமில்லை. இவ்விடத் தொருவன் என்னுடைய உடைமை இவன் அந்நியாயமாக எடுத்துக்கொண்டானென்று முறையிடக் காண்கையால் ஏவப்பட்டவனும் ஏவின கர்த்தாவும் என்கிறது எங்ஙனங் கூடுமென்னில்.

பூர்வத்தில் ஒவ்வொருவரும் பண்ணின கன்மத்தி லுண்டான அதிட்டானமானது ஒருத்தன் கிருஷியாதி பண்ணவும் மற்றொருத்தன் பொசிக்கவும் பண்ணுவிப்ப தாகையால் அதை அதிட்டத்துக்கு அணுகுணமாக நியதியானது (பட்சபாதமில்லாமலிருக்கிற இராசாவி னுடைய ஆக்கினையானது போல) நிறுத்தும்.

அதோ மாயையிலே இப்படி கால நியதி தத்துவங் களுடைய உற்பத்திக்கும் பின்பு கலாதத்துவம் தோன்றும். ஆணவாதிகளாலே ஆவரிக்கப்பட்டிருக்கிற ஞானக் கிரியையை உடைத்தாயிருக்கிற ஆன்மாவினிடத்திலே நின்றுங் கன்மாதி பலங்களை விட்டு ஆணவ மலத்தை ஏக தேசத்திலே அந்தந்தக் கன்மாணு குணமான போகத்துக்கு ஏதுவாயிருக்கிற ஞானம் பிரகாசிக்கும்படிக்கு நீக்கி ஆன்மாவினுடைய ஞானக் கிரியா சத்தி பிரகாசிக்கும்படிக்கு உபகாரியயாய வித்தையாதி தத்துவங்களுக்குக் காரணமாய் ஆன்மாவை ஏகதேச விவர்த்தியாகப் பெய்திப்பதற்குத் தானே முதற்காரணமாய் நிற்கும். இவ்வாறு பண்ணுங்கலையில்லாத பொழுது ஆன்மாவினுடைய ஞானக் கிரியை பிரகாசியாது.

ஆகையால் குடங்களைச் சுவர்களைக் கல்லான வைகளைப்போலச் சடமாம். ஆன்மாவுக்கு விடயங்களை அறிகிற சத்தி யுண்டாயிருக்கையினாலே அதுதானே அறிய மாட்டாதோ. கலை ஏன் எனில்? ஆணவத்தினாலே மறைக்கப் பட்டிருக்கிற ஆன்மாவிற்குத் தெரியச் செய்வதாயிருக்கிற கலையன்றியிலே ஞானம் பிரகாசியாது; பிரகாசியாப் பொழுது அறிவும் கூடாது கூடாதாகில் பிரபஞ்சம் சூனியமாம். ஆகையாலே அசுத்த மாயையிலே நின்றும் ஈசுர உத்திதானே ஆன்மாவினுடைய அஞ்ஞானத்தை நீக்காதோ? கலாதத்துவம் ஏன் என்னில் ஆணவ கேவலத்திலே யிருக்கிற ஆன்மாவைக் குருவானவன் தன்னுடை முன்னே. ருத்திரை பண்ணுகிற சீடனை நித்திரை வேளையிலே அசுறியாயிருக் கிறவனைத் தீண்ட வொண்ணா தென்று தன்னுடைய கையில் தண்டுகொண்டு தட்டி யெழுப்புமாப் போல ஈசுரனும்

பரிக்கிரக சத்தியினாலே தாமே பொதியார இவ்விடத்துச் சத்தியென்று(ற) கரண வசத்தினாலே. பரிக்கிறது சத்தியாகிய அதோ மாயையை என்றறிவது.

மேல் இந்தக் கலாதத்துவத்திலே வித்தியா தத்துவம் தோன்றும் மூலத்திலே கலையும் காலமும் நியதியும் வித்தையும் இராகமும் இந்த அஞ்சு தத்துவமும் மாயையிலே தோன்று மென்று சொல்லியிருக்கிற இவ்விடத்துக் கலையிலே வித்தை தோன்றும் என்றது விநோதம் என்னில், விரையிலே நின்று மரம்; மரத்திலே நின்று கொம்புகள் கொம்புகளிலே நின்று தளிர்கள்; தளிர்களிலே நின்று புட்பங்கள்; புட்பங்களிலே நின்று பழமானவைகள் என்றபடியே அடைவாய் உண்டாயிருக்கையிலும் அந்த முதற் காரணமாயிருக்கிற மரத்தினுடைய பேரினாலே இன்னபழம் என்று சொல்லுமாப் போல மாயா காரியமாகிய கலை முதல் பிருதிவி முடிவாக ஒன்றிலே ஒன்று தோன்றினதேயாகிலும் அபே தோப சாரமாக எல்லாத் தத்துவமும் மூல காரணமாகிய மாயையிலே தோன்றுவதென்று சொல்லப்படுமாகையால் கலா தத்துவத்திலேயே நின்றும் வித்யா தத்துவமானது ஆன்மாக்களுடைய போக நிமித்தமாக வுண்டாய்க் கலை யிலாலே பிரகாசிக்கப்பட்டுப் புத்தியை கன்மாயுடைத்தா யிருக்கிற ஆன்மாவுக்கு விடய தெரிசனத்தினாலே காணமா...............புத்திரத் தத்துவமே காரணமாகாதோ வென்னில் புத்தியும் ஆன்மாவுக்குக் கன்மமுமாயிருக்கை யினாலே குடங்கள் சுவர்கள் போலப் புத்தியும் சடமே உருவாதிகளைப் போலக் காரணத்தை இச்சித்திருக்கு மாகையால் விடய தெரிசனத்திலே தானே காரணமல்ல; ஆகையினாலே பஞ்சேந்திரியங்களுடனே சம்பந்தமா யிருக்கிற விடயங்களை மனத்தினாலே பற்றி நினைத்தும் புத்தியினாலே ஆன்மாவானவன் குதிரையினாலே தேரினாலே சாரதியினாலே வழிபோகிறா னென்கிற நியாயம் போல, கிரகிக்கும். ஆன்ம சிற்சத்தியுங் காரணமல்ல; விடய தெரிசனத்திலே வித்தியா தத்துவமே காரணம்.

சிற்சத்தியே விஷயத்திலே வினபுத்தியை அறியு மென்னில் சிற்சத்தியானது விவேக ரூபம் ஆகையால் சத்தியமாகிய விஷயங்களைப் போக ரூபமாக்கக் கிரகியா தாகையால் போகமுமே யில்லையாம். ஆகையால் மாயையிலே உண்டானத்துக்குப் போக ரூபம் உண்டாக் குகைக்குக் காரணமாகையினாலும் இவைகள் இரண்டி னுடைய கிரியைக்கும் கலப்பில்லை. கலா பந்தத்துக்குப் பிற்பாடு ஆன்மாவிற்கு இரண்டாம் பந்தமானது வித்தையே இவ்விரண்டுக்கும் பொசிப்பவனாகிய ஆன்மாவுக்கு உபாதானங்கள்.

இந்த வித்தியா தத்துவத்திற்குப் பிற்பாடு கலா தத்துவத்திலே நின்றும் இராக தத்துவம் உண்டாகும்படி விடயத்திலே பற்றுதலன்றியிலே யிருக்கிற புருடனுக்குப் போகங் கூடாதாகை ஞானக் கிரியாதிபவனாயிருக்கிற புருடனுக்குப் போகம் உண்டாவதாக விஷயத்தில் இச்சைக் கேதுவான இராகம் உண்டாம். **விஷத் தோடே கூடின அன்னம் போல** ருஷித்தமாயிருக்கிற போகங்களைப் பொசிக்கிறவனுக்குத் தேடுதலன்றியிலே மென்மேலும் இச்சை உண்டாகப் பொசிக்கிறவனுக்கு இந்த இராகமானது உபசாரம் பண்ணும் விடய சவுந்திரியத்தினாலே இச்சை உண்டாம். இராக தத்துவம் வேண்டுவதில்லை எனில் விடய சவுந்தரியத்தி னாலே உண்டாயிருக்கில் இச்சை ஒருகால் பொசித்ததினாலே சாந்தமாம். எப்பொழுதும் போகத்திலே இச்சை உண்டா யிருக்கையினாலே அந்த இச்சைக் கேதுவான இராக தத்துவம் வேணும். இந்தப் போகத்தினுடைய இச்சைக்குக் காலம் நியதி, கலை, வித்தைகளாகிற நான்கு தத்துவங்கள் உண்டா யிருக்கையினாலே இராக தத்துவம் உண்டாக வேண்டும் என்பது கற்பனாகவுரவமே என்னில் காலமானது தன்னுடைய வர்த்தமான முதலாவதான வித்தையே ஆன்மாவினுடைய போகத்தில் ஞானத்திலே காரணம் மேலும் சட் சுவாதிக்கும் பதார்த்தத்துக்கும் அந்தச் சையோகத்திலே உண்டான நிர் விகற்ப ஞானம் அவ்விடத்திலே புத்திப் பிரவிருத்தி யில்லாத படியினாலே வித்தியாசொரூபமென்றறியப்படும்.

அந்த நிருவிகற்ப ஞானத்திலும் புத்தி காரண மென்னில்? அது நிருவிகற்பமல்லாமல் விகற்பத்தோடே கூடினதே. காரியமான வபிமானத்திலும் மனத்தின் காரணமான சங்கற்பத்திலும் புத்தி.........யமான நிச்சயத் திலும் உள்ள ஞானம் புத்தி முதலான தத்துவங்கள் இத்தைக் குறிச்சுச் சடமறிவுக் கேதுக்களா காமலிருக்கையால் அந்த ஞானமும் வித்தியா தத்துவத்தினாலேயுள்ளதே. இந்த வித்தியா தத்துவத்தினாலே யுள்ளதே. இந்த வித்தியா தத்துவத்தினாலே மயக்கப்பட்டிருக்கிற சிற்சத்தியானதே ஆன்மாவுக்கு விடயத்தினுடைய விளங்குவதற்குக் காரணம் ஆகில் இந்த வித்தியா தத்துவத்துக்கு வேறான புத்தி முதலான தத்துவங்கள் விடய தரிசனத்துக்கு உபகாயமெல்லவோ வென்னில்? பதார்த்த தரிசனுக்குச் சட்சு காரணமா இருக்கை யினாலே சூரியம் பிரகாசாதிகள் பதார்த்த தரிசனங்களானாற் போல் புத்தி முதலானவைகளும் விளங்கப் பண்ணுமவை களே சுகதுக்கப் பிரத்தியட்ச ரூபமான ஆன்மாவினுடைய சிற்சத்திக்கு வித்தையே காரணம்.

கலையானது அஞ்ஞானத்தை நீக்கி ஞானப் பிரகாசத்தைப் பண்ணுகையாலும் வித்தையாதை அந்த ஞான விருத்திகளினாலே கேவல அவத்யை நீக்கிச் சகலாவத்தையை நோக்கின. ஆன்மாவை வியாபாரத்தைப் பண்ணுவிக்கும். நியதித தத்துவமானது கன்ம பலத்தினாலே ஆன்மாவை நியமத்தைப் பண்ணும். கன்மமும் ஆன்மாவினுடைய சோம்புதலை நீக்கி உத்தியோகத்தைப் பண்ணுவிக்கும். அப்படியே நியதியும் காலமும் கலையும் ஆன்மாவுக்குப் போக்கியத்திலே உபகாரத்தைப் பண்ணும். கலையினாலும் வித்தையினாலும் கலங்கினதாயிருக்கிற ஆன்மாவுக்குச் சடுதியிலே பிருவிருத்தியின் பொருட்டு வித்தையினுடைய உற்பத்திக்குப் பின்பாகக் கலையிலே இராகம் உண்டாம். இச்சையில்லாதவன் புசிக்க ஒருவிதத்திலும் காணாதிருக் கையால் புசிக்கிறவர்களுக்கெல்லாம் இச்சை உண்டாக்கு வதற்கு ஏதுவான இராக தத்துவம் நிச்சயமாக அங்கீகரிக்கப் படுவதே. புத்தி தர்மமாயிருக்கிற அவைராக்கிய மான ராகமென்றே அமையும்.

ஒன்றினாலே காரியமாயிருக்கையினாலே பின்னையு மொன்றைக் கற்பனா கவுரமாக இச்சிக்க வேண்டுவதேன் என்னில்? அந்தப் புத்திகரமாயிருக்கிற ஞானம் யாதொரு ஞானம் சொல்லப்படுது அது இந்த இராக தத்துவத்தினாலே இச்சிதனான புருடனிடத்திலே பொருந்துவதன்றி வாஞ்சித னாயிருக்கிறவனைப் பொருந்தாது ஆகையால் இந்த ராக தத்துவத்தினாலும் வித்தியா தத்துவத்தினாலும் கலங்கி இருக்கிற அவை ராக்கிய பேதமாயிருக்கும்.

இவ்வாறு ராக தத்துவத்தோடே கூடாத ஞானத்துக்குச் சிற்சத்தியானது விடயங்களை அறியுகிற தன்றியிலே சாமானிய மாயிருக்குமந்தக் காரணங்கள் மூன்று குணத்தி னுடைய சொரூபமாயிருக்கையினாலே இராசத குணத் தோடே கூடியிருக்கிறதே இச்சையைப் பண்ணாதோ ? இராச தத்துவம் ஏன் என்னில் ? அஃதப்படியல்ல அந்தக் காரணங்களா னவைகள் சர்வசன சாதாரணமாகையால் இவனுக்கு இராக முண்டு, இவனுக்கு இராகமில்லை என்கிற பேதம் இல்லையாம். ஆகையால் இராக தத்துவம் தனியே அங்கீகரிக்க வேணும்

புத்தியிலே யிருக்கிற இராகமன்றியிலே இராக திட்டமாகவே ஒரு ராகத்தை அங்கீகரிக்ககில் கலை வித்தைகள் சந்ததம் ஆன்மாவினிடத்திலே ஞானக் கிரியைகள் விளக்குமாப் போல இராகமும் சந்ததம் இச்சை உண்டாக்க வேணும் அவ்வாறு இச்சையுண்டாக்கில் போகங்களைப் பொசித்திருக்கிறவனுக்கு விடய விகாரமும் சந்ததமும் இச்சையுண்டாக்க வேணும்.வாராதென்னில் அந்த ராகம் வென்றும் பிரத்தியான்மாவென்றும் இருவகைத்தாம்.

(பிரத்தியான்மா) பிறதியான்மா விடுக்கிற இராகம் விடயத்திலே யாருக்கும் வாயிருக்கிறது. கிருக, (கிராக) ருட்டத்திலே யிருக்கும் விடையத்தியாகத்திலே பிறத்தி யாத்மா வாயிருக்கிற விராகம்போம். அதுபோகவே புத்தி தன்ம மாயிருக்கிற அ வை ராக்கியமும் போம்.

இது போன்கயினால் வாதனான்மாவாய்க் கிருக நிட்ட மாயிருக்கிற விராகமிருந்தும் புத்தியிலே யிருக்கிற விராக கரண மில்லாதகையால் இராகப் பிரவிருத்தி கூடாது. ஆகையாற் புருஷன் அஃதெப்படிப் போலவென்னில் சட்சுவா யிருக்கிறது கிரகிக்கப்படுவதாயிருக்கில் கூடபடாதி யில்லா மலிருக்கிற பொழுது ஒன்றையும் காணுந்தொழில் இல்லாமலிருக்கிற போல பவுத்தமாயிருக்கிற விராக மில்லாத பொழுது. வாத்னாத்மாவாயிருக்கிற விராகமும் பிரவிருத்தக் கமல விரத்தனாவனுக்கு விடைய சந்திதானங்களுள் மாயிருக்கையிலும் கண்ணல்லாத விடத்து உருவமான பொருட்களிருந்தும் கிரகிக்கப்படாதது போல அராக னான வனுக்கு விடையத்திலே பற்றுதலுண்டாகாது.

வாதனான்மாவான விராகம் புருடனிடத்திலே யிருக்கும் வாதனான்மாவானது வாதனான்மாவான விராகமானது கிரகான்மாவிடத்திலே யிருக்குமாகில் அந்த ஆன்மா விராக னென்ப தெப்படி யாவனென்னில்? சேசுர (ஈசுர) சாங்கியாதி சாத்திரத்திலே சொல்லப்பட்ட யோகமாதியினாலே யாகுதல் நிருவாண தீட்சையினாலே யாகுதல் பஞ்சாட்சர செபத்தி னாலே யாகுதல் கன்மத்தை நசிப்பிக்கையினாலேதான் சற்று மன்றியிலே வாதனாத்மாவாயிருக்கிற விராகமும் போம் ஆகையினாலே வீதராகமுண்டு. இப்படி வீதராக முண்டா மாகில், முத்தியிலே இச்சை எப்படிக் கூடுமென்னில் இந்த விராகந் திரும்புகிற ஒரு சமயத்திலே சுத்தாத்துவ சம்பந்த முண்டாம் அந்தச் சுத்த காணமானது அஞ்ஞானத்தைச் சுத்தமாக நீக்கிச் சிவம் பிராப்தியைப் பண்ணும் கால நியதி ராக தத்துவங்கள் பிரதி புருஷ நியதம்.

இவைகள் பேதக்கிரியைகள் ஆகையினாலே ஆன்மாவுக்குட் போகத்திலே யோகமதியாகக் கூடா தென்னில் தீபா..............கட் பொருளாக தெண்ணையினுடையவும் அக்கினியினுடையவும் திரியினுடையவும் கூட்டரவினாலே விளக்கமான துண்டாய்ப் பிரகாச ரூபமாயிருக்கிற காரியத்தை யொண்ணுவது (பண்ணுவது) போல இந்த மூன்று தத்துவங் களுடைய கூட்டத்திலே கால நியதி உதவியாகப் புருடத் தத்துவமென்பதுண்டாம்

ஆன்மாவுக்குக் கஞ்சுகம் போலப் பந்தமாய யோக ரூபமான காரியத்திலே பிரவிருத்தியைப் பண்ணுவிக்கும். இவ்விடத்தின் மூலத்திலே புருட தத்துவம் சொல்லாம லிருக்கவும் தத்துவங்களுடைய உற்பத்தியினடைவும் சொல்லுகிற விடத்திலே சொல்ல வேண்டுகையாலே மேலே சொல்லி யிருக்கிற யவகையாலுறு பயன்கள் துகரவரு காலமது புருட தத்துவமென்றறைந்திடுவர். (சிவப் பிரகாசம்41) என்ற விருத்தத்தை யவததரத்துக்கு வேண்டின படியாலே ஆகரிஷித்துப் புருட தத்துவ நிரூபணம் பண்ணப் பட்டது. கால நியதி கலை வித்தை ராகம் என்னும் தத்துவங் களையும் கஞ்சுகமாகவும் பிரகிருதி யிலவித்தை யென்னுந் தாமதாதி மூன்று குணத்தினாலே ஆன்மா மேடைப்பட்டுப் பிரகிருதியிலே உண்டாவதான போகத்தைப் பொசிக்க உத்தியோகனான பொழுது இவைமாற்றிற் கூட்டத்திலே புருஷ தத்துவ மலமென்று அவையவமில்லாததாக வொன்று ஆன்மாவை ஆவரிக்கையால் பசுத்துவத்தினாலே ஆவரிக்கப் பட்டுப் பசுவென்று பேரானது போல புருட தத்துவத்தி னுடைய மூடுதலினாலே ஆன்மாவுக்கு புருடனென்று பேராம். புருடனென்னும் நாமம் இந்தச் சகலனுக் கொழியப் பிரகிருதியால் அவித்தை முதலான யோகமில்லாதபடியாலே பிரளயா கலர்க்கும் விஞ்ஞான கலர்க்கும் புருஷனென்னும் நாமமில்லை.

அவித்தை முதலானவைகள் கூடாதபொழுது பிரகிருதி யிலுண்டான போகங்களைப் பொசிக்க மாட்டானாகில் அவித்தை முதலாயிருக்கிற மூன்று குணமுமே புருஷ தத்துவத்துக்குக் காரணமென்னில்; கலாதி தத்துவமில்லாத பொழுது ஆன்மாவுக்கு துறுத்துவமில்லையாகையால் பொசிறவனாகை எப்படிக் கூடப்போவது ? ஆகையால் கலாதி பஞ்ச தத்துவங்களோடு கூடினவனுமாய்ப் பிரகிருதி அவித்தை முதலானவைகளினாலே மேலிடப்பட்டவனு மான பொழுது புருஷனென்று பெயராம்.

தீட்சையிலே புருஷ தத்துவத்திலே புவனங்களிருக்கும் என்று முதலே சொல்லப்பட்டுது. அவையவமன்றியிலே மலத்துவத்தினாலே ஆன்மாவை ஆவதரித்துக் கொண்டிருக் கிரி புருஷதத்துவத்திலே புவனங்கள் எவ்வாறிருக்கு மென்னில்? யாதொரு விடத்திலே லட்சண விருத்தியினாலே இருக்குமிடம் சொல்லப்பட்டது அவ்விடத்திலே சம்பந்த முண்டானதும் இல்லாததும் அறிகிறது இலட்சணை என்கின்ற நியாயத்தினாலே; கங்கயிலே ஊர் என்று சொல்லுகிற விடத்திலே சலத்தின்மேல் ஊர் இல்லாதாகை யால் அந்தக் கங்கையினுடைய சம்பந்தமாயிருக்கிற கரையிலே ஊர் என்கின்ற நியாயம் போலப் புருஷ தத்துவத்திலே புவனங்களிருக்குமென்றது அந்தப் புருஷ னுடைய சம்பந்தமாயிருக்கிற பிரகிருதியிலேயிருக்கும்; கலாதி பஞ்ச தத்துவங்களுக்கும் தனித்தனியே தீட்சையிலே சுத்தி சொல்லப்பட்டது. அதனுடைய சுத்தியானது பேதமாக எப்படி சொல்லப்படுமென்ன ! இவ்விடத்துப் பிரகிருதி இராக தத்துவங்களினுடைய நடுவே புருஷ தத்துவத்துக்குச் சுத்தி சொன்னதில்லையாகையால் பிரகிருதி தத்தவத்திலே நின்றும் ஸ்ரீகண்ட புவன காரணமகமான காலா மத்தகத்தை தத்துவ விசித்தியின் பொருட்டு யாதொரு புருஷனானவன் வுடையுகிறான் அப்பொழுது கலா தத்துவ சுத்தியோடே புருஷ தத்துவமுஞ் சுத்தியாம். அந்தப் புருஷ தத்துவத்துக்குக் கீழாகச் சொல்லப்பட்ட பிரகிருதி புவனம் தீட்சையிலே சுத்தியாம். யாதொரு விந்தப் புருஷ தத்துவ மலமானது பிரகிருதியிலே உண்டாயிருக்கிறவ வித்தையினுடைய சொரூபமென்று முன்னே சொல்லப்பட்டது. அது காலாக்கினி ருத்ர புவன முதல் எல்லாத் தானங்களிலு மிருக்கையினாலே நிவிர்த்திகலா சாதனையிலே காலாக்கினி ருத்திர புவன சுத்தி பண்ணுகிற பொழுதே இந்தப் புருஷ தத்துவத்துக் கென்ன வாராதென்ன அந்தக் காலாக்கினி ருத்ர புவன முதலாகப் பிரகிருதி மட்டடங்கப் புவன சோதனைகள் தோறும் தூலமாயிருக்கிற புருஷ தத்துவ மலமானது சோதிக்கப்பட்டு வர்த பிறகிருதி சுத்திக்குப் பின்பு கலாதி தத்துவங்களுடைய சுத்தியிலே நன்றாகச் சுத்தியாம். ஆகையி

னாலும் சதாப் பிரகிருதியினாலே தழுவப்பட்டிருக்கையி னாலும் பிரகிருதிக்கு மேலாகப் புருஷ தத்துவத்தை எண்ணப்பட்டது.

**உருத்திரரால் கலையனில் பிரகிருதி குணங்கள் உளவாகும்** (எ-து) உருத்திர தேவராலே கலையிலே நின்றும் மூன்று குணத்தினுடைய உருவமான பிரகிருதியுண்டாம். அந்தப்பிரகிருதியிலே புத்தி தத்துவமும் முக்குணங்களும் உண்டாம்.

இவ்விடத்து மூலறிலே சொல்லாதிருக்கையிலும் மேலே சொல்லுகையினாலும் சிருட்டிக் கிரமம் அடைவே சொல்ல வேண்டியன படியினாலும் சொல்லப்பட்டது.

**ஆங்காரம் புத்தியினில் உதிக்கும்** (எ-து) புத்தியிலே ஆங்காரமானது தோன்றும்.

**தெரித்த.................விரிந்தே** (எ-து) தைசத வாங்காரமென்றும் வைகரியாங் காரமென்றும் பூதாதியாங்காரமென்றும் (இது) மூன்று விதமாகப் பிரியும். இதற்குக் காரியத்தினாலே காரணத்துக்குப் பேர் வந்தது. மனத்துக்கும் ஞானேந்திரியத்துக்கும் காரணமாகையினாலே தைசத வாங்காரமென்றது. வாக்காதி கன்ம விந்திரியங்கள் ஐந்துக்கும் காரணமாகையால் வைகரி யாங்காரமென்றது. பூதங்கள் அஞ்சுக்கும் காரணமாகிய பஞ்ச தன்மாத்திரைக்குக் காரணமாகையால் பூதாதி யாங்காரமென்றது. சாத்துவித குணத்தைப் பொருந்தினதை சத வாங்காரத்திலே விரிவாக மனமும் ஞானேந்திரியமான சோத்திரம் துவக்கு சட்சு ஆக்கிராணம் அஞ்சும் தோன்று மென்றறிக என்றிதன் பொருள்.

மன்னியகன் மேந்திரியம் ஆனஇரா சதம்சேர்
வாக்காதி வைகாரி மருவிவரும் சத்தம்
தன்னைமுதல் ஆகியதா மதமிகுமாத் திரையின்
தரும்இதனில் வான்அநிலம் அனல்புனல்மண் சத்தம்
முன்னதனில் வெளியாதி ஒன்றுஒன்று ஆகும்
முறையில்உலும் இருமைஅயன் முடிவாம் முன்னே
உன்னுசதா சிவராதி அதிபதிகள் ஒடுக்கம்
உதித்தஅடை எனஉரைப்பர் உணர்ந்து ளோரே. (27)

**மன்னிய கன்மேந்திரியம் ஆன இராசதம் சேர் வாக்கு ஆதி வைகாரி மருவி வரும்:-** இராசத குணத்தோடே கூடியிருக்கிற வைகரியங்களத்திலே வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் ஐந்தும் உண்டாம்;

**சத்தம் தன்னை முதலாகிய தாமத மிகு மாத்திரை பின் தரும்:-** தாமத குணத்தோடே கூடியிருக்கிற பூதாதி யாங்காரத்திலே சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் காரண பஞ்சதன் மாத்திரைகள் உண்டாம்;

**இதனில் வான் அனிலம் அனல் புனல் மண் சத்தம் முன்னதனில் வெளி ஆதி ஒன்று ஒன்று ஆக முறையில் உறும்:-** இந்தப் பஞ்சதன் மாத்திரைகளிலே பூதங்கள் தோன்றும். தன் மாத்திரையென்றது பூத உற்பத்திக்குக் காரணம் (ஆதல்) ஆழிந்து வேறு வியாபாரமில்லை என்றது.

இதிலே முதற்சொன்ன உற்பூத சத்ததன் மாத்திரையிலே ஆகாயந் தோன்றி மகாத் தொனி சத்தத்தைக் குணமாயுடைத் தாய்க் காணப்படாத ரூபமாய் வாயுவாதி நாலு பூதங்களுக்கும் அவகாசத்தைக் கொடுக்கிறதுமாயிருக்கும்.

இவை அனுற்பூத சத்தம் உற்பூத பரிச ரூபமாயிருக்கிற பரிசதன் மாத்திரையிலே வாயுத் தோன்றிச் சகசக சத்தத்தையும் வெப்பும் குளிருமல்லாத பரிசத்தையும் உடைத்தாய் ஆகாய முள்ளளவுஞ் சரிப்பதுமாய்ப் பிரதி புருட தேகங்களில் பத்து வாயுக்களுக்கும் காரணமாயிருக்கும். இதனுடைய துவக்கிந் திரியத்தினாலே கிரகிக்கப்படும்.

அனுற்பூத சத்த பரிச உற்பூத ரூபமாயிருக்கிற உருவதன் மாத்திரையிலே தேயுந் தோன்றித் தக தக சத்தத்தையும் வெப்புப் பரிச குணத்தையும் உருவ குணத்தையும் தாக பாசக (பாக) சத்தியையும் உடைத்தாய் இருக்கும். இதனுடைய குணமாகிய உருவம் சட்சு இந்திரியத்தினாலே கிரகிக்கப் படுவதாயிருக்கும்.

அனுற்பூத சத்த பரிச ரூப உற்பூத இரதமாயிருக்கிற இரசதன் மாத்திரையிலே அப்புத் தோன்றிச் சலசல சத்தத்தையும் சீதப்பரிசத்தையும் சுவேத ரூபத்தையும் இரச குணத்தையும் உடைத்தாய்த் தேகங்களில் இரத்தம் முதலான தாதுக்களுக்குக் காரணமாயிருக்கும். இதனுடைய குண்மாகிய இரதம் சிங்ஙவை யிந்திரியைத்தினாலே கிரகிக்கப்படுமதாயிருக்கும்.

அனுற்பூத சத்த பரிச ரூபரச உற்பூத கந்த சொரூபமா யிருக்கிற கந்ததன் மாத்திரையிலே பிருதிவி தோன்றிக் கடகட சத்தத்தையும் வெப்பு குளிர் இல்லாத பரிசத்தையும் இரதத்தையும் கந்த குணத்தையும் உடைத்தாய்த் தாரகமாய்த் தேகத்திலே எலும்பு நரம்பு தோல் மயிர் தசை முதலானவை களுக்குக் காரணமுமாயிருக்கும். இதனுடைய குணமான கந்தம் ஆக்கிரான விந்திரியத்தினாலே கிரகிக்கப்படுவதா யிருக்கும்.

இவ்வாறு பஞ்ச பூதங்களும் தோன்றும். சத்தம் ஆகாயத்துக்கே குணம்; நின்ற நாலு பூதங்களுக்குமல்ல; வாயுவாதிகளுக்கும் பரிசம் முதலாக ஒவ்வொன்றே குணம் என்று வைசேடிகள் சொல்லுகிறது பிரத்தியட்சமாகப் பிரிதிவி முதலானவையிலே சத்தத்தைக் காண்கையினாலும், இவ்வாறாக ஆகமத்திலே சொல்லியிருக்கையினாலும், பிரத்தியட்சவாதிக கலாதியா........................இவ்வாறு பஞ்சதன் மாத்திரையில் பஞ்சபூதங்களும் தோன்றிற்றென்ன வேண்டுவதில்லை;

ஆகாயத்திலே வாயுவும், வாயுவிலே அக்கினியும், அக்கினியிலே அப்புவும், அப்புவிலே பிருதிவியும் தோன்றிற் றென்று சொல்ல வேணும்; வாயு வாதிகளில் சத்த முதலான குணங்களிருக்கையினாலே, காரண குணமே காரியத்திலே உண்டாக வேணும் நியாயத்தினாலே என்னில் ?

ஆகாயத்திலே அஞ்சுகுணம் உண்டென்று சொல்ல வேண்டிவரும்; அஃதில்லையாகையால், ஆகாயத்திலே வாயுவும், வாயுவிலே அக்கினியும், அக்கினியிலே அப்புவும், அப்புவிலே பிருதிவியும் தோன்றுமென்கிறது கூடாது. ஆகையால், அப்பஞ்ச தன்மாத்திரைகளிலே பஞ்சபூதங் களுக்கும் காரணம்.

**இருமை அயன் முடிவா முன்னே உன்னு சதாசிவர் ஆதி அதிபதிகள் ஒடுக்கம் உதித்த அடைவென உரைப்பர் உணர்ந்து ளோரே:-** ஆகாசத்துக்குச் சதாசிவனும், அப்புவுக்கு விட்டுணவும், பிருதிவிக்குப் பிரம்மாவும் அதிதேவதைக ளென்று வேதாகமங்களை உணர்ந்த பெரியோர்கள் உரைப்பர் என்றிதன் பொருள்.

மேல் கன்ம மலத்தினது இலக்கணமுரைத்தல்.

## வினை அல்லது கன்மத்தின் இயல்பு

நண்ணியிடும் உருவதனுக்கு ஏது ஆகி
நானா போகங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரும் ஆதலால் அனாதி ஆகிப்
பலவாகி அணுக்கள்தொறும் படர்வது ஆகி
எண்ணிவரும் மனவாச கன்மத்தால் இயற்றும்
இயல்பினதாய் மதிகதமாய் இருபயனாம் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலும் ஆறே. (28)

**நண்ணியிடும் உருவதனுக்கு ஏது ஆகி**:- ஆன்மாக்களுக்குத் தேகாதி பொருந்தவதற் கேது வாகி;

**நானா போகங்கள் ஆய்**:- விசித்திரமான போகங்களுக்கு ஏதுவாய்;

**நாசம் உற்பத்தி பண்ணிவரும்** :- ஆன்மாக்களுக்குத் தேகோற்பத்தியையும் நாசத்தையும் பண்ணும் ஈசுர சத்திக்குத் துணையுமாய்ப் பொருந்தும்;

**ஆதலால் அனாதி ஆகி**:- ஆகையினாலே பிரவாகா னாதியாய்;

**பல ஆகி**:- வெகுவிதமாய்;

**அணுக்கள் தொறும் படர்வது ஆகி**:- பிரளயாகலர் சகலராகிய இருவகை ஆன்மாக்களிடத்திலும் உள்ளதாய்;

**இருபயன் ஆம் பாவ புண்ணியமாய்**:- சுக துக்கமாகிய பலத்தை உடைத்தாகிய புண்ணிய பாவ சொரூபமாய்;

**புலர்காலை மாயை மேவிப் பொருந்துமிது கன்ம மலம் புகலும் ஆறே**:- பிரளய காலத்திலே அசுத்த மாயையையும் பொருந்தி வாதனா சொரூபமாயிருப்பதாய், இவ்வாறு சொல்லப்படும் கன்ம இலக்கணம் மனவாக்குக் காய வியாபாரங்களினாலே உண்டாவதாகையால் கன்மம் என்றும், வாதனான்மாவாய்ச். சூக்குமமாய் மாயையிலே நிற்கையால் அதிட்டமென்றும் இதற்குப் பேராம் என்றிதன் பொருள்.

பதிப்பாசிரியர் குறிப்பு: மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்(திருமந்திரம்-2612)

கன்மநெறி திரிவிதம்நற் சாதிஆயும் போகக்
கடனதுஎன வரும்;மூன்றும் உயிர்ஒன்றில் கலத்தல்
தொன்மையது;ஊழ் அல்லதுஉணவு ஆகா தானும்
தொடங்கும்அடைவின் அடையாதே தோன்றும் மாறித்
தன்மைதரு தெய்வீகம்முன் பௌதிகம் ஆன்மிகமாம்
தகையிலுறும் அசேதன சேதனத்தாலும் சாரும்;
நன்மையொடு தீமைதரு சேதனனுக்கு இவண்ஊண்
நாடில்அதன் ஊழ்வினையாம் நணுகுந் தானே. (29)

**கன்ம நெறி திரி விதம். நல் சாதி ஆயும் போகக் கடனது என வரும்:**- *கன்மத்தினுடைய மார்க்கமானது மூன்று விதமாம்; அவையாவன, நல்ல சாதியும் தீர்க்காயுசும் சுக போகமும் புண்ணிய பலத்தினால் உண்டாம்; ஈனசாதியும் அற்பாயுசும் துக்கபோகமும் பாவ பலத்தினால் உண்டாம்; இவ்வாறு முறைமையாகப் பொருந்தும்.*

**மூன்றும் உயிர் ஒன்றில் கலத்தல்:**- *இந்த மூன்று வகையும் ஆன்மாவினிடத்திலே கலப்பாக வரும்; கலப்பினுடைய பலமாவது நல்ல சாதியுடையனுக்குத் தீர்க்காயுசும் சுகபோகமும் வருமென்று நியமமில்லை; ஈன சாதியான வனுக்கு அற்பாயுசும் துக்க போகமும் வருமென்று நியம மில்லை; ஒருவனிடத்திலே கன்ம பரிபாக வசத்தினாலே நல்லதும் பொல்லாததும் கலந்து வரும்.*

**தொன்மையது ஊழ் அல்லது உணவு ஆகாதானும் தொடங்கு அடைவின் அடையாதே தோன்றும் மாறி:**- *இப்பொழுது புண்ணியம் பண்ணுகிறவன் துக்க போகத்தை அனுபவிக்கவும், பாவத்தைப் பண்ணுகிறவன் சுகபோகத்தை அனுபவிக்கவும் மாறுபடக் காணப்படும் தென்னையோ வென்னில்? பூர்வ சென்மங்களிலே பண்ணின கன்ம பரிபா கங்களினாலே பிராரத்த தேகத்திலே வந்தடைந்த கன்ம பலமே பொசிப்பாவதன்றி இகத்திலே பண்ணின கன்ம பலம் இகத்திலே வாராது;*

அஃது ஏன் என்னில் ? கன்மமானது முதற் செய்தது முதலும், பின்பு செய்தது பின்புமாகப் பலந்தராது; அந்தந்தக் கன்மத்துக்கு இன்ன கன்மத்துக்குப் பலம் இன்னதென்று, இத்தனை காலத்துக்குமேல், இன்ன தேசத்திலே, இன்னதாக இத்தனை பொசிக்க வென்று நிர்ணயமுண்டாகையினாலே, செய்த அடைவிலே வாராமல் அந்தந்தக் காலங்களிலே வந்து கூடும். அஃது என் போல வென்னில் ? "கமுகை முன்னே வைத்துப் பின்பு வெற்றிலைக்கொடி நட்டவனுக்கு முந்த வெற்றிலைக் கொடி பலிக்குமாப் போலவும்," "வாழையை முதல் வைத்துப் பின்பு கீரையைத் தெளித்தவனுக்கு முந்தக் கீரை பலிக்குமாப் போலவும்," கன்ம பலமானது வரும்.

ஆகையால், பூர்வ சென்மங்களிற் கன்மமே இந்தச் சென்மத்திற் பலவத்தாம். இஃதன்றி அதிகமாகப் பண்ணின புண்ணிய பாவங்களினாலே இத்தலத்திலேதானே பலத்தை அடையும் என்கிற நியாயத்தினாலே இந்தச் சென்மத்திலே பண்ணின கன்மம் இந்தச் சென்மத்திலேதானே பலிக்கு மென்பது முண்டு.

**தன்மை தரு தெய்விகம் முன் பௌதிகம் ஆன்மிகமாம் தகையின் உறும் அசேதன சேதனத்தாலும் சாரும்:-** இந்தப் புசிக்க வரும் இயல்பானது ஆதிதெய்விகமென்றும், ஆதி பௌதிகமென்றும், ஆதியான்மிகமென்றும் மூன்று விதத்தினாலே ஆன்மாவுக்குச் சுக துக்க போகமான துண்டா வதுதான் சடவத்துக்களினாலும், சேதன வத்துக்களினாலும் பொருந்தும்.

**நன்மையொடு தீமைதரும் அசேதனனுக்கு இவண் ஊண் நாடில் அதன் ஊழ் வினையாய் நணுகும் தானே:-** புண்ணிய பாவங்களைப் புசிக்கும் ஞான சொரூபனாகிய ஆன்மாவுக்கிவ்விடத்திலே சுகதுக்க யோகமானது விசாரிக்கில் அந்த ஆன்மா முன்செய்த புண்ணிய பாவத் தொழிலினுடைய பலமானது பொருந்தும்.

**ஆதியான்மிகமானது சரீரமென்றும், மானதமென்றும் இருவகைத்தாம்; இதிற் சரீரமானது**:- குன்மம், வாதம், அதிசாரம், சுரம், சூலை இவை முதலானவைகளினாலும் மனுடராலே, மிருகங்களினாலே, பசாசுகளினாலே, பசுக்களினாலே, பட்சிகளினாலே, சோரராலே, இராக்கதராலேயும் வரும் துக்கம்.

**மானதமாவது**:- அசூயை, பொறாமை, மாச்சரியம் இவைகளினால் உண்டானதுக்கம்.

**ஆதி தெய்விகமாவன**:- கர்ப்பம், செனனம், நரை, அஞ்ஞானம், மரணம், நரகம் இவைகளினால் வரும் துக்கம் என்றிதன் பொருள்.

மேலைக்கு வருவினைஏது என்னில் அங்கண்
விருப்புவெறுப்பு எனஅறி; அவ்விளைவும் எல்லாம்
மூலத்த வினைப்பயில்வாம் என்னின், நாம்என்
முற்றியதன் பயன்உனக்கு முளைக்கம் என்பர்;
ஞாலத்து வினைகள்இரு திறனாகும் புந்தி
நண்ணாதவினை நணுகும் வினையெனஒன் றிரண்டாம்
ஏலத்தான் இதம் அகித மாம்இதனால் வழுவாது
எய்திடும் புண்ணியபா வங்கள் என்றே. (30)

**வேலைக்கு வரு வினை ஏது என்னில் அங்கண் விருப்பு வெறுப்பு என அறிக:-** பூர்வத்திலே செய்த கன்மத்தினுடைய பலத்தை இப்பொழுது அனுபவித்துப் போகையால் இனிமேல் கன்மம் ஏறுகிறதற்கு ஏது ஏதென்னில்? பொசிக்கும் சுக துக்கங்கள் அவன், அவள், அது முன்னிலை யாகையால் இதம் வந்தவிடத்தில் அவர்களிடத்தில் சந்தோஷத்தை உடைத்தாயும், அகிதம் வந்தவிடத்தில் அவர்களிடத்தில் கோபத்தையுடைத்தாயும் அதற்கேற்ற இதாவிகிதங்களை மனவாக்குக் காயங்களினாலே அவர்களுக்குச் செய்கையினாலே என்றறிவாயாக;

**அவ்விளைவு மெல்லாம் மூலத்த வினைப்பயில்வாம் என்னின் நாமென் முற்றிய தன் பயனுக்கி முளைக்கும் என்பர்:-** இப்படி அனாதியாகத் தொன்று தொட்டு வரும் வினை விளைவும் மூலமலமாகிய ஆணவ மலத்தினாலே அனாதியாய் வருங் கன்மத்தினாலே புத்தியானது பிர விருத்தியைப் பண்ணி வருகையினாலே ஆன்மாவின் இச்சையல்ல அப்புண்ணிய பாவங்கள் ஆன்மாவுக்கே தென்னில்? அந்தப் புத்தியை நீயுடையனாகிப் பிரவிருத்தி நிவர்த்தியைப் பண்ணத்தக்கவனாகையினாலே நிவர்த்தி பண்ணத்தக்கதை, நிவர்த்தி பண்ணாமல் அதன் வழித்தாகச் சொ(செ)ல்லுகையினாலே பரிப்பாகனானவன் பரியைச் செலுத்துமிடமறிந்து செலுத்தாமல் அதன் வழியே விட்டால் செல்லாத விடத்திலே போய் விழுந்து பரிப்பாகனுக்கு ஆனி வருவதுபோலக் கரண வழியே செல்லுகையால், அந்தப்

புண்ணிய பாவங்களானவை பலாங்குரத்தைப் பண்ணு மென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

**ஞாலத்து வினைகள் இருதிறம் ஆகும் புந்தி நண்ணாத வினை நணுகும் வினை என இரண்டு ஆம் ஏலத்தான் இதம் அகிதம் ஆம் இதனால் வழுவாது எய்தியிடும் புண்ணிய பாவங்கள் என்றே:-** பூமியினிடத்திலே புண்ணிய பாவங்களானவை புத்தி பூர்வ மென்றும், அபுத்திபூர்வமென்றும் இருவகைத்தாம்; அவை யாவன, மனவாக்குக் காயங்களினாலே பாருக்குப் பண்ணின உபகாரம் புண்ணியமாகவும் அகிதம் பாவமாகவும் தப்பாமல் கூடும். அதனால், பாவ மிகுதியினாலே உலகத்திற் சென்ம முமாய்ச் சுக துக்க அனுபோகம் உண்டாம். அபுத்தி பூர்வ பாவத்துக்கு அற்பப் பிராச்சித்தம் புத்தி பூர்வமான மாபாதகம் நீங்கலான பாவத்துக்குக் காயப் பிராச்சித்தம், மாபாதகத்துக்கு மரணாந்த பிராச்சித்தம், அபுத்தி பூர்வ புண்யத்துக்கு மிகுந்த பலம் என்றதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

**1. ஞாலத்து வினைகள் இரு திறனாகும்**

அறியாம லேனும் அறிந்தேனும் செய்து
செறிகின்ற தீவினைகள் எல்லாம் - நெறிநின்று
நன்முகில்சேர் காளத்தி நாதன் அடிபணிந்து
பொன் முகரி ஆடுதலும் போம்.

*(திருமுறை11-கயிலைபாதி காலத்திப் பாதி-74)*

**2. நாம் என்பது முற்றியதால் ஆகாமியம் வருதல்**

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நான்என தெனுமாயம்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனை

*(திருவாசகம்-அற்புதப்-3)*

உற்றதொழில் நினைவுரையின் இருவினையும் உளவாம்
ஒன்றொன்றால் அழியாது;ஊண் ஒழியாது உன்னில்
மற்றவற்றின் ஒருவினைக்கோர் வினையால் வீடு
வைதிகசை வம்பகரும் மரபில் ஆற்றப்
பற்றியது கழியும்இது விலையால் ஏற்கும்
பான்மையுமாம் பண்ணாது பலிக்கும் முன்னம்
சொற்றருநூல் வழியின்வரின் மிகுதி கோரும்
சோராதுஅங்கு அதுமேலைத் தொடர்ச்சி யாமே. (31)

**உற்ற தொழில் நினைவு உரையில் இரு வினையும் உளதாம்**:- காய வியாபாரத்தினாலும், வசனத்தினாலும், மன நினைவினாலும் புண்ணிய பாவங்கள் என்னும் இரண்டு கன்மங்களுண்டாம்.

**ஒன்று ஒன்றால் அழியாது ஊண் ஒழியாது**:- புண்ணியத்தினால் பாவமும் பாவத்தினால் புண்ணியமும் அழிவதல்ல; புண்ணிய பலமும் பாவபலமும் வெவ்வேறே; புசித்தல்லது தொலைவதல்ல;

**உன்னில்**:- பாவத்தைப் பண்ணினவன் பச்சாதாபத்தோடு கூடியிருந்த பாவமும் நீங்கும் வகையேதென்று விசாரிக்கில்;

**மற்றவற்றின் ஒருவினைக்கு ஓர் வினையால் வீடு வைதிக சைவம் பகரும் மரபில் சுற்றப் பற்றியது கழியும்**:- அந்தப் பாவங்களிலே இன்ன கன்மத்திற்கு இன்ன பிராச்சித்த மென்று வைதிக சைவ சாத்திரத்திலே சொன்னபடி செய்யப் பண்ணின பாவமானது நீங்கும்;

**இது விலையால் ஏற்கும் பான்மையும் ஆம்**:- சொன்ன பிராச்சித்தத்திலே காயக் கிலேசத்துக்கு அசத்தனாவன் பரருக்குத் திரவியத்தைக் கொடுத்துப் பண்ணுவிக்கிலும் ஆம்;

**பண்ணாது பலிக்கும்**:- இவ்வாறு பிராச்சித்தம் பண்ணாதிருக்கிற பாவம் மேன்மேலும் வளர்ந்து கால பரிபாகத்திலே பலத்தைக் கொடுப்பதாம்;

**முன் சொற்றரு நூல் வழியின் வரின் மிகுதி சோரும் சோராதங்கது மேலைத் தொடர்ச்சி ஆமே:-** முன்சொன்ன வைதிக சாத்திரம் சொன்ன பிரகாரத்திலே தங்களுடைய கன்மானுட்டானங்களைப் பண்ணுகிற பேர்களுக்குப் பிறமாத வசத்தினாலே பாவமுண்டனால் இவர்களுடைய அனுட்டான வசத்திலே அந்தப் பாவம் வளராமல் கெடுதலும் செய்யாமல் காலாந்தரத்திலே அதற்கனுகுணமான பலத்தைப் பொசிப்பிக்கும் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு:*

காயத்தினால் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க சுக துக்கங்களைக் காயத்தினால் அனுபவித்துத் தொலைக்க வேண்டும். அஃது இன்றி மனத்தினால் அனுபவிக்க முடியா.

மனத்தினால் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க சுக துக்கங்களை மனத்தினால் அனுபவித்துத் தொலைக்க வேண்டும். அஃது இன்றிக் காயத்தினால் அனுபவிக்க முடியா.

**குறிப்பு:** வாக்குக் காயத்தில் அடங்கும்

*(மூதறிஞர் அடிகளாசிரியர் கூறிய விளக்கம்)*



## மலத்தின் தொகை (அ) மலம் ஐந்தின் விதி

மோகம்மிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூலஆ ணவம்ஒன்று முயங்கி நின்று
பாகம்மிக உதவுதிரோ தாயி ஒன்று
பகர்மாயை ஒன்றுபடர் கன்மம் ஒன்று
தேகம்உறு கரணமொடு புவன போகச்
செயலாகும் மாமாயைத் திரட்சி ஒன்றென்று
ஆகமலம் ஐந்தென்பர் ஐந்தும் மாறாது
அருளென்பது அரிதன்பர் அறிந்து ளோரே. (32)

**மோகம் மிக உயிர்கள் தொறும் உடன் ஆய் நிற்கும் மூல ஆணவம் ஒன்று:-** மோகாதி எழு குணத்தையும் உடைத்தாய் மாயையும் கன்மத்தையும் போல வீட்டுப் பற்றன்றியில் அநாதியே மூவகை ஆன்மாக்களிடத்திலும் சகசமாய் நிற்கும் ஆணவம் ஒன்று;

**முயங்கி நின்று பாகம் மிக உதவு திரோதாயி ஒன்று பகர் மாயை ஒன்று படர் கன்மம் ஒன்று:-** மும்மலங்களையும் செலுத்தும் திரோதாயியாகிய **ஆதிசத்தியொன்று**, பிரளயா கலர்க்குத் தனுகரண புவன போகமுமாய், சகலர்க்குத் தனுகரண புவன போகமுமாய், சகலர்க்குத் தனுகரண புவன போகமுமாகி மயக்கத்தையும் பண்ணும் அசுத்த மாயை ஒன்று, பிரவாகானாதியாய்ப் பதியன் பூசணியானது போலச் சென்ம சென்மங்கள் தோறும் தேடி வருவதான கன்மமொன்று;

**தேகம் உறு கரணமொடு புவன போகச் செயல் ஆகும் மா மாயை திரட்சி ஒன்று:-** விஞ்ஞான கலர்க்குத் தனு கரண புவன போகங்களாகிய திரட்சியை உண்டாக்குவதற்கு உபாதான காரணமாகிய மாமாயை ஒன்று;

**என்று ஆக மலம் ஐந்து என்பர்:-** இப்படியே தொகை ஐந்து மலமென்று சிவாகமத்தை உணர்ந்த பெரியவர்கள் சொல்லுவார்கள்.

**மாறாது அருள் என்பது அரிது என்பர் அறிந்துளோர் ஏ :-** இந்த ஐந்தும் மாறாமலே ஆன்மாவுக்கு ஆதாரம் சிவனுடைய கிருபாசக்தியாகிற பரையேயென நிற்கும்படிக் கூடுவது மிகவும் அரிதென்று சிவாகமத்தை உணர்ந்த பெரியவர்கள் சொல்லுவார்கள் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் கருத்து*

**ஐம்பாசம்**

*1.* *"அருளில் தலைநில்லார் ஐம்பாசம் நீக்கார்"*
*(திருமந்திரம்-184)*

**2.** *"மன்னும் மலமைந்தும் மாற்றும் வகையோனின்"*
*(திருமந்திரம்-1689)*

**3. மாயை இரண்டன்று**

*"அத்தனே இரண்டோ மாயை அன்றுகாண் அவத்தா பேதம்*
*எத்தன்மை தர்ப்பணத்தின் இருபுறம் போலு மன்றே"*
*(பெருந்திரட்டு-மெய்ம்மொழி-8)*



# கேவலத்தியல்பு

ஓங்கிவரும் பலஉயிர்கள் மூன்றவத்தை பற்றி
உற்றிடும் கேவலசகல சுத்தமென உணர்க
ஈங்குவரும் கலாதியொடு குறியுருவம் ஒன்றும்
இன்றிமலம் அன்றிஒன்றும் இல்லையெனும் இயல்பாய்
ஆங்கறிவை அறிவரியன்[1] அறிகருவி அணையா
ஆதலினால் இருள்மருவும் அலர்விழிபோல் அதுவாய்
தீங்கும்வகை இன்றிநித்த வியாபகமாய் அங்கண்
நிற்பதுகே வலமென்று நிகழ்த்தும் நூலே. (33)

பாடபேதம் : 1. அறிவதாய்

***ஓங்கி வரும் பல உயிர்கள் மூன்று அவத்தை பற்றி உற்றிடும் கேவல சகல சுத்தம் என உணர்க:-*** *வியாபியுமாக அநேகமுமாயுள்ள ஆன்மாக்கள் கேவல சகல சுத்தம் என்று மூன்றுவத்தைகளையும் பொருத்தமென அறியப்படுமது;*

***ஈங்கு வரும் கலாதியொடு குறி உருவம் ஒன்றும் இன்றி மலம் அன்றி ஒன்றும் இல்லை எனும் இயல்பு ஆய் ஆங்கு அறிவை அறிவரியன் அறிகருவி அணையா ஆதலினால் இருள் மருவும் அலர் விழிபோல் அதுவாய் நீங்கும் வகை யின்றி அங்கண் நித்தம் வியாபகம்ஆய் நிற்பது கேவலம் என்று நிகழ்த்தும் நூலே:-*** *கீட் சொன்ன மூன்றுவத்தையுள் கேவலாவத்தை இலக்கணமானது ஆன்மாவுக்கு இவ் விடத்துப் போகார்த்தமாக வரும், கலை முதலாகிய தத்துவங் களும் சாத்து விதாதி குணங்களும் தூல சூக்கும் மென்னும் உருவங்களும் இவைகள் ஒன்றும் இல்லாமல் அஞ்ஞானமே யன்றிப் பின்னை யொன்றுமில்லை என்னும் இயல்பை யுடையதாய் அவ்விடத்து அறிகருவியாகிய கலாதிகள் கூடாதபடியினாலே ஒரு விஷயத்தையும் அறிதற் கரிதாய்க் கொண்டு மிகுந்த அந்த காரத்திலே அலர விழித்த கண்ணுக்கு இருள் தெரியும்;*

மற்றொரு வத்துவும் காணப்படாத அப்படியுமன்றி இந்த அஞ்ஞானந் தன்னையும் மற்றொரு வத்துவையும் காணப்படாமல் மறைக்கும் அஞ்ஞானமேயாய்த் தன்னால் அது நீங்குவதற்கு உபாயமும் அறியாமல் இவ்வாறிருந்தும் நித்திய ஞான சொரூபத்துக்கும் வியாபகத்துக்கும் கேடன்றிக் களிம்பு வத்தான செம்புபோல் நிற்கு என்று சைவாகமும் சொல்லும் இன்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் விளக்கம்*

*1.* **கேவலத்தில் ஆன்மா**

"அறிவன்றி மூத்தோன் அராகாதி சேரான்
குறியொன்றி லாதித்தன் கூடான் கலாதி
செறியும் செயலிலான் றினங் கற்ற வல்லோன்
கிறியன் மலவியாபி கேவலந் தானே"

*(திருமந்திரம்-2247)*

2. கேவலம் - தனிமை - "கேவலம் தனிமை முத்தி"

*(சூடாமணி நிகண்டு)*



இன்மைமலம் மாயைகன்மம் என்றிரண்டே இறைதான்
இலங்குபல உயிர்களும்முன் புரிந்தஇரு வினையின்
தன்மைகளால் எவர்களுக்கும் தனுகரண புவனம்
தந்திடும் இங்கு அதனாலே இருபயனும் சார்ந்து
கன்மம்எலாம் நேராக நேராதல் மருவக்
கடவுள்அரு ளால்எவையும் கழித்திடுவன் அதனால்
பின்மலமா னவைஅணுகா பெருகொளிமுன் புளதே
பெற்றிடும்என்று இத்திறம்என் பேசு மாறே. (34)

**இன்மை மலம் மாயை கன்மம் என்று இரண்டே:-** நீர் சொல்லும் ஆணவ மலமென்பதொன்றில்லை; மாயையும் கன்மமும் இரண்டே உள்ளன;

**இறைதான் இலங்கு பல உயிர்களும் முன் புரிந்த இரு வினையின் தன்மைகளால் எவர்களுக்கும் தனு கரண புவனம் தந்திடும்:-** கர்த்தாவானவன் எல்லா ஆன்மாக்களுக்கும் பூர்வ ஜென்மங்களிலே பண்ணின புண்ணிய பாவங்களுக் கீடான தனு கரண புவன போகங்களை மாயையிலே உண்டாக்கிப் பொருந்துவான்;

**இங்கு இதனாலே இரு பயனும் சார்ந்து கன்மம் எலாம் நேராக நேராதன் மருவ:-** இவ்விடத்து இந்தப் புண்ணிய பாவங்களினாலே சுக துக்க போகங்களை அனுபவித்து எல்லாக் கன்மமும் ஏக காலத்திலே சமனாக புசிக்க, அந்த காலத்திலே;

**கடவுள் அருளால் எவையும் கழித்திடுவன்:-** கர்த்தாவானவன் கிருபையாலே எல்லாக் கன்மங்களையும் நாசம் பண்ணுவன்;

**அதனால் பின் மலம் ஆனவை அணுகா பெருகு ஒளி முன்பு உளதே பெற்றிடும் என்று இத்திறம் என் பேசும் ஆறே:-** அதனாலே பிறகு கன்ம மலம் பொருந்தாது; கன்ம மில்லாதிருக்கவே மாயையும் பொருந்தாது; இப்படி மாயை கன்மம் இரண்டு மலமும் அற்றுச் சுத்தனாகி யிருப்பதே முத்தி;

இவ்வாறின்றி அனாதியே மிகுந்த ஞானப் பிரகாசம் உண்டாகிற சிவனுக்கிரகத்தினாலே ஆன்மா ஞானத்தைப் பெறுவானென்று சொல்லுவானேன். இது பூர்வபட்சம், இனி சித்தாந்தம் கூறுதல். ஆன்மா முதலே ஞான சொரூபனுமாய் விபுவும் அல்லவாகில், முத்தியிலே எல்லாவற்றையும் அறிந்தவனென்றும் விபுவென்றும் கேட்கப்படுகையினாலே அது அனாதி சித்தமான ஞானம் அப்படியே அனாதியே அஞ்ஞான உபாதியினாலே தடைப்பட்டடிருந்தது முத்தி என்பது அந்த அஞ்ஞானமானது விடப்படவே தனக்குத் தானே உண்டான ஞானம் பிரகாசிக்கும் முன்பு ஞானமில்லாமல் பின்புண்டமாகிறது சமுற்பத்தியாம்.

உற்பத்திக்குக் காலாந்தரத்திலே நாசமுண்டாம். சிவனாலே ஞானத்தை ஆன்மாப் பெற்றானென்பது அஞ்ஞானத்தை நீக்கப்பெறும் அதன்றி ஞானந்தான் ஞானாந் தரத்திலே நின்றும் இருந்தும் வந்ததுமன்று, உற்பத்தியுமன்று என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

1. மேற்பாட்டு ஆணவமலமும் இல்லை அதனால் கூறிய கேவலாவத்தையும் இல்லை என்பார் கூற்றை மறுத்தற்காக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

2. "கடவுள்அரு ளால்எவையும் கழித்திடுவன் அதனால் **பின்மலம் ஆனவை அணுகா**" என்பதன் பொருள் வருமாறு:

முதல்வன் தன் திருவருளாலே (ஆசிரிய வடிவாய்த் தெரியவந்து) எத்தகைய புன்மைகளையும் நீக்கி அருள்வன்; அக்காரணத்தினாலே பின்னர் மாயை கன்மம் என்னும் இரண்டு மலங்களும் உயிரை அடையாது. (**முதறிஞர் அடிகளாசிரியர் விளக்கம்**)

■ ■ ■ ■ ■ ■

மாயைமுதல் எனவினையின் பான்மைமுதல் எனவே
மன்னுபனை விதைமரபின் மயங்கும்மலம் சுத்தற்கு
ஏயும்நெறி என்கொல்அதன் இயல்பாயின் முத்தி
என்பதென்மற் றிவைநிற்க இருங்கலாதி உணர்வாய்
மேயபின்னர் தன்னுருவம் விளங்காமை விளக்கும்
மிகுஉலகந் தனில்என்னில் இவைவிடுங்கால உணர்வுள்
தோயும்நெறி இலதாதல் அறியாமை எனநீ
சொல்லியது மலம்என்பர் துணிந்து ளோரே. (35)

**மாயை முதல் என வினையின் பான்மை முதல் எனவே மன்னுபனை விதை மரபின் மயங்கும்**:- *மாயா காரியமாகிற தனுவாதிகளினாலே தேடப்பட்டது கன்மம் என்றும், கன்ம பரிபாகத்தினாலே தனுவாதிகள் உண்டாச்சுதென்றும், இவ்வாறு பனை மூத்ததோ கொட்டை மூத்ததோ என்பது போல அறியப் போகாத மயக்கம் உண்டாம்;*

**மலம் சுத்தற்கு ஏயும் நெறி என்கொல் அதன் இயல் பாயின் முத்தி என்பதென்**:- *அனாதி சுத்தனாகில் மாயா கன்மங்கள் பொருந்துகிறதுக்கு ஏது எது? அது சுபாவமே யாகில், முத்தி என்பது எங்ஙனம் உண்டாம் ?*

**மற்று இவை நிற்க இரும் கலாதி உணர்வாய் மேய பின்னர் தன்னுருவம் விளங்காமை விளங்கும் மிகும் உலகந்தனி லென்னில் இவை விடுங்கால் உணர்வு உள் தோயு நெறி இலாதாதல் அறியாமை என நீ சொல்லியது மலம் என்பர் துணிந்துளோர் ஏ** :- இதன்றியும் கலாதி தத்துவங்கள் பொருந்தின பின்னர் ஞானக் கிரியா சொரூபத்தை நன்றாக விளங்கப் பண்ணாமல் விஷய தெரிசன மாத்திரத்திற்கு விளங்கப்பண்ணும் பிரபஞ்சத்திலே என்று சொல்லுங்கால், இந்தக் கலாதிகள் நீங்கின விடத்து ஞானமானது ஆன்மாவினுள் என்று சொன்னாய்; நீ அறியாமை என்று சொன்னது தன்னையே ஆணவ மலம் என்று நிச்சயமான பொருளை யறிந்து பெரியோர்கள் சொல்லுவார்கள் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* உயிர்க்கு ஆணவ மலம் இல்லையென்னும் ஐக்கியவாதி முதலானவரை மறுத்தது.

அந்நியமா னவைஉணர்த்தி அநந்நியமாய் நிறைந்த
அறிவுஅறியா மையினாலும் அருள்நிலவும் காலம்
தன்னில்அவ னேயாவும் மாய்நின்ற தொன்மை
தாம்உணர்ந்த லானும்,உயிர் தானெனஒன்று இலதாய்
மன்னியிடும் மலம்;மாயை கன்மங்கள் மாறி
வந்திடும்;இங்கு இதுவழுவாது ஆதலினால், மனத்தால்
உன்னரிய திருவருளை ஒழியமலம் உளதென்று
உணர்வரிதாம்[1] அதன்உண்மை தெரிவரிதாம்
உனக்கே. (36)

பாடபேதம் 1. உணர்வரிதால்

*சுவடியில் மேற் (36ஆவது) பாட்டும் உரையும் இல்லை. பதிப்பாசிரியரால் உரை எழுதப்பெற்றுச் சேர்க்கப்பட்டது.*

**இதன்பொருள்:-** மேற்பாடலை நன்கு உணர்ந்து கொள்ள "**உருவாய் அருவாய்**" என்ற அருணகிரிநாதரின் கந்தரனுபூதிப் பாடலும், "வண்மை இல்லை" என்ற கம்பராமாயணப் பாடலும் உதவிபுரிகின்றன.

மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் உயிராகிய ஆன்மாவின் மீது படிந்து நிற்கின்றன. அவை தம்மேல் படிந்திருப்பதை உயிர் அறிவதில்லை. குறிப்பாக ஆணவமலம் உயிருடன் ஒட்டிக்கொண்டே இருக்கின்றது. தனக்கு ஆணவம் இருப்பதை உயிரே உணர்வதில்லை.

தன்னிடம் ஆணவம் இருப்பதை உயிர்கள் அறியாமைக்கு மேற்கண்ட பாடல் வழிகாட்டியாகும்.

மலங்கள் உயிரினிடத்து ஒருக்கால் மறைந்தும், ஒருக்கால் உறைந்தும் நிற்கின்றன. மழையில் செல்லும் உந்து

வண்டியில் வழிப்பான் (wiper) நீரை வழித்து விடுவதும், மழைநீர் மீண்டும் கண்ணாடியில் நிறைவதையும் போன்றது இது.

இது தீருமோவெனில் தீராது! ஏன்? உயிர் தான் ஓர் உயிர் என்பதையே உணர திருவருள் இருந்தால் மட்டுமே இயலும். ஆகையால் மலங்கள் உயிரிடம் வந்து கவிவது தவிர்க்க வொண்ணாதது. ஓர் உயிர் தன்னைத்தானே உணர்ந்து திருவருளும் கூடுமேல் ஆணவ மலம் அகலும்.

புகலும்மலம் ஒழித்தற்குக் கலாதிமுதல் மாயை
பொருந்தியிடும் அரன்அருளால் போதும்[1] தீபம்
சகலாம்எலாம் உடனாய ஆறு போலும்
தரும்அருளை மலம்உயிர்கள் சாராமல் மறைக்கும்
இகலிவரும் இவைஉணரின் இருள்வெளியாம் தன்மை
எய்தும்இவை தன்செய்தி இலங்கும் விந்துப்
பகர்வரிய உணர்வாகி ஒளியாய் உள்ளப்
பான்மையினால் ஒருநாதம் படரும் தானே. (37)

பாடபேதம்: 1. போதம்

**புகலும் மலம் ஒழித்தற்கு கலாதி முதல் மாயை பொருந்தியிடும் அரன் அருளால்:-** முன் சொல்லப்பட்ட ஆணவ மலத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவுக்குப் போகத்தை உருசிப்பிக்கிறதற்கு ஈசுர சத்தியினாலே மாயையிலே நின்றும் கலை முதலான ஐந்து தத்துவங்களும் உண்டாம்;

**போதும் தீபம் சகலமெலாம் உடன் ஆய ஆறு போலத் தரும்:-** அவ்வாறுண்டான பஞ்ச தத்துவங்களும் "தீபாங்க வத்துவான எண்ணெய் அக்கினி திரி முதலானவைகளினாலே விளக்கானது உண்டாய்ப் பதார்த்தங்களைக் காண்கிறதற்கு ஏதுவானது போல" இந்த அஞ்சு தத்துவங்களுடைய சமுதாயத்திலே புருஷத்துவம் என்பது உண்டாய்ப் போகத்துக்குச் சாதனமேயாம்;

**(இனி) அருளை மலம் உயிர்கள் சாராமல் மறைக்கும்:-** புருஷ தத்துவ மென்ப தொன்றில்லை ஆன்மாவுக்கே அவதார நாமமென்று சொல்லுவார்கள். புருஷ தத்துவமானது கலை வித்தை இராகங்களினுடைய கூட்டரவிலே பிருகிருதியி னுடைய முக்குணங்களினாலே தோன்றி ஆன்மாவுக்குக் கஞ்சுகத்தானமாகக் காலாக்கினி ருத்திர புவனமட்டும் வியாபியாயிருக்கு மென்று சிவாகமம் சொல்லுகையால் புருஷ தத்துவம் உள்ளதே;

**இகலி வரும் இவை உணரின் இருள் வெளியாம் தன்மை எய்தும் இவை தன் செய்தி:-** இவ்வாறு கேவல சகலாவத்தைகள் தொந்தித்து வருகிற தன்மையானது விசாரிக்குமிடத்து இராத்திரியின் மழையிருட் போலக் கேவலமும் மின்போலச் சகலமும் இவ்விரண்டவத்தையினுடைய இலக்கணம் இதுவே;

**(மேல் சுத்தமாயைத் தோற்றமாக) இலங்கும் விந்து பகர்வரிய உணர்வாகி ஒளியாய் உள்ளப் பான்மையினால் ஒரு நாதம் படரும் தானே:-** விளங்கியுள்ள விந்துவிலே இன்னது இப்படி யென்று சொல்லப் போகாதே ஞானப்பிரகாசம் ஆன்மாக்களுடைய கன்மானுட்டான குணமாக ஒப்பற்ற நாத சொரூபமாய் மேல் பைசாந்தியாதி வாக்காக விரியும் என்றிதன் பொருள்.

இதற்குச் சூக்குமை வாக்கென்று பேர். இது விஞ்ஞானமய கோசமாய் ஆணவமல மறிவினாதலிடனே கூடி நிவர்த்தி யாகையால் இதுவே பரம பெந்தமென்றும் இதனினீங்குவதே பரமமுத்தியென்றும் எல்லா ஆன்மாக் களிடத்திலும் தனித்தனியே யிருக்குமென்றும்; இது முதலான நாலுவாக்குகளும் பஞ்சகலாநிட்டங்களாய்ச் சிறுபிள்ளை களிடை யாவுங் கனைகள் சல செந்து முதலானவை களினாலும் சொல்லப்படுமதாயிருக்கும்.

## வைகரி சகல அவத்தை

வந்தடைந்து பின்னமாய் வன்னங்கள் தோற்றம்
வரும்அடைவு படஒடுக்கி மயில்அண்ட சலம்நேர்
சிந்தைதனில் உணர்வாகும் பைசந்தி; உயிரில்
சேர்ந்துவரும் அவைமருவும் உருஎவையும் தெரித்து
முத்தியிடும் செவியில்உறாது உள்ளுணர்வாய் ஓசை
முழங்கியிடும் மத்திமைதன்; வைகரியில் உதானன்
பந்தமுறும் உயிரணைந்து வந்தமொழி செவியின்
பால்அணைய நினைந்தபொருள் பகரும் தானே. (38)

**வந்து அடைந்து பின்னம் ஆய் வன்னங்கள் தோற்ற வரும் அடைவு பட ஒடுக்கி மயில் அண்டசலம் நேர் சிந்தைதனில் உணர்வாகும் பைசந்தி:-** அந்தச் சூக்குமை வாக்கானது மூலதாரத்தினின்றும் மணிபூரக மளவாக வந்து பொருந்தின பொழுது, சூக்குமை பேதலக்கணத்தை யுடைத்தாய் ஐம்பத்தோரக்கரத்தின் தோற்றத்தினடைவு விரிதலன்றி மயின் முட்டையிற் சலம் பஞ்ச வன்னத்தையும் அடக்கி நின்றது போலாய்ச் சித்தத்திலே ஞானப்பிரகாச முமாய் மத்திமைக்குக் காரணமுமாய் நிற்பது பைசந்தி வாக்கு;

**உயிரில் சேர்ந்து வரும் அவை மருவும் உரு எவையும் தெரித்து முந்தியிடும் செவியில் உறாது உள் உணர்வாய் ஓசை முழங்கியிடும் மத்திமை தான்:-** அந்தப் பைசந்தியினுடைய விருத்தியானது அனாகதத்தானத்திலே பிராண வாயுவுடனே கூடிய ஐம்பத்தோரக்கரங்களையும் தோன்றப் பண்ணிச் செவியிற் கேளாமல் அந்தர்க்கதமாயிருக்கிற தன்மாத்திரை யாகிய சத்தத்தோடே கூடிப் புத்தியிலே பிரகாசித்து வைகரி வாக்குக்குக் காரணமாயிருப்பது மத்திமை;

**வைகரியில் உதானன் பந்தம் உறும் உயிர் அணைந்து வந்த மொழி செவியின் பால் அணைய நினைந்த பொருள் பகரும் தானே:-** அந்த மத்திமையின் விருத்தியானது பிராண உதான வாயுக்களோடே கூடி முகத்திலே யிருப்பதாய் அக்கரங்களைப்

பதமாகவும் மந்திரமாகவும் நானாகார வசனமாகவும் பதபந்தங்களாகப் பிறர் செவிக்குக் கேட்கும்படிக்குக் கன்ம விந்திரியத்தின் வாக்கென்னும் தத்துவங்களினாலே சனிக்கப் படுவதாயுள்ளது வைகரி வாக்கென்றிதன் பொருள்.

கன்ம விந்திரியத்தின் வாக்கென்னும் தத்துவமல்லாமல் சுத்த மாயையிலே உண்டானதாக வைகரி வாக்கென் றொன்றை அங்கீகரிப்பது கற்பனை கௌரவம் என்னில் அஃதெப்படியல்ல; அநாதி சித்தமான அக்கரங்களைக் கையினாலே எழுதின பொழுது அந்தக் கையினாலேனுற் பத்தியானதல்ல; அந்த அக்கரங்கள் அனாதி சித்த மாயை யினாலே எழுதுகிறது அந்த அக்கரங்களினுடைய சாங்கேதி கத்தைத் தோன்றுவிக்கிறவைகள் என்றது சங்கேதிக லிபி, பாஷை பேதங்களினாலே அநேகவிதமாகையினாலே அக்கரமல்ல; அக்கரமென்பது பொருள் விளக்கம், ஆகிற் பஞ்சதன்மாத்திரையிற் சத்தந்தானே யாகாதோவென்னில்? அது வொன்றாத சத்தம் அதுவுந் தொனி ரூபமொழியப் பொருள் விளக்கமல்ல.

இத்தகைமை இறைஅருளால் உயிர்அறியும் அறிவுக்கு
ஈடாக வாடாதே ஈரிரண்டில் உரைத்த
வித்தைமுதல் ஐவரான் விளங்கு ஞானம்
மேவியிடும் எனஉரைப்பர்; அசுத்த மாயை
வைத்தகலை தான்மூல மலம்சிறிதே நீக்கி
மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனைப்
புத்திதர வித்தையிடை நின்றறிவை உயிர்க்குப்
பொருந்தியிடும் வகைபுணரும் புனிதசத்திபுணர்ந்தே. (39)

**இத்தகைமை இறை அருளால் உயிர் அறியும் அறிவுக்கு ஈடு ஆக வாடாதே ஈரிரண்டால் உரைத்த வித்தை முதல் ஐவரால் விளங்கு ஞானம் மேவியிடும் என உரைப்பர்:-** முன் சொன்ன இந்தத் தன்மையிலே ஆன்மாக்கள் தன்தன் கன்மத்திற்கு ஈடாக வாச்சிய வாசக ஞானம் விளங்கும் படிக்குக் கர்த்தாவினுடைய கிருபாசத்தியினாலே உண்டாயிற் றென்று நாலு வாக்குங்கேட்ட அடைவிலே சில தத்துவத்திலே சூக்குமையாகவும் சத்தி தத்துவத்திலே பைசந்தியாகவும் சதாசிவ தத்துவத்திலே மத்திமையாகவும் மகேசுர தத்துவத்திலே வைகரியாகவும் சுத்த வித்தியா தத்துவத்திலே தூலதரமான வைகரியாகவும் விளங்கும்; இதனாலே எல்லா ஆன்மாக்களும் வாச்சிய வாசக ஞானத்தைப் பொருத்துவார்கள்;

**அசுத்த மாயை வைத்த கலை தான் மூலமலம் சிறிதே நீக்கி மருவும் வகை தெரிவிக்கும்:-** அசுத்த மாயையி லுண்டான கலாதத்துவமானது ஆணவ மலத்தைச் சிறிது நீக்கி ஞானமானது விஷயங்களைக் கிரகியாமல் நிர்விகற்பமா யிருக்கும்படிப் பண்ணும்;

**வாயில்களின் பயனைப் புத்தி தர வித்தை இடை நின்று அறிவை உயிர்க்குப் பொருந்தியிடும் வகை புணரும் புனித சத்தி புணர்ந்தே:-** ஞானேந்திரியங்களினால் கிரகிக்கப்பட்ட விஷயங்களைப் புத்தியானது தான் கைக்கொள்ள ஆன்மா வானாவன் ஈசுர சத்தியினுடைய மேவுதலினாலே வித்தியா தத்துவத்தைப் பொருந்தி அந்தச் சுக துக்க ஞானத்தைப் புத்தியோடே கூடிக் கிரகிக்கும் எனக்கொள்வாம் என்றிதன் பொருள்.

பேசரிய அராகம்தம் கன்மத்துக்கு ஈடாய்ப்
பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும்; நியதி
தேசமிகும் அரசர்தரும் ஆணை, செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்தி போல
நேசமுறும் தன்கன்மம் நிச்சயித்து நிறுத்தும்
நிகழ்காலம் கழிகாலம் எதிர்காலம் என்றே
ஓசைதரு வருங்காலம் எல்லைபலம் புதுமை
உறுவிக்கும் இறைசத்தி உடனாய் நின்றே. (40)

**பேசு அரிய இராகம் தன் கன்மத்துக்கு ஈடு ஆய் பெற்றதனில் ஆசைதனைப் பெருகு விக்கும்:-** மட்டுரைக்க வொண்ணாத இராக தத்துவமானது ஆன்மாவினுடைய கன்மானு குணமாகப் பொருந்தின விஷயத்திலே மேன் மேலும் இச்சையைப் பண்ணுவிக்கும்;

**நியதி தேசம் மிகும் அரசர் தரும் ஆணை செய்தி செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்கை போல நேசம் உறும் தன் கன்மம் நிச்சயித்து நிறுத்தும்:-** நியதி தத்துவமானது தேசத்திற் சிங்காதரத்தரான இன்சாவினுடைய ஆக்கினையை நடத்துகிற பேர்கள் ஒருத்தர் பண்ணின கிருஷியாதி பலத்தை ஒருத்தர் பொசியாத படிக்குச் (செய்தல் போல) சாதாரணமாகவும் விஷயங்களிலே இராகம் மட்டற்ற இச்சையைப் பண்ணுவிக்கையினாலே அந்த இச்சையானது புசியாமல் கன்மபல மாத்திரத்திலே அசாதரண மாகவும் நிறுத்தும்;

**நிகழ் காலம் கழி காலம் எதிர்காலம் என்றே ஓசை தர வரும் காலம் எல்லை பலம் புதுமை உறுவிக்கும்:-** காலமானது நிகழ்கால மென்றும் கழிகால மென்றும், வருங்கால மென்றும் பிரசித்தம் சொல்லப்பட்டு, அன்றைக்குப் புசிக்க வருங்காலம் நிகழ்காலமாகவும், முதற் புசித்துவிட்டு நீங்கினது கழிகாலமாகவும் மேற்புசிக்க வருமது எதிர்காலமாகவும் பொருந்திய தத்துவங்கள் இவ்வாறு கிர்த்தியங்களைப் பண்ணுவது எங்கன் என்னில் ?

**இறை சத்தி உடனாய் நின்றே :-** சிவனுடைய சத்தியானது சித்து அசித்துக்கள் எல்லாம் நிறைந்து நிற்கும் ஆகையால், அச்சடமாகிய தேகம் ஆன்மாவினாலே சேட்டிக்கப்பட்டது போல இந்தத் தத்துவங்களும் அந்தச் சிவனுடைய சத்தியினாலே இவ்வாறு கிர்த்தியங்களைப் பண்ணும் என்றிதன்பொருள்.



ஐவகையால் உறுபயன்கள் நுகரவரும் காலம்
அதுபுருட தத்துவம்என்று அறைந்திடுவர் அறிந்தோர்
மெய்வகைய கலாசுத்தி தனில்இதற்கும் சுத்தி
மேவியிடும் வகைதானும் விரும்பியநூல் விளம்பும்;
செய்வகையின் தொடர்ச்சிஇங்குத் தோற்றுவிக்கும் குணத்தின்
சேர்வுபுரி பிரகிருதி திரிகுணமாய்[1] அவைதாம்
இவ்வகையில் சாத்துவித ராசததா மதமாய்
இயம்புவர்கள்; ஒன்றிரண்டு குணம்ஏற்கை
உடைத்தே. (41)

பாடபேதம்:- 1. திரிவிதமாம்.

**ஐவகையால் உறு பயன்கள் நுகர வரு காலம் அது புருட தத்துவம் என்று அறைந்திடுன் அறிந்தோர் :-** பஞ்சேந்திரியங்களினாலே விடயங்களைப் புசிப்பதற்காகக் கலாதி தத்துவங்கள் கூடின சமுதாயத்திலே ஆன்மாவுக்குக் கஞ்சுகத்தானமாகக் கூடியுள்ளது புருடதத்துவம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்;

**மெய் வகைய கலா சுத்தி தனில் இதற்கும் சுத்தி மேவியிடும் வகை தானும் விரும்பிய நூல் விளம்பும்:-** ஆகில் இந்தப் புருட தத்துவம் காலாக்கினி புவனமளவும் உள்ளதாக வேண்டும்; ஆன பொழுது, தீட்சையிலே தத்துவ சோதனை பண்ணும்பொழுது நிவர்த்திக் கலையிலே சுத்தியாமோ? அப்படிச் சுத்தியாகில், விந்தியா கலையிலே புருட தத்துவம் கூட ஏழு தத்துவமென்றெண்ணப்பட்ட தெவ்வா றென்னில்? உண்மை காலாக்கினி ருத்திர புவனமாதியாக வகையடைவே கலாதத்துவமட்டாகக் கிரமத்திலே அந்தந்த புவன சோதனை யோடே சுத்தியாய் வந்து காலதத்துவ சுத்தியோடே சோதிக்க சுத்தமா மென்று நாம் விரும்பப்பட்ட சிவாகமத்திலே சொல்லும்.

**செய்வகையின் தொடர்ச்சி இங்கு தோற்றுவிக்கும் குணத்தின் சேர்வு புரி பிரகிருதி திரிவிதமாம் அவைதாம் இவ்வகையால் சாத்துவித ராசத தாமத மென்றியம்புவர்கள் ஒன்று இரண்டு குணம் ஏற்க உடைத்தே:-** ஆன்மாக்கள் முன் செய்த கன்மத்தினுடைய

தொந்தத்துக்கு ஈடாகக் குணவியத்த மான (அவ்வியத்தமான) பிரகிருதியினின்று மூன்று குணங்களை உருத்திர தேவருடைய சத்தியானது தோற்றுவிக்கும்; அவையாவன:- . சாத்துவித ராசத தாமதமென்று மூன்றுவிதமாகச் சொல்லுவார்கள்.

இந்த மூன்று குணங்களும் ஒன்றுக்கொன்று கூட்டரவி னாலே ஒவ்வொரு குணத்தினாலே மேலும் இவ்விரண்டு குணம் உண்டாம். அதனுடைய விருத்தியானது பிரதானம் என்னும் நாமத்தையுடைய சித்த முதலானது இவ்வாறு மூன்று குணங்களினுடைய பிறிவின்றியே பிறியாதது குணத்துவ மென்று ஒன்றாகச் சொல்லப்படும்.

இந்த மூன்று குணத்தினுடைய அடைதலில்லாத சகலராகிய ஆன்மாக்கள் ஒருத்தமில்லை என்பதனாலே சாத்துவித முதலானவைகளினாலே கலப்பாயாவது பிரதி புருஷமாக வியாபித்திருக்குமென்பது யாதொன்றதனாலே எல்லா ஆன்மாக்களிடத்திலும் மூன்று குணமும் வியாபித் திருக்குமாகில் இவன் சாத்துவிகன், இவன் இராசதன், இவன் தாமதன் என்று சொல்லுவாம் ஏன் என்னில்? ஒவ்வொருத் தருக்கு ஒவ்வொரு குணம் அதிகமாயிருக்கையால் அந்த ஆதிக்கத்தினாலே “மல்லக் கிராமம் என்றது போலச்” சொல்லப்படும்.

**சாத்துவித குணத்தினுடைய வியாபாரமானது வருமாறு:-** திடவிரதம், சித்த நிச்சலம்; அறிவு, சாமர்த்தியம், மிருது பாஷணம், அற்பாசனம் (சிற்றுணவு) சுக்கு, சூக்குமா காரம், லாபாலாபத்திலும் சந்தோஷம், கபடமில்லாம லிருக்கை, சதானந்தம், நிச்சமயான பொருளிலே பிரவிருத்தி, தனக்கு மிகவும் துக்க வேதுக்களைப் பண்ணினவர்களிடத் திலும் பொறுமை, படித்த சாத்திரங்களில் காரணம், நன்றியறிகை, எல்லோரிடத்திலும் சிநேகித்திருக்கை, தேவர் குரு பிராமணர்களிடத்திலே பத்திசிரத்தை, புறவிந்திரிய வொடுக்கம், உள்ளிந்திரிய வொடுக்கம், சகலரிடத்திலும் தயவாயிருக்கை, இவை முதலிய சற்குணங்களை உடைத்தாயிருக்கும்.

**இராசத குணத்தினுடைய வியாபாரமானது வருமாறு:-** அபிமானம், தீர்க்க வயிரம், தயையில்லாமை, புசிப்பில் இச்சை, இடம்பம் இவை முதலானவைகள்.

**தாமத குணத்தினுடைய வியாபாரமானது வருமாறு:-** சற்கன்மத்திலே இச்சையற்றிருக்கை, பிரவிர்த்தி, மந்தத்தனம், ஏழைத்தனம், கோட்சொல்லுகை, ஈனமாய் வெகுவாயிருக்கிற ஆகாரம், அதிக நித்திரை, கலக்கம், சோம்புதல், தகையப்பட்ட விஷய ஞானத்தை உடைத்தாகை, அறிவற்றிருக்கை, இவை முதலானவைகள்.

மேல் சுத்த சாத்துவிதம், சுத்தராசதம், சுத்த தாமதமும் ஒருவரிடத்திலும் தனித்து நில்லாதாகையால் இந்த மூன்று குணங்களுடைய அந்நியோந்ய சம்பந்தத்தினாலே உண்டாங் குணங்களையும் கூறுகின்றது.

***பதிப்பாசிரியர் குறிப்பு:***

பதிப்பாசிரியர் எழுதியுள்ள "தமிழரின் பல்துறை ஆற்றல் வளம்" என்னும் நூலில் அமைந்துள்ள, "சமய நூல்களில் உணவும் மணமும் குணமும்" என்னும் ஆய்வுக்கட்டுரை இவ்விடத்தில் ஒப்பிட்டறிக.

அலகில் குணம் பிரகாசம் லகுதைவியா பிருதி
அடர்ச்சிமிகும் கவுரவம் நியமம்இவை அடைவே
நிலமாயிடும்; மும்மூன்றும் உயிரொன்றில் கலந்தே
நிற்கும்இவை நிறைபுலனின் பயன்எவையும் கவரும்
குலவிவரு போகங்கொள் இடமாம் மாறாக்
குறைவில்ஒளி யாம்அலகில் புலனிடத்தின் ஒருமை
பலவகையும் உடையதாய்ப் பரன்அருளால் புந்தி
பஞ்சாசத் பாவகமும் பண்ணுவிக்கும் தானே. (42)

**அலகில் குணம்:-** ஆன்மாக்களுடைய கன்ம பந்தங்களினாலே குணங்கள் எண்ணிலவாயிருக்குமாயினும் இவ்விடத்துப் பிரதான குணங்கள் மூன்றிலும் உண்டான குணங்களை உரைக்கின்றது.

**பிரகாசம் லகுதை:-** சாத்துவித குணத்திலே ராசதகுணம் சம்பந்திக்கிற பொழுது பிரகாசம் என்னும் குணம் உண்டாம்; சாத்துவித குணத்திலே தாமத குணம் சம்பந்திக்கிற பொழுது லகுதை என்னும் குணம் உண்டாம்.

**வியாபிருதி அடர்ச்சி:-** இராசத குணத்திலே சாத்துவிக குணம் சம்பந்திக்கிற பொழுது..........பிரியமான வியாபிருதி என்னும் குணம் உண்டாம். இராசத குணத்திலே தாமத குணம் சம்பந்திக்கிற பொழுது சலபரியாயமான அடர்ச்சி என்னும் குணம் தோன்றும்;

**மிகும் கவுரவம் அந்நியமம்:-** தாமத குணத்திலே சாத்துவிக குணம் சம்பந்திக்கிற பொழுது குருவென்னும் குணம் உண்டாம்; தாமத குணத்திலே ராசதகுணம் சம்பந்திக்கிற பொழுது ஆணவ பரியாயமான அந்நியமம் என்னும் குணம் உண்டாம்.

**அடைவே நிலவியிடும் மும்மூன்றும் உயிர் ஒன்றிற் கலந்தே நிற்கும் இவை நிறை புலனின் பயன் எவையும் கவரும்:-** கீழ்ச் சொன்ன அடைவிலே சாத்துவிதம் முதலான மூன்று குணங்களும் பிரதி புருஷ நியதமாகப் பொருந்திப் பதார்த்தங்களுடைய தெரிசனங்களிலே தீபம் போல ஆன்மாவுக்கு விஷய தரிசனங்களிலே உபகாரியாம்.

**குலவி வரு போகங்கள் இடம் ஆம் மாறாக் குறைவில் ஒளி ஆம் அலகில் புலனிடத்தில் ஒருமை பல வகையும் உடையதாய்ப் பரன் அருளால் புந்தி பஞ்சாசற் பாவகமும் பண்ணுவிக்கும் தானே:-** ஆன்மாக்கள் விரும்ப சவுந்தரியமாக வரும் போகங்களைப் புசிப்பிக்கிறதற்கு இடமாய், நீங்காமல் இருபத்து நாலு தத்துவத்திலும் வியாபியான பிரகாசத்தை உடையதாய் அளவிறந்த விஷயங்களிலும் பலவிதமாக அதிலே ஒருமைப்பாட்டைப் பண்ணிப் புத்தியையடைந்து ஈசுர சத்தியினுடைய ஏவுதலினாலே ஐம்பது பேதமாகப் பண்ணுவிக்கும்.

**அவையாவன:-** தன்ம பேதம் இரண்டு, ஞானபேதம் அஞ்சு; வைராக்கிய பேதம் பத்து; அயிஸ்வரிய பேதம் எட்டு; அதன்மபேதம் இரண்டு; அஞ்ஞான பேதம் ஒன்று; அளவ ராக்கிய பேதம் பத்து; அனைஸ்வர்ய பேதம் எட்டு ஆக விதம் ஐம்பதும் பஞ்சாசத் பஞ்சாசத் பாவகமாம் என்பது.

இவற்றினுடைய இலக்கணங்களையும் மேலே சொல்லுகின்றோம். இந்தப் புத்தியானது பாவம் என்றும் விவசாயம் என்றும் இருவகைத்தாம். முதற்சொன்ன பாவமானது நிர்ணயம் பண்ணாதது; பின்பு சொன்னது நிர்ணய புத்தி; அந்தப் பாவமானது ஆன்மாவுக்குப் பலத்தைக் கிரகிக்கிறதிலே உபாகரமாயிருக்கும்.

தண்ணீர்ப்பந்தல் குளம் முதலான தன்மக் கிரியைகள் தெடுவாகளாலே பண்ணப்பட்டவைகள் உடனே பலத்தைக் கொடாமல் பரத்திலே பலத்தைக் கொடுக்கிறதாகையால் அந்தச் செய்த ஆன்மம் நசித்தும் அதனால் ஒரு அபூர்வமானது செனித்துப் பலமளவு வாதனான் மாவாய் அவை வர்த்திச் சிருக்கும்.

ஆகையால் அது ஆன்மாவிடத்தில் இராது இருக்கும் என்னில், ஆன்மா விகாரியாய் விடுவன். கிருஷியாதிகள் பண்ணின பேர்களுக்குக் கிரியையினுடைய பலமானது உழுத நிலங்களிலும் பலத்தைப் பொசிக்கிறவனிடத்திலும் அன்றிப் பலவத்தாயிருக்கிற பயிர்களிலே இருந்து தற்காலத்திலே பலத்தை உண்டாக்கும்.

அந்தக் கன்ம வாதனையாவது பாவ ரூபமான புத்தியிலே யிருக்கும். அவைதான் தன்மம், ஞானம், வைராக்கியம்; இவை மூன்றும் சாத்துவித சம்பந்தமாயிருக்கும்; அயிஸ் வர்யம் இராசத சம்பந்தமாயிருக்கும்; அதன்மம், அஞ்ஞானம், அனவராக்கியம் அநைஸ்வரியம் இவை நாலும் தாமத சம்பந்தமாயிருக்கும். முன் சொல்லப்பட்ட தன்மமானது இயமம் என்றும் நியமம் என்றும் இரண்டுவிதமாம். இயமம் என்றது விஷயங்களில் சித்தம் போகாமல் திரம் பண்ணுகை; நியமம் சாத்திரத்திலே ஈனமாயிருக்கிற கிரியைகளை விட்டுச் சாத்திரங்களிலே சொல்லியிருக்கிற கிரியை பண்ணுவது.

இதில் இயமம் அஞ்சு, நியமம் அஞ்சு ஆகப் பத்துவித மாயிருக்கும்; இதில் இயமம் அஞ்சாவன:- அகிம்சை, சத்தியம், கள்ளாமை, பிரம்மசரியம், அகற்கதை (அகந் தூய்மை)

**நியமம் அஞ்சாவன:-** அக்குரோதம், குரு சிசுறாஷை, சுசித்துவம், சந்தோஷம், இருசுபாவம் ஆக அஞ்சு. இதில் இயமபேதம் அஞ்சில், ஒருத்தற்கு இம்சை பண்ணாமை யாவது, பிறத்தியார் தனக்கு அநேகம் துரோகங்களைப் பண்ணினாலும் அவர்களுக்குத் தான் துக்கத்தைப் பண்ணா திருக்கை.

யாகாதி கன்மங்களிலே பசுபந்தங்களும் வேதஞ் சொன்ன தன்மம் ஆகையினாலும் அதினாலே அந்தப் பிராணிகளுக்கும் நல்லகதி உண்டாகையினாலும் அதுவும் வருத்தமல்ல;

சத்தியமாவது தனக்கோர் ஆபத்துகள் வந்த காலத்திலும், மிகுந்த பயங்கள் வந்த காலத்திலும் மெய்யைச் சொல்லுகை. குரு தெய்வமாதிகளுக்கு இட்ட நிமித்தமாகச் சொல்லுகிற அசத்தியமும் சத்தியமே.

**திருடாமையாவது** பரருடைய திரவியத்தை அநியாயத் தினாலே புசியாமலிருக்கையும் அந்நியருடைய திரவிய

மானது உடையவன் காணாத விடத்திலே இருக்கிறத்தைக் கேட்டாகிலும் தான் கண்டாகிலும் திருடாமல் துரும்பு போலப் பாவிக்கை.

**பிரமசரியமாவது** மிகவும் உருவவதியாயிருக்கிற ஒருவனுடைய பெண்சாதியை இவ்வாறு ரூபத்தையுடையவ ளென்று சொல்லக் கேட்டாகிலும் தான் கண்டாகிலும் அவளைக் கூட மனத்தினாலே நினையாமல் வாக்கினாலே உச்சரியாமல் காயத்தினாலும் தீண்டாமல் அவளே ஏகாந்தத் திலே வந்து பிரார்த்தித்தாலும் மாதாவைப் போல் விசாரித்து மனத்தினாலும் தீண்டாமலிருப்பதே.

**அகற்கதை யாவது** தனக்கு வேண்டாமையாவதை ஒருவன் அநேகமாகப் பண்ணினாலும் புறத்தியிலே பொறுத்த மாத்திரமல்லாமல் மனத்தினாலும் பற்றன்றித் தனக்குபகாரம் பண்ணின பேர்களோடே இவனையும் சமமாக விசாரித்துப்ப பட்சம் பண்ணிக் கோபக் குரோத மன்றியிருப்பது.

இனி நியமம் அஞ்சுவிதத்தில் அக்குரோதமாவது பிறர் சொல்லும் நிட்டூர பாஷாணத்தினாலும் தாடணத்தினாலும் திரவிய கிரகணத்தினாலும் ஒருக்காலும் கோபமில்லாம லிருக்கை.

**குருசிசுருஷையாவது** சிவனாலே சொல்லப்பட்ட நைமித்திய காமிய தன்மங்களைப் பண்ணுதலும், சிவபத் தருமையவும், மாதா பிதாக்களுடையவும், தீட்சா குருவி னுடையவும், வாக்கிய பரிபாலனம் பண்ணுதலும் தான் உபவாசம் தீர்த்தயாத்திரை அத்தியயன. ஞான சாத்திரங்களைத் தாற்பரியத்துடனே கேட்கை.

**சௌசமானது** (சுசித்துவம்) ஆச்சிரம விதியிலே சொல்லப்பட்டிருக்கிற மண்ணினாலும் சலத்தினாலும் மலசலாதிகள் போக்குதல்;

**சந்தோஷமாவது** லாப சேதங்களிடத்திலும் சமனா யிருக்கை.

**ஆற்சவமாவது** பரருடைய தோஷத்தை அறிந்திருந்தும் குருடனைப் போலும் ஊமனைப் போலும் காணவும் கேட்கவும் சொல்லவும் அறியாதவனைப் போலப்; பரருக்கு இம்சை வரும் என்று அவர்களுடைய தோஷத்தைப் பிரகடியாமலிருக்கை; புருஷயற்றின ஞானமானது அஞ்சு விதமாய்க் குணவத்தான பொருட்களை விஷயீகரிக்கும், இது பாசஞானம்.

இந்த அஞ்சு ஞானத்திலும் பிறமுத்திகளானதுண்டாம். அந்த ஞானம் அதற்குச் சித்தியும் பத்தாய் ஒவ்வொன்று எட்டாக எண்பது பேதமாகக் குறுக்கிச் சொல்லப்பட்டது. அவையாவன வருமாறு:

**சாருவாகம்** பிருதிவி அப்பு தேயு வாயு இந்த நாலு பூதமே உடையதென்றும், இந்த நாலு பூதத்தினுடைய சையோகத்தி னாலே தேகம் உண்டாம். இந்தத் தேகத்திலே ஓரறிவுண்டாம்; இந்தத் தேகமே ஆன்மா வென்னும் ஞானத்தால் தேகாந்தத் திலே ஆகாய பகத்தை அடைவார்கள்.

**வாமதந்திரிகள்** சத்தியே பரத்துவமென்றும் மத்திய மாங்கிசங்களினாலே சத்தியைப் பூசை பண்ணி அந்தப் பிரசாதத்தைக் கைக்கொள்ளுகையினாலே சத்தியினுடைய கருணை உண்டாமென்னும் ஞானத்தினாலே தேகாந்தத்திலே உருத்திர கணங்களுக்குக்குட்பசாச பதத்தை அடைவார்கள்.

**தெட்சணமாகிற காபாலிகர்** பயிரவன் பரத்துவ மென்றும் அவரை மதுமாங்கிசங்களினாலே பூசை பண்ணி அவருடைய பிரசாதத்தைக் கைக்கொள்ளுகையினாலே முத்தி என்னும் ஞானத்தால் தேகாந்தத்திலே உருத்திர கணங்களுக்குட் பசாச பதத்தை அடைவார்கள்; இவர்களும் பவுதிகன்.

**பவுராணிக் ஸ்மார்த்த ரானவர்கள்** பூதாண்டத்துக்குக் காரணமான பஞ்சதன் மாத்திரையைப் பிரமமென்றும் ஞானத்தி னாலே தேகாந்தத்திலே தன்மாத்திரைப் புவனத்தை அடைவார்கள்................ஞான இந்திரியாமே ஆன்மா என்னும் ஞானத்தினாலே தேகாந்தத்திலே சோத்திராதி தத்துவ புவனத்தை அடைவார்கள்.

**நியாயவாதிகள்** மனமே ஆன்மாவென்னும் ஞானத்தி னாலே தேகாந்தத்திலே மன தத்துவ புவனத்தை அடைவார்கள்.

**வைசேடிகர்** ஆங்காரமே ஆன்மா வென்னும் ஞானத்தி னாலே தேகாந்தத்திலே ஆங்கார புவனத்தை அடைவார்கள்.

**பவுத்தர்** ஞான விருத்தியாகிய புத்தியே ஆன்மா வென்னும் ஞானத்தினாலே தேகாந்தத்திலே புத்தி தத்துவ புவனத்தை அடைவார்கள்.

**அருகதர்** முக்குணத்திற்கு மேலாகிய பந்தமில்லைக் குணம் நீங்குவதே முத்தி என்னும் ஞானத்தினாலே தேகாந் தத்திலே குண தத்துவ புவனத்தை அடைவார்கள்.

**பாஞ்சராத்திரி** பிரகிருதியிலே அரியிருப்பார் அவருடைய நித்திய சந்நிதானமே முத்தி என்னும் ஞானத்தி னாலே தேகாந்தத்திலே பிரகிருதி தத்துவ புவனத்தை அடைவார்கள்.

**சாங்கிய யோகர்** பிரகிருதி விவேகத்தைப் பண்ணிப் புருஷன் பிரகிருதியை நீங்கி நிற்பதே முத்தி என்னும் ஞானத்தி னாலே தேகாந்தத்திலே புருஷ தத்துவ புவனத்தை அடைவார்கள்.

**மாயாவாதிகளும்** பிரதானத்திலே மேலிடப் பட்டிருக்கிற தன்னை இந்தப் பிரதானத்துக்கு அந்நியமான புருடன் தான் என்றறியுகிறதே முத்தி என்னும் ஞானத்தினாலே தேகாந்தத்திலே அந்தப் புருட தத்துவ புவனத்தை அடைவார்கள்.

மேற்குறித்த பத்துப் பேதங்களுக்குள்ளே ஒவ் வொன்றிலே எவ்வெட்டு ஞானமாவன. பூர்வ சென்ம புண்ணிய வசத்தினாலே இந்தப் பத்துவிதப் பிராப்த்தித் தானத்தை நிரூபிப்பதுமாய்த் துக்கம் மூன்றை நீங்குவதற்கு ஒரு

ஞானமானது உண்டாம். அது விகற்பத்தினாலே எட்டாம்; அவையாவன:- ஆதியாத்மிகம், ஆகிபவுதிகம், ஆகு தெய்வீகம், எனப்பட்ட தாபத்திரயத்தையும் அறிந்து நீங்கின விடத்திலே ஞானம் மூன்று இட்டமாயிருக்கிறவர்களுடைய உபதேசத்தினாலே உண்டாகிற ஞானமொன்று. தங்கள் தங்கள் மதத்துக்கு அதிகாரமாயிருக்கிற குருவுபதேசத்தினாலே உண்டாகிற ஞானமொன்று. குரு முகத்திலே சாத்திரங்களைப் படித்து அதனாலே உண்டாகிற ஞானம் ஒன்று. இந்த எட்டுப் பேதத்தினாலும் ஞானஞ் சித்திக்கும் என்றது முன்சொன்ன பத்துப்பேத முத்தித் தானத்திலவர்களுக்குஞ் சரியே.

இனிப் புருஷ தத்துவத்துக்குமேல் அசுத்த மாயை யளவும் அந்தந்த தத்துவங்களிலே அபிமானிகளும் அந்தந்தப் பதத்திலே அடைகிறவர்களுமுண்டு. சுத்தவித்தை முதல் அஞ்சு தத்துவங்களிலே அபிமானிகளும் அந்தந்தப் பதத்தை அடைகிறவர்களுமுண்டு. சுத்தவித்தை முதல் அஞ்சு தத்துவங் களிலே அபிமானிகளும் அந்தந்தப் பதத்தை அடைகிறவர் களுமுண்டு.

இந்தப் புருஷ தத்துவத்துக்கு மேலுண்டான தத்துவ ஞானமானது ஆன்மா புத்தி பேதத்தினாலே தெரிசிக்கப் படுவதல்லச் சிவனனுக் கிரகத்தினாலே தெரிசிக்கவும் அடையவும் படுவதகையால் இவ்விடத்தில் அவை பாதத்தி னாலே நிருவாண தீட்சையுடையவனுக்குச் சிவஞானம் பிரகாசித்து அதனாலே ஆன்ம ஞானம் நின்மலமாய் எங்கும் வியாபியாய்ச் சிவதத்துவ பாவனையிலே விளக்கப்பட்ட தாய்ச் சிவனுடைய சத்தி சொரூபமா யிருக்கிற ஞானம் முத்திக்கே காரணமாகையால் புத்தி சாதனமல்ல.

மேல் **வைராக்கிய** வேதுவானது பத்து விதமாய் அதில் ஒவ்வொன்றிலே பத்துப் பத்தாக நூறும் உத்தமம்; மேல் **ஐஸ்வரியமானது** புத்தி பேதத்தினாலே எட்டுவிதமாம். அவை வருமாறு :

சாத்து விதத்திலே இராசத சம்பந்தத்தினாலே உண்டாய்ப் புத்தியிலே யிருக்கிற குணமானது தனவானுமாய் ஞான நிட்டனுமாய் விவேகியுமாய் வைராக்கியத்தினாலே இச்சை யுடைய புருஷனுக்கு அணிமாதி ஐஸ்வர்யங்களை உற்பாதிக்கும். அதிலே, **அணிமாவாவது** பரமாணுவினும் சூக்குமமான தேகத்தை உடைத்தாயிருக்கை;

**இலகிமாவாவது** சீக்கிர கெதியாய்ச் சேற்றிலும் சலத்திலும் அடியமிழ்ந்தாமற் செல்லும் தேகத்தை உடைத்தாகை;

**மகிமாவாவது** தேக விந்திரியங்களினாலே வியாபியாய்ப் பிரமலோகமளவும் வளரும் தேகத்தை உடைத்தாகை; இந்த மூன்றும் காய சித்தியான ஐஸ்வரியங்கள். இனி அந்தக் கரண சித்தியாகிய ஐஸ்வரியங்கள் ஐந்தாவன:-

**பிராத்தியாவது** மனத்திலே நினைத்த பதார்த்தங்க ளெல்லாம் முன்னே வந்திருக்கை;

பிராகாமியமாவது திவ்விய ரூபங்களான ஆயிரம் வனிதைகளை மனத்தினால் உண்டாக்கி எல்லோருடனும் ஏக காலத்திலே அப்படிப்பட்ட ரூபங்களுக்கொண்டு கூடி யிருக்கை;

**ஈசத்துவமாவது** பிரம்மாதிகளான எல்லோரிடத்திலும் தன்னுடைய ஆளுமையைச் செலுத்துகை;

**வசித்துவமாவது** எல்லாச் சனங்களையும் பிரகிருதி யையும் வசீகரணம் பண்ணிக்கொண்டு திருட்டியும் (சிருட்டியும்) பண்ணுகை;

**கிரிமாவாவது** மலையினும் பிரியமுமாய்ப் பெருங் காற்றிலும் அசைக்கப் போகாமலிருக்கை;

இங்குச் சொன்னப் பிரகாரமான அட்ட அயிஸ்வரியமும் இரணிய கெற்பராகிய பிரம்மாவுக்கு ஈசுரன் திருவுளத்திலே உண்டு;

இதை அறுபத்து நாலு பங்காக ஒவ்வொன்றிலே எவ்வெட்டுப் பங்காகப் பலதாரதன்மயத்தினாலே அறுபத்து நான்காம். இத்தனையும் இரண்ய கெற்பத்திற்கு உண்டு; இதிலே எட்டிலே ஒருபங்கு குறைச்சலாக ஐம்பத்தாறும் சிருட்டி கர்த்தாவான நான்முகப் பிரம்மாவுக்கு உண்டு; இதிலே ஒரு பங்கு எட்டுக்குணம் குறைய நாற்பத்தெட்டும் சோமனுக்கும் சோம லோகத்திலே மற்றும் அணிமாதி சத்தியுடைய பேர்க்கும் இவ்வாறே உண்டு.

இதிலே ஒரு பங்கு எட்டுக்குணம் குறைய முப்பத்தி ரண்டும் கந்தர்வரிலே சித்தியடைந்த பேர்களுக்குண்டு; இதிலே ஒருபங்கு எட்டுக்குணம் குறைய இருபத்து நாலும் அட்சலோகத்திலே சித்தியடைய பேர்களுக்குண்டு; இதிலே ஒரு பங்கெட்டுக் குணம் குறைய பதினாலும் அரக்கருடைய வுலகத்திலே சித்தியடைய பேர்களுக்குண்டு; இதிலே ஒரு பங்கு எட்டுக்குணம் குறைய எட்டும் பசாச பதத்திற் சித்தி யுடைய பேர்களுக்குண்டு;

**இனி அதன்ம பேதம் பத்தாவன:-** நிஷித்த வீங்கிசை, பாத்திர வியாபகாரம், அசத்தியம் சொல்லுகை, குருதாரக மனம், தனக்கபகாரம் பண்ணினவனுக்குத் தானும் திரும்பப் பிறத்தியபகாரம் பண்ணுகை, கோபம், நித்திய கன்மாதி லோபம், அசுசி, அசந்தோஷம், வக்கிரத்துவம் இவை பத்துக்களிலே பிரவிருத்தி பண்ணுகை;

இவ்வாறு அதன்மத்திலே பிரவிருத்தி பண்ணினவன் ஈசுராக்கினையினாலே பிரவிர்த்திப்பன், அந்த அஞ்ஞானம் அஞ்சுவிதமாம் அவையாவன வருமாறு:-

தமசு, மோகம், மாமோகம், தோமிச்சிரம், அந்ததாமிச்சிரம், இவற்றில் தாமிச்சிரமாவது அநாத்மாவாகிற தேகாதிகளை ஆன்மா வென்று புத்தி பண்ணுகை; அதுதான் நாலுபூதசையோகமே ஆன்மாவென்று சொல்லுகிறதொன்று, ஆகாசங்கூட ஐந்து பூதமும் ஆன்மா வென்கின்றதொன்று; ஞான விந்திரிய மொன்றுமே ஆன்மா வென்கின்றதொன்று;

பஞ்சதன் மாத்திரையே ஆன்மா வென்கின்றதொன்று; மனமே ஆன்மா வென்கின்ற தொன்று, ஆங்காரமே ஆன்மா வென்கின்ற தொன்று; புத்தியே யான்மா வென்கின்ற தொன்று; பிரகிருதியில் அதோ பாகமான சித்தமே ஆன்மா வென்கின்ற தொன்று; புருட தத்துவமே ஆன்மா வென்கின்ற தொன்று; இவ்வாறு பத்து.

**மோகம் எட்டுவிதமாயிருக்கும்** அணி மாதி சித்தியே பரப்பிரயோசன மென்கிறது; எட்டினாலும் விட்டு விதம் என்று சொல்லப்பட்டது;

**மாமோகமாவது** சத்து முதலான அஞ்சு விடையங்களும் அதிமானுஷ கிர்த்தியமாகத் தேசாந்தரத்திலே சொல்லும் சத்தங்களைக் கேட்ப துண்டாயும் சித்தியினும் தேவலோக மளவும் சத்தாதிகளைக் கிறிக்கையினாலும் இவ்வாறு பூலோகத்திலே சித்தி பத்துமே பரப்பிரயோசன மென்கிற மாமோகம்.

**தாமிச்சுரமானது** திவ்வியாதி திவ்விய பேதத்திலே சத்த முதலானவைகள் பத்தும், அணிமாதி சித்திகள் எட்டும் பெற்று அதிலே மிகவும் அநிவேசம் பண்ணுதல் ஆக அஞ்ஞான பேதம் அறுபத்து நான்கு.

**அனவராக்கியமாவது** வைராக்கிய குணப் பிரதியோதி யான வதுட்டியாதி நூறு குணத்தையுமுடைத்தாய்க் குற்சிதப் பொருட்களினாலும் குற்சை வாராமல் இச்சையால் பண்ணு விக்கும்.

**அநைஸ்வரியமாவது**:- அயிஸ்வரிய குணப் பிறகு யோதியான (பிரதி யோகியான) எட்டுக் குணத்தையு முடைத்தாய் நூற்றெழுபத்து பேதமுமாய் என்றிதன் பொருள்.

மேல் ஆங்கார தத்துவ தரிசனம் கூறுகின்றது.

ஆனதனு அதனில்உறும் அநிலனையும் இயக்கி
ஆங்காரம் நீங்காத அகந்தைக்கு வித்தாய்
யான்அலது பிறர்ஒருவர் எனைஒப்பார் புவியில்
இல்லையெனும் இயல்பினதாய், இந்திரியம் புலன்கள்
தான்நுகரும் அளவில்அதில் முந்தியுறும் இச்சை
தான்உருவாய்ச் சங்கற்ப சதாகதியும் தந்து,
மானதமா னதுநிற்கும்; சிந்தைநினைவு ஐயம்
வந்துதரும் மனம்ஒழிய வகுப்பொ னாதே. (43)

**ஆனதனு அதனில் உறும் அனிலனையும் இயக்கி ஆங்காரம் நீங்காத அகந்தைக்கு வித்தாய் யான் அலது பிறர் ஒருவர் என்னை ஒப்பார் புவியில் இல்லை எனும் இயல்பினதாம்:-** ஆங்காரமானது கன்மாதீனமாக உண்டான தேகத்திலே பிராணாதி வாயுக்களையு மியக்கிக் கொண்டு பிரியாத யான் எனது என்னும் இடும்பைக்கு மூலமாய் எனக்குச் சரியாகப் புவியில் மற்றொருத்தர் இல்லை என்னும்படிப் பண்ணிக்கொண்டு பிரத்தியான்ம நியதமா யிருக்கும்; முன்சொன்ன புத்தி தத்துவ மல்லாமல் ஆங்கார தத்துவ மல்லாமல் ஆங்கார தத்துவ மொன்றைச் சொல்லுவானே னென்னில்? புத்தியானது ஞானான்மாவாய் இது இவ்வாறென்று பதார்த்தங்களைப் பிரத்தியேகம் பேதமாகப் பரிச்சேதம் பண்ணுவது.

ஆங்காரமென்பது அவனவன் நாநானென்பதாகவே ஏக ரூபமாயிருக்கும். ஆங்காரம் கிரியா ரூபங்களாகப் புறத்தியில் விடயங்களைக் கிரகிப்பதாயிருக்கும். புத்தியானது நிறையமா (நிர்ணயமா) யிருக்குமாகையால் இரண்டும் ஒன்றென்று சொல்லப் போகாது.

ஆகில் எல்லா ஆன்மாக்களுக்கும் சாதாரணமாக ஆங்கார மொன்றே அமையாதோ? பிரதி புருஷ நியதமென்? அகமென்கிற சத்தம் ஒன்றே ஆகையாலென்னில் எல்லாப் பதார்த்தங்களிலும் இது இது என்கிற ஞானம் ஒன்றேயாகை யால் அப்பதார்த்தெங்களெல்லாம் ஒன்றாகாமற் பிரத்தியம்ச பேதமாகக் காண்கையினாலும் மற்றும் அநேகங் கும்பங் களிலே கும்பம் கும்பம் என்றும் ஞானம் உண்டாயிருக்கவும் எல்லாக் கும்பங்களும் ஒன்றாய்க் காணப்படவில்லையே.

அப்பபடியே ஆங்காரம் உற்பத்தியான்ம நியதம் ஆகையினாலே ஒருவன் நான் பொறேனென்றும், ஒருவன் நான் பற்றுகிறேனென்றும் புத்தியுண்டாகையினாலே பேதமே யாக வேணும்; அப்படி யாகாமலிருக்கையால் பிரத்தியான்ம நியதமாயேயிருக்க வேணும். இது எல்லாச் சனங்களினாலும் அறியப்படுமது.

இன்னும் ஆங்காரம் ஒன்றே யாமாகில் ஒருவன் நான் வேவதத்தன் என்கிற பொழுதும் பிறரொருத்தன் தேவதத்தன் அல்லாதவனும் நான் தேவதத்தனுமாம் என்று சொல்ல வேணும். இப்படியாகாமலிருக்கையினாலே ஆங்காரம் பிரத்தியான்ம நியதமே;

**இந்திரியம் புலன்கள் தான் நுகரும். அளவில் அதில் முந்தி உறும் இச்சைதான் உருவாய் சங்கற்ப சதா கதியும் தந்து மானதமானது நிற்கும்:-** ஆங்காரத்திலே இச்சாரூபமான மனந் தோன்றிச் சோத்திராதி இந்திரியங்கள் சத்த முதலான விடயங்களைக் கிரகிக்கும் பொழுது முந்தி போய்ப் பற்றிச் சங்கற்ப விகற்பத்துடனே சந்ததம் வியாபாரத்தைப் பண்ணிக் கொண்டு நிற்கும்.

புத்தி, ஆங்காரங்கள் என்றிரண்டு தத்துவமிருக்க மன மென்றொரு தத்துவத்தைச் சொல்ல வேண்டுவதே தென்னில்? சங்கற்ப விகற்பமானது புத்தியினாலும் ஆங்காரத்தினாலும் ஆகாது; புத்தி நிச்சயான்மகமாகையினாலும் ஆங்காரம் சிராக்கம் ஆகையாலும் இந்தச் சங்கற்ப விகற்ப ரூபமான ஞானம் மானதமே,

கண்ணிலே காணப்பட்ட பதார்த்தத்தைப் பற்றிப் புத்தி கோசரமாகப் பண்ணுவது யாதொன்றுண்டு அது மனம். மனம் பற்றின விடயத்தைப் புத்தி நிச்சயிப்பதன்றித் தனியாகப் பண்ணுமாகில், ஆன்மா படத்தைப்பற்றின பொழுது புத்தி கடத்தை நிச்சயம் பண்ணவேணும்.

மற்றுங் கழுத்தில் னாரையுடைத்தாயிருக்கிற தேகத்திலே பசுவென்கிறதற்குப் பொருள் என்றறிந்து பலகாலும் அப்படிப்பட்டிருக்கிற தேகத்தைக் கண்ட விடத்திலே இதுவும் பசுவென்று சொல்லப்படும் என்கிறதற் கேதுவாக யாதொன்று நினைக்கிறது அதுவே மனம்.

சிலர் ஒவ்வொன்றாகப் பதார்த்தங்களை அடைவிலே பற்றி அறிகையினாலே மனத்தை அணுவென்றும் விபுவாமாகில் ஏக காலத்திலே எல்லாவற்றையும் பற்றி அறிய வேணுமென்றுஞ் சொல்லுவார்கள்;

அஃதப்படியன்று, கன்மானு குணமாக அடைவிலே ஞானமுண்டாம்; சித்து ரூபமாகிய ஆன்மாவுக்கு அடைவிலே ஞானமுண்டாமென்ப தென்னையே வென்னில்? விளக்கானது பொருள்களைக் காட்டுகிறபொழுது, அதனுடைய பிரகாசம் எவ்வளவுண்டாயிற்று அவ்வளவே காணப்படும்.

அப்படியே மனம் விபுவாமாகையினாலே பெரிய பதார்த்தங்களையுங் கிரகிக்கும் மகத்தாயிருந்து மகத்தான பதார்த்தங்களைக் கிரகிக்கு மென்னில், அற்பத்தைக் கிரகிக்கையினாலே மனம் அணுவே என்னில், அப்படியன்று; மகத்தாயிருக்கிற சூரியப் பிரகாசத்திலே அற்பமும் கிரகிக்கப்படும் ஆகையினாலும் அற்பமாகிய தீபப் பிரகாசத்திலே மகத்துக் கிரகிக்கப்படாமலிருக்கையாலும் மனம் மகத்தும் பிரதி புருஷ நியதமும் ஆகில், மனமும் ஆங்காரமும் புத்தியும் இவை மூன்றும் கூடிப் பொருணிச்சயத்தைப் பண்ண வேணுமென்றும் சிலர் சொல்லுவார்கள்;

கிரமத்திலே மனம் பற்றவும் ஆங்காரங் கிரகிக்கவும் புத்தி நிச்சயிக்கவும்படும் என்று சிலர் சொல்லுவார்கள். இவ்விரண்டிலே அங்கீகாரம் ஏதென்னில்? மனமானது முதல் பற்றிச் சந்தேகான்மாவாயிருக்கையினாலும், ஆங்காரமானது அபிமானகக் கிரகிக்கையினாலும் புத்தி நிச்சயிக்கையி னாலும்

அடைவிலே என்னும் பட்சமே அங்கிகாரியம் ஆகில், ஞானமானது எங்கும் அனுவிருத்தியாயிருக்கையினாலே புத்தியும் எல்லாவிடயத்தை யுடைத்தாயிருக்கும் கிரகங் கூடாதென்னில், அஃதப்படியன்று, அந்தப் புத்தியானது சடமாகையினாலே, அந்தப் புத்தி முதலான கரணங்களினாலே யெல்லாஞ் சிற்சத்தியே அனுவர்த்தித்திருப்பது;

**சிந்தை நினைவு ஐயம் வந்து தரும் மனம் ஒழிய வகுப் பொணாதே:**- சித்தமானது அவ்வியத்தத்திலே உண்டாய்ச் சற்றே சந்தேக நினைவுமுண்டாயிருக்கும்; அந்தச் சிந்தை மனத்துடனே அல்லது பிரிந்து காணப்படாது என்றிதன் பொருள்.



சொன்னமுறை செவிதுவக்கு நோக்கு நாக்குத்
துண்டம்இவை ஐந்திற்கும் தொகுவிடயம் ஆக
மன்னியசத்து அப்பரிச ரூபரச கந்தம்
மருவியிடும் இவைஅடைவே; வாக்குப் பாதம்
பின்னர்வரு பாணிமிகும் பாயுவினோடு உபத்தம்
பேசலுறும் ஐந்திற்கும் பிறங்கொலிகொள் வசனம்
உன்னரிய கமனதான விசர்க்க அனந்தம்
உற்றதொழில் பெற்றிடுவது உண்மை யாமே. (44)

**சொன்னமுறை செவி துவக்கு நோக்கு நாக்கு துண்டம் இவை ஐந்துக்கும் தொகுவிடயம் ஆக மன்னிய சத்தப் பரிச ரூப ரச கந்தம் மருவியிடும்**:- தைசதாங்காரத்திலே தோன்றும் என்று சொன்ன சோத்திரம் துவக்குக் கண் நாக்கு மூக்கு இவை ஐந்துக்கும் அடைவே விடயமாக சத்த பரிச ரூப ரச கெந்த மானவைகள் பொருந்தியிடும்.

ஆகாசத்திலே உண்டான சத்தத்தை அறிவிக்கிற சோத்திரம் ஆகாசான்யமகமே துவக்காதிகளும் அப்படியே; ஆகையினால் பஞ்ச பூதங்களினும் பஞ்ச விந்திரியங்களும் உண்டாகிப் பஞ்ச விடயங்களையும் அறிவிக்குமென்னப் போதும்; ஆங்காரத்திலே ஞானவிந்திரியங்கள் தோன்றிற் றென்று சொல்லுவானேன் என்னில்? பூதங்களினாலே பஞ்ச விந்திரியங்களும் கடாதிகளைப் போல உருவத்தையுடைய தாம். அவ்வாறாகில்,

ஒவ்வோரிந்திரியம் மற்ற விந்திரியங்களினாலே கிரகிக்க வேண்டும் உருவத்தையுடையதாகையால் அப்பிரத்யேகம் அவத்தானமும் வேண்டும், மூர்த்தி யந்தரத்தினாலே ஆவரிக் கப்படுகையினாலே மூர்த்திமானாயிருக்கிற வத்துவுக்குக் கிரகணம் வாராது; அஃதெப்படியென்னில்? பிரகாசமான படிகத்துக்குள்ளே யிருக்கிற பொருளைக் கண்ணானது கிரகியாதது போலவும், உட்டனா சலத்தில் அக்கினியைக் கண்ணானது கிரகியாதது போலவும் ஆகையினாலே, கண்ணானது தேசோ பூதத்திலுற்பனமல்ல; இவ்வாறு தேசோ

பூதத்திலே யுற்பன்னமாய் மூர்த்தமாகில் காணப்படாது. அதனால் ஆங்காரத்திலே உற்பவித்து அமூர்த்தமாயிருக்கு மென்கையினாலே, அப்பொழுது சுவருக்குள்ள யிருக்கிற பதார்த்தையும் கிரகிக்க வேணுமென்னில், அஃதப்படியல்ல;

சுவராகிறது சொச்சத் திரவிய மன்றியில் தாமதவத்து வாய்க் கெதிலைந்தனாக னாயினாலுங் (எழுத்துப் புரியவில்லை) கிரகியாது காணப்படுகிற பொருளுக்குங் காண்பிக்கிற இந்திரியங்களுக்கும் ஏகாசாதியாக வேணுமென்று சொன்னது சித்தாந்தமல்ல;

சொச்சத் திரவியமல்லாதிருக்கிற கடகதக கிரியைகளும் கடசாதியும் கண்ணுக்கு விடையமாகையினாலே வியங்கிய வியஞ்சதங்களுக்கு ஏக சாதியுமில்லை இதனால் கண்ணானது தேசோரூபம் என்கிறதற்கும் உருவத்தையே கிரகிக்கும் என்கிறதற்கும் ஆனி இல்லை. அஃதெப்படி என்னில் ? தாமத அகங்காரத்திலே யற்பனமான உருவதன் மாத்திரையின் காரியமான அக்கினிக்கும் பிரகாசமுண்டாயிருக்கையினாலே தைசதாங்காரத்தினாலே சாட்சா பெனனமான (எழுத்துப் புரியவில்லை) கண்ணிலிந்திரியத்துக்கும் பிரகாச ரூப முண்டென்கிறத்துக்குச் சந்தேகமில்லை. கிரியா சாதியைக் கிரகிக்கையால் கண்ணுக்கு ரூபத்துக்கே விடய மென்கிறதற்கு ஆனி என்றீராகில் உம்முடைய பட்சத்திற்குஞ்சரி கண்ணானது அடையப்படுகிறதாயிருக்கிற பொருளை ஒழிய கிரசியா தாகையினால் சுவர் முதலாயிருக்கிற மறைவுகளிலே யிருக்கிறதைச் கிரசியாதென்கிறது சொல்லலாம் உண்மையே இப்படியே இந்திரியங்களெல்லாம் அடைந்த பொருள் களைக் கிரகிக்கும்.

**இவை அடைவே வாக்குப் பாதம் பின்னர் வரும் பாணி மிகு பாயுவினோடு உபத்தம் பேசலுறும் ஐந்துக்கும் பிறங்கு ஒலி கொள் வசனம் உன்னரிய கமனதான விசர்க்க ஆனந்தம் உற்ற தொழில் பெற்றிடுவது உண்மை ஆமே:-** வாக்குப் பாதம் பாணி பாயுரு உபத்தங்கள் ஐந்தும் அடைவே சோத்திரமானது சத்தத்தைக் கேட்கில் வாக்கு ஆகாசமிடமாய் நின்று வசனிக்கும்;

துவக்கானது பரிசத்தை அறியில் பாதம் வாயுவினிடமாய் நின்று கன்மத்தைப் பண்ணும்; கண்ணானது உருவத்தைத் தெரிசிக்கில் பாணியானது தேயுவினிடமாய் நின்று இடுதலை ஏற்றலைச் செய்யும்; சிங்குவையானது இரசத்தைக் கிரகிக்கில் அப்புவினிடமாக நின்று விசர்க்கத்தைப் பண்ணும்; மூக்கானது மணத்தைக் கிரகிக்கில் உபத்தமானது பிருதிவியினிடமாக நின்று ஆனந்தத்தைப் பண்ணும்.

ஞான விந்திரியங்கள் ஐந்தும் கன்ம விந்திரியத்துக்குச் சகாயமாயிருக்கும்; கன்ம விந்திரியங்களைந்தும் ஞான விந்திரியங்களுக்குச் சகாயங்களல்ல. இவ்வாறு ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் ஆன்மாவினுடைய ஞானக்கிரியா சத்தி வியாபாரத்தைத் தோன்றப் பண்ணுகிறவைகளாம் என்றிதன் பொருள்.

முந்தியஐம் பூதங்கள் வான்ஆதி ஆக
முயங்கியநல் செவிநாசி கண்நாமெய்ம் முறையால்
இந்தவயின் நின்றுவரும் ஐம்புலனும் உயிர்தாம்
எய்தும்வகை தம்உருவில் இலங்கியிடும்; புறத்து
வந்தடைய இடம்கொடுக்கும் நிரந்தரமாய் வானம்;
வாயுமிகச் சலித்தெவையும் திரட்டும்தீ வெம்மை
தந்தவைசுட்டு ஒன்றுவிக்கும்; நீர்குளிர்ந்து பதமே
தரும்;உரத்துத் தரிக்கும்இது தரணி தானே. (45)

**முந்திய ஐம்பூதங்கள் வான் ஆதி ஆக முயங்கிய நல் செவி நாசி கண் நா மெய்ம் முறையால் இந்த வயின் நின்று வரும் ஐம்புலனும் உயிர்தாம் எய்தும் வகை தம் உருவில் இலங்கியிடும்:-** முன்னே தோன்றின ஆகாசாதியான ஐந்து பூதங்களிலும் அடைவே சோத்திரமானது தேகாகாசமிடமாய் நின்று சத்தத்தை அறிவதாம்;

சிங்குவையானது தேகத்தில் அப்புவினிடமாக நின்று இரசத்தை அறிவதாம்; மூக்கானது தேகத்தில் பிருதிவியினிட மாக நின்று கந்தத்தைக் கிரகிப்பதாம்; இவ்வாறு அசாதாரண பூதங்கள் ஐந்திடமாய் ஞான விந்திரியங்கள் ஐந்தும் நின்று சத்தாதி விடயங்கள் ஐந்தையும் மாற்மாத்தங் றாருவினாலே அறியும் வகை செய்யும்.

**புறத்தும் வந்து அடைய இடம் கொடுக்கும் நிரந்தரமாய் வானம் வாயு மிகச் சலித்து எவையும் திரட்டும் தீ வெம்மை தந்து அவை சுட்டு ஒன்று விக்கும் நீர் குளிர்ந்து பதமே தரும் உரத்துத் தரிக்கும் இது தரணிதானே:-** சாதாரணமான பஞ்ச பூதங்களும் புறம்பே வாயுவாதி நாலு பூதங்களுக்கும் புவனச தேகங்களுக்கும் அவகாசத்தைக் கொடுத்து வெளியமா யிருக்கும் ஆகாசம்;

வாயுவானது சந்ததம் சலன சத்தத்தை உடையதாய் லகுவாகிய பொருட்களைத் திரட்டும்; அக்கினியானது உட்டணத்தையும் பண்ணிப் பஞ்சலோகங்களையும் உருக்கி ஒன்றப்பண்ணும்; அப்புவானது குளிர்ச்சியு முடைத்தாய் மன முதலானவைகளைப் பதம் பண்ணும்; பிருதிவியானது கடினமுமாய்த் தாரகமுமாயிருக்கும் என்றிதன் பொருள்.

இந்நிலையில் ஐந்துசுத்தம்; ஏழ்சுத்தா சுத்தம்;
எண்மூன்றும் அசுத்தம்எனும் இவைமுப்பத்து ஆறாம்
மன்னியதத் துவங்களிடை மயங்கிநெடுந் துயர்தாம்
மருவும்உரு நிலைஅழிய வரும்பொழுது, வரிஆர்
பன்னகம் அண்டசம்கனவு படர்வகையே, முன்னம்
பகரவரும் கலாதிநிலை பரவிய சூக்குமம்ஆம்
தன்னுருவில் அணைந்துபயன் அருத்திஅரன் அருளால்
தரையினிடை வரும்என்று சாற்றும் நூலே. (46)

**இந்நிலையில் ஐந்து சுத்தம் ஏழ் சுத்தா சுத்தம் எண் மூன்றும் அசுத்தம் எனும் இவை முப்பத்தாறா மன்னிய தத்துவங்களிடை:-** *இவ்வாறு அடைவே சுத்தமாகச் சொல்லப் பட்ட நாதம் விந்து சாதாக்கியம் மகேசுரம் சுத்தவித்தை என்னும் சுத்த தத்துவமும், அசுத்த மாயையில் காலம் நியதி கலை வித்தை இராகம் புருடன் பிரகிருதி என்னும் ஏழு தத்துவமும்;*

*பிரகிருதியிலே உண்டான சித்தம், புத்தி, ஆங்காரம், மனம், சுத்தம் பரிசம், ரூபம், ரசம், கந்தம், சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதவு என்னும் இருபத்தினாலும் ஆக முப்பத்தாறாகப் பொருந்தும் தத்துவங்களிடை;*

*தத்துவமென்றது புவன தேகங்களைப் போலத் தோன்றி அற்ப காலங்களிலே அழியாது பிரளயமளவும் நிலை பெற்றுள்ளதாகையால் என அறிக. பிரளயத்திலேயாகிலும் நாசம் வருகிறதற்குத் தத்துவ மென்கின்றபேர் எவ்வா றென்னில்?*

*மானுடர் மரிக்கிற பேராகையினாலே தேவர்களுக்கு அமரரென்கின்றபேர் உண்டானாப் போலத் தாத்துவிகமான சரீரத்தைக் குறித்து நாதமுதல் பிருதிவி மட்டும் முப்பத் தாறுக்கும் தத்துவமென்று பேர் சொல்லப்பெறும்.*

**மயங்கி நெடும் துயர் தாம் மருவும் உரு நிலை அழிய வரும்பொழுது**:- இவ்வாறு முப்பத்தாறு தத்துவங்களினும் கட்டுப்பட்டு அதனாலே, "லாகிரித் திரவியத்தைப் புசித்தவன் தன்னையும் பிறரையும் அறியாமல் மயங்கினது போல" ஆன்ம ஞானம் விவேகமன்றி நெடுந்துயரைப் பொருந்தும் தேகமானது அழிய வருங்காலத்து;

**வரி ஆர் பன்னகம் அண்டசம் கனவு படர் வகையே முன்னம் பகர வரும் கலாதி நிலை பரவிய சூக்குமம் ஆம் தன் உருவில் அணைந்து பயன் அருந்தி அரன் அருளால் தரையினிடை வரும் என்று சாற்றும் நூலே**:- தூல தேகத்தை விட்டுச் சூக்கும தேகத்துடனே ஆன்மாப் போமாறு பாம்பு பாசங் (தோல்) கழற்றிப் போமது போலவும்; சொற்பனத்திலே தூலதேகமன்றிச் சூக்கும தேகத்திலே அனுபவமுண்டானது போலவும்; முன்னே சொன்ன கலாதிகளினாலே சிவாக்கினையிலே சுவர்க்க நரக சேடமான பிராரத்தங்களைப் புசிப்பதாகப் பூமியிடனிடத்திலே தூலதேகத்தை எடுக்குமென்று சிவாகமம் சொல்லுமென்றிதன் பொருள்.



தோற்றியிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கில்,
ஊற்றம்மிகு தாபரங்கள் பத்தொன்பது என்றும்,
ஊர்வ பதினைந்துஅமரர் பதினொன்றொடு உலவா
மாற்றரு நீர்உறைவானநல் பறவைகள் நாற்காலி
மன்னியிடும் பப்பத்து, மானுடர் ஒன்பதின்மர்[1]
ஏற்றியொரு தொகைஅதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ றாயிரம்என்று எடுத்தே. (47)

பாடபேதம்: 1. ஒன்பதுமாக, ஒன்பதுமா

இனிச் சகலராகிய ஆன்மாக்கள் சனிக்கும் யோனி பேதங்கள் முட்டையிலே தோற்றுவனவும், கசிவிலே (வேர்வை) தோற்றுவனவும், விந்திலே தோற்றுவனவும், பையிலே தோற்றுவனவும் ஆக இந்த நாலு வகையிலே தாபர பேதங்கள் பத்தொன்பது நூறாயிரமாகவும், ஊர்வன பதினைந்து நூறாயிரமாகவும், தேவ பேதங்கள் பதினொரு நூராயிரமாகவும், சலசரங்கள் பட்சிகள் நாலுகாற் செந்துக்கள் இவைகள் மூன்றுவகையும் ஒவ்வொன்று பத்து நூறாயிரம் பத்து நூறாயிரமாகவும் மனுடர் பேதங்கள் ஒன்பது நூறாயிர மாகவும் இவைகள் இவ்வாறு சொன்னவைகளெல்லாம் தொகையில் எண்பத்து நான்கு நூறாயிரமாம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள் என்றிதன் பொருள்.

இனையபல பிறவிகளின் இறந்துபிறந்து அருளால்
இருவினைகள் புரிந்தருந்தும் இதுசகலம்; அகலா
முனம்மருவும் இருபயனும் ஒருகாலத்து அருந்த
முந்துநுகர் உந்துபயன் அந்தம்உற வந்த
வினையும்எதிர் வினையும் முடிவினைஉதவு பயனால்
நேராக, நேர்ஆதல் மேவுங் கால்முன்
சினம்மருவு திரோதாயி கருணை ஆகித்
திருந்திய சத்திநிபாதம் திகழும் அன்றே. (48)

பூர்வத்தில் பண்ணின பாவங்களாகிய கன்மங்கள் பிராச்சித்தம் முதலானவைகளினாலே நீங்காமல் அதனால் பிரசுரத்த தேகத்திலே புண்ணியத்தில் அதிகமான அசுவ மேதத்தினுடைய பலமும், பாவங்களில் அதிகமான பிரமகத்தியினுடைய பலமும் ஏக காலத்திலே சம பலமாகப் புசிக்க வந்த காலத்திலே, இனிமேல் தேகத்தையெடுத்துச் சுக துக்கங்களை அனுபவிக்கத் தக்க புண்ணிய பாவங்களு மில்லாமல் சஞ்சிதமாகிய கன்மமும் தற்காலத்திலே பக்குவ மாய ஆணவ மலமும் பரிபாகமானால் முன்கோபம் போல் ஆன்மாவை அதோமாயையிலும், நியமித்துச் செனன மரணங் களையும் சுக துக்கங்களையும் பொருந்துவித்த திரோதாயி சத்திதானே ஆன்மாவினிடத்திலே கிருபையைப் பண்ண, விளங்கப்பட்ட பராசத்தி பரிசம் பொருந்தும்.

கன்ம சாமியமான பொழுது ஆன்மாக்களுக்கு அனுக் கிரகம் என்றது எப்படி? கன்மசாமியம் போகத்திலே வரவேணும். விஞ்ஞான கலர்க்குக் கன்மமேயில்லாத படியினாலே கன்ம சாமியமில்லையாகையால் அனுக்கிரகங் கூடாதென்ன,

விஞ்ஞான கலர்க்கு அனுக்கிரகத்தினாலே சத்தினி பாதம் உண்டாம். சத்தினி பாதத்திலே அனுக்கிரக மென்கின்ற வசனத்துக்குக் கெதி ஏதென்னில்?

அக்கன்ம சாமியரும் மலபரிபாகமும் கூடச் சத்தினி பாதத்திலே காரணமென்றது சகலற்கே; அந்த விலட்சணம் மேற்கூறுகின்றது.

சகலற்கு யிருவினை யொப்புப் பிறந்தும், மேல் வருகிறதாயிருக்கிற தேகத்துக் கேதுவான கன்மமுண்டமாகில் சிவனுடைய அனுக்கிரகத்திற்கு விடையமல்ல; பின்னை எவ்வாறென்னில்? மேல் வருகிற தேகத்துக்கென கன்ம மில்லாமல் தன்னால் பண்ணப்பட்ட கன்மத்துடனே கூட ஆணவமலமும் பரிபாகமாகில், அனுக்கிரகத்திற்கு விடைய மாவார்கள்.

கன்ம சாமியமும் இதர கன்மங்களுடைய பல பக்குவமும், மல பரிபாகமும் சத்தினி பாதத்திற்குக் காரண மென்கையால் இப்படிச் சொன்னது சகலர்க்கல்லது விஞ்ஞான கலர்க்கு மலபரிபாகமே காரணமென்பது கூறுதல் எல்லா ஆன்மாக்களுக்கும் கன்ம சாமியமே சிவனுடைய அனுக்கிரகத்திற்கு ஏதுவாமாகில் அக்கன்ம மில்லாத விஞ்ஞான கலர்க்குக் கன்ம சாமியமெவ்வாறு ?

இஃதனிறிச் சகலர்க்குச் கன்ம சாமியமே காரணமல்ல; அஃதெவ்வாறென்னில்? கன்ம சாமிய முண்டாகிலும் இதர கன்மங்களுக்கெல்லாம் பரிபாகமில்லாத பொழுது விருத்த மாயிருக்கிற அந்த இரண்டு கன்மங்களன்றியில் மற்றைக் கன்மங்களுடைய பலத்தைப் பொசிப்பிக்குமாகையினாலே கன்ம சாமியமே காரணமல்ல; இனிக் கன்ம சாமியமுமாயது வல்லாத கன்மங்களுக்கும் ஆணவத்திற்கும்; பக்குவமானால், அந்த ஆன்மாவினிடத்திலே கன்ம சாமியமே காரணமல்ல.

மேலும், கன்மமானது மூன்று விதமென்றும் அதனுடைய பலோதயம் இவ்வாறென்றும் கூறுகின்றது. கன்மமானது திட்ட சென்ம போக்கியமென்றும், அதிட்ட போக்கியமென்றும், நியத கால போக்கியமென்றும் மூன்று விதமாயிருக்கும்; அவற்றுள் திட்ட சென்ம போக்கியமானது

மந்திர மகிமையினாலே கௌளுச்சியாதி யோம சித்தமா யிருக்கிற ஆரியோகாதியானது அந்தச் சென்மத்திலே தானே பலத்தைக் கொடுக்கும்.

தேகாந்தத்திலே தேவலோகத்தை அடைந்து சுகத்தைப் புசிப்பதற் கேதுவான புண்ணியமும், அவீசி முதலான நரகத்தை அடைந்து துக்கத்தை அனுபவிக்கப் பண்ணும் பாவமும் இவை இரண்டும் அதிட்ட போக்கியங்கள்.

அசுவ மேதத்தினுடைய பலமும் பிரம்மகத்தியி னுடைய பலமும் நியதி கால போக்கியங்களாம். ஆகிலும் இந்த இரண்டு கன்மத்துள்ளே ஒரு கன்மம் பக்குவமான கலாத்திலே மற்றைப் பலங்கள் பக்குவமாகில் அந்தக் காலத்திலே அந்த மற்றைக் கன்மங்களைத் தள்ளித் தன்னுடைய பலத்தையே புசிப்பிக்கையினால் இவைகளே நியத காலமென்று சொல்லப்படும். இந்த இரண்டு கன்மங் களும் ஒரு காலத்திலே பாகமாகில் ஒன்று சுவர்க்கத்திலும் ஒன்று நரகத்திலும் அனுபவிக்கிற தாகையால் இரண்டு பலத்தையும் ஒரு காலத்திலே அனுபவிக்கக் கூடாதாகையால் இரண்டு பலத்தையும் ஒரு காலத்திலே அனுபவிக்கக் கூடாதாகையால் இவையிரண்டில் அதிக பலத்தைக் கொடுக் கிறதாயிருக்கிற கன்மமானது தனக்கு எதிராளியான கன்ம பலத்தைத் தள்ளித் தன்னுடைய பலத்தைப் புசிப்பிக்கும்.

இந்தக் கன்மபலம் போகத்தினுடைய முடிவிலே மற்றைக் கன்மங்களாயிருக்கிறவைகளைத் தள்ளி எதிராளி யான கன்மம் தன்னுடைய பலத்தைப் புசிப்பிக்கும். அசுவ மேத புண்ணியமும், பிரமகத்தி பாதகமும் இவ்விடத்திலே காலத்தினாலும் பலத்தினாலும் சமமாகில் ஒன்றை யொன்று தள்ளப் பலமில்லாதபடியாலே இரண்டு புசிப்புமில்லை; அப்பொழுது மற்றைக் கன்மங்களுடைய பக்குவமும் மல பரிபாகமுமாகில் சத்தினி பாதமாம்; அந்தப் புண்ணிய பாவமிரண்டும் சமமான காலத்திலே புண்ணியத்திற்காவது பாவத்திற்காவது தன்னுடைய கன்மந் தற்காலத்திலே பக்குவமாய் வந்து கூடில் அதுவே வலுவாய்த் தன்னுடைய பலத்தை முநதப் புசிப்பிக்கும்.

மற்றையது இந்தக் கன்மத்தினுடைய பல போகாந்தத்திலே தன்னுடைய பலத்தைப் புசிப்பிக்கும். அப்படியே இகத்திலே போலப் பரத்திலே முன்சொன்ன அசுவமேத பிரம்மகத்திகள் சமமாகில் ஈசுர சத்தியானது இரண்டையும் நசிப்பித்துச்சமமல்லாமலிருக்கிற மற்றக் கன்ம பலங்களைப் புசிப்பிக்கும். எல்லாக் கன்மங்களும் சமமாகில் எல்லாக் கன்மங்களையும் நசிப்பிக்கும்.

அதனாலே விஞ்ஞான கேவலனானவன் கன்ம நாசத்தினாலும் ஆணவமல சத்தி பரிபாகத்தினாலும் அனுக்கிரக ரூபையாயிருக்கிற பராசத்தி ஆன்மாவினிடத்திலே பதியும்; அந்தப் பராசத்தி பதியவே ஆன்மாவை அதோ மாயையிலும் அதனுடைய காரியமாகிய பிரகிருதியிலும் அடைவிப்பதாயிருந்த திரோதாயி சத்தியானது திரும்பவும், திரும்பவே சத்தினி பாதமுடைய ஆன்மாவுக்குத் துக்க சாகரமாயிருக்கிற சங்கு சாரத்திலே (சம்சாரத்திலே) நின்றும் சடுதியிலே வயிராக்கிய முண்டாம்;

அசுவமேத பிரம்மகத்தி இல்லாத பேர்க்குச் சத்திநி பாதம் இல்லையோ வென்னில்? புண்ணியங்களுக்குள்ளே அதிகமும் பாவங்களுக்குள்ளே அதிகமும் இவையிரண்டும் ஆகையால், சொன்ன மாத்திரம் இவை இரண்டுமில்லாத பேர்க்கும் சுவர்க்கத்தையடைய ஏதுவாயிருக்கிற புண்ணியமும் நரகத்தை அடைய ஏதுவாயிருக்கிற பாவமும், இவையிரண்டும் சமமாகிலும் கன்ம சாமியமென்று சொல்லப்படும். எல்லாக் கன்ம பாகமும் மலபரிபாகமும் உண்டாகில் சத்திநி பாதம் உண்டாம்.

## கூடுமலம் வீடுகின்ற சுத்த வியப்பு

நாடிய சத்திநிபாதம் நாலு பாதம்
நண்ணும்வகை எண்ணரிய ஞான பாதம்
கூடுமவர் தமக்குணவாய் நின்ற ஞானக்
கூத்தன்ஒரு மூர்த்திகொடு குறுகி, மோகம்
நீடிய கேவலசகலம் நிகழா வாறு
நிறுத்திமலம் அறுக்கும்அது நிலையார் சுத்தம்
கேடில்புகழ் தரும்சரியை கிரியா யோகக்
கேண்மைரேல் இவைஉணர்த்தக் கிளக்கும்
நூலே. (49)

**நாடிய சத்திநி பாதம் நாலு பாதம் நண்ணும் வகை எண்ணரிய ஞான பாதம்:**- முன் சொல்லிப் போந்தப்படியே குறிக்கப்பட்ட சத்திநிபாதமானது நாலுவகையாயிருக்கும்.

*நினைத்தற் கரிதாகிய முத்தியைப் பொருந்துவதாகிய ஞான பாதத்துக் கேதுவான சத்திநிபாதத்துக் கேதுவாகிய கன்ம சாமியும் ஒன்றாயிருக்க சத்திநிபாதம் நாலு பிரகாரமா யிருப்பானே னென்னில் ?*

சத்திநிபாதத்துக்குக் கன்ம சாமியம் ஒன்றேயன்றி மலபரிபாகமும் காரணமாகையால் பராசத்தியானது ஆன்மாவிலே எவ்வளவு எவ்வளவு பிரகாசித்து அவ்வளவு அவ்வளவு ஆணவமலம் நீங்கும். ஆதலால் அந்தப் பேதங்களை நாலாகச் சொன்னது.

அவையாவன:- மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்று நாலாம்.

**மந்தமாவது** அற்பாகிய சத்தி பதிகை; அப்பொழுது ஆணவமும் அற்பம் நீங்கும்.

**மந்ததரமானது** அந்த மந்தத்திலும் அதிகமாகச் சத்தி பதிகை; அப்பொழுது மல சத்தியும் அதிகமாக நீங்கும்:

**தீவிரமானது** மந்ததரத்திலும் அதிகமாகப் பத்திப் பதிகை; அப்பொழுது ஆணவமல சத்தியும் அதிகமாக நீங்கும்.

**தீவிரதரமானது** தீவிரத்திலும் அதிகமாகச் சத்தி பதிகை; அப்பொழுது ஆணவமல சுத்தி நீங்கும்.

**கூடும் அவர் தமக்கு உணர்வாய் நின்ற ஞானக் கூத்தன் ஒரு மூர்த்திய கொடு குறுகி மோகம் நீடிய கேவலம் சகலம் நிகழா ஆறு நிறுத்தி மலம் அலுக்கும் அது நிலை ஆர் சுத்தம்**:- இவ்வாறு சத்திநிபாதத்தைப் பெற்ற பேர்களுக்கு அறிவாக நின்ற சிதானந்த நாடகனாகிய சிவன் ஒரு ஆசாரிய மூர்த்தியைத் தனது திருமேனியாகக் கொண்டு கிட்ட நெடு நாளாக மோகத்தைப் பண்ணிக்கொண்டிருந்த கேவலா வத்தையும் சகலாவத்தையும் பொருந்தாத ஆன்மாவைச் சிவத்திலே நிறுத்தி ஆணவாதி மலங்களை அறுக்கும். இப்படி ஆணவாதி மலங்கள் நீங்கிச் சிவத்தில் நின்றது சுத்தாவத்தை.

**கேடில் புகழ் தரும் சரியை கிரியா யோகக் கேண்மை யரேல் இவை உணர்த்தக் கிளக்கும் நூல் ஏ** :- அழிவற்ற கீர்த்தி சுகிர்த்தத்தைத் தரும் சரியை கிரியா யோக நிட்டரான பேர்க்கு இந்த உண்மையைப் போதிக்கலாம்; அல்லாத பேர்க்குச் சோரநிமித்தமாகத் தனத்தை இரட்சிக்குமாப் போல இந்தச் சிவஞானத்தை வெளிசெயாமலிருக்க வேணுமென்றிதன் பொருள்.

## நீடும் இன்ப முத்தி

அரிவையர் இன்புறுமுத்தி கந்தம் ஐந்தும்
அறுமுத்தி; திரிகுணமும் அடங்கும் முத்தி
விரவுவினை கெடும்முத்தி; மலம்போம் முத்தி;
விக்கிரக நித்தமுத்தி; விவேக முத்தி;
பரவுமுயிர் கெடுமுத்தி; சித்தி முத்தி
பாடாண முத்தி;இவை பழிசேர் முத்தி
திரிமலமும் அகலஉயிர் அருள்சேர் முத்தி;
திகழ்முத்தி; இதுமுத்தித் திறத்த தாமே. (50)

இம்மையில் தனக்குப் பிரியமான வனிதையுடனே கூடி அனுபவித்துக் கொண்டிருக்கிறதே முத்தி என்றும்;

உருவம் வேதனை குறிப்பு விஞ்ஞானம் பாவனை என்னும் ஐந்து கந்தமும் நாசமாகிறதே முத்தி என்றும்;

மூன்று குணங்களும் ஒடுங்குவதே முத்தி என்றும்;

எல்லாக் கன்மங்களையும் புசித்துவத் தொலைப்பதே முத்தி என்றும்;

இதுவென்று சொல்லப் போகாத அஞ்ஞான மோசனமே முத்தி என்றும்;

யோக பலத்தினால் நித்திய காயத்தைப் பெற்றிருப்பதே முத்தி என்றும்;

பிரகிருதியையும் புருஷனையும் அறிகிறதே முத்தி என்றும்;

கருவி கரணங்களெல்லா மொடுங்க மிகவுந் துக்கங்களு மில்லாமல் அறிவற்றுப் பாடாணம் போல விருப்பதே முத்தி என்றும்;

இப்படிச் சொல்லுகின்ற முத்திகளெல்லாம் குற்றத்தைப் பொருந்தின முத்தியாயிருக்கும்; இனிப் பரம முத்தியாவது, ஆணவ மாயை காமியமான மூன்றும் நீங்கி ஆன்மா சிவனுடைய கிருபா சத்தி யோகத்தினாலே சிவனுக்கு வேற்றுமையறச் சாட்சாத்காரத்தைப் பெறுவதே முத்தி என்றிதன் பொருள்; சுத்தா சுத்த மாயை யிரண்டும் நீங்குமென்றிதன் பொருள்.

**பொது முற்றும்.**



## உண்மை அதிகாரம்

### (உண்மை கூறல்)

இங்கிவை பொதுஇ யம்பும்
        என்பார்கள்; இதன்மேல் ஆன்மாத்
தங்கிய அஞ்ச வத்ததைக்
        தன்னுண்மை உணர்த்தும் தன்மை
பொங்கொளி ஞான வாய்மை
        அதன்பயன் புனிதன் நாமம்
அங்கதில் அணைந்தோர் தன்மை
        அறைகுவன்; அருளி னாலே. (51)

**இங்கும் இவை பொது இயம்பும் என்பார்கள்:-** இவ்விடத்துக் கீட் சொன்ன ஐம்பது விருத்தமும் சாதாரண மாக பதி முதலான பதார்த்தங்களின் உத்தேச விலக்கண பரீட்சைகளைச் சொன்னது என்று சொல்லுவார்கள்;

**இதன்மேல் ஆன்மா தங்கிய அஞ்சு அவத்தை தன் உண்மை:-** இதற்கு மேல் ஆன்மாவினுடைய உண்மை களையும்;

**உணர்த்தும் தன்மை:-** ஆன்மாவைச் சிவன் அறிவிக்கும் முறைமையையும்;

**பொங்கு ஒளி ஞானம் வாய்மை அதன் பயன்:-** மிகுந்த பிரகாசத்தையுடைய சிவஞானத்தினுண்மையையும் அந்தச் சிவஞானத்தால் உண்டாம் ஆன்ம லாபத்தையும்;

**புனிதன் நாமம் அங்கு அதில் அணைந்தோர் தன்மை:-** சுபாவ நின்மலன் ஆகையினாலே சிவன் என்னும் நாமம்; அவருடைய நாமமாகிற பஞ்சாட்சரம், அந்தப் பஞ்சாட்சரத்தி னுண்மையையும்; அந்த உண்மையை உணர்ந்து அதனாலே அந்தச் சிவனை அடைந்தோருடைய இயல்பையும்;

**அறைகுவன் அருளினாலே:-** இவை எல்லாவற்றையும் குரு அருளினாலே மேற்சொல்லுகின்றேன் என்று இதன் பொருள்.

## ஆன்மா இலக்கணம்

### (உயிர் இயல்பு)

செறிந்திடும் உடலுள் மன்னிச்
சேர்புலன் வாயில் பற்றி
அறிந்துஅதில் அழுந்தும் ஒன்றும்
அறிந்திடாது அறியும் தன்மை
பிறிந்தடை1 வஞ்ச அவத்தை
பெருகிய மலத்தால் பேணி
உறுந்தனி அத்தம் உண்மை
உயிர்க்கென் உணர்த்தும் அன்றே. (52)

பாடபேதம்: 1. பிறிந்த தடை யஞ்சவத்தை

எனக்குக் கிடைத்த சுவடியில் "பிறிந்தடை வஞ்சவத்தை" என்ற பாடமே உள்ளது. இப்பாடப்படி "அடைவு + அஞ்சவத்தை" என்று பிரித்துக் கொள்ளலாம்.

**செறிந்திடும் உடலின் மன்னி சேர்புலன் வாயில் பற்றி அறிந்து அதில் அழுந்தும்:**- கன்மத்துக் கீடாகப் பொருந்தும் தேகத்தை ஆன்மாவானவன் பொருந்தி, வாயிலாகிய சோத்திராதிகளைப் பற்றி, அதனாலே சத்த முதலான விடயங்களைப் பொருந்தி அறிந்து அதிலேயழுந்தும். அவை வருமாறு, கண்ணானது சாமானியமாக ஒருபொருளை மனத்துடனே கூடிக்கண்டது நிருவிகற்ப ஞானம்; அதனை ஆங்காரம் கிரகிக்கப் புத்தியானது நாமம் சாதி முதலானவைக ளோடே கூடி நிச்சயிக்கப்பட்டது சவிகற்ப ஞானம், வித்தியா தத்துவங்கள் கரணமாகக் கலையிலே பிரகாசவத்தான சிற்சத்தியையுடைய ஆன்மா அறிந்து இராக தத்துவத்தினாலே விடையங்களிலே அமிழ்ந்துவன்;

**ஒன்றும் அறிந்திடாது:**- இவ்வாறு ஈசுர சத்தியானது கலாதி தத்துவங்களைக் கூடி அறிவிக்கலல்லது ஆன்மாவானது ஒரு விடையத்தையும் அறியாது;

**அறியும் தன்மை பிறிந்தடை அஞ்சு அவத்தை பெருகிய மலத்தால் பேணி உறும்:-** அறியுந் தன்மையுடைய கருவிகளினை நீங்கி விரிவான ஆணவ மலத்தினாலே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீத மென்னும் அஞ்சவத்தையடையும்.

**தனி அத்தம் உண்மை உயிர்க்கு என உணர்த்தும் அன்றே:-** இந்தச் சகல கேவலம் இரண்டிலே ஒரு கருவிகளு மன்றி ஆன்மா ஒருவனுமே ஆணவ மலத்திலே ஞானக் கிரியைகளை மறைக்கப்பட்டிருக்கும் கேவலாவத்தையே அனாதி சித்த மென்றும் சகலாவத்தை விட்டுப் பற்றாய வருமென்றும் சாத்திரங்கள் சொல்லுமென்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

1. முத்தி நிச்சய பேருரையின் ஐந்தாம் பாட்டுரையில் "செறிந்திடும்" என்னும் இப்பாடல் மேற்கோளாக வந்துள்ளது.

"உயிர்எனப் படுவது இந்த உடலின் வேறு
உளதாய் உற்றுச்
செயிர்உறும் இச்சா ஞானச் செய்திகள்
உடையது ஆகிப்
பயில்வுறும் இன்பத் துன்பப் பலன்களும்
நுகரும்; பார்க்கில்
துயிலொடும் அஞ்சு அவத்தைப் படும்உண்மை
துரிய அதீதம்"

(சித்தியார் - சுபக்கம் - 187)

## ஆன்மா இலக்கணம்

உருஉணர்வு இலாமை யானும்,
ஓர்ஒரு புலன்கள் ஆக
மருவிநின்று அறித லானும்
மனாதிகள் தம்மில் மன்னித்
தருபயன் நுகர்த லானும்
உயிர்சடம் ஆத லானும்
அருவினை உடலுள் ஆவி
அறிவினால் அறியும் அன்றே. (53)

சரீரத்துக் கன்னியமாக ஓரான்மா வில்லை; இந்தத் தேகமே ஆன்மா வென்னில்,

**உரு உணர்வு இலாமையானும்**:- தேகமானது பிரேதமான பொழுதும் சுழுத்தி அவத்தையிலும் அறியாம லிருக்கையினாலே, தேகம் ஆன்மாவல்ல; ஆகில் பஞ்சேந்திரியங்களே ஆன்மாவென்னில்,

**ஓர்ஒரு புலன்களாக மருவி நின்று அறிதலானும்**:- பஞ்சேந்திரியங்களும் ஒன்றறிந்தது ஒன்றறியாதாகையி னாலும், ஒன்றை ஒன்றறியாதாகையினாலும், ஒன்றறியுங் காலத்து ஒன்றறியாதாகையினாலும், இந்திரியங்களை ஒவ்வொன்றாகப் பொருந்தி ஒவ்வொரு விடயங்களாக அறிவதே ஆன்மா; பஞ்சேந்திரியங்கள் ஆன்மாவெல்ல; இது அன்னமய கோசத்துக் கன்னியம் ஆன்மாவென்கிறதை உணர்த்துதல். மேல், பிராணவாயுவே ஆன்மாவென்னில்;

**உயிர் சடம் ஆதாலனும்**:- பிராணவாயுவானது பூத வாயுவிலே தோன்றப்பட்ட பத்து வாவுக்குள்ளே ஒன்றுமாய நித்திரை பண்ணுகிற பொழுது உசுவாச நிசுவாசமாக உள்ளும் புறம்பும் சரிக்கையினாலும் பிராணவாயுச் சடம்; ஆன்ம வல்ல;

இது பிராண மயகோசத்துக் கன்னியன் ஆன்மாவென்றது ஆகில், மனம் புத்தி ஆங்காரங்களே ஆன்மாவென்னில்,

**மனாதிகள் தம்மின் மன்னி தருபயன் நுகர்தலானும்:**- மனம் முதலான கரணங்களைப் பொருந்திச் சோத்திராதி களாலே சத்தாதிகளை மனத்துடனே கூடப்பற்றி ஆங்காரத் தினாலே கிரகித்துப் புத்தியிலே நிச்சயித்துத்தரும் சுகதுக்க மயமான போகத்தை வித்தையினாலே கைக்கொள்வதே ஆன்மா; அந்தக் கரணவர்க்கங்கள் ஆன்மாவல்ல.

இது மனோமய கோசத்துக் கன்னியன் ஆன்மா என்றது. மேல், விஞ்ஞான ஆனந்தமய கோசமும் அவ்வாறே.

**அருவினை உடலுள் ஆவி அறிவினால் அறியும் அன்றே:**- இவ்வாறு பஞ்ச கோசத்துக் கன்னியனாகியும் நீங்குதற் கரிய கன்மத்தினாலே சம்பந்திக்கப்பட்ட தேகத்துக்குள்ளே ஆன்மா நின்று, அந்தந்தக் கரணங்களினாலே அந்தந்த விடயங்களைத் தன்னுடைய ஞான சத்தியினாலே அறிவன் என்றிதன் பொருள்.

அறிவுஎனில் வாயில் வேண்டா;
அன்றெனில் அவைதாம் என்னை ?
அறிவதை உதவும் என்னில்
அசேதனம் அவைதாம் எல்லாம்;
அறியவன் அறியுந் தன்மை
அருளுவன் என்னில் ஆன்மா
அறிவுகலது ஆகும்; ஈசன்
அசேதனத்து அளித்தி டானே. (54)

**அறிவு எனில் வாயில் வேண்டா:-** ஆன்மாச்சித்து ரூபன் என்னில், ஞானேந்திரியங்களைக் கொண்டறிய வேண்டுவதில்லை;

**அன்று எனில் அவை தாம் என்னை:-** ஆன்மா ஞானத்தினாலேயே அறிவது இந்திரியங்களினால் அல்ல என்னில், அந்த இந்திரியங்கள் உண்டென்று ஏன் சொல்ல வேணும்? என்ன,

**அறிவதை உதவும் என்னில் அசேதனம் அவைதாம் எல்லாம்:-** அவை ஆன்மாவுக்கு விடய தரிசன ஞானத்தை உண்டாக்கும் என்னில்? அவை அசேதனமாகையினாலே தோன்றப் பண்ணுகிறவைகளொழிய ஞானத்தை உண்டாக்குவதல்ல;

**அறிபவன் அறியும் தன்மை அருளுவன் என்னில் ஆன்மா அறிவு இலது ஆகும் ஈசன் அசேதனத்து அளித்திடானே:-** அறிவானாகிய ஆன்மா அறியும்படிக்கு "அந்தகனுக்குக் கோல் கொண்டு வழிகாட்டுவது போலப்" பரமேசுவரன் கிருபையினாலே அந்தக் கரணங்களைக் கொண்டு ஆன்மாவுக்கு விடய தரிசினத்தைப் பண்ணுவிப்பன் என்னில், ஆன்மா அறிவில்லாதவனாக வேணும் அறிவில்லாதவனுக்கு ஈசுரன் அறிவுண்டாக்குவன் என்னில், அசேதனமாயிருக்கிற சுவர் முதலானவைகளுக்கு அறிவுண்டாக்க வேணும்; அஃதில்லை ஆகையால், அசேதனத்திற்கு அறிவு உண்டாக்கார்;

ஆகையினாலே, அஞ்ஞானத்தினாலே மூடப்பட்டிருக்கிற சேதனான் மாவைக் கலாதிகளாலே அஞ்ஞானத்தை நீக்கிக் கரண வழியிலே விடய தரிசனத்தைப் பண்ணுவிப்பர் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு :*

**அறிவு எனில் வாயில் வேண்டா**

*1.*அறிவிக்க வேண்டாம் அறிவற்று அயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற்று அறியாமை எய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே.

*(திருமந்திரம்-2327)*



அறிவினால் அறிந்த யாவும்
அசத்தாதல் அறிதி[1] என்றும்
அறிவினால் அறியொ ணாதேல்
ஆவதுஒன்று இன்மை; தொன்மை
அறிவுத்தான்[2] ஒன்றை முந்தி
அதுஅது ஆகக் காணும்
அறிவுகாண் அசத்து மற்றது
அறிவினுக்கு அறியொ ணாதே. (55)

பாடபேதம் : 1. அறுதி, 2. அறிவு காண்

**அறிவினால் அறிந்த யாவும் அசத்தாதல் அறிதி:-** பசு ஞானத்தாலே அறியப்பட்ட தெல்லாம் அநித்தயமாதல் நிச்சயம் ஆதலால்;

**என்றும் அறிவினால் அறியொணாதல் ஆவது ஒன்று இன்மை:-** சிவமானது எக்காலத்தும் ஆன்மாவினால் அறியெணாதென்னில், அந்தப் பொருளினால் ஒரு பிரயோசனமும் இல்லையாம்;

**தொன்மை அறிவுதான் ஒன்றை முந்தி அதுவது வாகக் காணும் அறிவுதான் அசத்து:-** ஒரு பதார்த்தங்களைத் தான் முந்தி நின்று தனக்குப் பேதமாக இது இது என்றறியும் ஆகையால் அப்படி அறியப்பட்ட பொருள் அசத்து;

**மற்றது அறிவினுக்கு அறிய ஒணாதே:-** மற்றது என் கையால் அந்தச் சிவம் என்றது அறிவினுக்கறியப் போகா தாகையால், அந்தச் சிவமானது காணப்படுவதும் காணப்படாதென்கையால் இரண்டுமன்றியிருக்கும்.

காணப்படாதென்கையால் ஆன்ம அறிவினாலும் கருவிகளாலும் காணப்படாது; பின்னைக் காணுகிற தெப்படி என்னில்? சிவஞானிகளுக்கு அனுபவத்தினாலே தானே அறியப்படுமவனாக நிற்பன் என்றதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

**மேற்கோள்**

1. அறிவுஅறிந்தது எல்லாம் அசத்துஆகும் ஆயின்
குறிஇறந்ததின் உணர்வில் கூடா - பொறிபுலன்கள்
தாமாஅறியா தடமருதச் சம்பந்தா
யாம்ஆர் அறிவார் இனி.

(வினா வெண்பா - 5)

எவ்வறிவு அசத்து அறிந்தது
　　　　எனில,உயிர் அறியாது ஈசன்
அவ்வறிவு அறியான்; அல்லது
　　　　அசேதனம் அறியாது; ஆவி
செவ்விய கருவி கூடில்
　　　　தெரிவுறாது அருளில் சேராது;
உவ்விரு வகையறு என்னில்
　　　　ஒளியருள் ஒருங்கு உறாவே. (56)

**எவ்வறிவு அசத்து அறிந்தது எனில் உயிர்:**- அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிந்தது எந்த அறிவு என்னில் பாரி சேடத்தால் ஆன்மா;

**அறியாது ஈசன் அவ்வறிவு அறியான்:**- சடம் ஆகி அசத்தாகிய பிரபஞ்சத்தை ஈசுரன் அறிய வேண்டுவதில்லை;

**அல்லது அசேதனம் அறியாது:**- இஃதன்றி அசேதன மாகிய பிரபஞ்சம் தன்னையும் அறியாது சிவத்தையும் அறியாது;

**ஆவி செவ்விய கருவி கூடில் தெரிவுறாது அருளில் சேரா:**- ஆன்மாவானது கலாதி கருவிகளுடன் கூடில் தனக்குப் பிரிவறக் கூட்டின கரணங்களை அதுவே தானாக நிற்பதன்றித் தனக்குப் பேதமாக அறியமாட்டாதாகையால் சிவனுடைய கிருபா சத்தியையும் பொருந்தாது;

**உவ்விரு வகையது என்னில் ஒளி இருள் ஒருங்கு உறாவே:**- சிவனும் மாயையும் ஆன்மாவிலே கூடியிருக்கும் என்னில் அந்தகாரமும் பிரகாசமும் ஒரிடத்திராது; இதனாற் சொல்லியது பதி பசு பாசங்கள் என்னும் மூன்று பதார்த்தங் களிலே சித்து ரூபமாகிய பதியின் முன்னே அசித்தாகிய பிரபஞ்சம் முதலான பாசங்கள் நில்லாதாகையால் இந்திர சாலிகனானவன் தன்னுடைய மாயா கற்பிதப் பிரபஞ்சமானது

பிறர்க்குச் சத்தாகக் காண்பித்துத் தன் கண்ணினாலே சத்தாய்க் காணாதது போல மாயையிலே சிவசங்கற்பத்தினாலே உண்டான பிரபஞ்சமும் சீவான்மாக்களுக்குச் சத்தாகக் காண்பிப்பதன்றிச் சிவதிட்டிக்குச் சத்தாகக் காண்பிப்பதன்றிச் சிவதிட்டிக்குச் சத்தாகக் காணாதென்றும் பிரபஞ்சமானது சடமாகையினாற்றன்னையும் சிவனையும் காணவறியா தென்றும், இந்தப் பாரிசேடப் பிரமாணத்தினாலே பிரபஞ்சத் தைத் தனக்கன்னியமாகவும் அசத்தாகவும் சிவன் தனக்கு வேறல்லாதவனாகவும் சத்தாகவும் யாதொருவன் தனக்குச் சத்திநிபாதமான காலத்திலே அறிகிறான்; அவன் பாதமான காலத்திலே அறிகிறான்; அவன் இந்தப் பிரபஞ்சத்துக்கும் சிறு..................................(விடப்பட்டுள்ளது)



சத்துஇது என்று அசத்துத்
தான்அறி யாது அசத்தைச்
சத்துஅறிந்து அகல வேண்டா
அசத்திது சத்திது என்றோர்
சத்துஇருள் ஒளிய அலர்க்கண்
தன்மைய தாம் அசத்தைச்
சத்துடன் நின்று நீக்கும்
தன்மையால் சதசத்து ஆமே. (57)

**சத்து இது என்று அசத்து தான் அறியாது**:- இதுவென்று சத்தாகிய சிவத்தை அசத்துச் சடம் ஆகையால் அறியாது;

**அசத்தைச் சத்து அறிந்து அகல வேண்டா**:- அசத்தாகிய பிரபஞ்சத்தைச் சுபாவ நின்மல ஞான சொரூபனாகிய சிவன் இது நான் அல்லன் என்று அறிந்து நீங்க வேண்டுவதில்லை;

இந்தப் பாரி சேடப் பிரமாணத்தினாலே இரண்டையும் அறிபவன் (ஆகிய) ஆன்மா ஒருவன் உண்டெென்பதற்கு.

**அசத்து இதுசத்து இது என்று ஓர்சத்து இருள்ஒளி அலாக்கண் தன்மையதாம் அசத்தை சத்துடன் நின்று நீக்கும் தன்மையால்**:- அசத்தாகிற இது சத்தாகிறதுவென்று அறிகிற தொன்று; அது அறிகிற ஞான சொரூபி; அதுதான் இருளையும் வெளியையும் காணுங்கண் இருளும் வெளியும் அல்லாதது போலவாம்; அசத்தாகிய பிரபஞ்சத்தைச் சத்தாகிய சிவஞான யோகத்தினாலே அறிந்து நீங்கும் தன்மையினாலே;

**சத சத்தாமே**:- ஆன்மானவானவன் சுபாவ நின்மல ஞான சொரூபனாகிய சிவத்தையும் சடமாகிய பிரபஞ்சத்தையும் அறியுமவன் ஆன்மாவாம் என்றிதன் பொருள்.

சிலர் பொருள் ஆன்மாத்தானே சதசத்தென்று சொல்லு வார்கள். அது ஒரு பொருளுக்கு விருத்தத்தன்மையாகிய

இரண்டைச் சொல்லுகிறது ஆருக மதம். அதற்கு அநேகாந்திக தோடிமுண்டு; இவ்விடத்துச் சத்து அசத்தென்றது சிதசித் என்கிறதற்குப் பரியாய நாமம்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

**மேற்கோள்**

1. சத்து அசத்தைச் சாராது அசத்துஅறியாது அங்கண்இவை
உய்த்தல்சத சத்தாம் உயிர். *(திருவருட்பயன் - 17)*

2. "அனைத்தும் சத்என்னின் ஒன்றை அறிந்திடாது சத்தால்
என்னின் முனைத்திடாத சத்துச் சத்தின் முன்இருள் இரவி
முன்போல்" *(சிவஞான சித்தியார் - சுபக்கம் - 249)*

கண்ஒளி விளக்கு அளித்துத்
காட்டிடும் என்னில் முன்னம்
கண்ஒளி ஒன்றும் இன்றாம்
விளக்குஒளி கலந்த வற்றைக்
கண்ஒளி அகல நின்றே
கண்டிடும் வேறு காணாக்
கண்ஒளி விளக்கின் சோதி
கலந்திடும் கருத்தஒன்று அன்றே. (58)

**கண் ஒளிவிளக்கு அளித்துக் காட்டிடும் என்னில்:-** விளக்கானது கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுத்துப் பதார்த்தங்களையும் காட்டிடும் என்னில்;

**கண் ஒளி ஒன்றும் இன்றாம்:-** அப்பொழுது கண்ணுக்குப் பிரகாசமே இல்லையாம்; பிரகாசம் இல்லாத கண்ணுக்கு விளக்குப் பிரகாசத்தைக் கொடுக்குமாகில் மற்றைய இந்திரியங்களிலும் தெரிவிக்க வேணும். அஃதன்றியும் விளக்கு வருவதற்குமுன் இருளைக் கண்டதும் அந்தக் கண்ணுடைய பிரகாசமே ஆகையால்,

**விளக்கொளி கலந்தவற்றைக் கண் ஒளி அகல நின்றே கண்டிடும் வேறு காணா :-** விளக்கினுடைய பிரகாசம் வியாபித்த பொருள்களையும் அந்த விளக்கையும் தனக்கு அந்நியமாகவே நின்று காணும்; அந்த விளக்கில்லாத காலத்திற்குக் கண்ணிற்குப் பிரகாசம் உண்டாகியும் பொருட்களைக் காணமாட்டாது; அப்படியே ஆன்மா ஞான சொரூபனாகிலும் சிவஞானம் காட்டாகவல்லது பிரபஞ்சத்தையும் சிவனையும் காணமாட்டான்; சிவனும் ஆன்மாவும் இருவரும் ஞான சொரூபிகளாயிருக்கச் சிவஞானத்தினாலேயல்லது ஆன்மா காணமாட்டான் என்பான் ஏன் என்னில் ?

**கண் ஒளி விளக்கின் சோதி கலந்திடும் கருத்து ஒன்று அன்றே:-** கண்ணினுடைய பிரகாசத்தினுடைய வியாத்தி பாவமும் விளக்கினுடைய பிரகாசத்தின் வியாத்தி பாவமும்

ஒன்றல்ல; அஃதெப்படி என்னில் ? விளக்கினுடைய பிரகாசமானது எல்லாப் பதார்த்தத்தையும் வியாபித்துத் தெரிவிக்கும்; கண் ஒளியானது அந்தப் பதார்த்தங்களை வியாபித்தறியும்; அப்படியே சிவஞானமும் சர்வ வியாபியா யிருந்தும் எல்லாவற்றையும் தெரிவிக்கும்; ஆன்ம ஞானமும் சர்வவியாபியாய் எல்லாப் பதார்த்தங்களையும் காணும் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

1. ஆன்மா ஞான சொரூபனல்லன்
ஞானாசிரித னாயிருப்பன்; சிவஞானமே
இவனுக்கு அறிவையும் கொடுத்துக்
காட்டா நிற்கும்.

2. "ஒளியிருள் கண்டகண் போலவே றாய்உள்
ஒளியிருள் நீங்க உயிர்சிவம் ஆமே."

*(திருமந்திரம் - 1819)*

3. பெத்தம் முத்தி இரண்டினும் ஆன்மா சிவசமம் இல்லை என்பதற்கு, "கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும் கருத்தொன்றன்றே" என்னும் பகுதி மேற்கோளாய் வந்துள்ளது.

*(முத்தி நிச்சயப் பேருரை - 20 கம்பாட்டு. ப-254)*

ஓர்இடத்தில் இருத்தல்; மாயா
உருநிறைந் திடுதல் ஒன்றாம்
பேரிடத்து உறைதல்; தானே
பிறங்குஅறி வாகி நிற்றல்;
சோர்வுடைச் சடம்நி கழித்தல்;
எனும்இவை சொல்லார் நல்லோர்;
ஓர்இடத்து உணரும் உண்மை
ஒளிதரும் உபலம் போலும். (59)

ஆன்மாவானது! நெல்லினுடைய வாலில் நுனியில் நூற்றில் ஒருபங்கு போல அணுவாய் இதயத்திலிருந்து தன்னுடைய ஞானத்தினாலே, விளக்கு ஒரு வீட்டுக்குள்ளே ஒரு இடத்திலேயிருக்க அதனுடைய ஒளி வீடெல்லாம் பரவினாற் போலத் தேகமெல்லாம் வியாபிச்சுக் கொண்டிருக்கும் என்பதுவும் மாயா காரியமாகிய தூல தேகத்திலே மத்திய பரிணாமமாக வியாபித்துக் கொண்டிருக்குமென்பதுவும், பெத்தத்திலும் சர்வ வியாபியாருக்குமென்பதுவும், தானே எல்லாம் அறிந்தவன் என்பதுவும், தான் சடமாயிருக்க ஈசுரனே அறிவிப்பனென்பதுவும்;

சோத்தியமுடைய தாகையினாலே பெரியோர்கள் இவையிற்றை ஆன்ம சொரூபமென்று சொல்லுவார்கள். இவையிற்றுக்குச் சோத்தியமாவன முதல் ஆன்மாவைப் பரமவணுவென்றது ரூபமாகச் சொல்லுகையால் உருவமானதெல்லாம் காரியமே; காரியமானத்திற்கெல்லாம் நாசம் உண்டாகையால் அது கூடாது.

மத்திம பரிணாம தேக வியாபியாய் நிற்குமொன்றதற்கு உயர்ந்த தேகத்துக்குப் பெரிய அறிவும், சிறியதேகத்திற்கு அற்ப அறிவும் ஆக வேண்டும்; அஃதன்றியும், அவையவங்கள் குறைந்த காலத்தில், அறிவும் குறைய வேணும். தேகநாசம் வருகிற பொழுது ஆன்ம நாசமும் வரும், ஆகையால் அது கூடாது.

சர்வ வியாபி என்றதற்குப் பெத்தத்திசையில் அஞ்ச வத்தைகளும் செனன மரணங்களும் உண்டாயிருக்கையினால் அவ்வாறு சொல்வதும் கூடாது. தானே எல்லாம் அறிந்தவன் என்னில், கலாதி தத்துவங்களைக் கூடி அறிய வேணுமென் பதுவும், ஒருத்தர் உணர்த்த உரை வேணுமென்பதுவும், ஓதி அறிய வேணுமென்பதுவும், சூரியாதிப் பிரகாசத்தினாலே காண வேணுமென்பதுவும், வேண்டாவாகையால், அப்பெத்த திசையில் ஆன்மா எல்லாம் அறிந்தவன் என்பதும் கூடாது.

ஆன்மாச்சடம்; சிவஞானமே அறிவிக்கும் என்னில், அச்சிவஞானம் விபுவாகையால், தூண்கள் சுவர்கள் முதலானவைக்கும் அறிவுண்டாக வேணும் ஆகையால் அறிவுண்டாகாது.

இவ்வாறு சொல்லில் ஆன்ம லட்சணம் எங்ஙனமே என்னில்? விசாரிக்குமிடத்துத் தத்துவமானது பஞ்ச வன்னங் களாகிய பொருட் போலவும், ஆன்மாவானது பிரகாசத்தை யுடைய படிகம் போலும் என்றது,

பஞ்ச வன்னங்களையும் படிக சமீபத்திலே ஒன்றாகப் பிடிக்கில் அந்த வன்னங்களாகத் தான் தோன்றுவது போலப் பெத்தத்திற் கலாதி தத்துவங்களைப் பொருந்தின பொழுது தானதுவாகவே நின்றழுந்தும்,

இந்தத் தத்துவங்களைக் கூடாதபொழுது அந்த காரத்துப் படிகமானது ஒரு வன்னங்களையும் பற்றாது தன்னுடைய பிரகாசமும் காண்பியாமல் இருப்பது போல ஆணவத்தி னாலே கேவலாவத்தனாதி விடயஞானமும் சொரூப ஞானமும் அன்றி (இன்றி) இருப்பன்.

மத்தியானத்திலே சூரிய சன்னதியில் படிகம் தன்னுடைய சமீபத்திலே எந்த வன்னங்களைப் பிடித்தாலும் பற்றாமல் சூரியப் பிரகாசத்தினாலே நின்மலப் பிரகாசமாய் நின்றது போல,

ஆன்மாவும் முத்தியிலே சிவா சித்திய கிரணம் பதிகையி னாலே எல்லாப் பிரபஞ்சத்திலும் பற்றின்றி அனாதியே, தனக்குள்ளதாய ஆணவ மலத்தான் மறைப்புண்டிருந்த பொருட்களெல்லாம் அறிகையும் எங்கும் வியாபியாகையும் அந்த ஆணவ மலம் நீங்கப் பிரகாசிக்கும் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*"பற்றியது தானாம் படிகம் நீ"*
*(ஒழிவிலொடுக்கம்-40)*

*உயிரின் தன்மையை உணர்ந்திடில் படிகம், கண்உயர்வான்,*
*மயில்கு ணங்களை ஒத்திடும்; அவைகளில் படிகம்*
*மயில்செய் கங்குலாய்ப், பன்னிற மாய்க்கதிர் வடிவாம்;*
*அயர்வு பெற்றுமூன் றவத்தையுற் றுயிரும்அப் படியாம்*

*(68- மாணிக்கவாசகர் உபதேசப்படலம்-திருப்பெருந் துறைப் புராணம்-சுந்தரலிங்க முனிவர்)*



# அவத்தை அல்லது அண்ணல் அளித்த அவத்தை

எண்ணஒன்று இலாத அதீதம்
எய்திய துரியத்து ஒன்று
நண்ணிடும் சுழுத்தி தன்னில்
நயந்துளது ஒன்று, பின்னும்
அண்ணிடும் கனவு தன்னில்
ஆறேழாம் சாக்கி ரத்தில்
கண்ணுறும் அஞ்சாறு ஆய
கருவிகள் காணும் தானே. (60)

**எண்ண ஒன்று இலாத அதீதம்:**- மூலாதாரத்திலே உள்ளம் ஒன்று மொழியப் பின்னை ஒரு கருவி உண்டென்றே காணாததாய் ஆணவத்தோடே கூடியிருக்கும் அவதாரம் அதீதாவத்தை;

அதீதமென்றது கருவி கரணங்களுக்கு எல்லாம் அப்பாற் பற்றப்பட்ட தென்று பொருள். இதை உள்ளமுமில்லை என்று சொல்வார்கள். அப்பொழுது கேவலாத்தைக்கும் அதீதவத்தைக்கும் பேதமற்றுப்போம் ஆகையால் அதீத வத்தையிலே உள்ளமென்னுந் தத்துமொன்றுண்டு.

**எய்திய துரியத்து ஒன்று:**- நாபித்தானத்திலே பிராண வாயுவொன்று கூட இந்த இரண்டுடனும் நிற்பது துரியம்;

**நண்ணிடும் சுழுத்தி தன்னின் நயந்துளது ஒன்று:**- இதயத்தானத்திலே சித்தம் ஒன்றும் கூட முன்சொன்ன உள்ளமும் பிராணனுமாக மூன்று தத்துவமும் கூட நிற்பது சுழுத்தி;

**பின்னும் அண்ணிடும் கனவு தன்னில் ஆறேழாம்:**- கண்டத் தானத்திலே உள்ளம் பிராணவாயு சித்தம் மனம் புத்தி ஆங்காரமும் தாத்துவிகமாகிய சத்த முதலானவை ஐந்தும் வசன முதலானவை ஐந்தும் அபானாதி வாயுக்கள் ஒன்பதும் ஆக இருபத்தைந்தோடு கூடி நிற்பது சொற்பனம்.

**சாக்கிரத்தில் கண்ணுறும் அஞ்சாறாய கருவிகள் காணும் தானே:-** லலாடத் தானத்திலே முன்சொன்ன இருபத்தைந்து கருவிகளுடனே பஞ்சபூதங்கள் வழித்தாய்ச் சீவிக்கும் சோத்திராதி வாக்காதி பத்தும் கூட முப்பந்தைந்துடனே நிற்பது **அபபிறதிபா சாக்கிரம்** அபபிறதிபா சாக்கிரமென்றது, அறிவதற்குத்துணைக் கருவியாகிய சுத்த தத்துவங்கள் ஐந்தும், சுத்தாசுத்த தத்துவங்கள் ஆறும் பூதங்கள் ஐந்துமாகப் பதினாறும் நீங்கித் தாத்துவிகங்களாகிய வாயுக்கள் பத்தும் வசனாதி ஐந்தும் கூடுகையால் அபப்பிறக்கினையானது பிரகாசியாது; இனிச் சபப்பிறதிபாசாக்கிரத்தானத்து இந்தத் துணைக்கருவிகள் பதினாறுங்கூடிப் பிராக்கினை உண்டாய் விவகரிப்பதென்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1)* "பிராண வாயுவொன்றும் நாபித்தானத்திலே நிற்க உள்ளமொன்றுடனே மூலாதாரத்திலே யடங்கின அவதரம் துரியாதீதம்" என்பது சிவப்பிரகாசக் கட்டளை. இங்கே உள்ளம் கூறப்பட்டிருத்தலைக் காண்க.

*2)* சுத்த சாதகம் 60ஆம் பாட்டுரையில் அவத்தைகள் தோறும் தத்துவங்களை நீக்கி நிறுத்தலுக்கு எண்ண ஒன்று இலாத அதீதம் என்னும் இப்பாட்டு மேற்கோளாய் வந்துள்ளது.

*3.* உயிர் மூலாதாரத்தில் ஒடுங்கும் பொழுது ஒரு கருவிகளும் இல்லை என்பதனை **"எண்ண ஒன்று இலாத அதீதம்"** என்னும் அடி உணர்த்துகின்றது. **(பேராசிரியர் அடிகளாசிரியர் கூற்று)**

இவ்வகை அவத்தை தன்னில்
எய்திடும் கரணம் எல்லாம்
மெய்வகை இடத்தில் உற்று
மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம் அகற்றப்
புரிந்திடில் அருளால் ஆங்கே
ஐவகை அவத்தை உய்க்கும்
அறிவினால் அறிந்து கொள்ளே. (61)

**இவ்வகை அவத்தை தன்னில் எய்திடும் கரணம் எல்லாம் மெய்வகை இடத்தில் உற்று மேவும் ஆ கண்டு**:- இதற்கு முதல் விருத்தத்திற் சொன்னவாறு அதீதத்திலே யிருந்து சபபிரதிபா சாக்கிர மளவும் அவத்தைத் தானங்கள் தோறும் கருவிகள் கூடும்படியே சபபிரதிபா சாக்கிரத்திலே யிருந்து அதீதமளவாகக் கருவிகணீங்கு முறைமையையும் சாக்கிரத்திற் சுழுத்தி சாக்கிரத்திற்றுரியம் சாக்கிரத்திற்றுரியா தீதம் என்னும் அஞ்சவத்தைகளிலும் கருவிகள் நீங்கும் படியும், அதீதத்திலேயிருந்து சாக்கிரமளவாகக் கூடும்படியும் அறிந்துமேல்;

**மிக்க பொய்வகைப் பவம் அகற்றப் புரிந்திடில் அருளால் ஆங்கே ஐவகை அவத்தை உய்க்கும் அறிவினால் அறிந்து கொள்ளே**:- அசத்தியமாய மிகவும் வருத்தும் பவத்துக்கை நீங்குதற்கு ஆசாரியன் கருணை அறிந்து கொள்ளுவாயாக; ஐவகை அவத்தையாவது நின்மல சாக்கிரம், நின்மல சொற்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம். இவை ஐந்தும் நீங்கினவிடம் நின்மல கேவலம் என்றும் சுத்தாவத்தை என்றும் பெயர். இந்த அவத்தைகள் ஆசாரியன் உணர்த்த அனுபவத்தினால் அறிவது என்றிதன் பொருள்.

நீக்கமில் அதீதம் மாசு
        நிறைந்த கேவலமாம் நீர்மை
சாக்கிரம் கலாதி சேர்ந்த
        சகலமாம் தன்மை ஆகும்,
ஊக்கமில் இரண்டும் கூடாது
        ஒழியவோர் நிலையில் நீடும்
சாக்கிர அதீதம் சுத்தத்
        தகைமயது ஆகும் தானே. (62)

**நீக்கம் இல் அதீதம் மாசு நிறைந்த கேவலம் ஆம் நீர்மை:-** பிறிவற ஆணவ மலத்தோடே வியாபியாய்க் கலாதிகள் நீங்கி நின் நிலை கேவலாவத்தை;

**சாக்கிரம் கலாதி சேர்ந்த சகலம் ஆம் தன்மை ஆகும்:-** கலாதி முதலாகிய தத்துவங்களெல்லாம் கூடிச் சாக்கிரமாக நிற்பது சகலாவத்தை;

**ஊக்கமில் இரண்டும் கூடாது ஒழிய ஓர் நிலையில் நீடும் சாக்கிர அதீதம் சுத்தத் தகைமயது ஆகும் தானே:-** அனாதி ஏதுவாகி நீங்காமல் வரும் கேவல சகலாவத்தைகள் இரண்டும் ஒப்பற்ற சிவாபவனையிலே நின்று நின்மல துரியாதீதத்தை அடைவது சுத்தாவத்தையியல்பென்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

முத்தி நிச்சயப் பேருரை ஐந்தாம் பாட்டு உரையின் இறுதியில் நீக்கமில் அதீதம் என்னும் இப்பாட்டு சீவன் முத்தி இயல்பே பரமுத்திக்கும் ஒத்ததற்கு மேற்கோளாம்.

# தன்னை உணர்த்தும் தகை அல்லது ஆன்மாவை உணர்த்தல்

மருவிய பொறியில் ஒன்றும்
மாபூதம் ஐந்தில் ஒன்றும்
கருவிகள் நான்கும் நீங்காக்
கலாதிகள் ஐந்தும் கூடி
ஒருபுலன் நுகரும் இந்த
ஒழுங்குஒழிந்து உயிரும் ஒன்றைத்
தெரிவுறாது அவன் ஒழிந்துஅத்
திரள்களும் செயல் இலாவே. (63)

**மருவிய பொறியில் ஒன்றும் மா பூதம் ஐந்தில் ஒன்றும் கருவிகள் நான்கும் நீங்காக் கலாதிகள் ஐந்தும் கூடி ஒரு புலன் நுகரும்:**- ஆன்மாவானவன் விஷயங்களை அறியும்பொழுது, சத்தம் முதலானவைக்குச் சோத்திரம் முதலானவைகளினாலே ஒருபொறியும் அதற்குத்தான் அவ்வாகாசம் முதலானவை களினாலே ஒரு பூதமும் மனம் புத்தி ஆங்காரஞ் சித்தங்களி னாலும், போகசயித்திரி காண்டமான சுத்ததத்துவங்கள் ஐந்துமாகப் பதினெட்டு தத்துவங்களும் கூடி நீங்காமல் நிற்கில் ஒருவிடயத்தை ஆன்மா அனுபவிப்பன்;

**இந்த ஒழுங்கு ஒழிந்து உயிரும் ஒன்றைத் தெரிவுறாது:**- இந்த முறைமையிலே ஈசுர சத்தியானது கூட்டாத காலத்து ஆன்மா ஒருவிடயத்தையும் அனுபவிக்கமாட்டான்;

**அவன் ஒழிந்து அத்திரள்களும் செயல் இலாவே:**- இந்த ஆன்மாவன்றி முன் சொன்ன கருவித்திரள்களுக்குப் பிர விர்த்தியில்லை என்பார்கள். தத்துவங்கள் சடமாகையால் இது சொல்லாதிருக்கிலும் உண்மையே; இப்படியல்ல, இராச வானவன் உத்துப்பார்க்கும் பொழுது பரிசனங்களும் கூடப்

பார்ப்பது போல ஆன்மா ஒரு விஷயத்தை அனுபவிக்கும் பொழுது ஞானேந்திரியங்களும் தாங்கள் காரணமாக நின்று காரியங்களைப் பண்ணுவதினாலே....................யானது இரசத்தை அனுபவிப்பது போலத் தத்துவங்களும் ஆன்மாவுக்குச் சத்த முதலான விடயங்களுடைய அனுபவிக்க அறியாதென்றிதன் பொருள்.

### *பதிப்பாசிரியர் குறிப்பு*

1. ஆன்மா பிரேரகா அவத்தையினின்று விடயங்களை அனுபவித்துவரும் இயல்பைக் கூறுகின்றது.

2. "பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பேர்நன் றற"

*(திருருட் பயன்-15)*

3. "பொறியினிலொன்று அதற்கியைந்த பூத மொன்று
புரிகரணம் நான்குகலா திகள்ஏழ் ஐந்தாம்
அறிகருவி இதனாலோர் விடயந் தன்னை
அருந்தும் உயிர்"

*(சிவஞான தீபம் - 73)*

தனக்கென அறிவு இலாதான்
தான்இவை அறிந்து சாரான்
தனக்குஅறிவு இலாத வாயில
தான்அறி யாது சார
தனக்கென அறிவு இலாதான்
தத்துவ வன்ன ரூபன்
தனக்கென அறிவா னால்இச்
சகலமும் நுகரும் தானே. (64)

**தனக்கு என அறிவு இலாதான் இவை அறிந்து சாரான்:-** பரமேசுரனுடைய சத்தியானது கலாதிகளைக் கூட்டிச் சேட்டிக்கில் சற்று அறிவுண்டாயும் சாட்சா(த்) அந்தச் சத்திதானே பொருந்தி எல்லாத்தையும் அறிகையுமாவதன்றி, ஆணவமல உபாதிகளினாலே சுதந்திரமாக அறியமாட்டாத வனான் மாவைகையால் இந்த ஞானக்கிரியைகளைத் தானே பொருந்தி விஷயங்களையும் அறியமாட்டான்;

**தனக்கு அறிவு இலாத வாயில் தான் அறியாது சார்தல் (சார):-** சடமாகிய விந்திரியங்களும் ஆன்மாவைப் பொருந்த அறியாது;

**தனக்கு என அறிவு இலாதான் தத்தவ வன்ன ரூபன் தனக்கு என அறிவானால் இச்சகலமும் கூருகும் (நுகரும்) தானே:-** சுதந்தர நின்மல ஞான சொரூபனாகிய சிவனுடைய சத்திப் பிரேரகத்தினாலே கூடின தத்துவங்களினுடைய தன்மையாய் நின்று சகல விஷயங்களையும் சுதந்தரனான ஆன்மா அனுபவிப்பன் என்று இதன் பொருள்.

கண்டறி[1] புலன்கள் காணும்
கருத்தினால் ஒருத்தன் ஞானம்
கொண்டுளம் அறியும் என்னில்
கொள்பவன் முதலி ஆகும்
மண்டிய உணர்வு உயிர்க்காய்
மன்னிநின்று அறியும் என்னில்
உண்டிட வேண்டு வானுக்கு
ஒருவன்வேறு உண்டல் ஆமே. (65)

பாடபேதம்: 1. கண்டுணர் புலன்கள்

**கண்டறி புலன்கள் காணும் கருத்தினால் ஒருத்தன் ஞானம் கொண்டு உளம் அறியும் என்னில் கொள்பவன் முதலி ஆகும்:-** புலன்களைக் கொண்டறிவது பஞ்சவிந்திரியங்களும் அல்லவென்றும், ஆன்மா சுதந்திர ஞானனல்ல வென்றும் சொல்லுவர் ஒப்பற்ற பரமேசுரனுடைய ஞானத்தைக் கொண்டே ஆன்மா அறியும் என்னில், அந்தச் சிவஞானம் காரியமுமாய் (கருவியுமாய்) ஆன்மா கருத்தாவும் ஆகையால் அது கூடாது.

**மண்டிய உணர்வு உயிர்க்காய் மன்னி நின்று அறியும் என்னில் உண்டிட வேண்டுவானுக்கு ஒருவன் வேறு உண்டல் ஆமே:-** எங்கும் வியாபியாகிய சிவஞானமானுத ஆன்மாவிலே பொருந்தி நின்று தனக்கு விஷயத்தில் இச்சை யில்லாதிருந்தும் ஆன்மாவுக்காகவே சகல விஷயத்தையும் அறியும் என்னில் பசித்திருப்பானுக்காகப் பசியில்லாதவன் புசித்தான் என்பதற்கு ஒக்கும் ஆகையால் அதுவும் கூடாது என்றிதன் பொருள்.

இருள்நனி இரவி தான்வந்து
இருத்தலும் இரவில் எண்ணும்
பொருள்நிலை கண்டு மாந்தர்
பொருந்திடும் ஆறு போல
மருள்நிலை எங்கும் நீங்க
மகிழ்ந்துஉயிர் தன்னுள் மன்னும்
அருளையும் ஒழிய ஞாலத்து
அறிந்தவாறு அறியும் அன்றே. (66)

**இருள் நனி இரவி தான் வந்து இருத்தலும் இரவில் எண்ணும் பொருள் நிலை கண்டு மாந்தர் பொருந்திடும் ஆறு போல:**- மிகுந்த விருளை ஆதித்தன் துரந்து தோன்றி நிற்க, இராத்திரிச் செய்ய வேணுமென்று நினைத்த தொழில்களை யெல்லாம் அந்தந்தப் பொருட்களைக் கொண்டே மனுஷரான பேர்கள் செய்யுமாறு போல,

**மருள் நிலை எங்கும் நீங்க மகிழ்ந்து உயிர் தன்னுள் மன்னும் அருளையும் ஒழிய:**- எல்லா ஆன்மாக்களுக்கும் கேவலாவத்தை நீங்கும்படி உவந்து ஆன்மாவிலே பொருந்தும் இருபாசத்தியினாலே ஆன்மாக்கள் அந்தந்த கன்மானு விஷயங்களை அனுபவித்து அந்தச் சிவனுடைய கிருபாசத்தியினாலே அறிகிறோம் என்கிறத்தை ஒழிந்தும்;

**ஞாலத்து அறிந்த ஆறு அறியும் அன்றே:**- பூமியிலே ஆதித்தனாலே பதார்த்தங்களைக் கண்டு தொழில்களைச் செய்கையினாலும்; ஆதித்தனாலே இவை அறிந்தோம் செய்கிறோம் என்றெண்ணாமல் தங்கள் தங்கள் சாமர்த்தியத்தினாலே செய்கிறோம் என்றறிந்தது போலத் திருவருட் பிரேரகத்தினாலே அல்லது தமக்குச் செயலில்லை என்றறியாது, யான்எனதென்னும், யான்செய்தேன் பிறர் செய்தார் என்றும் எண்ணுவார் அஞ்ஞானர் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

1. முத்தி நிச்சயப் பேருரையின் இருபதாம் பாட்டுரையில் "**ஆன்மா சிவனைச் சுதந்தரமாக அறிதலின் ஒருவாற்றாற் சுதந்தரமும் உண்டு**" என்பதற்கு இப்பாட்டை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

2. சிவனுபகாரம் தோன்ற, "இருள்நனி இரவிதான் வந்து இருத்தலும்" என்று கூறியுள்ளார். (அடிகளாசிரியர் கூற்று)

அறிந்திடும் மனாதி வாயில்
ஆன்மாவை[1] அவன்தன் னாலே
அறிந்தனம்[2] என்றும் ஒன்றும்
அறிந்திடா[3] அவைபோல யாவும்
அறிந்திடும் அறியும் தன்மை
அறிந்திடா கன்மத் தொன்மை
அறிந்தவை நுகரு மாறும்
அருளுவன் அமரன் தானே. (67)

பாடபேதம்: 1. ஆன்மாவை,

2. அறிந்தனம்,

3. அறிந்திடா தவை போல

**அறிந்திடும் மனாதி வாயில் ஆன்மாவை அவன் தன்னாலே அறிந்தனம் என்றும் அறிந்திடாதவை போல:-** மனம் புத்தி ஆங்காரங்களும் சோத்திரம் முதலான பஞ்சேந்திரியங்களும் ஆன்மாக் கூடிநின்ற காலத்திலே அந்தந்த விஷயங்களை அறியும் தன்மை உண்டாகியும், ஆன்மாக் கூடிநிற்கையி னாலே நாம் அறிகிறோம் என்றறியாதது போல,

யாவும் அறிந்திடும் அறியும் தன்மை அறிந்திடா:- ஆன்மாவும் சகல விஷயங்களையும் சிவன் அருளினாலே அறிந்திடுமாறுண்டாயும், சிவன் அருளினாலே அறிகிறோம் என்கிற தன்மையை அறியாது; ஆகையால்,

**கன்மத் தொன்மை அறிந்து அவை நுகரும் ஆறும் அருளுவன் அமலன் தானே:-** பூர்வ கன்ம பலத்தைப் புசிக்கும் படியும் செய்விப்பன் நின்மலனாகிய சிவன் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* இவ்விடத்துச் சித்தாயிருக்கிற ஆன்மாவுக்குத் திட்டாந்தம் சடமாகிய கருவிகளைச் சொன்னது எல்லா ஆன்மாக்களும் பட்ச கோடியாய்ச் சபட்சமில்லாதாகையால் விவேக சூனியமான அவத்தைக்கு ஏகதேசத்திட்டாந்தமாகச் சடங்களைக் கூறப்பட்டது. **(பேரறிஞர் அடிகளாசிரியர் கூற்று)**

**2.** *அன்றியும்கேள் ஆன்மாவால் ஆய்ந்தறியும்*
ஐம்பொறிகள்
இன்றிஅறியா இவையென்ன-நின்றது போல்
ஓவாமல் உன்னை உணர்த்துவோம் உன்னறிவில்
மேவாமல் மேவி தாமே - *(உண்மை விளக்கம்-28)*

*3.* சிவஞான போதம் ஐந்தாம் சூத்திரப் பொருளை இவ்விடத்தில் நோக்குக.

## முன்னுணர்த்தும் மன்னுணர்வின ஞான வகை அல்லது ஞான வாய்மை

காட்டிடும் கரணம் ஒன்றும்
        இல்லையேல் காண்ஒ ணாதாம்[1]
நாட்டிய இவற்றால் ஞானம்
        நணுகவும் ஒண்ணா முன்னம்
ஈட்டிய தவத்தி னாலே
        இறையருள் உருவாய் வந்து
கூட்டிடும் இவற்றை நீக்கிக்
        குரைகழல் குறுகு மாறே. (68)

பாடபேதம்:- 1. காணொண்ணாதால்

**காட்டிடும் கரணம் ஒன்றும் இல்லையேல் காணொணாதாம்:-** அறி கருவிகள் கூடாதிருக்கில் ஆன்மாவாலே ஒரு விஷயத்தையும் அறியப்போகாதாம்.

**நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா:-** சிவனால் கூட்டப்பட்ட அறிகருவிகளினாலே விடய ஞானமல்லது பரஞானம் கூடாது; மேல் பரஞானம் கூடுவ தெவ்வாறென்னில்?

**முன்னம் ஈட்டிய தவத்தினாலே இறை அருள் உருவாய் வந்து கூட்டிடும் இவற்றை நீக்கிக் குரை கழல் குறுகும் ஆறு ஏ:-** பூர்வ சென்மங்களில் செய்த சரிதை, கிரியை, யோகமாகிற தபோ மகிமையினாலே சிவன் கிருபையினாலே ஆசாரிய மூர்த்தியை அதிட்டித்து வந்து ஆன்மாவினுடைய ஞானத்தை ஆவரித்து நின்ற ஆணவமலத்தை நீக்கி வீரக்கழலைப் பொருந்தின நிபாதார விந்தத்தை நின்ற நிலையிலே வேறறக் கலக்கும்படிப் பரஞானத்தைப் பிரகாசிக்கும் என்றிதன் பொருள்.

நின்ற நிலையிலே வேறறக் கலக்கவென்றது சமுத்திரத்துக்குள்ளே பச்சைக்குள்ளே பச்சைமண் குடத்தை அமிழ்த்தி வைக்க அதற்கு உள்ளும் புறம்பும் சலம் இருக்கும், அந்தமண் கரையுமளவும் குடத்துக்குள் நீர் என்று பேராய், மண் கரைந்த மட்டிலே சமுத்திர சலமே ஆனது போல அஞ்ஞான ஆணவம் போகவே ஆன்மா சிவமே ஆம் என்பதற்குத் திட்டாந்தம்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

**முன்னம் ஈட்டிய தவத்தினாலே சிவஞானத்தைப் பெற்று இறைவன் திருவடியைப் பெறுவர் என்பதற்கு மேற்கோள் வருமாறு:**

*புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்*
*புகன்மிருதி வழியுழன்றும் புகலும் ஆச்சிரம*
*அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்*
*அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்*
*சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத*
*சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்*
*திறத்தடைவர் இதில் சரியை கிரியா யோகம்*
*செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.*

*(சித்தியார் சுபக்கம் - 263)*

## ஞான வாய்மை

பல்நிறம் கவரும் தன்மைப்
படிகம்நீடு ஒளியும் பன்மை
மன்இலங்கு இயல்பும் தந்த
வளர்ஒளி போல வையம்
தன்அகம் பயிலும் நல்சித்
சடங்களின் தன்மை தாவா
நல்நலம் பெற நிறைந்த
ஞானமே ஞானம் என்பர். (69)

**பல்நிறம் கவரும் தன்மைப் படிகம் நீடு ஒளியும் பன்மை மன் இலங்கு இயல்பும் தந்த வளர் ஒளிபோல:-** ஆன்மாவானவன், அனாதியே படிகமானது பஞ்ச வன்னங் களிலே அடுத்த வன்னத்தைப் பற்றித் தான் அந்த நிறமாகக் காண்பித்தது போலக் காட்டின கருவி கரணங்களைப் பற்றி அதுவாக நிற்பன ஆகையால்,

**வையம் தன் அகம் பயிலும் நல் சித்சடங்கள் தன் தன்மை தாவா:-** பிரபஞ்சமானது ஆன்மாவிலே அவத்தை விசேடத்திலே பிரதிபலிக்கும்; ஆன்மாச் சிவஞான சம்பந்தி ஆகையால் சடமாகிய பிரபஞ்ச முறைமை பொருந்தா திவ்வாறு கண்டு;

**நல் நலம் பெற நிறைந்த ஞானமே ஞானம் என்பர்:-** மிகுந்த நன்மையாகிய பரமானந்தத்தைப் பெற அகண்டமாய் வேறொன்றின்றியிலே யிருக்கிற ஞானம் வெளிப்படுவதே பரமஞானம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள் என்றிதன் பொருள்.

### *பதிப்பாசிரியர் குறிப்பு*

*1. “சிற்றின்பம் பேரின்பம் சீவகுணம் என்றனைநீ
உற்றுஇன்பு இரண்டும் உணர்ந்திலையோ-சிற்றின்பம்
நாடில்கருமபலம்; நாதன்உருப் பேரின்பம்;
நீடிப் படிகம்போல் நீ.” (முத்தி நிச்சயம் - 5)*

2. "பன்னிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டும் தகைநினைந்து - பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து, பொய்பொய்யா
மெய்கண்டான்,
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு".

*(சிவஞான போதம் - சூ-8-அதி-3)*

3. "பன்னிறங்க ளவைக்காட்டுப் படிகம்போல் உள்ளம்"

*(சித்தியார்-சுபக்கம்-289)*

4. "ஏகமாம் சிவமெய்ஞ் ஞானம் இசைந்தவர்"

*(பெரியபுராணம்-திருஞா-1237)*

5. இப்பதிப்பின் 59ஆம் பாடலில் உள்ள இரண்டாம் (உயிரின் தன்மையை) குறிப்பும் இங்கு நோக்கத்தக்கது.



## ஞான வாய்மை

மாயைமா மாயை மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆர் உயிரின் மேவும்
மருளினால் இருளாய் நிற்கும்
மாயைமா மாயை மாயா
வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆர் உயிரின் மேவும்
அருளினால் ஒளியாய் நிற்கும். (70)

அசுத்த மாயையும், சுத்த மாயையும், அவற்றின் காரியங்களும், பிரவாகானாதியாகக் கெடாமல் வரும் கன்மமும், ஆன்மாவிலே பிரிவற ஆணவம் பொருந்தி நிற்கச் சகலாவத்தையில கன்ம பலத்தைப் புசிப்பிக்குங் காலத்திலே அஞ்ஞானத்தைப் பண்ணுவதாயிருக்கம்; இவை குருவி னுடைய அனுக்கிரகத்தினாலே திருவருள் பதிந்துள்ளளவில் தங்களாணவம் நீங்கி ஆன்ம ஞானம் பிரகாசிப்பதாகத் தங்கள் சதிர் கெடும் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

1. "ஆண வம் மல வடிவுயி ராய்விடி
னளவையுமா ணவமாகும், பேணு மெம்மருள்
வடிவுயி ராய்விடில் பிரிந்தவை யொரு நான்கும்,
பூணு நல்லருள் வடிவமே யாம்" (57)
(மாணிக்கவாசகர்உபதேசம்-திருப்பெருந்துறைப்
புராணம் - சுந்தரலிங்க முனிவர்)

2. மாயைகைத் தாயாக மாமாயை யீன்றிட
ஆய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏயும் உயிர்க்கே வலசகலத் தெய்தி
ஆய்தரு சுத்தமுந் தான்வந் தடையுமே
(திருமந்திரம்-2268)

*3. சுத்த சாதகம் "அசுத்த விவ்வுணவை" (45) என்னும் பாட்டுரையில் "முன் அசுத்தமாகவும் வெறுப்பாகவும் திக்கிரகித்த அவுஷதாதி புசிப்புகளை வியாதி கால பேதத்தால் அதனையே சுத்தமாகவும் விருப்பாகவும் அங்கீகரித்துப் புசிக்கின்றது போல", முன் அசுத்த மாயா யோகமே இப்போது ஆன்மாவினது பக்குவ கால பேதத்தால் அவை சுத்தமான அருட் போகமாம் என்பது கருத்து. (அப்பாட்டில்) "அகத்தினிற் பாவனை செய்தால்" என்றதற்கு "மாயைமா மாயை என்னும் இப்பாட்டு மேற்கோளாய் வந்துள்ளது.*

*4. "மாயையும் சுத்தமாயையும் (அவற்றின் காரியங்களும்) கெடாமல் வரும் இருவினைப் பயனும் தாம்கூடிய அரிய உயிரில் ஆணவமல சத்தி மேவும் எனில், மூன்றும் இருளாகியே நிற்கும்.*

*மாயையும் சுத்த மாயையும் (அவற்றின் காரியங்களும்) கெடாமல் வரும் இருவினைப் பயனும் தாம்கூடிய அரிய உயிரில் அருட்சத்தி மேவும் எனில், மூன்றும் ஒளியாகியே நிற்கும்.*

*(மூதறிஞர் அடிகளாசிரியர்-பதிப்பாசிரியரிடம் கூறிய விளக்கம்.)*

# ஞான வாய்மையின் பயன்

## ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம்

தேசுற மருவும் ஆன்ம
தரிசனம் ஆன்ம சுத்தி
ஆசிலா ஆன்ம இலாபம்
ஆகமூன் றாகும் மூன்றும்
பாசமது அகல ஞானம்
பற்றல்தான் பணியை நீத்தல்
ஏசில் தேயத்து அழுந்தல்
எனும்இவற்று அடங்கும் அன்றே. (71)

**தேசுற மருவும் ஆன்ம தரிசனம் ஆன்ம சுத்தி ஆசு இலா ஆன்ம இலாபம் ஆக மூன்று ஆகும்:-** பராசத்திப் பிரகாசம் பதிய அதனாலே கூடுவதாகிய ஆன்ம தரிசனம் ஆன்ம சுத்தி ஆன்மலாபம் என்று மூன்றவதரமாம்; இவை அடைவே நின்மல சாக்கிரம், நின்மல சொற்பனம் நின்மல சுழுத்தி மூன்றும்;

**பாசமது அகல ஞானம் பற்றல்தான்:-** ஆணவாதி பாசங்கள் அகல பரஞானத்திலே தன்னை அறிகிறதாவதொன்று; இது நின்மல சாக்கிரம்;

**பணியை நீத்தல்:-** அந்தப் பரஞானத்தினாலே வேறற நின்று சர்வக்கிரியா வியாபாரமும் இல்லாதவனாக நிற்பது ஆன்ம சுத்தி; இது நின்மல சொற்பனம்;

**ஏசுஇல் தேயத்து அழுந்தல் எனும் இவற்று அடங்கும் அன்றே:-** பராசத்தி மூர்த்திமானாகி அநுபவித்தினாலே தானே அறியப்படுமவனாயிருக்கும் பரமசிவத்தில் அப்பரமானந்தத் திலே அமிழ்ந்தினவனாகியிருப்பது ஆன்மலாபம்; இது நின்மல சுழுத்தி.

நின்மல துரியம், நின்மலதுரியாதீதம் இவை இரண்டும் இந்த நேயத்தழுந்தலாகிய நின்மல சுழுத்தியிலே அடங்கும் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

1. ஆன்ம சுத்தி என்பதற்குத் தன்பணி நீத்தல் என்பது பொருள்.

2. ஆன்ம சுத்தி என்பது சிவபெருமானை அழுந்தி அறிந்து நிற்றல்.

3. "தனக்கொரு செய்தியுமில்லை என்றறிந்து நிற்றல்" (ஆன்ம தரிசனம்) (சித்தாந்தக் கட்டளை)

4. "நீயும் நின் செயலொன்று, இன்றி நிற்றலே தரிசனம்" (உண்மை நெறி விளக்கம்-2)

5. ஆன்ம தரிசனம் - பாசமது அகல ஞானம் பற்றல்

6. சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம்- இதுவே ஆன்ம லாபம். (உண்மை நெறி விளக்கம்)

**7. ஆன்ம லாபம் விளக்கம் வருமாறு**

**ஆன்ம லாபமாவது:-** அங்ஙனம் (திருவருளுடன்) இடைவிடாமலிருத்தலினால் பரமானந்த சுகம் உண்டாக, அதைப் பெற்று ஆனந்த மேலீட்டில் அழுந்தி நிற்பதாகிய நேயத்தழுந்தலாபம். அந்நிட்டை கூடுதற் கரிதாயின், அவ்வருளிலே அழுந்தி நிற்க; அஃதும் கூடுதற்கரிதாயின் பூதமுதல் நாதமளவாகப் பொய்யென்று கண்டு நீங்கித் தன்னைக்கண்டு, தானும் அருளும் நிற்கும் முறைமையறிந்து, அருளே நாவாக முத்தி பஞ்சாக்கரத்தைச் செபியாமற் செபிக்க; அஃதும் கூடுதற்கரிதாயின் ஞான நூலோதியும் சிந்தித்தும் அந்தரயாகம் பண்ணுக; இவ்வாறு செய்யவே உண்மை வந்து கைகூடும்.

இங்ஙனம் நேயத்தழுந்துதல் முதலாகிய எந்நிலையில் நிற்கினும் ஆசாரியரையும் திருக்கோயிலையும் திரு வேடத்தையும் நாளும் வழிபடுக."

(திருவாலவாய்க்கட்டளையில் உள்ளதாக மூதறிஞர் அடிகளாசிரியர் கூறிய கூற்றாம்)

## உயிர்த் தரிசனம்

தன்அறிவு அதனால் ஏதும்
　　தனக்குஅறிவு இல்லை ஏனும்
தன்அறிவு ஆக எல்லாம்
　　தனித்தனி பயன் அருந்தும்
தன்அறிவு அறியும் தன்மை
　　தன்னாலே தனைஅ றிந்தால்
தன்னையும் தானே காணும்
　　தானது ஆகி நின்றே. (72)

**தன் அறிவு அதனால் ஏதும் தனக்கு அறிவு இல்லை ஏனும்:-** ஆன்மாவானவன் ஞான சொரூபியாயிருந்தும் எந்த விஷயத்தையும் அறிவதற்குத் தன்னுடைய ஞானமானது அஞ்ஞானத்தினாலே மறைக்கப்பட்டிருந்தாலும்;

**தன் அறிவு ஆக எல்லாம் தனித்தனிப் பயன் அருந்தும்:-** கலையினாலே அஞ்ஞான ஆணவம் சற்று நீக்கப்பட்டுத் தன்னுடைய அறிவு பிரகாசமாகவே பஞ்சேந்திரியங்களிலும் பொருந்தி அது அதுவாகி விஷயங்களைப் பற்றும்;

**தன் அறிவு அறியும் தன்மை தன்னாலே தனை அறிந்தால்:-** தன்னுடைய ஞானமானது யாதொரு சிவஞானத் தாலே பிரகாசிக்கிறது அந்தச் சிவஞானத்தினாலே தன்னைத் தரிசித்தல்;

**தன்னையும் தானே காணும் தான் அது ஆகி நின்று ஏ:-** அந்தச்சிவஞானமும் தானும் வேறற நின்று ஆன்ம தரிசனமாம் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1. சிவஞான போத அவையடக்கப் பாடலாகிய "தம்மை உணர்ந்து" என்ற பாடலையும் அதற்கு எழுதப்பட்ட உரையையும் இவ்விடத்திலே ஒப்பு நோக்கி உணர்க.*

## உயிர்த் தரிசனம்

தத்துவம் ஆன வற்றின்
 தன்மைகள் உணரும் காலை
உய்த்து[1] அறிந்திட உதிப்பது
 ஒளிவளர் ஞானம் ஆகும்
அத்தன்மை அறியும் ஆறும்
 அகன்றிட அதுவாய் ஆன்மாச்
சுத்தமாம் சுத்த ஞானத்து
 ஒருமுதல் தோன்றும் அன்றே. (73)

பாடபேதம்: 1. உய்த்து உணர்ந்திட

**தத்துவம் ஆனவற்றின் தன்மைகள் உணருங் காலை உய்த்து அறிந்திட ஒளிவளர் ஞானம் ஆகும்:-** தத்துவ ரூபங்களைத் தரிசிக்குமிடத்துச் சிவஞானம் இடமாக நின்று தேகாதிகளை நெயதி நெயதி என்று வரவேண்டும்; ஆகையால் இப்படிக்கு வருகிற ஞானம் சர்வவியாபியாகிய சிவஞானமாம்;

**அத்தன்மை அறியும் ஆறும் அகன்றிட:-** அப்படி இது நான் அல்ல இதுநான் அல்ல என்று முப்பத்தாறு தத்துவத்தையும் நீங்கின முறைமையும் அகல நிற்கவே;

**அது ஆயஆன்மா சுத்தம் ஆம் சுத்த ஞானத்து ஒரு முதல் தோன்றும் அன்று ஏ :-** ஆன்மா அந்தப் பரஞானமயமாய் நின்மலமாம்; ஆகவே அந்த நின்மல ஞானத்திற்கு முதலான பரமானந்த சொரூபமாகிய ஞேயம், தனக்கு அனுபவமாம் என்றிதன் பொருள்.

### *பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* "சுத்த ஞானத்து ஒருமுதல் தோன்றும்" என்னும் மேலது அடிக்கு "ஊனக்கண் பாசம் உணராப் பதியை, ஞானக் கண்ணில் சிந்தை நாடி" என்னும் சிவஞானபோத நூற்பாவைக் *(9)* கொள்க.

*2.* "பொங்கொளி ஞானம் உண்ட பிள்ளையார்" *(பெரிய புராணம்-திருஞா-1235)*

உறைதரும் உணர்வும் இன்றி[1]
அதன்முதல் உள்ளது என்றுஇங்கு
அறைவதுஎன் என்னில் அண்ணல்
அருளெனும் அதுவே அன்றி
நிறைஒளி முதலது அன்றி
நின்றிடா நிமலன் ஆகும்
இறையவன் முதல் அவன்தன்
இலங்குஅருள் சத்தி யாமே. (74)

பாடபேதம்: 1. மின்றி

**உறைதரும் உணர்வும் இன்றி அதன் முதல் உள்ளது என்று இங்கு அறைவது என் என்னில்:-** சர்வாதாரமாயிருக்கிற அணிவாரிதப் பிரகாச ஞானத்தையன்றி அதற்கொரு தன்மியும் உண்டென்று சொல்லுவதென்னையோ வென்னில் ?

**அண்ணல் அருள் எனும் அதுவே அன்றி நிறைஒளி முதலது அன்றி நின்றிடா நிமலன் ஆகும்:-** கர்த்தாவினுடைய கிருபா சத்தியாகும் அந்த ஞானமானது அந்தச் சத்தியன்றிச் சிவம் இல்லை எங்கும் வியாபியாயிருக்கிற ஞானப் பிரகாசமும் தனக்குத் தர்மியாயிருக்கிற சிவத்தையல்லது உண்டாகாது; இந்தச் சத்தி தர்மமும் நிர்மலனாகிய சிவன் தர்மியுமாம்

**இறையவன் முதல் அவன்றன் இலங்கு அருள் சத்தி ஆம் ஏ:-** சர்வ சிவ பதியாகிய சிவனும் இந்தப் பராசத்தியும் அக்கினியும் உட்டினமும் போல அபினா பாவமாக (அபின்னாபாவமாக)ச் சிவன் முதலும், அவனுடைய பிரகாசம் சத்தியுமாம் என்றிதன் பொருள்.

சுத்தமாம் சத்தி ஞானச்
சுடராகும் சிவம் ஒழிந்துஅச்
சத்திதான் இரண்டும் முன்னைத்
தகைவிலா[1] மலங்கள் வாட்டி
அத்தனை அருளும் எங்கும்
அடைந்திடும் இருள் அகற்றி
வைத்திடும் இரவி காட்டும்
வளர்ஒளி போல் மகிழ்ந்தே. (75)

பாடபேதம்: 1. தகவிலா

**சுத்தம் ஆம் சத்தி ஞானச்சுடர் ஆகும்:-** *நிர்மலமான பராசத்தியானது ஞானப்பிரகாசமாம்;*

**சிவம் ஒழிந்து அச்சத்திதான் இன்றாம்:-** *அந்தப் பரம சிவனுக்கு அபினாபாவமாகவன்றி வேறே சத்தியுள்ளதல்ல;*

**முன்னைத் தகைவு இலா மலங்கள் வாட்டி அத்தனை அருளும்:-** *அந்தப் பராசத்தியானது அனாதியே தவிர்க்கப் படாமல் பரம்பிய சத்தியையுடைய ஆணவாதி மலங்களைப் பக்குவான்மாக்களிடத்தினின்றும் கெடுத்துப் பரமானந்த சொரூபமாகிய சிவத்தை அடைவிக்கும் அஃது தெவ்வா றென்னில் ?*

**எங்கும் அடைந்திடும் இருள் அகற்றி வைத்திடும் இரவி காட்டும் வளர் ஒளி போன் மகிழ்ந்தே:-** *எங்கும் வியாபியா யிருக்கும் அந்தகாரத்தை ஆதித்தப் பிரகாசமானது நீக்கி ஆதித்தனையும் உலகத்திலுண்டான பொருள்களையும் காட்டுவது போல, பராசத்தியும் ஆன்மாக்களிடத்தில் கிருபையினாலே அஞ்ஞானத்தை நீக்கிச் சிவனையும் தன்னையும் ஆன்மாவையும் தரிசிப்பிக்கும் என்றிதன் பொருள்.*

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* “அருக்கனே காட்டுவதாகவும் அறைதல் உண்டு
..............................நின்றருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே மனதறிவின்
நண்ணிஅறி வித்திடுவோம் நாம்”
*(உண்மை விளக்கம்-27)*

2. சித்தியார் சுபக்கம், “வேத சாத்திர மிருதி” *(292)* என்னும் பாட்டுரையில் மறை மறைஞான சம்பந்தர் பதி ஞானத்தால் ஆன்மாக்கள் முத்தியடைவர் என்பதற்கு “**சுத்தமாஞ் சத்தி**” என்னும் இப்பாட்டை மேற்கோளாகக் காட்டுவர்.

## உயிர்ச் சுத்தி

புகல்அரும் அசத்தர், தம்பால்
　　பொருந்திய அலகை யேபோல்
அகிலமும் உணரும் ஈசன்;
　　அருளுயிர் மேவ லாலே
சகலமும் நிகழ வேண்டும்
　　தலைவன்ஜந் தொழிலும் தானே
இகலற இயற்றல் வேண்டும்
　　என்றது நன்று இன்றே. (76)

வார்த்தை சொல்லவும் சத்து அற்றுக் கிடக்கிறவனைப் பிசாசு பிடித்த காலத்திலே அவனுக்குச் சத்துவம் உண்டாகி எழுந்திருந்து அநேக வசனங்களையும் சொல்லிக் கிரியை களையும் செய்வது போல, ஈசுரனுடைய எல்லாவற்றையும் அறிந்ததாகையும் எல்லாவற்றிற்கும் கர்த்தாவாகையுமுடைய பராசத்தி ஆன்மாவினிடத்திலே பதிகையினாலே, ஆன்மாவும் சிவனைப்போலே எல்லாவற்றையும் அறிந்தவனுமாய்ப் பஞ்ச கிர்த்தியங்களையும் குறைவறச் செய்ய வேண்டுமென்று சொல்லுவது, குற்றம் என்றிதன் பொருள்.

இது பூர்வ பட்சம்; மேல் சித்தாந்தம்

*பதிப்பாசிரியர் குறிப்பு*

ஒப்பு நோக்கிய பல படிகளிலும் "**நன்றி இன்றே**" என்றே பாடம் உள்ளது. நன்று இன்றே என்று உரைவழிப் பாடம் கொள்ளப்பட்டது.

## உயிர்ச் சுத்தி

இன்றுநோக்கு உரைந டக்கும்
        இயல்பிலோற்கு இனைய வாய்ந்து
நின்றுதோர் அலகை நேர்ந்தால்
        நிகழ்வதென் ? அதுபோல் உள்ளத்து
ஒன்றிய உணர்வு தம்பால்
        உள்ளது நிகழ்த்தும் ஈசன்
தன்தொழில் நடத்தும் மேனி
        தனக்கெனக் கொண்டு தானே.        (77)

இக்காலத்திலே கண்ணும் இன்றி ஊமையுமாய்ச் சப்பாணியுமாயிருக்கிறவனைக் காணவும் பேசவும் நடக்கவும் சத்தியையுடைய பிசாசு பிடித்தால் அவன் காணவும் சொல்லவும் நடக்கவும் மாட்டானே அதுபோலச் சீவன் முத்தரிடத்திலே எல்லாவற்றையுமறிந்தும் எங்கும் வியாபியாகிய சிவன் நன்றாகத் தோன்றி விளங்கி நின்றாலும் எல்லாவற்றையும் அறிந்து எல்லாவற்றிற்கும் கர்த்தாவானாகக் கூடாது. ஆகில், சில முனிவர் சித்தரிடங்களிலே எல்லா வற்றையும் அறிந்துவரக் கண்டோமே என்னில்,

**உள்ளத்து ஒன்றிய உணர்வு தம்பால் உள்ளது நிகழ்த்தும்:-** ஆன்மாவில் பொருந்தப்பட்ட பராசத்தியானது அந்த ஆன்மாவுக்குப் பூர்வ புண்ய வசத்தினாலே இந்தப் பிராரத்தமான தேகத்திலேயடைந்திருக்கிற சித்தியாதொன்றுண்டு, அதையே பிரகாசிப்பிக்கும், ஆகையால் சிவசாட்சாத்காரமுடைய பேர்க்கு,

சித்திகள் பிராரத்த வசத்தினாலே உண்டாகிலும் உண்டாம். இல்லையாகிலும் இல்லையாம். அவ்வாறு சத்தியில்லாமலிருக்கிலும் முத்திக்கீறில்லை; முத்திக்கு ஞானமே சாதனம்; முத்தரான அனந்தசுராதிகள் பஞ்சகிருத்தியங்கள் பண்ணக் கேட்கப்படுகிறதே யென்னில்,

**ஈசன் தன் தொழில் நடத்தும் மேனி தனக்கெனக் கொண்டு தானே:-** பரமேசுரன் தமக்கு அதிட்ட யோக்கியமா யிருக்கிற மந்திரதனுவையுடைய அணுசதாசிவர் அட்ட வித்தியேசுரர் முதலாகிய பேரையதிட்டித்துக்கொண்டு, “ **இரும்பு சுடுகிறது** ” என்றது போல பஞ்சகிர்த்தியங்களையும் பண்ணுவர் என்றிதன் பொருள்.

### *பதிப்பாசிரியர் குறிப்பு*

சிவஞான போதம் சூத்திரம் 1, அதிகரணம் 3இல் மேற்பாடல் அடிகள் (உள்ளத்து ஒன்றிய........கொண்டு தானே) மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது (பாடியம்)



## உயிர்ச் சுத்தி

இன்னிலை தன்னின் மன்னி
எய்திடும் கலாதி போதம்
தன்அளவு அறிந்து நிற்கும்
தகைவிலா மலங்கள் நீத்த
அன்னிலை கரணம் ஆகா
வகையதில் அறிவு அடங்கி
மன்னிட வியாபி யாய
வான்பயன் தோன்றும் அன்றே. (78)

**இன்னிலை தன்னின் மன்னி எய்திடும் கலாதி போதம் தன் அளவு அறிந்து:-** இந்தச் சுத்தாவத்தையைப் பொருந்திக் கலாதி தத்துவங்கள் செடம் என்பதையும் அநித்தியம் என்பதையும் தனக்கு அந்நியம் என்பதையும் தரிசித்து நீங்கின விடத்திலும்;

**நிற்கும் தகைவிலா மலங்கள் நீத்த அன்னிலை கரணம் ஆகா வகையதில் அறிவு அடங்கி:-** நீங்காமல் நின்ற சுத்தா அசுத்தமாயையும் ஆணவ மலத்தையும் தன்னிடத்தில் பதிந்த திருவருளினாலே நீக்கி இவ்வாறு நீங்குவதான சிவ ஞானத்தைத் தனக்குக் கரணமாகக் கருதாது தாரமாகக் கொண்டு அந்தச் சிவஞானத்திலே "மேகம் உண்ட நீர்போல" அடங்கி,

**மன்னிட வியாபி யாய வான் பயன் தோன்று மன்றே:-** கேவல சகலத்தைப் பொருந்தாமல் அந்த நிலையே நிற்க பரமானந்தச் சொரூபம் அனுபவ சாட்சாத்காரம் என்றிதன் பொருள்.

***பதிப்பாசிரியர் குறிப்பு***

1. மேற்பாட்டு, சிவதரிசனத்தால் ஆன்ம சுத்தியை உணர்த்திற்று.

2. “எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கிவர்ஒன்று அல்லாது அறியார் அற (திருவருட்பயன்-93)

3. வியாபியாய வான்பயன் எண்குணத்தொன்று.

4. “ஆன்மா என்னும் சொற்குப் பொருள் வியாபகம் என்பதூஉம் சித்அசித்தென்பதூஉமாம்”
(சிவஞான முனிவர்-சிவஞானபோதச்
சிற்றுரை-சூத்திரம்-4)

## உயிர்ச் சுத்தி

அடைபவர் சிவமே ஆகும்
அதுஅன்றித் தோன்றும் என்ற
கடனது என்னென்னில் முன்னம்
கண்டிடார் தம்மை இன்னும்
தொடர்வரும் அருளி னாலும்
தோன்றுமா காணார் ஆயின்
உடையவன் அடிசேர் ஞானம்
உணர்தலின் அணைதல் இன்றே. (79)

**அடைபவர் சிவமே ஆகும் அது அன்றித் தோன்றும் என்ற கடனது என் என்னில்:-** சிவனைப் பொருந்தினவர்கள் "**சமுத்திரத்திலே கூடின ஆற்றுநீர் சமுத்திர சலமே ஆனது போலச்**" சிவனே ஆவார்கள்; அப்படியன்றியிலே, சிவனைப் பொருந்தின பொழுது பரமானந்த சொரூப சிவதரிசனம் அடையப் பெறுவார்கள் என்பது என்னையோ வென்னில்?

**முன்னம் கண்டிடார் தம்மை இன்னும் தொடர்வரும் அருளினாலும் தோன்றுமா காணார் ஆயின் உடையவன் அடி சேர் ஞானம் உணர்தல் இன்று அணைதல் இன்றே:-** பெத்த நிசையிலே தேகாதிகளைப் பொருந்தி அதை அதை நான் நான் என்று நின்ற தன்றித் தன்னுடைய சொரூபத்தை அறிந்த தில்லை; ஆகையினால், சிவதரிசனம் பட்டதுமில்லையாம்; ஆகையால், சிவஞானம் காட்டாகச் சிவனையும் ஆன்மாவையும் தானாகக் கண்டனுப்பவிப்பதே முத்தி என்றிதன் பொருள்.

# தேசன் உருப் பார்வையறப் பார்க்கு வகை
# அல்லது
# உயிர் லாபம்

பொற்புறு கருவி யாவும்
புணராமே அறிவி லாமல்
சொற்பெறும் அதீதம் வந்து
தோன்றுமே தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச்
செயல்அறுத் திடவு திக்கும்
[illegible]பர மாகி நிற்றல்
சாக்கிரா தீதம் தானே. (80)

பெத்த திசையில அழகாயிருக்குங் கருவி கரணங் களையும் பொருந்தாமல் அஞ்ஞானம் என்று பேரையுடைய ஆணவத்துடனே கூடி அதீதத்தையும் பொருந்தாமல் என்றது? இரண்டும் அவிட்சேபங்களையும் விட்சேபங்களையும் விட்டு, பிரகாசித்து நின்ற பரஞானத்தினாலே விட்சேபம் என்னும் இரண்டவத்தையும் அறுத்து நிற்கப் பிரகாசிக்குந் பரமசிவந்தானேயாய் நிற்றல் சாக்கிராதீதம் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

**1. சாக்கிரா தீபம்**

“சாக்கிரந் தன்னில் அதீதம் தலைப்படில்
ஆக்கிய வந்த வயிந்தவம் ஆனந்தம்
நோக்கும் பிறப்பினும் நோன்முத்திச் சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல்செய் யாவே”

*(திருமந்திரம் - 2266)*

**2. தற்பரமாகி நிற்றல்**

"கற்பன கற்றுக் கலைமன்னும் மெய்யோகம்
முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே
தொற்பதம் மேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவசித் தாந்தரே"

*(திருமந்திரம் - 1421)*

**3. சாக்கிராதீதம் என்றால் என்ன ?**

"எத்திசையும் ஒன்றாம் இறையறிவி லேஅழுந்தல்
சுத்தபரா யோகமெனச் சொல்லுமே - நித்தமறை
அத்தன்மை கண்டால் அதுமுத்தி சாக்கிரமாம்
சித்த மயல்அறவே தேர்"

*(துகளறு போதம் - 48)*

"நின்ற அறிவறிகை நீங்காமை சாக்கிரமாம்
அன்றி அவிழ்தல் அதீதமாம் - சென்றறிவை
நீங்காமை நின்று நெடிது துயில்கொளவே
வாங்காதறிவாய் வர"

*(துகளறு போதம் - 49)*

## உயிர் லாபம்

ஒடுங்கிடா கரணம் தானே[1]
ஒடுங்குமாறு உணர்ந்து ஒடுக்க
ஒடுங்கிடும் என்னில் நின்றது
ஒடுங்கிடா கரணம் எல்லாம்
ஒடுங்கிட[2] ஒடுங்க உள்ள
உணர்வுதான் ஒழியும் வேறாய்
ஒடுங்கிடல்[3] அன்றி மற்ற
உண்மையை உணர ஒண்ணாதே. (81)

பாடபேதம்: 1. தாயே, 2. ஒடுங்கிட ஒடுங்கின், 3. ஒடுங்கிடி னன்றி

**ஒடுங்கிடா கரணம் தானை ஒடுங்கிடும் ஆறு உணர்ந்து ஒடுக்க ஒடுங்கிடும் என்னில் நின்றது ஒடுங்கிடா:-** புறவிந்திரியங்களானவைகள் தானாக ஒடுங்குவதல்ல அது ஒடுங்கும் முறைமையை அந்தக் கரணங்களினாலே விசாரித்து ஒடுக்க ஒடுங்கும் என்னில், புறவிந்திரியங்களை ஒடுக்கி நின்ற அந்தக் கரணங்கள் ஒடுங்காது. மனம் புத்தி ஆங்காரங்களுக்கு முதலான சித்தத்தினுடைய சலனமே பெந்தமென்றும் சித்த அசலமே முத்தியென்றும் சொல்லுகையால் புறவிந்திரியங் களை யொடுக்கியந்தக் கரணங்கள் நின்ற பொழுதே பந்தம்;

**கரணம் எல்லாம் ஒடுங்கிடா ஒடுங்க உள்ள உணர்வு தான் ஒழியும்:-** கரணங்களெல்லாம் ஆன்மாக் கூடியல்லோ சீவித்திடும் ஆகையால் அந்தக் கரணங்களைக் கூடாமல் இருப்பின் பாஷாணம் போலவே ஆன்மா ஒடுங்கியிருப்பான் என்னில்,

**வேறு ஆய் ஒடுங்கிடல் அன்றி மற்ற உண்மையை உணர ஒண்ணாதே:-** மாயா காரியமாகிய கலாதிகளுக்கெல்லாம் தான் அன்னியமாய்ச் சிவஞானத்திலே அமிழ்ந்தில் அல்லது சிவஞானத்தை அனுபவிக்கவொண்ணாது என்றிதன் பொருள்.

## உயிர் லாபம்

பற்றிடும் கருவி யாவும்
படர்ந்துஉணர்வு அளிக்குங் காலை
உற்றுஅறிந் திடுவது ஒன்றின்
உணர்வினில் உண்மை ஆகும்
மற்றது பகல்வி ளக்கின்
மாய்ந்திட வருவது உண்டேல்
பெற்றிடும் அதனை மாயப்
பிறப்பினை அறுக்க லாமே. (82)

**பற்றிடும் கருவி யாவும் படர்ந்து உணர்வு அளிக்குங் காலை உற்று அறிந்திடுவது ஒன்றின் உணர்வினில் உண்மை ஆகும்:-** பொருந்தப்பட்ட அந்தக் கரணம் புறவிந்திரி யங்களை வியாபிச்சு விஷயங்களை ஆன்மாவினிடத்திலே வித்தியா தத்துவம் செலுத்துங் காலத்திலே அந்த வித்தியா தத்துவத்தைப் பொருந்தி இந்த விஷயங்களை அறிவது ஆன்மாவினுடைய ஞான சுபாவமாகும்.

**மற்றது பகல் விளக்கின் மாய்ந்திட வருவது உண்டேல்:-** அந்தக் கருவி கரணங்களானவைகள் ஆன்மாத் தேகத்திலே சீவித்திருக்கையிலேயே தங்களுடைய வியாபாரங்கள் அற்று ஆதித்தன் சன்னிதியில் விளக்க வியாமலிலிருக்கையிலும் பிரகாசமற்றது போல விருக்கும்படிக்கு ஆன்மா நின்மல சுழுத்தியை அடையும் இயல்பைப் பொருந்தில்,

**பெற்றிடும் அதனை மாயப் பிறப்பினை அறுக்கல் ஆமே:-** தத்பத வாச்சியமான சிவத்தை ஆன்மா தனக்கு வேறறப் பொருந்தும்; அதனால், மயக்க விகற்ப சோக மோதிகளைப் பொருந்துஞ் சனனத்தை ஒழித்துப் பரமானந் தானுபவியாயிருக்கலாம்.

*பதிப்பாசிரியர் குறிப்பு:*

"மற்றது பகல் விளக்கின் மாய்ந்திட வருவது உண்டேல்" பிறர் கூறும் உரை வருமாறு:

"ஆன்ம ஞானம் சிவன் சன்னதியிலே விளக்குப் போல நிற்கும் என்று சொல்லுவார்கள்; அது யுத்தமல்ல; தீவிர சத்திநி பாதத்தை உடைத்தாய்க் குருவினாலே சீடனானவன், பூர்வத்தில் சிற்றறிவு முதலானவைகளில்லாமல் சிவனைப் போலே எல்லாம் அறிந்தவனும் விபுவுமாவன் என்று சிவாகமத்திலே சொல்லுகையால் என்றிதன் பொருள்".

(மூதறிஞர் அடிகளாசிரியர் கூறிய கூற்று)

## உயிர் லபாம்

முந்திய ஒருமை யாலே
மொழிந்தவை கேட்டல்; கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை
தெளிந்திடில் அது தானாக
வந்தவாறு எய்த நிட்டை
மருவுதல் என்று நான்காம்
இந்தவாறு அடைந்தோர் முத்தி
எய்திய இயல்பி னோரே. (83)

**முந்திய ஒருமையாலே மொழிந்தவை கேட்டல்:-** *பூர்வ சென்மத்திற்றபோ பலத்தினாலே ஆசாரியன் அனுக்கிரகம் பண்ணும் பதிபசு பாசத்தினுடைய இலட்சணத்தை ஏகாக்கிர சித்தமாகக் கேட்டல்;*

**கேட்டல் சிந்தனை செய்தல்:-** *அந்தக் கேட்ட இலட்சண இலட்சியங்களிடத்திலே அவ்வியாத்தி அதிவியாத்தி அசம்பவ தோஷமன்றியிலே பரீட்சித்தல்*

**உண்மை தெளிந்திடல்:-** *பாசத்தினுடைய சுபா வத்தையும் பசுவினுடைய சுபாவத்தையும் சிவஞானமிடமாக நின்று அனுபவத்தினாலே அறிதல்.*

**அதுதான் ஆக வந்த வாறு எய்த நிட்டை மருவுதல்:-** *சகலாவத்தையிலே பொருந்தி நின்று தேகம் என்றும் தான் என்றும் வேறற நின்றது போலவும் கேவலாவத்தையிலே ஆணவமென்னத் தானென்னப் பேதம் அறநின்றது போலும்; சிவத்துடனே கூடிச் சிவமும் ஆன்மாவும் வேறற நிற்பது நிட்டையைப் பொருந்துதல் என்று நாலுவகையாம்.*

**இந்த ஆறு அடைந்தோர் முத்தி எய்திய இயல்பினோரே:-** *இப்படி நிட்டையைப் பொருந்தினவர்கள் முத்தியை அடைந்தவர்கள் என்றிதன் பொருள்.*

*பதிப்பாசிரியர் குறிப்பு:*

*1.* இனிக் கேட்டல் முதலிய நான்கனுள், கேட்டல் ஞானத்திற் சாரியை, சிந்தித்தல் ஞானத்திற் கிரியை, தெளிதல் ஞானத்தில் யோகம், நிட்டை கூடல் ஞானத்தில் ஞானம் என்றுணர்ந்து கொள்க. *(சிவஞானபாடியம் - சூ - 8 - 1)*

*2.* "கேட்டலுடன், சிந்தித்தல், தெளிதல், நிட்டை
கிளத்தலெனஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்;
வீட்டைஅடைந் திடுவர் நிட்டை மேவினோர்கள்;
மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்கு
ஈட்டியபுண் ணியநாத ராகி இன்பம்
இனிதுநுகர்ந் தரணருளால் இந்தப் பார்மேல்
நாட்டியநற் குலத்தினில்வந் தவரித்துக் குருவால்
ஞானநிட்டை அடைந்தவர் நாதன் தானே".

*(சித்தியார் சுபக்கம்-276)*

*3. ஈசான்ய மடம் இராமலிங்க சுவாமிகள்*

"அது (ஞானம்) அபரம் பரம் என இருதிறப்படும். அதனை (ஞானத்தை) கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை,) நான்கென நவில்வதென்னை யெனின்? அபரம் கேட்டல் சிந்தித்தலாற் பெறப்படுவதூஉம், பரம் தெளிதல் நிட்டை கூடல்களாற் பெறப்படுவதூஉம் ஆதலின் என்க.

*(நால்வர் நான்மணி உரை-1)*

*4.* உடல் தொழில், உள்ளத்தொழில் ஆகிய இரண்டையும் கைவிட்டுக் கேட்டல் முதலிய அறிவுத் தொழிலால் வழிபடுவது ஞானமாகும்.

*(பேரறிஞர் அடிகளாசிரியர் கூற்று)*

## உயிர் லாபம்

பாசமா ஞானத் தாலும்
படர்பசு ஞானத் தாலும்
ஈசனை அறிய[1] ஒண்ணாது
இறையருள் ஞானம் நண்ணித்[2]
தேசுறும் அதனால் முன்னைச்
சிற்றறிவு ஒழிந்து சேர்ந்து
நேசமொ டுயர்ப ரத்து
நிற்பது ஞான நிட்டை. (84)

பாடபேதம்: 1. உரை, 2. நண்ணில்

**பாசம் ஆம் ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும் ஈசனை அறிய ஒண்ணாது:-** பாச ஞானமானது சட்சுவாதி இந்திரியங்களினாலே அறியும் பிரத்தியட்சமும், மனம் புத்தி ஆங்காரம் முதலானவைகளினாலே அறியும் அனுபானமும், வேதாதிகளினால் அறியும் சுத்த ஞானமும், இவையிற்றுக் களிலே வியாபித்தறியும் பசுஞானமாவது எல்லாத் தத்துவங்களும் நீங்கின விடத்திற் பிரகாசிதமான ஞானத்தைச் சிவமென்றறியாமல் தானென்றுந் தானே பரப்பிரம்ம மென்றும் எண்ணுவது; ஆகையால், இந்த இரண்டுவகை ஞானத்தாலும் சிவதரிசனம் கூடாது.

**இறை அருள் ஞானம் நண்ணி தேசு உறும் அதனால் முன்னை சிற்றறிவு ஒழிந்து சேர்ந்து நேசமொடு உயர் பரத்து நிற்பது ஞான நிட்டை:-** கர்த்தாவினுடைய திருவருள் ஞானம் பொருந்தி அதனாலே ஆன்ம ஞானம் மிகவும் பிரகாசமாக அதனால் முதலேயுள்ள பரிச்சின்னமாயிருக்கிற பதார்த்த ஞானங்கள் அன்றிப் பரிபூரணமாயிருக்கிற சிவஞானத்தை இரண்டறப் பொருந்தி மிகுந்த தோரன்புடனே எல்லாவற்றிற்கும் மேலா யிருக்கும் பரமானந்த சொரூபத்திலேயிரண்டற நிற்பது ஞான நிட்டை என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு:*

*1.* ஞான நிட்டைக்குச் சகச நிட்டை என்ற பெயர் உண்டு. சகச நிட்டையின் இயல்பை, சுத்த சாதகப் பாடல்களால் *(56,62)* அறிக.

*2.* *"அண்ணலைச் சென்றணு காப்பசு பாசமே"*

*(திருமந்திரம் - 1436)*

*3.* *"இருவகையாம் மாயையில உண்டான ஞானம்*
*எவ்வளவுண்டு அவ்வளவும் பாச ஞானம்;*
*மருவியதற் போதத்தால் சித்தி முத்தி*
*மதித்தழுந்து நிட்டைபசு ஞான மாகும்;*
*பரவுமிவை அஞ்ஞானம் பாசஞானம்;*
*பசுஞானம் சுதந்தரசீ னந்தான் என்றே*
*இருவகைஞா னமும்நீங்கி, அருளால் ஆவி*
*ஈசன்அடி கூடல்இறை ஞான மாமே".*

*(சிவஞான தீபம்-153)*

## உயிர் லாபம்

விளம்பிய வகையில் நிட்டை
மேவிடல் அரிதேல் முன்னம்
அளந்துஅறிந்து[1] அளித்த வற்றின்
அளவுமற்று அவற்றி னாலே
உளங்கொளும் தனையும் உள்ள
படியும்உற்று உணர்ந்து செவ்வே
தளர்ந்திடாது உவப்ப மற்றுத்
தன்மையது ஆகுந் தானே. (85)

பாடபேதம்: 1. அளந்து அறிவு

முன்சொன்ன நிட்டை பொருந்துவதற்கரிதாகில், பூர்வ கன்மத்தளவினாலே விஷயங்களை அறியும்படிக்குத் தோற்றுவிப்பனவைகளாயிருந்த தத்துவங்களுடைய உண்மைகளையும், அந்தத் தத்துவங்களினாலே சுக துக்கங்களைப் புசிக்கும் தன்னுடைய உண்மையையும் உள்ளபடியுணர்ந்து; உள்ளபடி உணர்ததலாவது, தத்துவங்கள் சடமென்றும், தான் அசுதந்தரனென்றும், தன்னையும் இந்தத் தத்துவங்களையும் கூட்டிப்புசிப்பிக்கிறவன் சிவன் என்றும், இந்தத் தத்துவங்களையும் ஆணவத்தையும் நீங்கின விடத்துச் சிவனே தாரகம் என்றறிந்து ஏகாக்கிர சித்தமாக ஒழிவற்ற பத்தியைச் சிவனிடத்திலே பண்ணவே முன்சொன்ன ஞான நிட்டை கூடும் என்றிதன் பொருள்.

### *பதிப்பாசிரியர் குறிப்பு* - மேற்பாட்டிற்கு இன்னொரு உரை

ஞான நூல்களை ஆசிரியவிடத்தே கேட்டும், கேட்டதைச் சிந்தித்தும், சிந்தித்ததைத் தெளிந்தும், தெளிந்தவாற்றால் திருவருண்ஞானம் தண்ணப்பெற்றுத் தேசினையடைந்து அதனால் தனது முன்னைச் சிற்றறிவொழியப் பெற்று உயர் பரத்தை ஒன்றாகாமல் இரண்டாகாமல் தான் சேர்ந்து நிற்பதாகிய ஞான நிட்டையை மேவுதல் தனக்கு அரிதேல்.

தொன்று தொட்டே வினைகளை அளந்து அதற்குத்தக அறிவை அளித்து வரும் சிவம் சத்தியினுடைய (அளவு) வியாபகத்தையும், அவ்விரண்டால் அறிந்துவரும் தன்னையும், அருட் சத்தியையும், சிவத்தையும் அடைவதற்கு உபாயமாக ஆசிரியன் உபதேசித்த அறிவதொரு குறியையும், சிந்தித்துத் தெளிந்து அத்தெளிவில் பிறழாது சோராது உவந்திருக்கவும். மற்று அந்த ஞான காலாந்தரத்தில் தானே நிகழும்.

(மூதறிஞர் அடிகளாசிரியர் கூறிய விளக்கம்.)

பாவிக்கின் மனாதி வேண்டும்
பயனிலை கரணம் நீத்துப்
பாவிப்பன் என்னில் என்ன[1]
பழுதுள பாவ கத்தால்
பாவிக்க ஒண்ணாது என்று
பாவிப்பன் என்னின் நீயென்
பாவிக்க வேண்டா ஆண்ட
பரனருள் பற்றி னோர்க்கே. (86)

பாடபேதம்: 1. என்னை, 2. ஒண்ணானென்று.

**பாவிக்கின் மனாதி வேண்டும் பயன் இலை:-** சிவனைத் தியானம் பண்ணும்பொழுது மனம் முதலாகிய கரணங்கள் வேண்டும்; அவைகள் சடமாகையால், சிவத்தைக் காணமாட்டாது, ஆகையினாலே அதனால் ஒரு பயனுமில்லை;

**கரணம் நீத்து பாவிப்பன் என்னில் என்ன பழுதுள:-** கரணங்களை நீக்கிச் சிவனைத் தியானிப்பேன் என்னில், கரணங்கள் நீங்கினவிடத்து அஞ்ஞானமே உள்ளது;

**பாவகத்தால் பாவிக்க ஒண்ணாது என்று பாவிப்பன் என்னில் நீ என்:-** சிவன் வாக்கு மனத்திற்கு அப்பாற்பட்டவன் என்று நினைப்பேன் என்னில், நினைப்பது மனத்தினுடைய தொழிலாகையால் நீயே செய்தவனாகின்றாய்; இவ்வாறாகில், சிவபாவனை எங்ஙனம் கூடும் என்னில் ?

**பாவிக்க வேண்டா ஆண்ட பரன் அருள் பற்றி னோர்க்கே:-** சர்வ சீவ பதியாகிய பரசிவனுடைய கிருபை பொருந்தின பேர்க்குச் சர்வோபாதியும் நீங்கி நிற்கவே பரமானந்தம் உதிப்பதன்றிப் பாவிக்க வேண்டுவதில்லை.

இதனால், ஞான சாதனைக்கு முன் காயத்தினாலே சிவ பூசாதிகளும், வாக்கினாலே தோத்திரமும், மனத்தினாலே தியானமும் பண்ணுவதொழிந்து, ஞான சித்தனுக்கிவைகள் வேண்டாவென்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

1. ஆண்ட பரனது திருவருள் ஞானத்தைத் தாரகமாய்ப் பற்றினோர்க்கு மேற்சொன்ன மூன்று பாவனைகளாலும் பாவித்தல் வேண்டாவாம். எனவே, அவ்வருளே தனக்கு முதலாய சிவத்தொடு கூட்டும் என்க. எனவே, பாவனாதீதமே சிறந்தது; அது பதியாவிடத்து அது வருதற் பொட்டுப் பாவனை யோகமும் கொள்ளப்படும் என்க. (மூதறிஞர் அடிகளாசிரியர் கூற்று)

2. இங்கு கூறிய மூன்று பாவனைகளில் முதற்பாவனை மனம் முதலானவற்றால் பாவித்தலாகும்; இது பாச ஞானமாம். மனம் முதலானவற்றை நீக்கிப் பாவனை செய்யக் கருதில் அங்கு ஆணவமலத்தால் அறியாமையாகிய கேவலமே தோன்றும் என்றதாம்; இது அஞ்ஞானமாகும்.

இரண்டுமின்றி ஆன்ம போதத்தால் பாவிப்பவன் ஆன்ம போதத்திற்கு அறியப்படாதாகையால் பாவிப்பதற்கு நீ என்? என்றார்; இது பசுஞானமாம்.

ஆண்ட பரனருளைத் தாரகமாகப் பற்றினோர்க்குச் சிவம் கோசரம் ஆகும். ஆதலின் மேற்கூறிய மூன்று பாவன்னயால் பாவிக்க வேண்டா என்றார்; இங்கே அருள் என்றது சிவஞானத்தை. (மூதறிஞர் அடிகளாசிரியர் கூறிய விளக்கம்)

## உயிர் லாபம்

ஒன்றுஇரண்டு ஆகி ஒன்றின்
ஒருமையாம் இருமை ஆகி
ஒன்றில்ஒன்று அழியும் ஒன்றாது
என்னின்ஒன்று ஆகா; தீயின்
ஒன்றுஇரும்பு உறழின் நன்றாம்
உயிரின்ஐந் தொழிலும் வேண்டும்
ஒன்றிநின்று உணரும் உண்மைக்கு
உவமை ஆணவத்தொடு அன்றே. (87)

**ஒன்று இரண்டு ஆகி ஒன்றின் ஒருமை ஆம்:-** சிவனே, சுத்த மாயோபாதியினாலே செகத்பதியாய ஈசுரமூர்த்தியாயும், சுத்தா சுத்த மாயாகாரியோபாதியினாலே சீவனாகியும் நின்று, திரும்ப முத்தியிலே இரண்டு உபாதியும் நீங்கச் சிவனும் சீவனும் ஒன்றாம் என்னில், மாயை சடம் ஆகையினால் சித்து ரூபமாகிய ஈசுரனைத் தானாக ஆவரியாது; ஆகையால், அனாதியே சிவனும் சீவனும் உண்மையாக வேறே ஒன்றொன்பது கூடாது.

**இருமை ஆகி ஒன்றில் ஒன்று அழியும்:-** அனாதியே பதியும் பசுவும் இரண்டாய் முத்தியிலே ஒன்றேயாம் என்னில், ஆன்மா அழிய வேணும்; அழியின் முத்தியின்பம் பெற்றவர்கள் இல்லையாம் ஆகையா ல் அது கூடாது;

**ஒன்றாது என்னில் ஒன்று ஆகா:-** முத்தியிலே சிவனும் ஆன்மாவும் கலப்பதில்லை சிவசமனாகவேயிருக்கும் என்னில் அத்துவித முத்தியென்பது கூடாது; இஃதன்றியும் முத்தியிலே சிவனும் ஆன்மாவும் நின்மல சித்த ரூபமும் நிரவயமும் பரிபூரணமுமாய்ப் பேதலட்சணம் இல்லாதிருக் கையால் இரண்டாயிருக்குமென்பது கூடாது.

**தீயின் ஒன்றிரும் புறழின் நன்றாம் உயிரின் ஐந்தொழிலும் வேண்டும்:-** இரும்பிலே அக்கினி சமாவே சித்தாற் போல ஆன்மாவிலே சிவன் சமாவேசம் என்னில், சீவன்

முத்தனானவன் பஞ்சகிர்த்தியங்களும் பண்ணிடும்; அஃது இவ்விடத்தில் சகலான்மாக்களிடத்தில் சீவன் முத்தரான பேர்க்குக் கூடாது; பரம முத்தன் சிவனுக்கு அன்னியமில்லாத வனாகையால் கிர்த்தியங்களைப் பண்ணுவனென்றும் பண்ணானென்றும் வேறாகக் கூறுதற்கிடமேயில்லை ஆகில், முத்தியவத்தையில் சிவனும் சீவனும் நிற்பது எப்படி என்னில்?

**ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு உவமை ஆணவத்தொடு அன்றே:-** சிவனுடனே பொருந்தி நிற்கும் உண்மையை விசாரிக்குமிடத்தில் ஆணவ கேவலம் போல பரமசிவமும் ஆன்மாவும் நிற்பதற்குச் சபட்சமில்லாதிருக் கையினாலே வெதிரேக திட்டாந்தமாகச் சொன்னது.

அஃதாவது கேவலத்திலே ஆன்மாவானவன் கலாதி தத்துவங்கள் தாத்துவிகங்கள் குணங்கள் ஒன்றுமின்றி நின்றது போலும்; ஆகாயத்திலே வாயுவானது நிச்சலமாய் நின்றது போலும். சிவத்திலே விகாரமன்றியிலே ஆன்மா நின்று, சிவத்தைப் போலே வியாபியுமாய் ஞான சொரூபனுமாய்ச் சிவமேயாய் நிற்பன் என்றிதன் பொருள்.

***பதிப்பாசிரியர் குறிப்பு***

1. "ஒன்றாலும் ஒன்றாது; இரண்டாலும் ஓசைஎழாது
என்றால்ஒன் றன்று இரண்டும் இல்".

*(திருவருட்பயன்-75)*

2. அதுஇது என்றும்; அவன்நானே என்றும்;
அதுநீயே ஆகின்றாய் என்றும்-அதுவானேன்
என்றும் தமையுணர்ந்தார் எல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்லுவரோ உற்று?

*(திருக்களிற்றுப்படி - 85)*

## உயிர் லாபம்

அழிந்திடும் பாசம் என்னின்
நித்தம்என்று உரைத்தல் வேண்டா
அழிந்திடாது என்னின் ஞானம்
அடைவது கருத வேண்டா
அழிந்திடும் சத்தி நித்தம்
அழிந்திடாது ஒளியின் முன்னர்
அழிந்திடும் இருளும் நாசம்
அடைந்திடா மிடைந்தி டாவே. (88)

**அழிந்திடும் பாசம் என்னில் நித்தம் என்று உரைத்தல் வேண்டா:**- *பாச பதார்த்தங்களுக்குள் முத்தினதாகிய ஆணவ மலம் ஆன்மாக்களுடைய முத்தியிலே கெடும் என்னில், ஆணவ மலம் நித்தியம் என்னும் ஆகம வசனத்திற்கு விரோதமாம்;*

**அழிந்திடாது என்னில் ஞானம் அடைவது கருத வேண்டா:**- *ஆணவ மலம் கெடாது என்னில் ஆன்மாவுக்கு ஞானம் பிரகாசிப்பது கூடாது.*

**அழிந்திடும் சத்தி நித்தம் அழிந்திடாது:**- *சீவன் முத்தரிடத்திலே இராகாதிகளைப் பண்ணும் ஆணவ சத்தியானது கெட்டு, மூலம் கெடாமல் நிற்கும்; அஃதெவ் வாறென்னில் ?*

**ஒளியின் முன்னர் அழிந்திடும் இருளும் நாசம் அடைந்திடா மிடைந்திடாவே:**- *விளக்கின் முன்னே இருளானது நீங்கி அப்பாலே நிற்கையினாலே இருளுக்கு நாசமும் இல்லை யானது போல நிற்கும். சகலரில் சீவன் முத்தர்க்கு எல்லா வற்றையும் அறிகையும் எங்கும் வியாபியாகையும் உண்டாகையினாலே, மூல அஞ்ஞானமும் அதன் சத்தியும் சுத்தமாக நீங்கும் என்றிதன் பொருள்.*

*இந்த ஆணவமல முத்தியிலட்சணம் ஏகமாய் என்னும் விருத்தத்திலே விரிவாகத் திட்டாந்தத்துடனே கூடச் சொன்னோம்.*

## உயிர் லாபம்

எல்லையில் பிறவி நல்கும்
　　　இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையில் அகலும் என்ற
　　　உடல்பழ வினைகள் ஊட்டும்
தொல்லையில் வருதல் போலத்
　　　தோன்றுஇரு வினையது உண்டேல்
அல்லொளி புரையும் ஞானத்
　　　தழல்உற அழிந்து போமே. (89)

**எல்லையில் பிறவி நல்கும் இருவினை எரிசேர் வித்தின் ஒல்லையின் அகலும்:-** எண்ணிறந்த செனனங்கட்கு ஏதுவா யிருக்கிற புண்ணிய பாவ சொரூபமாகிய சஞ்சித கன்மங்கள் அனைத்தும் ஞானாக்கினியிலே வெந்த விரை போலச் சென்மாங்கு ரோற்பாவகமல்லவாம்;

**என்ற உடல் பழவினைகள் ஊட்டும்:-** பிராரத்த கன்மமானது தேகாந்தமளவும் நின்று, தன்னுடைய பலங் களைப் பொசிப்பிப்பதாம்; இவ்வாறு பிராரத்த தேகமிருந்து சுகதுக்கங்களைப் புசிக்கும் பொழுதே இதாகிதங்களினாலே பூர்வம் போலப் புண்ணிய பாவங்கள் ஏறாதோ வென்னில் ?

**தொல்லையில் வருதல் போலத் தோன்று இரு வினையது உண்டேல் அல்ஒளி புரையு ஞானத் தழல் உற அழிந்து போமே:-** பூர்வம் போலச் சீவன் முத்தர்க்கு இதாகிதங்கள் வாராது; பிற மாதத்தினாலே வருகினும் "**இருளானது ஒளியின் முன்னே நில்லாதது போல**" ஞானக் கினியினாலே அந்தக் கன்மங்களானவைகள் பொருந்தாமற் கெடும் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* *தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்*
*முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பவர்*
*பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்*
**சென்னியில் வைத்த சிவன்** *அரு ளாலே*

*(திருமந்திரம் -2611)*

2. புணர்ந்த பாவ மெலாம்பரி பூரணம்
உணர்ந்த ஞானி விழிபட வோடுமே

(சசிவன்ன போதம்)

3. .................... அடியார்சஞ் சிதத்தை
விழித்தே எரிக்கும் விழியான்

(அவிநாசிநாதர் நெஞ்சுவிடு தூது, 21)

4. தவத்திரு சிதம்பர சுவாமிகள் கூறியவை

"அக்கினிக்குச் சமானம் ஞானியென்ப தொக்கும்; அது கொண்டு நீ கூறியது அருத்தமன்று. மற்றெங்ஙன மெனின், ஞானியானவன் சஞ்சித கர்மத்தைக் குருகடாட்சத்தாற் போக்கிப் பிராரக் கன்மத்தை எடுத்து உடலின் கண்ணே அனுபவித்துத் தொலைத்து மேலுமொரு சனனத்துக்கு ஏதுவாக வரும் ஆகாமிய கன்மத்தைத் தத்போத மிறந்த விடத்து உண்டாகிய ஞானாக்கினியாற் சுடுதலின்; அக்கினிக் கொப்பென்பர். இதற்குப் பிரமாணம் சிவப்பிரகாசம் எல்லையிற்............ஞானத்தழலுற அழிந்து போமே" என்றும் மற்றும் வருவனவற்றாற் காண்க. (கொலை மறுத்தல்-16)

5. "சஞ்சிதம்முன் கட்டுவினை சற்குருநோக் காற்சரியும்
பஞ்சுமலை பட்டநெருப் பாய்"

(சிவஞான வள்ளலார் - சித்தாந்த
சாத்திரம்-பாசவியல்)

## ஐந்தெழுத்து அருள் நிலை

பந்தம் ஆனவை அறுத்துப்
பவுதிகம் உழலும் எல்லைச்
சந்தியாது ஒழியாது இங்குத்
தன்மைபோல் வினையும் சாரும்
அந்தம் ஆதிகள் இல்லாத
அஞ்செழுத்து அருளி னாலே
வந்தவாறு உரைசெய் வாரை
வாதியா பேதி யாவே. (90)

**பந்தம் ஆனவை அறுத்து பவுதிகம் உழலும் எல்லை சந்தியாது ஒழியாது இங்குத் தன்மை போல் வினையும் சாரும்:-** குரு கடாட்சத்தினாலே பாசத்திரையத்தையும் அறுக்கப்பட்ட சீவன் முத்தர் பஞ்ச பவுதிகமான தேகத்துடனே சஞ்சரிக்குமளவு மஞ்ஞான வாதனையானது "**பெருங்காய மிருந்த பாண்டமானது வாதனையும் போகாமல் பலனு மில்லாமலிருந்தது போல**" நிற்கும். அதனாலே ஞானநிட்டை கூடாத பேர்க்கு வினையும் சாரும்;

**அந்தம் ஆதிகள் இல்லாத அஞ்செழுத்து அருளினாலே வந்தவாறு உரைசெய்வாரை வாதியா பேதியாவே:-** அந்த அஞ்ஞான வாதனையினாலே புண்ணிய பாவங்கள் உண்டாம். ஆதியும் நடுவும் அந்தமும் இல்லாத சித்து ரூபமான சிவனுடைய திருநாமமாகிய பஞ்சாட்சரம் வந்த முறைமையறிந்து செபிக்கில் அவர்களை அந்தக் கனிம மானது பொருந்திச் சனனாதி வாதைகளையும் பண்ணாது; ஆகையால், சிவன் பாதார விந்தத்தை நீங்கும்படியும் பண்ணாது என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* ஆன்மாவினிடத்தே வாசனாமலம் நீங்குவதற்கு உபாயம் என்னவெனில், இறத்தலும் பிறத்தலும் இல்லாத

முதல்வனுடைய திருநாமமாகிய ஐந்தெழுத்தை ஆசிரியன் திருவருளாலே உபதேசிக்க வந்த முறைப்படி உரை முதலானவற்றால் உச்சரிக்க வேண்டும்.

**2. அந்தம் ஆதிகள் இல்லாத அஞ்செழுத்து இதன் பொருள் வருமாறு:**- ஐந்தெழுத்தின் பொருளாயுள்ள முதல்வனுக்கே அந்தம் ஆதியில்லையாம். அதனை ஐந்தெழுத்தின்மேல் ஏற்றிக் கூறியது அவ்வைந்தெழுத்தினை இறைவனாகக் கருதுக என்பதாம்.

3. "ஞானமெய் நெறிதான் யார்க்கும் **நமச்சிவாயச்** சொலாம் என்று" *(பெரியபுராணம்-திருஞா-1248)*

4. சிவஞான போதம் ஒன்பதாம் நூற்பாவையும் அதன் உரையையும் இவ்விடத்தில் நோக்குக.

5. ஐந்தெழுத்தை முறைப்படி உச்சரித்தால் வாசனா மலங்கள் துன்பம் செய்யா; சிவஞானத்திலிருந்து வேறுபடுத்தா.

6. "மற்றும் பலபிதற்ற வேண்டாம் மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி-நெற்றிக்கண்
ஆரா அமுதின் திருநாமம் அஞ்செழுத்தாம்
சோராமல் அப்பொழுதும் சொல்"

*(திருமுறை 11 - கயிலைபாதி
காளத்திபாதி-100)*

திருஎழுத்து ஐந்தில் ஆன்மா
திரோதம் ஆக அருள்சிவம்சூழ்
தரநடு நின்றது ஒன்றாம்
தன்மையின் தொன்மை ஆகி
வருமன மிகுதி யாலே
வாசியில் ஆசை இன்றிக்
கருவழிச் சுழலும் மாறும்
காதலற்கு ஓதல் ஆமே. (91)

**திருஎழுத்து அஞ்சில் ஆன்மா திரோதம் ஆக அருள் சிவம் சூழ்தர நடுநின்றது ஒன்றாம்:-** பஞ்சாட்சரத்திலே முதற் கூறப்பட்ட நகார வாச்சியம் திரோதாயிசத்தி; இரண்டாம் மகார வாச்சியம் அஞ்ஞானம்; மூன்றாம் சிகார வாச்சியம் சிவம்; நாலாம் வகார வாச்சியம் சிவனது கிருபா சத்தி; அஞ்சாம் யகார வாச்சியம் ஆன்மா. இதில் அருளுக்கும் சிவத்திற்கும் திரோதாயிக்கும் மலத்திற்கும் நடுநின்ற தொன்று ஆன்மா;

**தன்மையின் தொன்மை ஆகி வருமன மிகுதியாலே வாசியில் ஆசை இன்றிக் கருவழி சுழலும் மாறும் காதலாற்கு ஓதல் ஆமே:-** இத்தன்மையன் ஆகியே கூடிவரும் முறைமை யாலே மனோ வியாபாரமானது விஷயத்திலே மிகுத்து நிற்கும், அந்த விஷய விச்சை உடையவர்களுக்குச் சனனம் மரணம் மாறாது; சனன மரணம் ஒழியவெண்ணும் ஆசை யுடைய கிரகத்தற்கு நகார முதலாகவே பஞ்சாட்சத்தைச் செபிக்க வேணும்; கிரகத்தன் போக மோட்சங்கள் இரண்டையும் இச்சிக்கிறவனாகையால் போகத்தைக் கொடுப்பதாகிய ஆதிசத்தி வாசகமாகிய நகார முதலாகவே உச்சரிக்கலாவதென்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* சைவசித்தாந்தப் பொருளை "**ஆடி நிழலின்**" அறியக் காட்டுவனவாயிருத்தலின் திருவைந்தெழுத்திற்குச் சைவ சூத்திரம் என்றொரு பெயருண்டு.

**2. பசி பசு பாசம் என்னும் மூன்று முதற் பொருளும் ஐந்தெழுத்தில் அடங்கும்**

நகாரம் வகாரம் சிகாரம் - பதி

யகாரம் - பசு

மகாரம் - பாசம்.

**3. காதலார்க்கு ஓதல் ஆம் ஏ - இதன் பொருள் வருமாறு:**

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் பக்குவமுடைய அன்பர்க்குத் திருவைந்தெழுத்தின் பொருளை உபதேசிக்கலாம்.



ஆசுறு திரோதயம் மேவாது
அகலுமா சிவம்முன் ஆக
ஓசைகொள் அதனில் நம்மேல்
ஒழித்தஅருள் ஓங்கும் மீள
வாசியை அருளும் மாய[1]
மற்றது பற்றா உற்றுஅங்கு[2]
ஈசனில் ஏகம் ஆகும்;
இதுதிரு எழுத்தின் ஈடே. (92)

பாடபேதம்: 1. மாயா, 2. உற்றிங்கு

**ஆசுஉறு திரோதம் மேவாது அகலும் ஆ:-** ஆணவ மலத்தினை உற்ற திரோதான சத்தியின் தொழில் உன்னிடத்தில் பொருந்தாது நீங்கும்;

**சிவம் முன் ஆக ஓசை கொள்:-** சிகாரமாகிய சிவ எழுத்து முன் நிற்கும்படித் திருவைந்தெழுத்தினை உச்சரித்தலைக் கொள்வாயாக;

**அதனில்:-** நீ அவ்வாறு உச்சரிக்கும் அதனாலே;

**ந மேல் ஒழித்து அருள் ஓங்கும்:-** நகாரம் ஆகிய திரோதான சத்தியானது மேலே உள்ள மகாரம் ஆகிய மலசத்தியைக் கீழ் போகுமாறு ஒழித்து, ஆன்மாவின் பக்கத்திலே அருளாய் உயர்ந்து நிற்கும்;

**மீள வா சியை அருளும்:-** பின்னர் வகாரமாகிய திருவருளானது சிகாரம் ஆகிய சிவத்தினை உணர்த்தி யருளும்;

**மா ய மற்று அது பற்றா உற்ற அங்கு ஈசனில் ஏகம் ஆகும்:-** ( திருவருள் உணர்வால் பண்டைச் சிற்றறி வொழிந்து) பேரறிவைப் பெற்ற யகாரமாகிய ஆன்மா பின்னும் அத்திருவருளையே பற்றாக அடைந்து அங்குச் சிவனிடத்தே ஒன்றாகும்;

**இது திரு எழுத்தின் ஈடு ஏ:-** மேற்கூறிய இப்பொருள் திருவைந்தெழுத்தின் உள்ளீடான பொருளாகும். *(ஏ - ஈற்றசை)*

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* "செம்புபொன் னாகும் சிவாய நமவெனில்"

*(செம்பு - சிவன்)* *(திருமந்திரம்-903)*

*2.* "*அருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே*"

*(திருமந்திரம்-2705)*



# அன்பால் சிவனை அனுபவிக்கும் மெய்யடியார் இன்பப் பகுதி (அல்லது) அணைந்தோர் தன்மை

தீங்குறும் மாயை சேரா
　　வகைவினை திரிவி தத்தால்
நீங்கிட நீங்கா மூல
　　நிறைஇருள் இரிய நேயத்து
ஓங்குஉணர்வு அகத்து அடங்கி
　　உளத்துள்இன்பு2 ஒடுங்க நேரே
தூங்குவர் தாங்கி ஏகத்
　　தொன்மையில் துகளி லோரே. (93)

பாடபேதம்: 1. அகத் தடக்கி, 2. உளத்தில்

**நீங்கு உறு மாயை சேரா வகை வினை திரிவிதந்தான் நீங்கிட:-** மோகாதியாகிய தீங்குதனைப் பண்ணும் மாயையும், வாக்கு மனக்காயத்தால் உண்டாம் வினையும் நீங்கிட;

**நீங்கா மூல இருள் இரிய:-** நீங்காமல் நின்ற மூல மலமாகிய அஞ்ஞான அந்த காரம் கெட;

**நேயத்து ஓங்கு உணர்வு அகத்து அடங்கி உளத்தில் இன்பு ஒடுங்க நேரே தூங்குவர் தாங்கி:-** நேயமாகிப் பிரகாசிப்பிக்கப் பட்ட சிவஞானத்துள்ளே தாங்கள் அடங்கித் தங்களிடத்திலே இந்தப் பரமானந்தமெல்லாம் பொருந்தாத் தரித்து, அந்த இரதத்தையும் அனுபவியாமல் அடங்க லயமுமில்லாமல் அரிவுருவாய் நின்மல சுழுத்தியைப் பொருந்துவர்கள்; அவர்களே,

**ஏகத் தொன்மையில் துகள் இல்லோரே:-** ஏகமாய் அனாதியாயிருக்கும் அஞ்ஞானத்தை நீங்கினவர்கள் என்றிதன் பொருள்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* **நேரே தூங்குவர் தாங்கி - இதன் பொருள் வருமாறு:-** நேரே தாங்கி தூங்குவர் எனக்கொண்டு, சகல கேவலங்களிற் செல்லாது சுத்த நிலையிலேயே நிட்டை கூடியிருப்பர் எனக்கொள்க.

2. நினைப்பாகிய சகலத்திலும் மறப்பாகிய கேவலத்திலும் செல்லாமல் சுத்த நிலையிலே நிட்டை கூடியிருத்தல் **நேரே தூங்குதல்** என்பர்.



குறிப்பிடம் காலம் திக்கு
        ஆசனம்கொள்கை குலங்கு ணம்சீர்
சிறப்புறு விரதம் சீலம்
        தபம்செபம் தியானம் எல்லாம்
மறுத்தற ஒழிதல் செய்தல்
        மருவிடா மன்னு செய்தி
உறக்குறு பவர்போல் வாய்மை
        ஒழிந்தவை ஒழிந்து போமே. (94)

புண்ணியத்தலவாசம் சூரிய கிரகணாதி புண்ணிய காலங்களிலே பண்ணுந் தீர்த்தத்தானம் முதலானவைகள், கிழக்கு முதற்றிக்கு முகமாயிருந்து வசியம் முதலான எட்டக் கன்மங்களையுஞ், சாதிக்கை பத்மாதனம் முதலான ஆதன பந்தங்கள், ஆசிரமத்திற்கு உசிதமான வேஷதாரணம், வன்னத்துக்குச் சிதமான தர்மங்களை, பொறை முதலான சற்குணங்கள், செல்வத்தை அனுபவிக்கை சாந்திராயணம் முதலான விரதங்கள், சமயசாரம் பஞ்சாக்கினி மத்தியத்திலே நிற்பது முதலாகிய தவங்கள், பஞ்சாட்சரம் முதலாகிய செபங்கள், இருதயம் முதலான தானங்களிலே பண்ணும் தியானம்; இவைகள் எல்லாவற்றையும் நாம் சீவந் முத்தர் சீவன் முத்தர்க்கு விதி நிஷேத மொன்றும் இல்லை என்று தள்ளி விடுவதுஞ் செய்யாது; அனுஷ்டிப்பதும் செய்யாமல் சிவனிடத்திலே நீங்காத நிட்டையை யுடையவர்களாக நிற்கவே இவைகள் நித்திரை பண்ணுகிறவன் பதார்த்தங்கள் போல நழுவிப் போக நிற்பதே இயல்பு என்றிதன் பொருள்.

### பதிப்பாசிரியர் குறிப்பு

**குறிப்பிடம்**:- நல்லயிட மென்று குறிக்கப்பட்டவை; அவை காவிரி முதலிய புண்ணிய தீர்த்தக்கரையும், திருவம்பலம் முதலான சிவத்தானங்களும்.

**காலம்**:- விஷசு முதலான புண்ணிய காலம்.

**திக்கு**:- வடக்கு, கிழக்கு முதலிய புண்ணிய திசைகள்.

**ஆசனம்:-** பத்மாசனம் முதலியவை.

**கொள்கை:-** சைவ சமயக் கொள்கைகள்.

**குலம்:-** சிவதீட்சை பெற்று சிவாகமங்களை ஓதுதற்குரிய குலம்.

**குணம்:-** அன்பு முதலிய நற்பண்புகள்

***சீர்:-*** சீர்மை (புகழ்) உண்டாக நடத்தல்.

***சிறப்புறு விரதம்:-*** சைவ விரதங்கள்.

***சீலம்:-*** சைவ சீலம்.

**தவம்:-** தவம் செய்தல் முதலியன.

**செபம்:-** மந்திர செபங்கள்.

**தியானம்:-** இறைவனை ஆதாரம் நிராதாரங்களில் தியானித்தல்.

## ஞானத்து ஞானம்

அகம்புறம்[1] என்று இரண்டால்
அர்ச்சனை புரியும் இந்தச்
சகந்தனில் இரண்டும் இன்றித்
தமோமயம் ஆகி எல்லாம்
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழும்
நீர்மையார் போல ஞானம்
திகழ்ந்தகம் புறம்என னாத
செம்மையார்[2] நன்மை யாரே. (95)

பாடபேதம்: 1. அகம் புற மென விரண்டால்,
2.செம்மையோர் நன்மை யோரே

**அகம் புறம் என்று இரண்டால் அர்ச்சனை புரிதல் இன்றி:-** புற லிங்கத்தில் பூசை பண்ணும் கிரியா மார்க்கமும், இதைய முதலான தானங்களில் சோதிலிங்கமாகப் பாவித்துப் பூசை பண்ணும் யோக மார்க்கமும் அன்றி;

**இந்தச் சகந்தனில் இரண்டும் இன்றித் தமோமயம் ஆகி எல்லாம் நிகழ்ந்திட மகிழ்ந்து வாழும் நீர்மையார் போல:-** இந்தப் பூமியின் கண் அஞ்ஞானமே வடிவாம் அதனாலே தேகத்தையே ஆத்மாவென்று சத்தம் முதலான விஷயங் களையே பரமாகத் தெரிந்து புசித்து மகிழ்ச்சியுற்று வாழுமவர்களைப் போல;

**ஞானம் திகழ்ந்து அகம் புறம் என்னாத செம்மையார் நன்மையாரே:-** ஆன்ம ஞானமானது சிவனுடைய சத்தி பதிகையினாலே அனிவாரிதமாகப் பிரகாசிக்க அதனால் அகண்டாகாரச்சத்திதானந்தாத்துவ ரூபந்தானேயாய் உட்புறம் பென்னும் பேதமற்றிருக்குவர்களே நன்மையுடையவர்கள் என்றிதன் பொருள்.

## ஞானத்து யோகம்

அண்டம் மேவிட அனைத்தும்
அனைத்தையும் அண்டம் மேவிக்
கொண்டல்போல் எவையும் ஞானம்
குறைவிலா நிறைத லாலே
கண்டதோர் பொருளை அந்தக்
கருத்தினால் காணில் தானே
அண்டநா யகனார் மேனி
ஆனதேல் ஐயம் இன்றே. (96)

வாயுவாதி பூதங்களனைத்தும் ஆகாயத்துக் குள்ளிருக்க, அந்த ஆகாயம் இந்த வாயுவாதி பூதங்களுக்கு அவகாசத்தைக் கொடுத்த அவைகளை வியாபித்துக்கொண்டு நின்றது போல எல்லா ஆன்மாக்களும் சித்து ரூபமும் பூரணமுமான சிவனுள்ளிருக்கச் சிவன்தான் அவைகளெல்லாம் வியாபித் திருக்கையைக் கண்டு,அந்தச் சிவத்தை அந்தச் சிவஞானத்தி னாலே தானாகப் பாவிக்கச் சிதாகாச மூர்த்திமானாகிய சிவசொரூபமாவது சந்தேகமில்லை என்றிதன் பொருள்.

இதனாற் சிவனிடத்திலே எல்லாப் பொருளும், எல்லாப் பொருளிலும் சிவனும் இருக்கிறத்தைக் கண்டு வந்த வயிக்கத்தினாலே நானே சிவனென்...........ச் சிதாற்மாவே முத்தன்.

## ஞானத்துக் கிரியை

மண்முதல் கரணம் எல்லாம்
　　மறுஅசத்து ஆக்கி ஞானக்
கண்ணினில் ஊன்றி அந்தக்
　　கருத்தினால் எவையும் நோக்கி
எண்ணி அஞ்செழுத்தும் மாறி
　　இறைநிறை உணர்ந்து போற்றல்
புண்ணியன் தனக்க ஞான
　　பூசையாய்ப் புகலும் அன்றே. (97)

**மண் முதல் கரணம் எல்லாம் மறு அசத்து ஆக்கி:-** பிருதிவி முதலான தத்துவங்களை அசத்தலாகவே கண்டு நீங்க; **இது பூத சுத்தி;**

**ஞானம் கண்ணினில் ஊன்றி:-** சிவஞானத்தினிடத்திலே தான் பொகுந்தி; என்னவே **ஆன்ம சுத்தி;**

**அந்தக் கருத்தினால் எவையும் நோக்கி:-** அந்த ஞான மயமாகவே எல்லாப் பொருள்களையும் பார்ப்பது; **இது திரவிய சுத்தி;**

**எண்ணி அஞ்செழுத்தும் மாறி:-** பஞ்சாட்சரத்தைச் சிவம் முன்னாக மாறிக் கூட்டி, வாசகத்தை விட்டு வாச்சியமாகிய சிவனை அருளினாலே தானே அடைந்து திரோதகத்தையும் ஆணவத்தையும் நீங்கி நிற்பது; **இது மந்திர சுத்தி;**

**இறை நிறை உணர்ந்து போற்றல்:-** சிவனை ஏக தேசங்களிலே ஒரு மூர்த்தமாகப் பாவிக்கிற குற்றத்தை விட்டு, அகண்டாகார சச்சிதானந்தாத்துவய பரி பூரண சொரூபனாக அனுபவித்தினாலே அறிந்து அது தானாகவே பாவிக்கிறது; **இது லிங்க சுத்தி;**

**புண்ணியன் தனக்கு ஞான பூசையாய்ப் புகலும் அன்றே:-** இவ்வாறு பஞ்ச சுத்தியும் பண்ணுவதே ஞானத்தி னாலே

சிவனுக்குப் பண்ணும் பூசையென்று வேதாகமங்களிலே சொல்லுவது என்றிதன் பொருள்.

பதிப்பாசிரியர் குறிப்பு

1. "உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை"
(திருமந்திரம் - 1444)

2. இப்பாட்டின் பொருளை **ஞானத்துக் கிரியை** என்பர்

"ஞானத்துக் கிரியையுயர் பஞ்ச சுத்தி
நயந்தமலன் அடியகலாது இறைஞ்சல் ஆகும்"
(சிவஞான தீபம்-158)

3. "போற்றல் புண்ணியன் தனக்கு ஞான பூசை யாய்ப் புகலும்" - இதன் பொருள் வருமாறு:-

இவ்வாறு ஐந்து சுத்தியும் செய்து சிவனைப் பூசித்தல் அறமே வடிவான சிவனுக்கு ஞானபூசையாக அறிஞர் உலகம் கூறும். (பேரறிஞர் அடிகளாசிரியர் கூற்று)

## ஞானத்துச் சரிதை

தொண்டர்கள் இடத்தும் வானோர்
தொழுந்திரு மேனி தானும்
அண்டரும் கண்டி லாத
அண்ணலே எனவ ணங்கி,
வெண்தர ளங்கள் சிந்த
விழிமொழி குழற மெய்யே
கண்டுகொண்டு இருப்பர் ஞானக்
கடல்அமுது அருந்தி னோரே. (98)

சிவபத்தர்களிடத்தும் சிவலிங்கத்தினிடத்திலும் இருபத்தஞ்சு விக்கிரகங்கத்தினிடத்திலும், தேவர்களுக்குள் அதிகராகிய பிரம விட்டுணுக்களினாலும் காண்பதற்கரிய சிவனே சானித்தியமாக இருக்கின்றானென்று கண்டு வணங்கி ஆனந்தக் கண்ணீருடனே தழுதழுத்த வார்த்தையை யுடையவராகித் தற்சங்கீர்த்தனத்தையும் பண்ணிச் சத்திய ஞானானந்த சொரூபமாகிய சிவமே எங்குமாகக் கண்டிருப்பர் ஞானானந்தக் கடலிலே அமிழ்ந்தின ஞாதாக்கள் என்றிதன் பொருள்.



## நூற் கருத்து

நிலவுல காயு தாதி
நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவினர் அளவ ளாவாக்
கொள்கைய தாகி வேதத்
தலைதரு பொருளாய் இன்பாய்த்
தாவில் சற்காரி யத்தால்
மலைவறும் உணர்வால் பெத்த
முத்திகள் மதித்தாம் அன்றே. (99)

உலகாயுதன் முதலாகச் சிவாத்துவிதி அந்தமாகப் பொருத்தப்பட்ட சமயிகள் சொல்லும் பிரமாணத்திற்கு எட்டாத உண்மையாய், வேதாந்தத்திலே சொல்லும் உண்மையாய்ப் பரமானந்தத்தை அடைவதற்கேதுவாய்ச் சற்காரிய வாதமுமாய்ச் சந்தேகங்களினாலே விடப்பட்ட ஞானமாகப் பெத்த லட்சணத்தையும் முத்திலட்சணத்தையும் இந்தச் சாத்திரத்திலே சொன்னோம் என்றிதன் பொருள்.

## நற்றவருக்கு ஈயும் நலம் அல்லது அருளுறை நூலைக் கொடுக்கும் முறை

திருவருள் கொடுத்து மற்றச்
சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியும் ஆற்றல்
விளம்பிய ஏது நோக்கிப்
பெருகிய உவமை நான்கின்
பெற்றியில் நிறுவிப் பின்முன்
தருமலை ஒழியக் கொள்வோன்
தன்வயின்[1] சாற்றல் ஆமே. (100)

பாடபேதம்: 1. தன்மையின்

இந்தச் சிவப்பிரகாசம் என்னும் சாஸ்த்திரத்திற்கு அதிகாரி யாரோ வென்னில்? யாதொருவன் நிருவாண தீட்சையையும் பெற்று ஏது பக்கம் சாத்தியம் திஷ்டாந்தம் நிகமனங்களோடும் வாத சொற்ப விதண்டா ஏத்துவா பாசங்களானவையும் அறிந்து, பூர்வோத்தர விரோதம் வாராமல் அறிந்து படிக்கச் சத்தியையுடைத்தாயிருக்கிறான்; அவனுக்கு இந்தச் சாத்திரத்தைப் போதித்தருள்.

**மேற்பாட்டிற்கு மற்றோர் உரை வருமாறு:-** கொடுக்கும் மரபினையுணர்ந்த நல்லாசான் திருவருள் ஞானமாகிய சிவஞானத்தைக் கொடுத்துப் பின்னர் இந்தச் சிவப்பிரகாச நன்னூலின் விரிந்த பொருளை அம்மாணவன் கேட்டு சிந்தித்துத் தெளியும் நெறியாலே, சொல்லப்பட்ட வாதம், செற்பை விதண்டை ஏது என்னும் இவற்றைக் கருதி, வினை பயன் மெய் உரு என்று பெருகிய நான்கு உவமைகளின் பெற்றியினாலே அப்பொருள்களை நிலைபெறுவித்துப் பின்னும் முன்னும் மாறுபாடு நீங்கச் சாற்றலாம்.

*பதிப்பாசிரியர் குறிப்பு*

*1.* "அருளினால் ஆகமத்தே அறியலாம்"

*(சித்தியார் சுபக்கம்-6)*

2. முத்தி நிச்சயப் பேருரையில், "திருவருள் கொடுத்து" என்னும் மேற்பாட்டு "**ஞான பாத விடயத்திற்குச் சிறப்பு விதியுண்டு**" என்பதற்கு மேற்கோளாக வந்துள்ளது. *(ப. 48))*

*3.* "வாத சொற்பை விதண்டயும் ஏதுவும்
ஓது நால்வகை உவமையும் திகழ்தர"

*(சங்கற்பநிராகரணம்)*

*4.* உவமை நான்கின் - வினை, பயன், மெய், உரு.

**5. ஏது நோக்கி**:- "இந்தப் பிரகாரத்தால் இந்த வத்துக்கள் உண்டாக வேண்டுமென்று நன்றாக ஏது பக்க சாத்தியங்களுடனே சொல்லுதல் பிரமாணமென்னுமிது" *(சிவநெறிப் பிரகாசம்-19-உரை)*

★★★★★

**உமாபதிசிவம் அருளிய சிவப்பிரகாசமும்
அருணந்திதேவன் உரையும் முற்றிற்று**

# செய்யுள் தொடக்கச் சீர் அகர நிரல்

**(எண் - பாடல் எண்.)**


| | |
|---|---|
| **அ** | |
| அகம்புறம் | 95 |
| அடைபவர் | 79 |
| அண்டமே | 96 |
| அந்நியமா | 36 |
| அரிவையரின் | 50 |
| அருத்தி மிகும் | 26 |
| அலகில் குணம் | 42 |
| அல்லல் மிக | 25 |
| அழிந்திடும் | 88 |
| அறிந் திடும் | 67 |
| அறிவினால் | 55 |
| அறிவு எனில் | 54 |
| **ஆ** | |
| ஆசறு | 92 |
| ஆனதனு | 43 |
| **இ** | |
| இங்கிவை | 51 |
| இத்தகைமை | 39 |
| இன்னிலை | 78 |
| இந்நிலையில் | 46 |
| இருள்நனி | 66 |
| இவ்வகை | 61 |
| இணையபல | 48 |
| இன்மை மலம் | 34 |
| இன்று நோக்கு | 77 |
| **ஈ** | |
| ஈங்கு இது | 15 |
| **உ** | |
| உரு ஆதி | 22 |
| உருவுணர்வு | 53 |
| உலகமெலாம் | 16 |
| உறை தரும் | 74 |
| உற்ற தொழில் | 31 |
| உன்னல் அரும் | 21 |
| **எ** | |
| எண்ணரி தாய் | 19 |
| எண்ணவொன்று | 60 |
| எல்லையில் | 89 |
| எவ்வறிவு | 56 |
| என்னையிது | 23 |
| **ஏ** | |
| ஏகமாய் | 20 |
| ஏற்ற இவை | 18 |
| **ஐ** | |
| ஐவகையால் | 41 |
| **ஒ** | |
| ஒடுங்கிடா | 81 |
| ஒளியான (காப்புச்செய்யுள்) | |
| ஒன்றிரண்டு | 87 |
| **ஓ** | |
| ஓங்கி வரும் | 33 |
| ஓங்கு ஒளியாய் | 1 |
| ஓரிடத்தில் | 59 |
| **க** | |
| கண்டறி | 65 |

கண் ஒளி 58
கந்தமலர் 17
கன்ம நெறி 29

கா

காட்டிடும் 68

கி

கிரியையென 10

கு

குறிப்பிடம் 94

ச

சத்து இது 57

சு

சுத்தமாகும் 75

செ

செறிந் திடும் 52

சொ

சொன்ன முறை 44

த

தத்துவம் 73
தனக்கென 64
தன் அறிவு 72

தி

திருவருள் 100
திரு எழுத்து 91

தீ

தீங்குறும் 93

தெ

தெரித்தகுரு 11

தே

தேசுற மருவும் 71
தேவர் பிரான் 5

தொ

தொண்டர்கள் 98
தொன்மையவாம் 12

தோ

தோற்றியிடும் 47

ந

நண்ணி யிடும் 28
நலந்தர 3

நா

நாடியசத்நி 49

நி

நிலவுல 99

நீ

நீக்கமில் 62
நீடுபரா 14

ப

படைத்தொரு 24
பந்தம் 90
பரந்தபரா 2
பல கலை 13
பற்றிடும் 82
பல் நிறம் 69

பா

பாசமா 84
பார்திகழ 6
பாவிக்கின் 86

பு

புகலரும் 76
புகலுமலம் 37
புறச்சமயத் 7

பே

பேசரிய 40

பொ

பொற்புறு 80

ம

மண் முதல் 97

மருவிய 63
மன்னியகன் 27

மா

மாயைமா 70
மாயைமுதல் 35

மு

முந்திய ஐம் 45
முந்திய 83

மூ

மூவங்கயா 8

மே

மேலைக்கு 30
மோக மிக 32

வ

வந்தடைந்து 38
வள நிலவு 4

வி

விரும்பிய மந் 9
விளம் பிய 85




# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.